வெளியீடு 03-03-2000 Issued 03-03-2000

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**புதன்கிழமை, மே 5, 1999 - தொகுதி 78 - எண் 2**

**Wednesday, 5th May, 1999—Volume 78 - No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai - 600 009**

**[Price Rs. 3.00**

405
2000

D.
V2,1,31,N99.
N99.78.2.
221807

405/2000.

# 5-5-1999

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. இரங்கற் குறிப்பு—** | |
| முன்னாள் உறுப்பினர் மறைவு | 245 - 246 |
| **2. வினாக்கள்—விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 246 - 285 |
| **3. விதி 110-ன்கீழ் அறிக்கை—** | |
| தென்மாவட்டங்களின் சமூக, பொருளாதார, தொழில் வளர்ச்சிக்கான உயர்நிலை ஆணையம் அமைத்தல் பற்றி மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை | 286 - 288 |
| **4. சிறப்புக் கவன ஈர்ப்பு—** | |
| (அ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் காவல் நிலையத்தில் மாணவர் மரணம் | 288 - 303 |
| (ஆ) திருத்துறைப்பூண்டியில் குழந்தை மருத்துவ நிபுணர் டாக்டர் காளிதாஸ் எரித்துக் கொலை | 303 - 308 |
| **5. கவன ஈர்ப்பு—** | |
| கோவை மாவட்டம், பேரூர் தொகுதி, ஆத்துப் பாலத்தில் கட்டண வசூல் | 308 - 321 |
| **6. அறிக்கைகள் அளித்தல்—** | |
| (அ) மதிப்பீட்டுக் குழு .. .. .. | 322 |
| (ஆ) பொதுக் கணக்குக் குழு .. .. | 322 |

7. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 26 - கதர் கிராமத் தொழில்கள் 322 - 391

(ஆ) கோரிக்கை எண் 21 - மீனளம்

* மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு 322, 332, 379 - 386

* மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் 327, 332, 371 - 379

திரு. மு. அப்பாவு 333 - 339

திரு. ஜி.பி. வெங்கிடு 339 - 342

* திரு. டி. மணி 342 - 347

திரு. இரா. மதிவாணன் 348 - 351

திரு. வி. அய்யலுசாமி 351 - 354

திரு. தி.ப. ஆறுமுகம் 354 - 357

திரு. வெ. சின்னய்யா 357 - 359

திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில் 360 - 364

திரு. மு. பன்னீர்செல்வம் 364 - 367

திரு. எஸ்.எஸ். மணி நாடார் 367 - 369

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் 369 - 371

8. அறிவிப்பு—

தமிழ்நாடு மாநில பனைப்பொருள் இணையத்தின் சார்பில் உறுப்பினர்களுக்குப் பதநீர் வழங்க ஏற்பாடு 333

9. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 391 - 392


221809

V211, 51 '1999. n69.78.2

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 22, பிரமாதி - திருவள்ளுவர் ஆண்டு 2030

## 1999 மே 5, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"அழிவந்த செய்யினும் அன்பறார் அன்பின்
வழிவந்த கேண்மை யவர்."

தம்முடன் பழகியவர்கள் தமக்கே எதிராக அழிவு தரும் காரியத்தைச் செய்தாலும்கூட, அன்பின் அடிப்படையில் நட்பு கொண்டவர் அதற்காக அந்த அன்பை விலக்கிக்கொள்ள மாட்டார்.

## 1. இரங்கற் குறிப்பு

### முன்னாள் உறுப்பினர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரங்கற் குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர் திரு. பி. ஜெயராஜ் அவர்கள் 4-5-1999 அன்று மறைவுற்றதை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. ஜெயராஜ் அவர்கள் 1957 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு வரை மாயவரம் தனித் தொகுதியிலிருந்தும், 1962 ஆம் ஆண்டு முதல் 1967 ஆம் ஆண்டு வரை குடவாசல் தொகுதியிலிருந்தும், 1967 ஆம் ஆண்டு முதல் 1971 ஆம் ஆண்டு வரை நன்னிலம் தனித் தொகுதியிலிருந்தும் தொடர்ந்து மூன்று முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புடன் பணியாற்றியுள்ளார்கள்.

அன்னாரது மறைவு குறித்து அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பேரவைத் தலைவர்] [1999 மே 5

மறைந்த இப்பெரியவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று சிறிது நேரம் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று சிறிது நேரம் அமைதி காத்தனர்.)*

## 2. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 621, திரு. அ. அசோகன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**621—**

### கிளை நூலகத்திற்குக் கட்டடம்

***8585—திரு. அ. அசோகன்:**

*மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருவாரூர் தொகுதி, கிழ்வேளூர் அரசு கிளை நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவாரூர் தொகுதி, கிழ்வேளூர் அரசு கிளை நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட காலிமனை ஏதும் இதுவரை பெறப்படவில்லை. அவ்வாறு காலிமனை பெறப்பட்ட பின்னரே அந்நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட ஆவன செய்ய இயலும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 622, திரு. மு. பன்னீர்செல்வம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.



1999 மே 5]

**622—**

### சீர்காழியில் அரசு பெண்கள் கல்லூரி

***23530—திரு. மு. பன்னீர்செல்வம்:**

*மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சீர்காழி தொகுதியில் அரசு பெண்கள் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

**திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி பகுதியிலே, அருகிலே இருக்கக்கூடிய சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே இளநிலை பட்டப் படிப்புகளையெல்லாம் எடுத்துவிட்டார்கள். அங்கே இளநிலை பட்டப் படிப்பு இருந்தபோது, பல ஆயிரக்கணக்கான கல்லூரி மாணவ, மாணவிகள் படித்தார்கள். ஆனால், பூம்புகார் கல்லூரி, மயிலாடுதுறை ஏ.வி.சி. கல்லூரி, மயிலாடுதுறையில் இருக்கக்கூடிய ஞானம்பிகா மகளிர் கல்லூரி போன்றவை எல்லாம் அதேகாலத்தில் இருந்தன. ஆனால், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே இளநிலை பட்டப் படிப்புகளை எடுத்ததற்குப் பின்னாலே, கிள்ளைக்கு அருகே இருக்கக்கூடிய முற்றூரிலே ஒரேயொரு அரசுக் கலைக் கல்லூரி மட்டும் ஆரம்பிக்கப்பட்டது. அதிலே குறைவான மாணவ, மாணவியர்கள்தான் சேர்க்கப்படுகிறார்கள். எனவே இதைக் கருத்தில்கொண்டு, அந்தப் பகுதி மாணவ, மாணவியர்கள் பயன்பெறுகின்ற வகையிலே, பிற்காலத்திலாவது மறுபரிசீலனை செய்து, விதிவிலக்கு அளித்து பெண்கள் கல்லூரி ஆரம்பிப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இல்லை என்றே நான் விடையளித்தேன். எதிர்காலத்தில் எதுவும் நடக்கலாம்.

[1999 மே 5

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 623, திரு. பெ.சு. திருவேங்கடம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**623—**

### தனியார் மின் நிலையங்கள்

***13760—திரு. பெ.சு. திருவேங்கடம்:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாட்டில் தனியார் மின் நிலையங்கள் அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

*(இ) எவ்வளவு மின் உற்பத்தி அதிகரிக்கும்?*

*முற்பகல் 9-35*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மொத்தம் 7,580 மெ.வா. திறன் கொண்ட 14 (பதினான்கு) மின் திட்டங்களைத் தனியார் திட்ட முனைவோர்களிடம் மின் உற்பத்திக்காகக் கருத்தளவு ஒப்பந்த முறையில் தமிழ்நாடு அரசு ஒப்படைத்துள்ளது. மேலும், மொத்தம் 2,795 மெ.வா. திறன் கொண்ட குறுகிய கால மின் திட்டங்களைத் தமிழ்நாட்டில் 20 (இருபது) இடங்களில் நிறுவ தனியார் திட்ட முனைவோர்களிடம் பன்னாட்டு ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் தமிழ்நாடு அரசு ஒப்படைத்துள்ளது.

(இ) 9-வது திட்ட காலத்தில் 5,891 மெ.வா. திறனும், 10-வது திட்டக் காலத்தில் 4,490 மெ.வா. திறனும் அதிகரிக்கும்.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு நன்றி. இன்றையதினம் தனியாருக்கு மின் உற்பத்தியைக் கொடுத்து உற்பத்திச் செய்தாலும், இந்த நிலையில் பற்றாக்குறை எவ்வளவு என்று அமைச்சர் அவர்களால் அறிவிக்க



1999 மே 5]

இயலுமா? இந்தப் பற்றாக்குறையைப் போக்குகின்ற வகையில் மேலும் தனியார் யாராவது விண்ணப்பித்து, அவர்களுக்கு அனுமதி வழங்குவதிலே தாமதம் ஏதாவது உள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் பற்றாக்குறை ஏறக்குறைய 300 மெ.வா. இந்த 300 மெ.வா.-ஐ சரிக் கட்டுவதற்காக ஏற்கெனவே மராட்டிய மாநிலம், பஞ்சாப், ஒரிஸ்ஸா போன்ற மாநிலங்களிலிருந்து மின்சாரத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறோம். இப்பொழுது புதிதாக யாராவது மின் உற்பத்திக்காக விண்ணப்பித்து இருக்கிறார்களா என்று கேட்டார்கள். இதுவரையிலே அப்படி விண்ணப்பித்து, அரசிடம் நிலுவையில் எதுவும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே சமீபத்திலே ஆரம்பிக்கப்பட்டுள்ள ஜி.எம்.ஆர். வாசவி நிறுவனம் மின் உற்பத்தியைத் தொடங்கிவிட்டதா? அந்த மின் உற்பத்தி நிறுவனத்திடமிருந்து தமிழக அரசு எந்தக் கட்டணத்தில் மின்சாரத்தைப் பெறுகிறது? அதில் அரசுக்கு ஏதாவது இழப்பு உண்டா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஜி.எம்.ஆர். வாசவி நிறுவனம் மின் உற்பத்தியைத் தொடங்கிவிட்டது. அது ஒரு யூனிட்டுக்கு ரூ. 3.10 என்ற அளவிலே மின்சாரத்தை, மின்சார வாரியத்திற்கு வழங்கிக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் உற்பத்திச் செய்வதற்கானத் திட்டங்கள் நம்முடைய பட்ஜெட் உரையிலே அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அதிலும் குறிப்பாக, எண்ணெய் எரிவாயு நிறுவனத்தின் மூலமாக மின் உற்பத்திச் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, திருவாரூர் மாவட்டம், கோவில்களப்பாலில் மின் உற்பத்தி தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அது மூன்று ஆண்டு காலமாக கொள்கை விளக்கக் குறிப்பிலேயும் சொல்லப்படுகிறது. அதைத் தொடங்குவதற்கான

சாத்தியக் கூறுகள் ஆராயப்பட்டு அது எப்பொழுது தொடங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன். மின்சாரப் பிரச்சினை பற்றி—பத்திரிகைச் செய்தியிலே தினசரி சென்னை நகரில் ஒவ்வொரு பகுதியாக மின்தடை ஏற்படும் இடங்கள் என்று குறிப்பிட்டுச் சொல்லப்படுகிறதே, அதற்குக் காரணம் என்ன? பணிகள் நடைபெறுவதற்காகவா அல்லது பற்றாக்குறையின் காரணமாகவா? அதைச் சரிசெய்வதற்காக அரசு என்ன முயற்சி மேற்கொள்ளவிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்களப்பாலில் ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட திட்டம் என்னவாயிற்று என்று கேட்டார்கள். அதற்குத் தேவையான கியாஸ் மத்திய அரசு மூலம் பெறுவதற்கான ஒப்பந்தம் ஏற்கெனவே கையெழுத்திடப்பட்டு, டெண்டரும் இப்போது கோரப்பட்டு இருக்கிறது. டெண்டரில் எந்த நிறுவனம் தேர்ந்தெடுக்கப்படுகிறதோ அவர்களுக்கு அந்தப் பணி ஒப்படைக்கப்படும்.

சென்னையிலே மின்சாரம் நிறுத்தப்படும் இடங்கள் என்று தினமும் வருகிறதே என்று கேட்டார்கள். சென்னையில் ஏறக்குறைய 30 ஆண்டுகளுக்கு முன்னால் நிறுவப்பட்ட டிரான்ஸ்பார்மர்கள், அமைக்கப்பட்ட கேபிள்களெல்லாம் இப்பொழுது இருந்து கொண்டிருக்கின்றன. அதனால் அடிக்கடி பழுது ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. அவற்றையெல்லாம் நிவர்த்தி செய்வதற்காக 90 கோடி ரூபாயில் ஒரு திட்டம் தயார் செய்து, புதிய டிரான்ஸ்பார்மர், கேபிள்களை நிறுவுவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. அதற்காக ஒவ்வொரு நாளும் ஒரு இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்தப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதற்காக மின்சார நிறுத்தம் செய்யப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மாதம் 10 ஆம் தேதி சாத்தனூர் அணையில் 7.5 மெ.வா. திறன் கொண்ட புனல் மின் நிலையத்தைத் தொடங்கி வைத்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே உற்பத்தி ஆகின்ற மின்சாரத்தை எங்கள் மாவட்டத்திற்கே கொடுத்து, எங்கள் மாவட்டத்தில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உதவி புரிவார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார உற்பத்தி எங்கே ஆகிறதோ அந்தப் பகுதி மக்களுக்குத்தான் மின்சாரம் கொடுப்பது என்ற நிலையை எடுத்தால், தமிழ்நாட்டில் பல பகுதிகளுக்கு மின்சாரமே கொடுக்க முடியாமல் போய்விடும். இருந்தாலும், அங்கே இப்பொழுது உற்பத்தியாகின்ற 7.5 மெ.வா. மின்சாரம் அந்த மாவட்டத்திற்குத்தான். ஏனெனில், குறைந்த அளவில் மின் உற்பத்தி ஆகின்ற காரணத்தால், அந்த மாவட்டத்திற்குத்தான் முன்னுரிமை தந்து, அந்த விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழகத்தினுடைய மின்சாரத் தேவை மொத்தம் எவ்வளவு? இன்று தமிழகத்தில் உற்பத்திச் செய்யக்கூடிய மொத்த மின்சாரம் எவ்வளவு என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9.40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூல வினாவே அதுதான். அமைச்சர் பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய மின் உற்பத்தியைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். இன்றைய மின் உற்பத்தி 5,200 மெகாவாட். நம்முடைய தேவை 5,500 மெகாவாட். பற்றாக்குறை 300 மெகாவாட். இந்தப் பற்றாக்குறையை எப்படிச் சமாளிக்கிறோம் என்று ஏற்கெனவே தெரிவித்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில் ஜெயங்கொண்டம் மின் உற்பத்தி நிலையத்தைத் தொடங்குவதாக ஏற்கெனவே அறிவித்தார்கள். அதற்குப் பிறகு இந்த ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பின்னாலும்கூட ரிலையன்ஸ் போன்ற கம்பெனியோடு பேச்சுவார்த்தை எல்லாம் நடத்தப்பட்டது. ஆனால் இந்த ஜெயங்கொண்டம் மின் உற்பத்தித் திட்டம் என்ன ஆனது என்று இதுவரையில் மக்களுக்குத் தெரியவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஜெயங்கொண்டம் புராஜக்ட்

[1999 மே 5

எப்போது தொடங்கபபடும், டெண்டர் விடப்பட்டதா என்பதை அவைக்குத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மின் உற்பத்தித் திட்டங்களைத் தொடங்குவதறகாக, நில ஆர்ஜிதம் செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தினந்தோறும் 4 கோப்புகளிலாவது கையெழுத்துப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள. ஜெயங்கொண்டத்தைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே திறந்த ஒப்பந்தம் கேட்கபபட்டு, அதிலே ரிலையன்ஸ் நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதற்கான அனுமதியையும் மின்சார வாரியம வழங்கி, இப்போது அரசினுடைய அனுமதிக்காக கோப்பு அனுபபப்படடிருக்கிறது. விரைவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கான ஒபபுதலை அளிப்பார்கள். அதற்குத் தேவையான சுமார் 5,000 முதல 10,000 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்ய வேண்டிய பொறுப்பும் இந்த அரசுக்கு இருக்கிறது. அதற்கான நடவடிக்கையிலேயும் இந்த அரசு ஈடுபட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ. ராசேந்திரன்

**திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள சர்க்கரை ஆலைகள் அனைத்திலும் கோ-ஜெனரேஷன் மூலம மின் உற்பத்தி செய்யப்படுகின்றதா? அப்படி செய்யப்படும் மின் உற்பத்தி எத்தனை மெகாவாட் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை மற்றும் தனியார் துறை மூலம் சர்க்கரை ஆலைகளிலே கோ-ஜெனரேஷன் மூலமாக 140 மெகாவாட் மின்சாரம் இப்போது உறபத்தியாகிக் கொண்டிருக்கிறது. மேலும், இந்த ஆண்டிலே 130 மெகாவாட் மின்சாரம் உற்பத்திச் செய்வதற்காக எல்லாக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளையும் நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறோம். கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுடைய ஆணையர் அதற்கான நடவடிக்கைகளிலே ஈடுபட்டு வருகிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே உள்ள கூடங்குளம் அணு மின் நிலையம்



1999 மே 5]

10 ஆண்டுகளாக, இதோ வருகிறது, அதோ வருகிறது என்ற நிலையில்தான் இருக்கிறது. அதனுடைய தற்போதைய நிலை என்ன? எப்போது உற்பத்தியை ஆரம்பிக்கும் என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடங்குளம் அணு மின் நிலையத்தைப் பொறுத்தவரையில் ரஷ்ய அரசாங்கத்தோடு இந்திய அரசாங்கம் கடந்த ஆண்டு ஒப்பந்தம் செய்துகொண்டு, இந்தத் திட்டத்தை அமல்படுத்துவது என்று இரு அரசுகளும் முடிவெடுத்திருக்கின்றன. பொதுவாக, அந்தப் பகுதிகளிலே கூடங்குளம் அணு மின் நிலையம் வந்தால் அது மக்களுக்கு ஆபத்து என்று ஒரு தவறானப் பிரச்சாரத்தை அந்தப் பகுதியிலே செய்துகொண்டிருக்கிறார்கள். திரு. அப்பாவு போன்ற பொறுப்புள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் அப்படிப்பட்ட அணு மின் நிலையம் வருகின்ற காரணத்தாலே எந்த ஆபத்தும் மக்களுக்கு வராது என்பதைத் தெளிவுபடுத்துவார்களேயானால் விரைவிலே அந்த மின் திட்டத்தைத் தொடங்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த மின் திட்டம் தொடங்கப்பட்டால் 2008-லே முழுப் பலன், அதாவது 2,000 மெகாவாட் மின்சாரம் தமிழகத்திற்குக் கிடைக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப. தங்கவேலன்.

**திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரத்திற்கு அருகே உள்ள வழுதூர் பெருங்குளம் என்ற இடத்தில் பூமிக்குக் கீழே கிடைக்கின்ற நில எரிவாயுவைக் கொண்டு மின்சாரம் தயாரிப்பதற்கு 90 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு அதற்கான நிதி ஒதுக்கீட்டையும் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் செய்து கொடுத்திருக்கிறார்கள். இப்போது சுற்றுச் சூழல் காரணமாக—சுற்றுச்சூழல் துறையினர் அது ஆற்றுப்படுகையிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள் இருக்கிறது என்று எதிர்ப்புத் தெரிவித்ததன் காரணமாக, முன்னாள் மத்திய அமைச்சரான திரு. டி.ஆர். பாலு அவர்கள் அங்கே வந்து, பார்வையிட்டு, பணிகள் தொடங்கப்பட்டும் இதுவரையில் வேலைகளே நடக்காமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. வைகை, கடலில் கலக்காத ஒரு நதி என்பதை ஆதாரபூர்வமாக இந்த Village Map எல்லாம் எடுத்து, 10, (1) அடங்கலிலே அது வைகையே இல்லை என்று Field Map-ல் உள்ள எல்லாப் பகுதிகளையும் எடுத்து, ஆதாரங்கள்

கொடுத்தும்கூட இன்னும் முடிவு எடுக்கப்படாமல் இருக்கிறது. எனவே, சம்பந்தப்பட்ட துறையினருடன் கலந்து பேசி, பணிகளைத் தொடங்குவதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருங்குளத்திலே *90* மெகாவாட் மின்சாரம் உற்பத்திச் செய்வதற்கான அனுமதியை மத்திய அரசிடமிருந்து பெற்றும், பெட்ரோலியத் துறை அமைச்சகத்திலிருந்து அதற்குத் தேவையான Gas-க்கு அனுமதியைப் பெற்றும், அதற்கான டெண்டர்கள் கோரப்பட்டு, பெல் நிறுவனம், குறைந்தபட்ச டெண்டரில், எல்.1 என்ற காரணத்தினாலே அவர்களுக்கு அந்தப் பணி ஒப்படைக்கப்பட்டு, விரைவிலே பணிகள் தொடங்க இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். பெரியசாமி.

**திரு. என். பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடியில் *500* மெகாவாட் திறனுள்ள அனல் மின் நிலையம் தொடங்கப்படும் என்று சென்ற ஆண்டே அறிவிக்கப்பட்டது. அது எப்போது தொடங்கப்படும்? அது என்ன நிலைமையில் இருக்கிறது என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடியிலே ஸ்பிக் நிறுவனத்தின் மூலமாக *525* மெகாவாட் மின்சாரம் வழங்குவதற்கான ஒப்பந்தங்கள் எல்லாம் மின்சார வாரியத்திலே கையெழுத்திடப்பட்டு, Power Purchase Agreement-ம் செய்யப்பட்டு, அங்கேயுள்ள நிலத்தை அவர்களுக்கு ஒப்படைப்பதிலே மத்திய அரசாங்கத்திலே இதுவரையிலே காலதாமதமாகியிருந்தது. இதற்கு முன்னாலே இருந்த சட்டத் துறை அமைச்சர் அந்தக் கோப்பிலே கையெழுத்திடுவதில் காலதாமதம் செய்த காரணத்தால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிரதமருக்கு கடிதம் எழுதி, அந்தத் திட்டத்தை விரைவாகத் தொடங்குவதற்கு அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். அந்தக் கோரிக்கையை இப்போதுள்ள பிரதமர் ஏற்றுக்கொண்டு, இரண்டு மூன்று தினங்களுக்கு முன்னாலே அந்த இடம் ஸ்பிக் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டது என்ற நல்ல தகவலை மாண்புமிகு முதலமைச்சருக்குத் தெரிவித்திருக்கிறார்கள்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கை சிவம்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேசின் பாலம், வாசவி பவர் ப்ராஜெக்ட் மின் உற்பத்தியைத் தொடங்கிவிட்டதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். மேலும் *100* மெகாவாட் மின் உற்பத்தியைத் தொடங்கப்போவதாகக் கூறுகிறார்கள். அது உண்மையா? அந்தப் பணி எப்போது தொடங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பேசின் பிரிட்ஜிலே அமைந்துள்ள ஜி.எம்.ஆர். வாசவி பவர் ப்ராஜெக்ட் நிறுவனத்தினுடைய திட்டத்தைத் தொடங்கி வைத்தவுடன் அவர்கள் மேலும் *100* மெகாவாட் மின்சாரம் உற்பத்திச் செய்வதற்காக அனுமதி தரவேண்டும் என்று மின்வாரியத்திடம் கேட்டிருக்கிறார்கள். மின்வாரியம், *100* மெகாவாட் மின்சாரம் உற்பத்திச் செய்வதற்கான அனுமதியை வழங்குவதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் செய்துகொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *624*, திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**624—**

### ஊத்துக்குளி துணை மின் நிலையம்

***21303—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மின் பகிர்மான வட்டம், ஊத்துக்குளி துணை மின் நிலையத்தை 110/22-11 கே.வி.யாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் இயக்கப்படும்?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊத்துக்குளி சுற்று வட்டாரப் பகுதிகளில் டொமஸ்டிக் தேவைகளும், சிறு தொழிற்சாலைகளுக்கான மின் தேவைகளும் அதிகரித்து வருகின்றன. இதனைக் கருத்தில் கொண்டு அங்கே தற்போதுள்ள இயந்திரத்தை மாற்றிவிட்டு 110/22 கே.வி. மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மின் பகிர்மான வட்டம் ஊத்துக்குளி பகுதியில் மின் தேவையைப் பூர்த்தி செய்ய 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் ஒன்று இயக்கத்திலே உள்ளது. இப்பகுதியில் வளர்ந்துவரும் மின் தேவையைக் கருத்தில் கொண்டு, நடப்பு ஐந்தாண்டு கால பெருந்திட்டக் காலத்தில், இத்துணை மின் நிலையத்தில் தற்சமயம் உள்ள 5 எம்.வி.ஏ. திறனுள்ள மின்மாற்றியை முதற்கட்டமாக 10 எம்.வி.ஏ. திறனுக்கு ரூ. 51.55 இலட்சம் மதிப்பீட்டில் உயர்த்திடவும், இரண்டாவது கட்டமாக 13 எம்.வி.ஏ. திறனுக்கு ரூ. 41.86 இலட்சம் மதிப்பீட்டில் உயர்த்திடவும் வாரியம் அனுமதி எண் 123, தேதி 29-6-1998-இல் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்துணை மின் நிலையத்தினை 110/22-11 கே.வி.யாக உயர்த்துவதற்கு இப்போதைக்கு அவசியம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியத்திலுள்ள பள்ளிகொண்டம் பகுதியில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு நிலங்களெல்லாம் ஆய்வு செய்யப்பட்டு, பரிசீலனையில் உள்ளன என்று தகவல் அறிந்தோம். அந்த 110 கே.வி. துணை மின் நிலையம் இந்த ஆண்டு செயல்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில ஆர்ஜிதம் முழுவதுமாகச் செய்து முடிந்தவுடன் இந்த ஆண்டே அந்தப் பணிகளை மேற்கொள்வதற்கு வாரியம் முயற்சி செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி சுப்புலட்சுமி செகதீசன்.



**திருமதி சுப்புலட்சுமி செகதீசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மின் பகிர்மான வட்டம் அரசலூரில் அமைந்துள்ள துணை மின் நிலையத்தில் 33 கே.வி.தான் இருக்கிறது. அதை 110 கே.வி.யாக மாற்றித் தர அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்கள் இருக்கின்ற இடங்களில் எல்லாம் உடனடியாக 110/22 கே.வி. திறனுடைய துணை மின் நிலையங்களாக மாற்ற முடியாது. தேவை இருக்குமானால் அதனுடைய எம்.வி.ஏ. திறனை அதிகப்படுத்தலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்குள்ள தேவையைக் குறித்து அரசுக்கு எழுத்து மூலமாக தெரிவிப்பார்களேயானால் மின் வாரியத்தோடு கலந்து அங்கு 5 எம்.வி.ஏ. திறனுள்ள மின்மாற்றி இருக்கிறதா அல்லது 10 எம்.வி.ஏ. திறனுள்ள மின்மாற்றி இருக்கிறதா? எந்த மாதிரி மின்மாற்றி தேவை என்பதை அரசு பரிசீலித்து ஆவன செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா.மு. முபாரக்.

**திரு. பா.மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீர்மின் தயாரிப்பில் முக்கிய இடம்பெறுகிற கூடலூர் தொகுதியில் மோயார், சிங்காரா போன்ற இடங்கள் மின் உற்பத்திக்கு உதவிகரமாக இருக்கிற பகுதி. ஆனால் அந்தப் பகுதியில் மின் பற்றாக்குறை ஏற்பட்டு 3 ஆண்டுகளாக மாண்புமிகு அமைச்சரிடமும், துறையிடமும் 110 மெகாவாட் மின்நிலையம் அமைக்க கோரிக்கை விடப்பட்டிருந்தது. அதைக் கருணை உள்ளத்தோடு இந்த ஆண்டு நிறைவேற்றித் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டு ஒன்றுக்கு 60 துணை மின் நிலையங்களை நிறுவ வேண்டுமென்று இந்த அரசு மின்வாரியத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற அந்த இடத்தில்—இந்த ஆண்டு ஏற்கெனவே 60 இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டாகிவிட்டது. அதிலே இடம்பெறவில்லையானால், அடுத்த ஆண்டு தொடங்குவதற்கு உரிய வாய்ப்பை இந்த அரசு உருவாக்கும்.

[1999 மே 5

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பால. ஆனந்தன்.

**திரு. பால. ஆனந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசி தொகுதியில் வந்தவாசி ஒன்றியம், கூட்டுறவுக் கிராமிய மின்சாரமாக இயங்குகிறது. அதனால் பொதுமக்களுக்கு மிகுந்த சிரமங்கள் இருப்பதுடன், அந்த நிறுவனத்தில் நிதிப் பற்றாக்குறை இருப்பதாகக் கூறுகிறார்கள். எனவே, அதைக் கலைத்துவிட்டு ரெகுலராக டி.என்.இ.பி.-ல் சேர்த்துக்கொள்ள இயலுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே தமிழ்நாட்டிலே கூட்டுறவுத் துறை மூலமாக மின்சார விநியோகம் செய்வதை இந்த அரசு விரும்பவில்லை. இருந்தாலும் எப்படி அதைப் படிப்படியாக மின்வாரியமே ஏற்றுக்கொள்வது என்பது குறித்து அரசு ஆலோசித்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 625, திரு. கே. ரவி அருணன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**625—**

### வாகனங்களில் பள்ளிக் குழந்தைகள்

***14069—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் பேருந்துகள், ஆட்டோ ரிக்‌ஷா, வேன் மற்றும் சைக்கிள் ரிக்‌ஷா போன்ற வாகனங்களில் பள்ளிக் குழந்தைகள் நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு அதிகமாக ஏற்றிச் செல்லப்படுவது பற்றி அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.



1999 மே 5]

(ஆ) அனைத்து மாவட்டங்களிலும் அதிக பள்ளிச் சிறுவர்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் குறித்த சோதனை அறிக்கை வழங்கப்பட்டு வருகிறது. அனுமதிச் சீட்டு உடைய வாகனங்களுக்கு அனுமதிச் சீட்டு நிபந்தனைகளை மீறும் குற்றத்திற்காக மோட்டார் வாகனச் சட்டத்தின்படி தகுந்த நடவடிக்கை எடுத்து அபராதம் வசூலிக்கப்பட்டு வருகிறது. சென்னை நகரில் சைக்கிள் ரிக்‌ஷாக்களில் அதிக எண்ணிக்கையில் பள்ளிக் குழந்தைகளை ஏற்றிச் செல்லாமலிருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இங்கே நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவித்தாலும்கூட, தனியார் பேருந்துகளிலும், ஆட்டோ ரிக்‌ஷா, ரிக்‌ஷா போன்ற வாகனங்களிலும் தினசரி அதிக எண்ணிக்கையில் மாணவ, மாணவிகளை ஏற்றிச் செல்வது அன்றாடக் காட்சியாக காணப்படுகிறது. இவ்வாறு அதிக எண்ணிக்கையில் மாணவ, மாணவிகளை ஏற்றிச் செல்வதால் விபத்துக்கள் ஏற்படும்போது அது பெரிய இழப்பாக ஏற்படுகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுபோன்று அதிகமான எண்ணிக்கையில் மாணவ, மாணவிகளை ஏற்றிச் செல்வதை கடுமையான நடவடிக்கை எடுப்பதன் மூலம் தடுப்பார்களா? இதுவரை எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மோட்டார் வாகனச் சட்டத்தின்படி இதற்கு அதிகத் தண்டனை வழங்க முடியாது. அபராதங்கள்தான் விதிக்க முடியும். இதுவரை 137 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 51,800 ரூபாய் வசூல் செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் குற்றத்திற்காக அதிகத் தண்டனை கொடுக்கின்ற வாய்ப்புகள் இந்த மோட்டார் வாகனச் சட்டத்தின்படி இல்லை. ஆகவே, அபராதம் மட்டுமே விதிக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 626, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

[1999 மே 5

**626—**

**போக்குவரத்துப் பயணிகளுக்கு காபி, தேநீர்**

***21051—திரு. ஐ. கணேசன்:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழகத்தில் தொலைதூரப் பயணம் செய்யும் பயணிகளுக்கு போக்குவரத்துத் துறையின் மூலம் காபி, தேநீர் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து சதாப்தி விரைவு இரயில் கோவை வரை செல்லும்போது, அந்த இரயிலிலே தேநீர், உணவு வகைகள் அளிக்கப்படுகின்றன. அதேபோல பேருந்துகளில் விரைவு வண்டியிலே பயணம் செய்யும்போது, நீண்டதூரம் பயணம் செய்யும்போது, டிரைவர்களுக்கு இஷ்டமான இடத்திலே, ஒரு பொட்டல்காட்டிலே வண்டியை நிறுத்திவிட்டு, அவர்கள் ஓட்டலுக்கு உள்ளே சென்று மிகச் சிறப்பான உணவை அருந்துகிறார்கள். அவர்கள் அருந்தும் உணவுக்கெல்லாம் அந்தப் பயணிகளை அடமானம் வைத்துவிட்டு, அவர்கள் உணவு அருந்துகிறார்கள். இது நியாயம்தானா? விரைவுப் பேருந்திலே பயணம் செய்யும்போது இரவு நேரத்திலே குழந்தைகளுக்கு பால்கூட சரியாகக் கிடைப்பதில்லை. பயணிகளுக்கு டீ, காபி கிடைப்பது மிக அரிது என்பதையெல்லாம் கருத்திலேக் கொண்டு, தயவுசெய்து இதைப் பொதுநோக்கோடு அமைச்சர் அவர்கள் கருதி, அரசு விரைவுப் பேருந்துகளிலாவது பயணிகளுக்கு இரவிலே உணவளிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-55*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகைவண்டிகளிலே பயணம் செய்கிறபோது, அதற்குக் கட்டணம் சதாப்தியில் மட்டும், 482 ரூபாய் வசூலிக்கிறார்கள். (குறுக்கீடு) இன்னும் அதிகம்தான்; அதாவது 485 ரூபாய் வசூலிக்கிறார்கள்.



1999 மே 5]

பேருந்துகளிலே இதுபோன்ற வசதிகள் செய்வது மிகவும் கடினமாக இருக்கிறது. ஓட்டுநர்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஓட்டுநர்கள், அவர்மீது கோபித்துக்கொள்ள வாய்ப்புகள் உருவாகலாம். ஓட்டுநர்களைப் பொறுத்தவரையில், இதுபோன்ற நிகழ்வுகள் பல இடங்களிலே இருந்தாலும், போக்குவரத்துத் துறை மூலமாக பல இடங்களிலே விடுதிகள் எல்லாம் உருவாக்கப்பட்டுதான் இருக்கின்றன; அந்த விடுதிகளிலே நிறுத்தப்பட வேண்டுமென்றும் கூறப்பட்டிருக்கிறது. இருந்தாலும், அவை மட்டுமே போதாத காரணத்தினால், தனியார் விடுதிகளிலேயும் பேருந்துகள் நிறுத்தப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 627, திரு. லா. சந்தானம், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.*

**627—**

**பாலத்தை அகலப்படுத்துதல்**

***15101—திரு. லா. சந்தானம்:**

*மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் கேட்டுக்கடை அருகில் பெரியார் கால்வாய் பாலத்தை பேருந்து போக்குவரத்திற்காக அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இப்பணியைத் தற்போது மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிடுகிற அந்தப் பாலம், அலங்காநல்லூர் பேரூராட்சியினுடைய நுழைவுவாயிலில் இருக்கிறது. அது மிகுந்த ஜன நெருக்கடி உள்ள இடம். பேருந்துகள் செல்கிற நேரத்திலே, ஒரு மனிதர்கூட ஒதுங்கிச் செல்ல முடியாத அளவுக்கு மிகக் குறுகிய பாலமாக இருக்கிறது. அதனால், பல்வேறு விபத்துக்கள் நடக்கிற வாய்ப்பு இருக்கிறது. அதற்கு அதிக நிதியாதாரம்கூட தேவைப்படாது; குறைந்த அளவு ஒதுக்கீடு செய்தாலே போதுமானதாக இருக்கும் என்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து, அதை விரிவுபடுத்தித் தர ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள் குறிப்பிடுகிற அந்தப் பாலமானது 4 மீட்டர் அகலமுள்ள ஒரு கண் கொண்ட பாலமாக கட்டப்பட வேண்டும். அதற்குத் தோராயமாக 8 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. இதுவரையில், எந்தத் திட்டத்திலும் இந்தப் பணி எடுத்துக்கொள்ளப்படவில்லை என்றாலும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையைப் பரிசீலித்து, நிதிநிலைமைக்கேற்ப, இந்தத் திட்டத்தினை விரைவில் எடுத்துக்கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 628, திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**628—**

### ஒருவழிப் பாதையை இருவழிப் பாதையாக்குதல்

***21264—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமங்கலம் தொகுதி, இராஜபாளையம் மெயின்ரோட்டில் ஆலம்பட்டி அருகே பிரிந்து, சேடப்பட்டி வரை செல்லும் சாலையை ஒருவழிப் பாதையிலிருந்து இருவழிப் பாதையாக மாற்றுவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது திட்டம் ஏதும் இல்லை.

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராஜபாளையம் மெயின் ரோட்டில், ஆலம்பட்டி பிரிவில், சேடப்பட்டி வரை செல்லக்கூடிய இந்தச் சாலையில் பல நேரங்களில், ஸ்ரீவில்லிப்புத்தூர், இராஜபாளையம் வழியாக வருகிற பேருந்துகள் உசிலம்பட்டி சென்று, தேனி, பெரியகுளம் பகுதிகளுக்கெல்லாம் செல்லக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஒரு பேருந்து வந்தால், ஒரு கார்கூட விலகிச் செல்ல முடியாத நிலையிலுள்ள, இந்தச் சாலையை



இருவழிப் பாதையாக மாற்றித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலம் தொகுதியில் இராஜபாளையம் மெயின் ரோட்டில், ஆலம்பட்டி அருகே, சேடப்பட்டி வரை செல்லும் இந்த சாலை, ஏறத்தாழ 18.4 கிலோ மீட்டர் நீளமாகும். இந்தச் சாலையினுடைய போக்குவரத்தை நாங்கள் கணக்கிட்டபோது, 10,000 பி.சி.யு.-க்கு மேல் இருந்தால்தான், அந்தச் சாலையை இருவழிச் சாலையாக ஆக்க முடியும். ஆனால், கணக்கெடுப்பின்படி, 1653 பி.சி.யு. தான் இதிலே இருக்கிறது. எனவே, இதற்கு முன்னுரிமை அளிக்க இயலாத நிலைமை இருக்கிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இங்கே கேள்வி கேட்டிருக்கிற காரணத்தினால், இதுகுறித்து மீண்டும் பரிசீலிக்க இத்துறை விரும்புகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 629, திரு. துரை. சந்திரசேகரன். மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**629—**

### பழுதடைந்த ஆலயத்தினைச் சீர்செய்தல்

***11396—திரு. துரை. சந்திரசேகரன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், கண்டியூரில் உள்ள பிரும்மா ஆலயம் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைச் சீர்செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அறியும்.

[1999 மே 5

(ஆ) திருக்கோயிலின் திருப்பணிக்குத் தேவைப்படும் விரிவான மதிப்பீட்டினைப் பெற்று அரசு மானியம், பொது நல நிதி மற்றும் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் நன்கொடை போன்ற நிதிப்பங்கீட்டின் அடிப்படையில் நிர்வாக அனுமதியும், தொழில்நுட்ப அனுமதியும் வழங்கி திருப்பணியை மேற்கொள்ள செயற்குறிப்பு உள்ளது.

**திரு. துரை. சந்திரசேகரன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே தனியாக பிரும்மாவுக்கு என்று இந்த ஆலயம் மட்டும்தான் இருக்கிறது. எனவே, சிறப்பு நேர்வாகக் கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எப்போது இந்தப் பணியைத் தொடங்குவார்கள் என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கோயிலை நான் நேரிலே பார்வையிட்டு இருக்கிறேன். அதிலே சாமி சன்னதி, சரஸ்வதி சன்னதி ஆகியவை முற்றிலும் பழுதடைந்து உள்ளன. மதில்சுவர் ஒரு பக்கம் முழுவதுமாகவே விழுந்துவிட்டது. இராஜகோபுரம் மிகவும் பழுதடைந்து உள்ளது. இதற்கு திருப்பணி செய்ய ரூ. 6,45,000-ல் செலவாகும் என்று மதிப்பிட்டு, அதற்கான நிர்வாக அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. எனவே, பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 630, திரு. ந. கருப்பண்ண உடையார், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**630—**

## ஆலயத் திருப்பணி

***18109—திரு. ந. கருப்பண்ண உடையார்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, கொரநாட்டு கருப்பூரில் அருள்மிகு அபிராமி சமேத சுந்தரேசுவரர் ஆலயத்திற்குத் திருப்பணி மற்றும் குடமுழுக்கு செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?



1999 மே 5]

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பாபநாசம் தொகுதி, கொரநாட்டு கருப்பூரில் அருள்மிகு அபிராமி சமேத சுந்தரேசுவரர் திருக்கோயிலுக்குத் திருப்பணி செய்யத் தேவையான நிதி வசதி இல்லாததால், திருப்பணிகள் செய்ய தற்போது இயலாது.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாபநாசம் தொகுதி, கொரநாட்டு கருப்பூரில் அருள்மிகு அபிராமி சமேத சுந்தரேசுவரர் ஆலயத்திற்குப் போதுமான நிதி வசதி இல்லை என்பதை அறிந்து அறநிலையத் துறை மூலமாக நிதி உதவி வேண்டும் என்று கேட்டு இருக்கின்றோம். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனை மறுபரிசீலனை செய்து, அது புகழ்பெற்ற, பாடல்பெற்ற தலமாக இருக்கின்ற காரணத்தால், அதற்கு குடமுழுக்கு செய்ய ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோயிலினுடைய மொத்த வருமானமே ஆண்டிற்கு ரூ. 1,10,327-தான். 11 வகையான திருப்பணிகளைச் செய்தால்தான் இந்தக் கோயிலின் பணிகள் முழுமையாக நிறைவடைய முடியும். அதற்குத் தேவையானது கிட்டத்தட்ட ரூ. 10 இலட்சம் ஆகும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு திருப்பணிக் குழுவை அமைக்கவும், தேவையான உபயதாரர்களைப் பெறவும் தக்க முயற்சிகளை மேற்கொள்கிறபோது அரசும் தன் பங்கைச் செலுத்தும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 631, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**631—**

## தமிழ்நாட்டின் மழை அளவு

***21518—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 மே 5

(அ) தமிழ்நாட்டில் சராசரி மழைவரத்து எந்த அளவில் உள்ளது?

(ஆ) தமிழ்நாட்டில் மழைவளம் குறைந்து வருகிறதா?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இயல்பான மழையுடன் ஒப்பிடும்பொழுது தமிழ்நாட்டில் கடந்த இரண்டு ஆண்டுகளில் 1996-97 மற்றும் 1997-98-ல் இயல்புக்கும் அதிகமாக மழை பெய்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் பெய்த மழை அளவினைக் கருத்தில் கொண்டால், 1993-94 மற்றும் 1996-97, 1997-98 ஆகிய மூன்று ஆண்டுகளில் மட்டுமே இயல்பான மழையைவிட அதிக மழை பெய்துள்ளது. ஏனைய ஆண்டுகளில் இயல்பான மழையைவிட குறைந்தே காணப்படுகிறது. 1998-99 ஆம் ஆண்டைப் பொறுத்தவரை தென்மேற்குப் பருவமழையின் அளவு 336.3 மி.மீ. ஆக, இயல்பான மழைக்குச் சற்று அதிகமாக, கூடுதலாக 3.1 சதவீதம் பெய்துள்ளது.

(ஆ) ஆம்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழை, தமிழ்நாட்டினுடைய அரசியல், பொருளாதார, சமூக வாழ்வில் ஒரு விளைவை ஏற்படுத்தக்கூடிய மிக முக்கியமான ஒன்றாகும். அமைச்சர் அவர்கள் கடந்த மூன்று ஆண்டுகளில் மழை அதிகமாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். ஆனால் பொதுவாக, தமிழ்நாட்டிலே மழை வளம் என்பது தொடர்ந்து குறைந்து வருகிறது என்றுதான் அறிவியல் அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள். அதற்கு வன வளம் குறைந்திருக்கிறது என்றும், மற்றும் வேறு சில காரணங்கள் எல்லாம் சொல்லப்படுகின்றன. நான் மாநில அரசிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புவது, தமிழ்நாட்டில் மழை வளம் தொடர்ந்து குறைந்து வருவதைக் கூர்மையாகக் கவனித்து, அதை அதிகப்படுத்துவதற்குரிய பொருத்தமான அறிவியல் உத்திகளைக் கடைப்பிடிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மழை வளம் குறைந்து வருவதாக மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் சொன்னார்கள். செயற்கைக்கோள் படங்களின்படி, கடந்த மூன்று ஆண்டுகளில்,



1999 மே 5]

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த ஜப்பான் நிதி உதவித் திட்டத்தின் மூலம் காடுகள் அதிகமாக வளர்ந்து 17 சதுர கிலோமீட்டர் வன வளங்கள் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. ஏறத்தாழ 17½ சதவிகிதத்திலிருந்த வன வளம், ஒரு சதவிகிதம் கூடி, 18½ சதவிகிதமாக இன்றைக்கு இருக்கிறது. ஆகவே, வருங்காலத்திலே, இது இன்னமும் அதிகமாக ஏற்பட்டு, மழை வளம் அதிகமாகும்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன வளம் குறைந்ததால்தான் மழை வளம் குறைந்தது என்பது மேலோட்டமாகப் பார்த்தாலே ஒப்புக்கொள்கிற உண்மையாகும். ஆனால், 33 சதவிகித வன வளம் இருக்க வேண்டிய ஒரு பகுதி, அதுவும் அடர்ந்த வன வளம் இருக்க வேண்டிய ஒரு நிலையில், அப்படியிருந்தால்தான் மழை தொடர்ந்து பெய்துகொண்டிருக்கும் என்பதை அறிந்திருக்கின்ற நாம், 33 சதவிகித வன வளத்தை தமிழ்நாட்டில் உருவாக்குவதற்கு ஏதாவது மாஸ்டர் ஸ்கீம் போட்டு, மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து செயல்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக மாண்புமிகு சுப்பராயன் அவர்கள் ஏதாவது திட்டங்கள் இருக்கிறதா என்று கேட்டிருக்கிறார். இன்றைக்கு உள்ளாட்சித் துறை மூலமாக ஒவ்வொரு கிராமங்களிலும் மரங்களை வளர்ப்பதற்காகத் திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. வனத் துறையின் மூலமாக இந்த ஆண்டும், கடந்த ஆண்டும் தொடர்ந்து இந்தத் திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. அரசு சார்பாக அன்னியில்கூட, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு பிறந்த நாள் விழாவிலும் ஒவ்வொரு திட்டத்தை அறிவிப்பார்கள். ஆனால், கடந்த 2, 3 ஆண்டுகளாக தொடர்ந்து அவர்களுடைய பிறந்த நாள் விழாவிலே மரங்களை நட வேண்டும் என்று இதுபோன்ற இயற்கைச் சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்பதற்காக, அப்படிப்பட்ட வகையிலும் இந்த அரசு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்த 3 ஆண்டுகளில் எடுத்துக்கொண்டால், கிட்டத்தட்ட எப்போதும் பெய்கின்ற மழையளவைவிட இந்த 3 ஆண்டுகளிலே தொடர்ந்து கூடுதலாகத்தான் பெய்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நம்முடைய முதல்வர் அவர்கள்

[1999 மே 5

10 ஆயிரம் ஹெக்டேர் தரிசு நிலங்களிலே, தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை அறிவித்திருக்கிறார்கள். டாக்டர் வி.சி. குழந்தைசாமி அவர்களுடைய அறிக்கையின்படி இந்த அரசு 10,000 ஹெக்டேரில் வனங்களை உருவாக்க செடிகளை நட முயற்சிகளை மேற்கொள்ளும். வருங்காலத்தில் இது தொடரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீர் வளத்தைப் பாதுகாக்க வன வளத்தைப் பாதுகாக்க வேண்டும்; நீர் வளத்தைப் பாதுகாத்தால்தான் நில வளத்தைப் பாதுகாக்க முடியும் என்ற அடிப்படையில், மலைப்பகுதியில் மட்டும் மரங்களை வளர்ப்பதோடு மட்டுமல்லாமல், கிராமப்புறங்களிலே மரங்களை வளர்ப்பதற்காக என்ன திட்டத்தை வைத்திருக்கிறோம்? அப்படி வளர்ப்பதற்குத் திட்டமிடுவதற்காக அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது? என்ன மரங்களை வளர்ப்பதற்காகத் திட்டமிடப்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலையும், மலை சார்ந்த ஆயிரம் கிராமங்களை எடுத்துக்கொண்டு, இப்போது 400 கிராமங்களிலே அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு, இன்னும் 600 கிராமங்களிலே அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது. வருங்காலத்திலே இன்னும் 2,000 கிராமங்களுக்கு அந்தத் திட்டம் விரிவுபடுத்தப்பட இந்த அரசு ஏற்பாடுகளைச் செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 632, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**632—**

## மாதிரி கூட்டுறவுச் சட்டமுன்வடிவு

***23071—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1999 மே 5]

(அ) மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு பின்பு ஆந்திரா, மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் அமல்படுத்தப்பட்டுள்ள மாதிரி கூட்டுறவுச் சட்டத்தை தமிழகத்திலும் அமல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு பின்பு ஆந்திரா, மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களிலே அமல்படுத்தப்பட்டுள்ள மாதிரி கூட்டுறவுச் சட்டம் தமிழகத்திலே அமல்படுத்த, கடந்த ஆண்டு சட்டமன்ற கூட்டத் தொடரிலேயே அது அறிவிக்கப்பட்டு இருக்கிறது. அதைத் தொடர்ந்து இப்போது ஆய்வில் இருந்துகொண்டு இருக்கிறது. விரைவிலே அதற்கான ஒரு புதிய சட்டத்தை தமிழக அரசு அறிமுகப்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட அந்தக் கூட்டுறவு மாதிரிச் சட்டத்தை தமிழகத்திலே அறிமுகப்படுத்த நமது அரசு மேற்கொண்டு இருக்கிற முயற்சிக்கு பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே என்னால் போடப்பட்ட கேள்வி. இருந்தாலும், இந்தத் திட்டத்தினுடைய நோக்கங்களும், அதனுடைய நடைமுறைகளும் என்னவாக இருக்கும்? அதை எந்த முறையிலே நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளவிருக்கிறது என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மாதிரி கூட்டுறவுச் சட்டத்தை இன்றைக்கு ஏற்றுக்கொண்டிருக்கிற ஆந்திரா, மத்தியப்பிரதேசம் போன்ற மாநிலங்களிலே, முழுமையாக அந்தச் சட்டத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதிலே சில திருத்தங்களைச் செய்து ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆந்திர மாநிலத்திற்கு நமது அதிகாரிகளை அனுப்பி அதை ஆய்வு செய்தபோது, அங்கும் அது முழுமையாக இன்றைக்கு நிறைவேற்றப்படவில்லை.

[1999 மே 5

நம்முடைய தமிழ்நாட்டிலே மாதிரி கூட்டுறவுச் சட்டத்தை நிறைவேற்றலாம் என்று முடிவெடுக்கின்ற கால கட்டத்தில் தொடர்ந்து பல தனியார் நிதி நிறுவனங்கள் மக்களை ஏமாற்றி, பல கோடிக்கணக்கான ரூபாய்களை அவர்கள் சுருட்டிக் கொண்டுள்ள சூழ்நிலை இருந்த காரணத்தினால் மாதிரி கூட்டுறவுச் சட்டத்தை அறிமுகப்படுத்துவதிலே கொஞ்சம் தாமதம் ஆனது. ஆனால், இந்த ஆண்டு முதலமைச்சர் அவர்களுடைய ஆணைப்படி தொடர்ந்து மற்ற மாநிலங்களிலே இருப்பதைப் போலவே இங்கே அறிமுகப்படுத்துங்கள், ஆனால் அறிமுகப்படுத்துகிற நேரத்தில் மக்களுக்குத் தெளிவாகச் சொல்லுங்கள், இந்த மாதிரி கூட்டுறவுச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்களிலே அரசுக்கு எந்த சம்பந்தமும் இல்லை, அரசு அதிகாரிகள் இதிலே வந்து பார்வையிட மாட்டார்கள், இது உறுப்பினர்களை நம்பியே நடத்தப்படுகிற சங்கம் என்று அறிவித்துவிட்டால், பிறகு அதிலே, சங்கத்திலே ஏதாவது நஷ்டம் ஏற்பட்டால் அதை அரசு பொறுப்பேற்க வேண்டியதில்லை என்று அறிமுகப்படுத்தி, அதை மக்களிடம் விளக்கமாகச் சொல்லி, அதன்படி சட்டங்களை நிறைவேற்றுங்கள் என்று சொல்லி இருக்கிறார்கள். தொடர்ந்து ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. பதிவாளர் அவர்களுடைய குறிப்பு வந்த பிறகு அது நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அமைச்சர் அவர்கள் விளக்கத்திலே ஒரு சிறு தவறான தகவல் தந்திருக்கிறார் என்று நினைக்கிறேன். அதாவது Mutually Aided கூட்டுறவுச் சட்டம், 1994 ஆந்திர மாநிலத்திலே இயற்றியிருக்கிறார்கள். அதேபோன்று மத்திய அரசே Inter-State Co-operative Act—அந்தச் சட்டத்தின் மூலமாக பல மாநிலங்களை உள்ளடக்கிய சட்டம், 'Inter-State' என்பது இந்த மாநிலம், மற்றொரு மாநிலம் எல்லாம் சேர்த்து ஒரு சட்டம். அந்தச் சட்டத்திலே அதிகாரிகளுக்கும் பங்கு உண்டு. அதிகாரிகளுக்கும் அந்தச் சட்டத்தின் வாயிலாகக் கூட்டுறவைக் கட்டுப்படுத்துவதற்கு பங்கு உண்டு என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன் அதேபோன்று, மாதிரி கூட்டுறவுச் சட்டத்தை மஹாராஷ்டிரா மாநிலம், குஜராத் மாநிலம் போன்ற மாநிலங்களிலேயெல்லாம் நிறைவேற்றி இருக்கின்றார்கள். அதேபோன்று, அனைத்து மாநிலங்களும் நிறைவேற்றி இருக்கின்ற சட்டத்தைப் போன்று,



1999 மே 5]

மாதிரி கூட்டுறவுச் சட்டத்தை இந்த மாநிலத்திலேயும் நிறைவேற்றித் தருவீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.10

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதிரி கூட்டுறவுச் சட்டம் என்று சொன்னாலே, அடிப்படை விதியே அரசு அலுவலர்கள் அதிலே பங்கு பெறக் கூடாது; அதைக் கண்காணிக்கக் கூடாது என்பதுதான் மாதிரி கூட்டுறவுச் சட்டத்தினுடைய அடிப்படை மையக் கருத்தாகும். நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது வினோதமாக இருக்கிறது. நம்முடைய கூட்டுறவுச் சட்டம் 1983 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அந்தக் கூட்டுறவுச் சட்டத்திலேதான் இன்றைக்கு இயங்கிக் கொண்டிருக்கிறது. அதில் சிறிய மாறுதல் செய்து, தொடர்ந்து மாதிரி கூட்டுறவுச் சட்டத்தை அமல்படுத்த இந்த அரசு முயற்சி எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 633, திரு. செங்கை சிவம், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

**633—**

### சத்தியமூர்த்தி நகரில் புதிய அடுக்குமாடி விடுகள்

***14404—திரு. செங்கை சிவம் :**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, பெரம்பூர், வியாசர்பாடி, வடக்கு சத்தியமூர்த்தி நகரிலுள்ள குடிசை மாற்று வாரிய அடுக்குமாடி வீடுகளில் மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ள வீடுகளை இடித்துவிட்டு புதிய அடுக்குமாடி வீடுகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

[1999 மே 5

(ஆ) சென்னை, வியாசர்பாடி குடிசை மாற்று வாரிய திட்டப் பகுதியில் முதற்கட்டமாக, 90 குடியிருப்புகளை—பிளாக் எண்கள் 55, 56 மற்றும் 57 இடித்துவிட்டு, மீண்டும் அவ்விடத்தில் 90 குடியிருப்புகள் புதியதாகக் கட்டப்பட்டு, ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இரண்டாவது கட்டமாக 210 குடியிருப்புகள் அரசின் அனுமதி பெற்று இடிக்கப்பட்டு அவ்விடத்தில் புதியதாகக் குடியிருப்புகள் கட்டப்படவுள்ளன.

**திரு. செங்கை சிவம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தால் மனை அபிவிருத்தி செய்து, மனைப் பங்கீடு அடிப்படையில் கலைஞர் நகர், ஏரிக்கரை போன்ற பகுதிகளில் மனைப் பங்கீடு செய்யப்படுமா? குறிப்பாக, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே நம்முடைய முதல்வர் அவர்கள் குடிசைவாசிகளுக்கு வரப்பிரசாதமாக கல்நாரினாலான ஓட்டு வீடுகள் சுற்றுச் சுவர், ஜன்னல், கதவு போன்றவைகள் இலவசமாக அமைத்துக் கொடுக்கும் திட்டத்தை நம்முடைய சென்னையிலே இருக்கிற குடிசைவாசிகள் பெரிதும் நன்றியுணர்வோடு பாராட்டுகிறார்கள். அந்த அடிப்படையில் என்னுடைய தொகுதியிலே ராஜீவ் காந்தி நகர், எம்.ஜி.ஆர். நகர், தாமோதர நகர், சேமத்தம்மன் காலனி, வ.உ.சி. நகர், திரு.வி.க. நகர் போன்ற பகுதிகளில் இந்தத் திட்டம் இந்த ஆண்டு நிறைவேற்றப்படுமா? அது எந்நிலையில் உள்ளது என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைஞர் நகர், மூர்த்திகர் தெரு மற்றும் ஏரிக்கரைப் பகுதிகளில் அபிவிருத்தி செய்யப்பட்ட தன்னிறைவு மனைத் திட்டத்தில் மனை உரிமை வழங்க சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்தவுடன் மனை உரிமை வழங்கப்படும். மேலும், ராஜீவ் காந்தி நகர், எம்.ஜி.ஆர். நகர், தாமோதர நகர் அதேபோன்று வ.உ.சி. நகர் ஆகிய பகுதிகளில் கல்நார் கூரை, சுவர் மற்றும் கதவுகளுடன் கூடிய வீடுகள் அமைத்துத்தர, 1,600 வீடுகள் கட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 30.5.1999 அன்று கோரப்பட்டுள்ளன. எனவே, இப்பணிகள் விரைவில் முடிக்கத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் தொகுதி, பள்ளிக்கரணை, பாலாஜி நகர்



1999 மே 5]

பகுதியில் எத்தனை இடங்களுக்கு இப்படி கல்நார் கூரைத் திட்டம் திட்டப்பட்டிருக்கிறது, அவற்றில் எத்தனை முடிவுற்றிருக்கின்றன, இன்னும் எத்தனை நாட்களில் அவை முழுவதுமாக முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் பள்ளிக்கரணையில் 500 வீடுகள் இப்போது கல்நாரினால் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. மேலும், 500 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 634, திரு. அ.வ. அப்துல் நாசர், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**634—**

### நிலுவைத் தொகை வசூல்

***15940—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் மூலமாக தவணை கடந்த நிலுவைத் தொகை எவ்வளவு?

(ஆ) அவற்றை வசூலிக்க எத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 31.3.1998-ல் தவணை கடந்த நிலுவைத் தொகை ரூ. 231.72 இலட்சமாகும்.

(ஆ) நிலுவைத் தொகையை துரிதமாக வசூல் செய்வதற்காக தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் தமிழ்நாட்டில் இயங்கும் கிளைகளிலுள்ள மேலாளர்கள், கள அலுவலர்கள் மற்றும் கடன் ஆய்வாளர்கள் ஆகியோருக்கு குறியீடு நிர்ணயிக்கப்பட்டு, கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும், கழக மேலாண்மை இயக்குநர், மேலாளர்கள் மற்றும் அலுவலர்கள் ஆகியோர் வசூலில் பின்

தங்கியுள்ள கிளைகளுக்குச் சென்று பாக்கிதாரர்களை நேரில் சந்தித்து பாக்கியை வசூலிப்பதில் அதிகக் கவனம் செலுத்தி வருகின்றனர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறித் தொழில் இன்றைக்கு நசிந்துகொண்டு வருகின்ற இந்த நேரத்திலே, அந்த நிலுவைத் தொகைகளைத் தள்ளுபடி செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் சேலம் மற்றும் வேலூர் கிளை அலுவலகங்களைத் தவிர மற்ற கிளை அலுவலகங்களைப் பொறுத்தவரையில், மாவட்ட ஆட்சியர் உத்தரவின்பேரில் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர், வருவாய் ஆய்வாளர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள் மூலம் நிலுவைத் தொகைகளை வசூல் செய்து வருகிறோம். இன்று எடுக்கப்பட்டிருக்கின்ற முடிவு, வருகின்ற 30-6-1999 வரை கடனையும் வட்டியையும் கட்டினால் அபராத வட்டியை மட்டும் தள்ளுபடி செய்வது என்ற அடிப்படையிலே. நிலுவையை தற்சமயம் தள்ளுபடி செய்வதற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.என். சுப்பிரமணி.

**திரு. பி.என். சுப்பிரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கைத்தறிக்கு எவ்வளவு கடன் வழங்கப்படுகிறது? அதே நேரத்தில் ஏழை நெசவாளர்கள் சொத்து இல்லாமல் இருப்பார்கள் என்றால், சொத்து இல்லாதவர்களுக்குக் கடன் வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறியாளர்களுக்கு வழங்கும் கடன், தறி சம்பந்தப்பட்ட தேவைகளுக்காக வழங்கப்படுகிற கடன். இதிலே சொத்து collateral security என்பது முக்கியமல்ல, நெசவாளர்களுக்கு அளிக்கப்படுகின்ற கடனாக இது இருக்கின்ற காரணத்தால் இந்த அரசு பொறுப்பேற்றவுடன், தொடர்ந்து கடந்த அரசிலே நமக்கு ஏற்பட்டிருந்த மிகப்பெரிய நஷ்டம் சுமார் 62 இலட்சம் ரூபாய் இருந்தது, இன்று முழுமையாக இந்த இரண்டு ஆண்டு காலத்தில் 26 இலட்சத்து 42 ஆயிரம் ரூபாய் அளவிற்கு இலாபத்திலே குறைக்கப்பட்டு, தொடர்ந்து





அடுத்த ஆண்டு இது இலாபம் ஈட்டத்தக்க விதத்திலே, நெசவாளர்களுக்குத் துணைபுரியத்தக்க விதத்திலே செயலாற்றும் என்பதைத் தெரிவித்துகொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 635, திரு. ஜி.கே. மணி மற்றும் திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**635—**

**பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினருக்கு உடனடிக் கடன்கள்**

***21653—திரு. ஜி.கே. மணி:**
**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் வழங்கும் கடன்களை உடனே வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் வழங்கும் கடன்கள், தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு நிதி ஆதாரம் இருக்கும் பட்சத்தில் இக்கழகத்தால் 10 நாட்களுக்குள் பரிசீலித்து சம்பந்தப்பட்ட வங்கிகளுக்குக் காசோலையாக அனுப்பி வைக்கப்பட்டு, அவ்வங்கிகளின் விதிகளின்படி வழங்கப்பட்டு வருகிறது. நிதி ஒதுக்கீடு இல்லாதபோது விண்ணப்ப மனுவை நிலுவையில் வைத்துக்கொண்டு, நிதி ஒதுக்கீடு பெற்றவுடன் மூப்புரிமை அடிப்படையில் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்ற அந்த உயரிய

[1999 மே 5

தத்துவத்தின் அடிப்படையிலே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிற்படுத்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அறிவைப் பெருக்க கல்வியிலேயும், வேலைவாய்ப்பிலேயும் இடஒதுக்கீடு பெற வேண்டும் என்ற உன்னதமான அந்த இடஒதுக்கீட்டை வகுத்தளித்து, அதற்குப் பிறகு பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீட்டில் இருக்கக்கூடிய..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் நேரடியாக வினாவிற்கு வாருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இதோ வினாவை முடித்துவிடுகிறேன். குறைகளையெல்லாம் களையக்கூடிய வகையிலே கமிட்டிகள் அமைத்து அதன்மூலமாக நிவர்த்தி செய்யக்கூடிய இந்த அரிய நல்ல சந்தர்ப்பத்திலே, பிற்படுத்தப்பட்ட மக்களுடைய பொருளாதார மேம்பாட்டிற்காக, இந்தியக் துணைக் கண்டத்திலே பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தை அமைத்து, தமிழகத்திற்குப் பெருமை சேர்த்த நம்முடைய முத்தமிழறிஞர் முதல்வர் அவர்கள், நடப்பு ஆண்டிலே இந்தப் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின்மூலம் எவ்வளவு பேருக்குக் கடன் வழங்கியிருக்கிறார்கள்? எவ்வளவு தொகை வழங்கப்பட்டிருக்கிறது? இந்தக் கடன் வழங்குவதிலே விண்ணப்பித்து தாமதம் ஆகக்கூடிய அவலநிலைகளை எல்லாம் குறைத்து, விரைவிலே கடன் வழங்குவதற்கு ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் 15 ஆயிரத்து 663 பிற்படுத்தப்பட்டோர் மற்றும் 270 சிறுபான்மையினர், ஆக மொத்தம் 15,933 பயனாளிகளுக்கு ரூபாய் 2010.80 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. நிலுவையிலுள்ள விண்ணப்பங்கள் 965....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 20 கோடி ரூபாய், அதுதான் 2000 இலட்சம் ரூபாய். 20 கோடி ரூபாய் என்று சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** நிலுவையிலுள்ள விண்ணப்பங்கள் 965. இந்த ஆண்டு மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் மேலே சொன்ன கழகத்தினுடைய நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு பயனாளிகளுக்குத் தேவையான கடன் உதவிகள் விரைந்து வழங்கப்பட, தமிழ்நாடு அரசின் பங்காக ரூபாய் 20 கோடி



1999 மே 5]

நடப்பு நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, விதிமுறைகளுக்குட்பட்டு பயனாளிகளுக்குத் தேவையான கடன் உதவிகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாக தொழிற்கல்வி படிக்கும் பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு கல்விக் கடன் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுசம்பந்தமாகத் தனிக் கேள்வி கேட்டால் விடையளிக்க இயலும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பிற்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் தரும் கடன்களுக்காக எனது தொகுதியிலே விசைத்தறி போடுவதற்காகப் பல நூற்றுக்கணக்கான நெசவாளிகள் விண்ணப்பித்தார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினுடைய கடைசிக் காலத்திலே விண்ணப்பித்தார்கள். அவர்களுக்கு sanction order கூட வழங்கப்பட்டு விட்டது. ஆனால், இன்றுவரை அந்த மேம்பாட்டுக் கழகம் அவர்களுக்கு அந்தப் பணத்தை பட்டுவாடாச் செய்யவில்லை. பலபேர் 1996-லேயே 'Margin money' கட்டியிருக்கிறார்கள். 'Margin money' கட்டியும்கூட, அவர்களுக்கு இன்றுவரை அந்தக் கடன் வசதிகள் செய்யப்படவில்லை. இந்த நிலை குறித்து அரசு அறியுமா? அதை நிவர்த்தி செய்ய அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுசம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் நேரடியாக என்னிடத்தில் விவரத்தைக் கூறினால், சம்பந்தப்பட்ட

முறையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா 636, திரு. ஆர். சக்ரபாணி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

**636—**

**வனப் பள்ளிகள்**

***21595—திரு. ஆர். சக்ரபாணி:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் வனத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் வனப் பள்ளிகளைக் கல்வித் துறையின்கீழ் கொண்டுவர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கருத்துரு பெறப்பட்டுள்ளது, அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழ்நாட்டிலே இயங்குகின்ற வனப் பள்ளிகளில் போதுமான ஆசிரியர்கள் இல்லை. இந்தப் பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களின் நலன்கருதி மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த நிதியாண்டிலே வனப் பள்ளிகளைக் கல்வித் துறையின்கீழ் கொண்டு வருவதற்கு முயற்சி செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை ஆகிய இடங்களிலுள்ள 19 பள்ளிகளில் 3,827 மாணவ, மாணவியர்கள் பயின்று வருகின்றனர். இப்பள்ளிகளில் 72 ஆசிரியர்களும், 24 ஆசிரியைகளும் பணிபுரிந்து வருகின்றனர். இப்பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவ, மாணவியர் பெரும்பாலும் பழங்குடி இனத்தைச் சார்ந்தவர்கள். மேற்காணும் பள்ளிகளில் பணிபுரிந்துவரும் ஆசிரியர்கள் இந்தப் பள்ளிகளை அரசு நடத்தும் பள்ளிகளோடு இணைக்க



வேண்டுமென்று நீண்ட நாட்களாகக் கோரிக்கை வைத்துள்ளனர். இதற்கான காரணம், வனப் பகுதியில் நீண்டகாலம் பணிபுரியும் ஆசிரியர்கள் மலையின் கீழ்ப் பகுதியில் உள்ள அவர்களது சொந்த ஊருக்கு அருகில் பணிபுரிய விரும்புவதுதான். ஆனால், அப்பகுதியிலுள்ள உள்ளாட்சித் தலைவர்களும், பள்ளிக் குழந்தைகளின் பெற்றோர்களும் மேற்படி பள்ளிகளில் மாணவர்களுடைய தேர்ச்சி விகிதம் 80 சதவீதமாக இருப்பதாலும், இப்பள்ளிகள் திறமையாக நடைபெற்று வருவதாலும் வனத் துறையின் கட்டுப்பாட்டிலேயே தொடர்ந்து இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 637, திரு. க. மணிவர்மா, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**637—**

**தண்டராம்பட்டு தொகுதியில் சிட்கோ தொழிற்பேட்டை**

***13891—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டுத் தொகுதியில் சிட்கோ தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டுத் தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தவிதமான தொழிற்சாலையும் இல்லாதிருக்கின்ற தண்டராம்பட்டுத் தொகுதியில் 1989-90 ஆம் ஆண்டில் மாண்புமிகு முதல்வரவர்களின் ஒப்புதலோடு தொழிற்பேட்டை அமைப்பதற்குண்டான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதாகச் சொல்லுகின்றார்கள். விவசாயத்தையே நம்பி

வாழ்கின்ற என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற மக்கள், படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறுகின்ற வகையிலேயும், சுய தொழில் புரிவதற்குண்டான வாய்ப்புகள் ஏற்படுத்துகின்ற வகையிலேயும், சிப்காட் தொழிற்பேட்டை அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா? மேலும், என்னுடைய தொகுதியிலே அரசு தரிசு நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன. ஆகவே, அந்த அரசு தரிசு நிலங்களைக் கையகப்படுத்தித் தொழிற்பேட்டை அமைக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே சிட்கோவின் மூலமாகத் திருவண்ணாமலையிலே ஆரம்பிக்கப்பட்ட தொழிற்கூடங்கள் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தண்டராம்பட்டுத் தொகுதியிலே ஒரு தொழிற்பேட்டை அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். அவர்கள் தொழில் முனைவோர் கூட்டத்தைக் கூட்டி, தொழில் முனைய ஆர்வமுள்ள எத்தனை நபர்கள் இருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்தால், அதற்கேற்றாற்போல இடம் தேர்வு செய்யப்பட்டு, அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம் முழுமையாக விவசாயத்தை நம்பியுள்ள பகுதியாகும். அந்தப் பகுதியிலே சிறுதொழில் தொடங்குவது என்றால் மிகவும் சிரமமான நிலை இருக்கிறது. ஆகவே, திருவாரூரிலே தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா? மேலும், நாகை தொழிற்பேட்டையை விரிவுபடுத்தும் திட்டமும் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகின்றேன்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற திருவாரூர் மாவட்டத்தில், திருவாரூரிலே கீழகாளத்துக்குடி என்பது திருவாரூர் நகரத்தை ஒட்டியே நான்கு பர்லாங்கு தூரத்தில் இருக்கிறது. அங்கே, தொழிற்பேட்டை அமைப்பதற்காக இடம் தேர்வு செய்யப்பட்டு, இந்த வாரம் வக்ப் வாரியத்தால் அந்த இடம் ஏலம் விடப்பட இருக்கிறது.



அதிலே சிட்கோ பங்கு கொண்டு, அந்த இடத்தை நிச்சயமாக எடுத்து, அங்கே தொழிற்பேட்டையை இந்த ஆண்டு அமைக்கும். நாகப்பட்டினத்தைப் பற்றிச் சொன்னார்கள். நாகப்பட்டினத்திலே தொழிற்பேட்டையை விரிவுபடுத்தி அமைக்கின்ற வாய்ப்பினை உருவாக்குவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதலில் தொழில் ஆர்வம் உடையவர்களுடைய கூட்டத்தைக் கூட்டி, என்ன தொழில் செய்ய ஆர்வமாக இருக்கிறார்கள் என்று தெரிவித்தால், அதற்கேற்றாற்போல அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 638, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**638—**

## தொழிற்பேட்டை அமைத்தல்

***14364—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாட்ராம்பள்ளி தொகுதியைச் சேர்ந்த தெற்குப்பட்டு பகுதியில் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், நாட்ராம்பள்ளி தொகுதியைச் சேர்ந்த தெற்குப்பட்டு பகுதியில் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த அண்ணா தி.மு.க. ஆட்சியில் நாட்ராம்பள்ளிக்கு அருகில் தச்சூர் என்கிற இடத்தில் தொழிற்பேட்டை அமைப்பதாக இந்த அவையிலேயே அறிவித்து, அதற்கான நிலத்தையெல்லாம்கூட அமைச்சர்கள் 2, 3 முறை பார்வையிட்டு வந்தார்கள். பிறகு ஏன் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது? பின்னாலே தெற்குப்பட்டு என்ற இடத்தில் இப்போது சந்தன எண்ணெய் ஆலை இலாபத்தில் ஓடிக்கொண்டு இருக்கிறது. அந்த இடத்தில் ஒரு தொழிற்பேட்டை

அமைத்தால் அப்பகுதியில் இருக்கக்கூடிய மக்கள் நிறைய வேலைவாய்ப்பைப் பெறமுடியும். தொழில் முனைவோர்களும் அந்த இடத்தில் தொழிலை ஆரம்பிக்கவும் முடியும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து அந்த இடத்தில் தொழிற்பேட்டை அமைக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல சிட்கோ மூலமாக எந்த இடமும் அங்கே தேர்வு செய்யப் படவில்லை. அதுபற்றி எந்தப் குறிப்பும் என்னிடத்தில் இல்லை. ஆனால், வட ஆற்காடு மாவட்டத்தில் தெற்குப்பட்டு பகுதிக்கு அருகில் திருப்பத்தூர், வாணியம்பாடி இருக்கின்றன. அங்கே தோல் பதனிடும் தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கின்றன. தெற்குப்பட்டு கிராமத்தைப் பொறுத்தவரையில் 20 கிலோ மீட்டர் தூரத்திலே அது அமைந்திருக்கிறது—திருப்பத்தூருக்கும் வாணியம்பாடிக்கும் அருகிலேயே. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல அங்கே தொழில் முனைவோர் தொழில் அமைக்க முன்வந்தால், அதற்கேற்றாற்போல நிலத்தைத் தேர்வு செய்ய அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்குடி தாலுகா, மாவட்டத்திலேயே மிகவும் பின்தங்கிய பகுதி. அந்தப் பகுதியிலே ஏற்கெனவே 1989 ஆம் ஆண்டு தொழிற்பேட்டை தொடங்குவதற்கான நிலம் எல்லாம் ஆர்ஜிதம் செய்யப்பட்டதாக அறிகிறோம். எனவே, காட்டுமன்னார்குடியில் விரைந்து தொழிற்பேட்டை அமைத்து பின்தங்கிய பகுதியை முன்னேற்றத்திற்கு அழைத்துவர இந்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல், ஏற்கெனவே இத்துறையின் மானியக்கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டது. 17 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு அதை எடுப்பதற்குரிய நடவடிக்கைகள் எல்லாம் முழு அளவிலே நடந்து வருகின்றன. அதிலே 6 இடங்கள் முழுமையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்த இடங்களிலே உடனே அந்தத் தொழிற்கூடங்கள் அமைப்பதற்குரிய





நடவடிக்கைகள் விரைவில் தொடங்க இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல், ஏற்கெனவே திட்டமிட்டபடி 50 தொழிற் பேட்டைகளை அமைக்கவேண்டுமென்ற இந்த அரசினுடைய திட்டத்திற்கு உறுப்பினர் அவர்கள் இடத்தைத் தெரிவித்தால், அங்கே தொழில் செய்ய ஆர்வம் உள்ளவர்கள் முன்வந்தால், நிச்சயமாக அரசு அதைப் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 639, திரு. ந. பாண்டுரங்கன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**639—**

## ஆதிதிராவிட மாணவர்களுக்கு விடுதி

***6194—திரு. ந. பாண்டுரங்கன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் பேரூரில் ஆதிதிராவிட மாணவர்கள் தங்கும் விடுதி தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது இல்லை. வரும் ஆண்டுகளில் நிதி நிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

**திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரணமல்லூர் ஒரு பேரூராட்சியாகவும், தொகுதியின் தலைநகராகவும் இருக்கிறது. பெரணமல்லூரைச் சுற்றி அதிக அளவில் ஆதிதிராவிடர்கள் வசிக்கிறார்கள். குறிப்பாக, நான் குறிப்பிடுகின்ற பெரணமல்லூருக்கும் அங்கே ஆதிதிராவிடர்கள் குடியிருக்கிற பகுதிகளுக்கும் இடையே ஏறத்தாழ 4 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. தினந்தோறும் நூற்றுக்கணக்கான மாணவர்கள் நடந்து வந்து கல்வி பயிலும் சூழ்நிலையும் இருக்கிறது. ஏற்கெனவே, ஆதிதிராவிடர் மாணவியர் நல

[1999 மே 5

விடுதி திறக்கிறபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருங்காலத்தில் கண்டிப்பாக ஆதிதிராவிடர் மாணவர் விடுதி தொடங்குகிறோம் என்று மேடையிலேயே அறிவித்தார்கள். எனவே, இந்த ஆண்டிலேயே மாணவர் விடுதி அங்கே தொடங்க அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராக:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூரில் ஓர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியும், ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளியும் இயங்கி வருவது நன்றாகத் தெரியும். அந்தப் பள்ளிகளைச் சுற்றி 8 கிலோ மீட்டர் தூரத்திற்கு எந்த ஆதிதிராவிடர் மாணவர் விடுதியும் இல்லை என்பதும் நன்றாகத் தெரியும். ஆகவே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டமன்றத்தில் வினா எழுப்பியபோது நான் இந்த பதிலைக் கூறியிருக்கிறேன். நேரிலும் சொல்லியிருக்கிறேன். எதிர்வரும் ஆண்டில் நிதிநிலைக்கேற்ப பரிசீலித்துத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 640, திரு. ஆர்.ஆர். சேகரன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.*

**640—**

### ஆதிதிராவிடர் நலப் பள்ளி தொடங்குதல்

***14627—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், பொம்மியம்பட்டி ஊராட்சியில் ஆதிதிராவிடர் நலத் துறை மூலம் ஒரு பள்ளிக்கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராக, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



1999 மே 5]

பொம்மியம்பட்டி ஊராட்சியில் நான்கு பஞ்சாயத்து ஒன்றிய தொடக்கப் பள்ளிகளும், ஒரு நடுநிலைப் பள்ளியும் மற்றும் ஒரு உயர்நிலைப் பள்ளியும் இயங்கி வருவதால், ஆதிதிராவிடர் நலனுக்கென தனியே அப்பகுதியில் மேலும் ஒரு ஆதிதிராவிடர் நலப் பள்ளி தொடங்க வேண்டிய அவசியம் இல்லை.

*முற்பகல் 10-30*

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஊராட்சியிலே பொம்மியம்பட்டி கோம்பை என்ற ஒரு பகுதி இருக்கிறது. இந்தப் பகுதியிலே ஆதிதிராவிடர் மக்கள் பெருமளவிலே வசித்து வருகின்றார்கள். அவர்கள் அந்தப் பள்ளிக்குச் செல்ல வேண்டுமென்றால் 7, 8 கிலோ மீட்டர் தூரம் நடந்து செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, அந்த கோம்பை பகுதியிலே ஒரு தொடக்கப் பள்ளியை துறையின் மூலமாகத் தொடங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராக:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர்களுக்கென தனியாக இத்துறையின் சார்பாகப் பள்ளிகள் தொடங்கப்படுவதில்லை. கல்வித் துறையின் மூலமாகத் தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டு வருகின்றன. அந்த அடிப்படையிலே கடந்த இரண்டு ஆண்டுகளில் 12 பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள் முன்னுரிமை அடிப்படையில் தொடங்கப்பட்டு வருகின்றன. ஆகவே, ஆதிதிராவிடர் நலத் துறைக்கு நீங்கள் முன்மொழிவுகள் அனுப்பினால், தகுந்த பரிந்துரையுடன் அனுப்பி வைக்கப்படும். இல்லையென்றால், நீங்கள் நேரிடையாகவே கல்வித் துறைக்கு முன்மொழிவுகளை அனுப்ப வேண்டும் என்பதை இந்தநேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. விதி 110-ன்கீழ் அறிக்கை

### தென் மாவட்டங்களின் சமூக, பொருளாதார, தொழில் வளர்ச்சிக்கான உயர்நிலை ஆணையம் அமைத்தல் பற்றி மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் பேரவைக்கு ஓர் அறிக்கை வைக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கேட்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110-ன் கீழ் இந்த அறிக்கையினை அவைமுன் வைக்கின்றேன்.

'தென் மாவட்டங்களில் உள்ள மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்திடவும், அவர்களின் கல்வி, பொருளாதார மேம்பாடு, வேலைவாய்ப்பு, தொழில் வளர்ச்சி போன்ற முன்னேற்றங்களை உருவாக்கிடவும், அரசு சார்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்தறிந்து மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை வகுத்தளிக்க உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்படும்' என்று 17.3.1999 அன்று இந்த அவையில் வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருந்தேன். இந்த அறிவிப்பிற்குச் செயல்வடிவம் கொடுக்கும் வகையில், புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம், மதுரை, திண்டுக்கல், தேனி, விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள மக்களின் பொருளாதார வளர்ச்சிக்காக "தென் மாவட்டங்களுக்கான சமூக, பொருளாதார, தொழில் வளர்ச்சிக்கான உயர்நிலை ஆணையம்" "High Power commission for Socio-economic and Industrial Development of Southern Districts" ஒன்றை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. இதன் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பின்வருமாறு:

(1) நீதியரசர் திரு. இரத்தினவேல் பாண்டியன்,
உச்சநீதிமன்ற முன்னாள் நீதியரசர் .. தலைவர்

(2) திரு. ஆர்.ஏ. சீதாராமதாஸ், I.A.S., .. துணைத் தலைவர்
(ஓய்வு)



(3) திரு. ஏ. வெங்கட்ராமன், I.A.S., .. உறுப்பினர்
(ஓய்வு)
மாநில திட்டக் குழு உறுப்பினர்

பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்பட்டோர் நலத் துறைச் செயலாளர் திரு. என். முருகன், I.A.S. இந்த ஆணையத்தின் செயலாளராக இருப்பார்.

ஆணையத்தின் தலைவர் நீதியரசர் திரு. இரத்தினவேல் பாண்டியன் நெல்லை மாவட்டத்தைச் சார்ந்தவர். துணைத் தலைவர் திரு. சீதாராமதாஸ் பிரிக்கப்படாத மதுரை மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவராகப் பணிபுரிந்து அனுபவம் பெற்றவர். திட்டக் குழு உறுப்பினர் திரு. வெங்கட்ராமன் அவர்கள் தமிழக அரசில் வேளாண்மைக் துறை இயக்குநர், வேளாண்மைத் துறைச் செயலர், வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் போன்ற பொறுப்புக்களில் பணிபுரிந்ததோடு மட்டுமல்லாமல் உலக வங்கியில் ஆலோசகராகவும் இருந்தவர்.

உயர்நிலை ஆணையத்தின் ஆய்வு வரம்புகள் Terms of reference பின்வருமாறு:

(1) புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம், மதுரை, திண்டுக்கல், தேனி, தூத்துக்குடி, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய தென் மாவட்டங்களில் பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாக உள்ளவைகளைக் கண்டறிதல்;

(2) மேற்கூறிய மாவட்டங்களில் உள்ள மக்களுக்குக் கல்வி, சமூக, பொருளாதார மேம்பாடு, வேலைவாய்ப்பு போன்ற முன்னேற்றங்களை உயர்த்திட வழிவகைகளை ஆராய்தல்;

(3) மேற்கண்ட இனங்களில் தென் மாவட்டங்களில் உள்ள மக்களின் முன்னேற்றத்திற்கு அரசு சார்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து பரிந்துரை செய்தல்; மற்றும்

(4) மேற்படி பரிந்துரையின் அடிப்படையில் தென் மாவட்டங்களில் பொருளாதார வளர்ச்சிக்கான மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை வகுத்தளித்தல்.

இந்த ஆணையம் ஜனவரி 2000-க்குள் தனது அறிக்கையை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

## 4. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் காவல் நிலையத்தில் மாணவர் மரணம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, சிறப்புக் கவன ஈர்ப்பு. சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் காவல் நிலையத்தில் மாணவர் ஒருவர் இறந்தது குறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், திரு. சி. ஞானசேகரன், திரு. கே. தங்கமணி, திரு. ஐ. கணேசன், திரு. எஸ். திருநாவுக்கரசு, திரு. சி. வேலாயுதன், திரு. லா. சந்தானம், திரு. பி.என். வல்லரசு, திரு. டி. மணி ஆகியோர் அறிவிப்புகள் கொடுத்திருக்கிறார்கள். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் திரு. சி. ஞானசேகரன் அவர்களை முதலில் பேச அழைக்கின்றேன்.

முற்பகல் 10-35

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்தில் நேற்றைக்கு முந்தைய நாள் தேவர் குரு பூஜைக்குப் போவதற்காக சில அமைப்புகள் அங்கே ஏற்பாடு செய்து கொண்டிருந்தபோது அவர்களுக்கு வாகனங்கள் சரியாகக் கிடைக்கவில்லை என்ற காரணத்தாலோ, அங்கு டாக்ஸி, வேன் வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் குரு பூஜைக்கு நாங்கள் வாகனங்களை எடுத்து வரமாட்டோம் என்று சொன்ன காரணத்தாலோ, அவர்கள் சாலை மறியல் செய்ய, பிறகு காவலர்கள் எல்லாம் அங்கு சென்று, நாங்கள் சிறப்புப் பேருந்து ஒன்றை ஏற்பாடு செய்கிறோம் என்று சொல்லி, பிறகு பேருந்து வரவும் காலதாமதமான காரணத்தினாலே, அங்கே ஒரு புகைச்சல் ஏற்பட்டிருக்கிறது. பிறகு அங்கு நடந்த அந்தக் குழப்பத்தில் 14 வயது மாணவன் ஜெகதீசன் என்பவனும் மற்றும் சிலரும் காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு, காவல் நிலையத்தில் வைத்துக்கொண்டிருந்தபோது அந்த மாணவன் அந்த இடத்திலே, காவல் நிலையத்திலே மரணம் அடைந்திருக்கிறான். மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றபோது, அந்த இடத்திலே அவன் இறந்துவிட்டான் என்று சொன்னபிறகு, இந்தச் செய்தி அந்த மாவட்டத்தினுடைய பல பகுதிகளிலே பரவ, ஆங்காங்கே



மக்கள் போராட்டங்களிலே ஈடுபட்டு, பஸ் எரிப்பு, கடை அடைப்பு என்றெல்லாம் ஏற்பட்டிருக்கிறது. தென் மாவட்டங்களில் அமைதி திரும்பியிருக்கிறது என்று நாம் பெருமூச்சு விட்டிருக்கிற இந்தநேரத்தில் மீண்டும் இதுபோன்ற சம்பவங்கள் உருவாகி அந்த மாவட்டத்தில் அமைதியின்மை தலைதூக்கிக் கொண்டிருக்கிறதோ என்கிற ஒரு அச்சம் எனக்கு ஏற்படுகிறது. ஏற்கெனவே காவல் துறையில், பொதுவாக நல்லமுறையிலே நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். இருந்தாலும்கூட, காவல் நிலையத்திலே மரணம் என்பது சம்பவிக்கக் கூடாது, அது கூடவே கூடாது என்று மாண்புமிகு முதல்வர் அவர்களும் கடுமையாக உத்தரவிட்டு அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தபோதும்கூட, காவல் நிலைய மரணம் என்பது இந்த ஜனநாயகத்தின்மீதும், இந்த அரசின்மீதும் ஒரு மரண அடியாகவே விழுகிறது என்பதை நாம் யாரும் மறுக்க முடியாது. இதிலே ஏன் ஒரு மாணவனை, சிறு மாணவனை அழைத்துச் சென்று, காவல் நிலையத்திலே வைத்துக்கொண்டிருந்தபோது ஒன்று அவனை உடனடியாக, Remand செய்து நீதிமன்றக் காவலுக்கு அனுப்பி, நாம் சிறைக்கு அனுப்பியிருக்கலாம்; அல்லது வேறு வகையிலே அவர்களை உடனடியாக release அதாவது, ஜாமீனில் விடக்கூடிய குற்றம் அவர்கள் செய்திருந்தால், அப்போதே அவர்களை ஜாமீனில் விட்டிருக்கலாம். ஆனால், காவல் நிலையத்திலே வைத்திருக்கிறபோது இதுபோன்ற மரணம் ஏற்படுவது என்பது சமுதாயத்தில் சில கலவரங்களை நிச்சயமாகக் கட்டவிழ்த்துவிடும் என்பதைத் தெரிந்திருந்துகூட, காவலர்கள் அத்துமீறி இதிலே நடந்திருக்கிறார்கள். அப்படி நடந்து, அந்த மாணவனுடைய உயிர் போவதற்கு அவர்கள் காரணமாக இருந்திருக்கிறார்கள். அது எப்படி ஏற்பட்டது, ஏன், என்பது இன்னும் மர்மமாகவே இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்கெனவே அந்த இன்ஸ்பெக்டர் அந்த இடத்திலே சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார், என்ற செய்தி வந்து கொண்டிருக்கிறது. ஆகவே அவர்கள்மீது நடவடிக்கை என்ன எடுக்கப்பட்டிருக்கிறது? இந்த மரணத்திற்கு என்ன காரணம்? எப்படி இந்த மரணம் சம்பவித்தது? இதுபோன்ற சம்பவங்கள் தமிழகத்திலே நிச்சயமாக நிகழாது என்கிற உறுதியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளித்தும், கடுமையான நடவடிக்கை எடுத்தும், சுற்றறிக்கைகள் அனுப்பியும், அறிவுரைகள் வழங்கியும் இது நடந்துள்ளது. இனி அது வராமல் தடுப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் என்பதை அறிவிக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. தங்கமணி.

***திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்புவனம் பகுதி என்பது என்னுடைய மானாமதுரை தொகுதிக்கு உட்பட்டது. இந்தச் சம்பவம் துரதிருஷ்டவசமான நிகழ்ச்சி என்று கருதுகிறேன். கடந்த மூன்றாம் தேதி தேவர் ஜெயந்திக்கு, செல்ல விரும்பிய மக்கள், வாகனங்களைத் தேடியிருக்கிறார்கள்; வாகனங்கள் கிடைக்கவில்லை. வாகனங்கள் செல்லக் கூடாது என்று போலீஸ் தடுத்ததாகத் தெரிகிறது. அதனால் காவல் துறையிடம் வந்து முறையிட்டதன் காரணமாக, காவல் துறையினர் பேருந்தை ஏற்பாடு செய்வதாகத் தெரிவித்து, காரைக்குடியிலிருந்து பேருந்து வருவதாகத் தெரிவித்து இருக்கிறார்கள். பேருந்து காரைக்குடியிலிருந்து வருவதற்குப் பதிலாக—சிவகங்கையிலேயே, பக்கத்திலே இருக்கக்கூடிய சிவகங்கையிலிருந்துகூட ஏற்பாடு செய்திருக்கலாம். ஆனால், பேருந்து வருவதிலே காலதாமதம் ஏற்பட்டதினால், காலதாமதமாகிறது என்று மக்கள் பஸ் மறியலில் ஈடுபட்டிருக்கிறார்கள். காவல் துறை அவர்களைத் தடுப்பதற்காகத் தாக்கியிருக்கிறது. அதோடு 11 பேர்களைக் கைது செய்து காவல் நிலையத்தில் அடைத்திருக்கிறார்கள். காவல் நிலையத்திலே வைத்திருந்தபோதுதான் மாணவன் ஜெகதீசன் இறந்து இருக்கிறான். அவன் பத்தாம் வகுப்பு படிக்கின்ற மாணவன். பக்கத்திலே இருக்கக்கூடிய லாடனேந்தல் கிராமத்தைச் சேர்ந்த வெள்ளக்கண்ணு என்பவருடைய மகன் ஜெகதீசன். இந்த மாணவனை அடித்ததன் காரணமாக காவல் நிலையத்திலே அவன் இறந்து, மருத்துவ நிலையத்திற்குக் கொண்டு சென்றபோது இறந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதோடுமட்டுமல்ல, திருப்புவனத்தைச் சேர்ந்த பூமிநாதன் என்பவரும், ஏனாதியைச் சேர்ந்த மருது என்பவரும் இதிலே படுகாயம் அடைந்திருக்கிறார்கள்.

*முற்பகல் 10-40*

அதற்குப் பின்னால், அங்கே பல்வேறுவிதமான விரும்பத்தகாத சம்பவங்கள் எல்லாம் நடைபெற்று இருக்கின்றன. எனவே, இதிலே ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதம் 30-ஆம் தேதி தேவருடைய ஜெயந்தி நடைபெறும். ஆனால், இப்போது இடையிலே, மே மாதம் 3ஆம் தேதி தேவர் ஜெயந்தி நடைபெறுவதற்கு எப்படி அரசு அனுமதி கொடுத்தது என்பதை அரசு விளக்க வேண்டும்.





அதோடுமட்டுமல்ல, காவல் துறையினர் கடுமையாக நடந்து கொண்டிருக்கிறார்கள். சம்பவ இடத்திலேயே காவல் துறை ஆய்வாளர் நீக்கப்பட்டிருக்கிறார். இதிலிருந்து காவல் துறையினரின் நடவடிக்கையைத் தெரிந்துகொள்ள முடிகிறது. காவல் துறை மோசமாக நடந்து கொண்டிருக்கிறது என்பது ஆர்.டி.ஓ. விசாரணை மூலமாகவும் தெரிகிறது. எனவே, இந்த நிகழ்ச்சி சம்பந்தமாக உயர்மட்ட அளவிலே ஒரு நீதி விசாரணை நடத்த வேண்டும்.

இரண்டாவதாக, இந்தச் சம்பவத்திலே ஈடுபட்டிருக்கக்கூடிய ஆய்வாளர் போக, மற்றும் இதிலே ஈடுபட்டவர்கள்மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இறந்த மாணவனுக்கு இன்றைக்கு ஒரு இலட்சம் ரூபாய் நஷ்ட ஈடு கொடுத்திருக்கிறார்கள். அந்த மாணவன், அந்தக் குடும்பத்திலே படித்து, எதிர்காலத்திலே அந்தக் குடும்பத்தை வாழ்விப்பான் என்று நம்பியிருக்கிறார்கள். எனவே, இறந்த மாணவன் குடும்பத்திற்குக் குறைந்தது 3 இலட்சம் ரூபாயாவது நஷ்ட ஈடு வழங்க வேண்டும். அதுபோல, காயம் அடைந்தவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, தென் மாவட்டங்களில் உள்ள மக்களின் முன்னேற்றத்திற்கு நம்முடைய முதல்வர் அவர்கள் இப்போதுகூட சபைக்கு ஓர் அறிக்கை தந்தார்கள், இதுபோன்று தென் மாவட்டங்களில் ஜாதிக் கலவரங்கள் ஏற்படாத வண்ணம் தடுத்து ஒரு அமைதியை நிலைநிறுத்தி, அந்த மக்கள் இன்றைக்கு ஒற்றுமையாக இருக்கிறார்கள்; அந்த ஒற்றுமை நிலையில் இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் ஒரு ஜாதிக் கலவரத்தை ஏற்படுத்திவிடுமோ என்ற அச்சம் அந்தப் பகுதி மக்களிடம் இருக்கிறது. அதை நீக்குவதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதுமட்டுமல்ல, கடந்த அக்டோபர் 30ஆம் தேதி ஏராளமான பாதுகாப்பை நமது அரசு செய்திருந்தது. இப்போது அந்த அளவுக்கு இல்லை என்பதாக நான் கருதுகிறேன். எனவே, இதுபோன்ற சம்பவங்கள் நடக்காமல் இருப்பதற்கு அரசு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், திருப்புவனத்திலே நடந்த இந்தக் கொடுமையான சம்பவம் இனிமேல் நாட்டிலே எந்தப் பகுதியிலும் நடக்கக் கூடாது என்று எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக நான்

சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 'தியாக வாழ்வே தேசிய வாழ்வு'. நாட்டையும், மக்களையும் இரு கண்களாகப் பாவித்த தேவர் அவர்களுடைய குரு பூஜைக்குச் செல்வதற்கு வாகனங்கள் கேட்டு, அதன்பிறகு ஏற்பட்ட விரும்பத்தகாத செயல்கள். காவல் துறையிலே வாகனங்களை ஏற்பாடு செய்து கொடுப்பதாகச் சொல்லி, பகல் 2-00 மணிக்கு மேலும் வாகனங்கள் வந்து சேராததன் காரணமாக இந்தத் துயரச் சம்பவம் நடந்திருக்கிறது.

போலீஸ் நிலையத்தை முற்றுகையிட்ட பலரைக் கைது செய்து, 11 பேர்களைக் கைது செய்து, அதிலே மாணவன் ஜெகதீசன் மரணம் அடையக்கூடிய அளவிற்குக் கொடூரமாகத் தாக்கப்பட்டிருக்கிறார். அவர் இறந்த பிறகு, அவரை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றதாகச் சொல்லப்படுகிறது. அந்த மக்கள் அதைக் கேள்வியுற்று, ஜெகதீசனை ஏற்றிவந்த ஜீப்பை வழிமறித்து, அங்கே போலீஸ்காரர்களுக்கும், பொதுமக்களுக்கும் கைகலப்பு ஏற்பட்டிருக்கிறது. அதன்பிறகு, அந்தச் சவத்தை அந்த வண்டியிலேயே விட்டுவிட்டுச் சென்று இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, வாகனங்கள் 3 மணிக்கு மேலும் வரவில்லை. நம்முடைய தலைவருடைய குரு பூஜையிலே கலந்துகொள்ள முடியாதோ என்ற ஏக்கத்தில் இந்த விரும்பத்தகாத சம்பவம் எல்லாம் ஏற்பட்டிருக்கிறது. இந்தக் குறைபாடுகளையெல்லாம் நம்முடைய முதல்வர் அவர்கள் நல்லமுறையிலே பரிசீலனை செய்து— இதற்கு சம்பந்தப்படாதவர்களை எல்லாம் கைது செய்ததாகச் சொல்லப்படுகிறது. சம்பந்தப்படாதவர்களை இந்த அரசு உடனடியாக விடவேண்டும். அந்த மாணவருடைய தந்தையாரிடம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிவாரண நிதியாக உடனடியாக ஒரு இலட்சம் ரூபாய் வழங்கியிருக்கிறார்கள். அதற்காக அரசை நாங்கள் பாராட்டுகிறோம். அதுபோல, அந்த ஏழைக் குடும்பத்திற்கு இது போதுமான நிதியாக இல்லையென்றும் சொல்கிறார்கள். அதற்காக, அந்தக் குடும்பத்திற்கு முதல்வர் அவர்கள் கருணை உள்ளத்தோடு 3 இலட்சம் ரூபாய் அளிக்க வேண்டும். இதை ஒரு கோரிக்கையாகவே அவர்கள் வைத்திருக்கிறார்கள்.

முற்பகல் *10-45*

அத்துமீறி நடந்த அந்தக் காவலர், இன்ஸ்பெக்டர் சஸ்பென்ட் செய்யப்பட்டிருக்கிறார். மூன்று போலீஸ்காரர்கள் மீது புகார் இருக்கிறது. ஆகையாலே, இதையெல்லாம் மனதிலே கொண்டு, இப்போது அமைதிக் குழுவைப் போட்டிருக்கிறீர்கள். அமைதிக் குழு விசாரணை நடத்த



வேண்டும். ஆர்.டி.ஓ. விசாரணைக்காக அரசு உத்தரவிட்டிருக்கிறது. நல்ல உயர்மட்டக் குழுவை அமைத்து விசாரணை நடத்த வேண்டும் என்று சொல்லி, சிறப்பான முறையிலே ஆட்சி சென்று கொண்டிருக்கும்போது, இதுபோல தடைக் கற்கள் ஆங்காங்கே ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. அதை அகற்ற நம்முடைய முதல்வர் முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டு, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த *3-5-1999* ஆம் நாள் பசும்பொன்னிலே நடக்கவிருந்த ஒரு விழாவிலே கலந்துகொள்வதற்காக, சிவகங்கை மாவட்டம், திருப்புவனத்திலிருந்து செல்வதற்காகப் பல தொண்டர்கள் வாகனத்திற்காக அங்கே நிறுத்தப்பட்டிருந்த வேன்களைக் கேட்க, அந்த வேன்களுடைய உரிமையாளர்கள், அங்கே செல்வதற்கு நாங்கள் வருவதற்கில்லை என்று சொல்லும்போது, அவர்களே, அங்கே இருக்கின்ற காவல் நிலையத்திலே இருக்கின்ற காவலர்களே அந்த விழாவிற்குச் செல்வதற்கு அவர்களுக்கு வாகனங்களைத் தர வேண்டாம் என்று கூறியிருக்கிறார்கள் என்று கூறிய ஒரு தவறான செய்தியின் காரணமாக, அங்கே கூடியிருந்தவர்கள் எல்லாம் காவல் நிலையத்திற்குச் சென்று நாங்கள் இந்த விழாவிற்கு, பசும்பொன்னுக்குச் செல்ல வேண்டும்; அதற்கு எங்களுக்கு உரிய வாகனங்களை ஏற்பாடு செய்து தாருங்கள், நாங்கள் அதற்குரிய வாடகையைச் செலுத்திவிடுகிறோம் என்று கேட்கின்ற நேரத்திலே, அங்கேயிருந்தவர்கள், வேன்கள் வரவில்லையென்றாலும் பேருந்துகளை உங்களுக்கு ஏற்பாடு செய்து தருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைக் கேட்டு அவர்கள் அமைதியாக இரண்டு, மூன்று மணி நேரம் காத்துக்கொண்டிருந்திருக்கிறார்கள்.

இன்றைக்கு அங்கே நடக்கின்ற விழாக்களை இந்த அரசு தடுக்கிறது என்ற ஒரு அவப்பெயர் வந்துவிடக் கூடாது என்பதற்காக அக்டோபர் *30* ஆம் தேதி நடக்கின்ற விழா, மே மாதம் *3* ஆம் தேதி நடந்தாலும்கூட, அதற்குரிய அனுமதியைத் தந்து, அந்தப் பகுதி மக்களுடைய எண்ணத்திற்கு இடையூறாக இல்லாமல், இந்த அரசு அனுமதி தந்து அதற்குரிய பாதுகாப்பு நடவடிக்கையையும் நல்ல முறையிலே மேற்கொண்டிருந்தது. நான்கூட, அந்த விழாவிலே கலந்துகொள்வதற்காகச் சென்றிருந்தேன். அங்கே எந்தவிதமான அசம்பாவிதமோ, எந்தவிதமான பிரச்சினைகளோ இல்லையென்கிற

நிலைதான் அந்தப் பகுதியிலே இருந்தது. இது துரதிருஷ்டவசமானது. அந்தப் பகுதியிலே வாழ்கின்ற மக்கள் எல்லாம் சற்று வேகமான எண்ணத்தை உடையவர்கள். வெள்ளையர் ஆண்டுகொண்டிருந்த காலத்திலேகூட, பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எதிரான சிந்தனை கொண்டிருந்தவர்கள். அதற்குப் பின்னால், தேவர் அவர்களும் அன்றைக்கு இருந்த காங்கிரஸ் அரசாங்கத்தின்மீதும் கடுமையான குற்றச்சாட்டுக்களைச் சொல்கின்ற நிலையிலே, அன்றைக்கு இருந்த காங்கிரஸ் இயக்கத்திற்கும், அரசாங்கத்திற்கும் எதிரான சிந்தனை உடையவர்களாக அந்தப் பகுதி மக்களும் இருந்தார்கள். அதற்குப் பின்னால், இயற்கையாகவே அன்றைய நிலையில் காங்கிரஸ் சிந்தனைக்கு எதிராக வளர்ந்துவந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது, தேவர் அவர்கள் 1963-லே மறைந்ததற்குப் பின்னால், அந்த எதிர்ப்புக் கொள்கை கொண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது, அந்தப் பகுதி மக்கள் அனைவரும் ஏறத்தாழ 75 சதவீதத்திற்கு மேலாக, தேவரை ஆதரிக்கின்ற மக்கள் எல்லாம், திராவிட முன்னேற்றக் கழக இயக்கத்தினுடைய சிந்தனை உடையவர்களாக, ஆதரவு உடையவர்களாக இருந்தார்கள். அந்த நிலையை இன்றையவரைக்கும் ஏற்று நடத்திக்கொண்டிருக்கிற அந்தப் பகுதி மக்களுடைய எண்ணத்தைத் திசை திருப்ப வேண்டுமென்ற நோக்கத்தோடு சிலர், சில சமூகவிரோதிகளும், அரசிலே பங்கு கொண்டிருக்கின்ற காவல் துறையிலே பொறுப்பேற்றிருக்கிறவர்கள்கூட, சில பேர், அந்த நிலையை, அந்த ஆதரவை மாற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு நடந்து....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சுருக்கமாகப் பேச வேண்டும்.

**திரு. லா. சந்தானம்:** நடந்துகொண்ட காரணத்தினாலேதான் இந்த விரும்பத்தகாத சம்பவம் நடந்திருக்கிறது என்று நான் கருதுகிறேன். அங்கு மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளராக இருப்பவர் சரியாகத் தமிழ்கூட தெரியாதவர். ஆங்கிலத்தை மட்டும் தெரிந்தவர் என்கிற காரணத்தினால் அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களுடைய எண்ணங்களைப் புரிந்துகொள்ள முடியவில்லை. அப்படியெல்லாம் இருந்த காரணத்தினால்தான், அவர்களுடைய எண்ணத்திற்குத் தகுந்தமாதிரி உரிய நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு வாகன வசதி ஏற்படுத்தித் தரவில்லை என்கின்ற நோக்கத்தோடு சாலை மறியலில் ஈடுபட்டு இருந்தவர்களை அமைதிப்படுத்துவதற்கு முடியாத சூழ்நிலையை அவர்கள் ஏற்படுத்தி, தடியடி போன்றவைகளைக் கடைபிடித்ததன்காரணமாகச் சற்று பதற்றமான நிலை ஏற்பட்டு இருக்கிறது.



முற்பகல் 10-50

அந்த தடியடியிலே ஜெகதீசன் என்கின்ற மாணவன் படுகாயம் அடைந்து இருக்கின்றார். படுகாயம் அடைந்த மாணவனை உடனடியாக மருத்துவமனைக்கு உரிய சிகிச்சைக்காக எடுத்துச் சென்றிருந்தால், அவர் காப்பாற்றப்பட்டு இருப்பார். இருந்தும் போலீஸினுடைய மெத்தனப் போக்கின் காரணமாக அவர் இறந்துவிடுகின்ற சூழ்நிலை ஏற்பட்டு இருக்கின்றது.

அதோடு மட்டுமல்ல, அவருடன் காயம்பட்டிருந்த கருப்பு என்பவரும் இறந்துவிட்டார் என்கின்ற செய்தியைக் கேட்ட உடனேதான் அந்தப் பகுதி மக்கள் எல்லாம் மிகுந்த ஆத்திரம் அடைந்து, பேருந்து போன்றவைகளைத் தாக்கி இருக்கிறார்கள். எனவே, காவல் துறையால் தாக்கப்பட்டு அந்த மாணவன் ஜெகதீசன் இறந்தார் என்ற செய்தி உண்மையிலேயே வருந்தத்தக்க செய்தி. இந்த அரசு உரிய முறையிலே எல்லாப் பகுதி மக்களையும் அரவணைத்துச் செல்ல வேண்டுமென்று எண்ணி இருந்தாலும்கூட, அங்கொன்றும் இங்கொன்றுமாக இப்படிப்பட்ட விரும்பத்தகாத செயல்கள் எல்லாம் நடந்து வருகின்ற காரணத்தினால்தான் அரசுக்கு அவப்பெயர் ஏற்படுகிறது. அதை முதல்வர் அவர்கள் உடனடியாகக் கவனத்திலே எடுத்துக்கொண்டு, அந்த சர்க்கிள் இன்ஸ்பெக்டரை தற்காலிகப் பணி நீக்கம் செய்து இருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். அதோடு அந்த இறந்த மாணவனுடைய குடும்பத்திற்கும் ஒரு இலட்சம் ரூபாய் உதவி அளித்து இருக்கிறார்கள். அந்த உதவி சற்றுப் போதாது என்பதைத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினரே சுட்டிக்காட்டினார். அந்த உதவித் தொகையை 3 இலட்சமாக—சாதாரணமாக சாதிக் கலவரத்தில் இறந்தால்கூட 2 இலட்சம் ரூபாய் வழங்குகிறீர்கள்; எனவே, இந்த மாணவன் போலீஸ் தாக்குதலில் இறந்து இருக்கிறான் என்கின்ற காரணத்தினால், அவனுடைய குடும்பத்திற்கு 3 இலட்சமும், மேலும், காயமடைந்தவர்களுக்கு ஏதாவது உதவித் தொகையாக இந்த அரசு வழங்க வேண்டுமென்று சொல்லியும், இந்த பேருந்துகள் சேதம் ஏதோ ஆத்திரத்தில் ஒருசிலர் அந்தக் காரியத்திலே ஈடுபட்டு இருந்தாலும் கூட நிறைய அப்பாவி மக்களை வழக்குகளிலே சேர்த்து இருக்கிறார்கள் என்பதை அறிகிறோம். எனவே, அரசு அதற்குரிய நடவடிக்கை எடுத்து, அதிலே கலந்துகொள்ளாதவர்களை, அதில் கலந்துகொண்டவர்களாக இருந்தாலும்கூட, ஏதோ ஒரு ஆத்திரத்திலே அவசரத்திலே இப்படி ஒரு மாணவன் இறந்துவிட்டானே என்கின்ற நிலையிலே அதைச்

செய்து இருக்கிறார்கள்; அவர்களை வழக்குகளிலிருந்து விடுவித்து இந்த அரசு ஆணையிட வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். திருநாவுக்கரசு.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்தில் நடைபெற்ற விரும்பத்தகாத சம்பவத்திலே *10* ஆம் வகுப்பு படிக்கிற பள்ளி மாணவன் ஜெகதீசன் அங்கே நிகழ்ந்த மோதலில் காவல் துறையால் தாக்கப்பட்டு, போதிய மருத்துவச் சிகிச்சையும் அளிக்கப்படாத சூழ்நிலையில் அங்கே இறந்து இருக்கிறார். அவர் இறந்ததற்குப் பின்னாலே அந்த ஊர் மக்கள் மறியல் போன்ற ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு, அதற்குப் பிறகு பேருந்துகள் உடைப்பு, தீ வைப்பு போன்ற வன்முறைகளும் நிகழ்ந்துள்ளன. இந்தச் சம்பவத்தையொட்டி செய்தி அறிந்தவுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அங்குள்ள மாவட்ட ஆட்சித் தலைவருடன் தொடர்புகொண்டு ஆர்.டி.ஓ. விசாரணைக்கும் உத்தரவிடப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஆயினும், இதுபோன்ற சூழ்நிலைகள் வருகின்றபோது உரிய முன்னெச்சரிக்கையோடு காவல் துறை செயல்பட வேண்டியது அவசியம். இந்த மாணவன் இறந்ததற்குப் பின்னாலே, உணர்ச்சிவசப்பட்டு நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களும் விரும்பத்தக்கதல்ல.

*முற்பகல் 10-55*

ஆயினும், அதைத் தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் இதுபோன்ற சம்பவங்கள் நடந்துள்ளன. பிறகு அந்தப் பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. குறிப்பிட்ட சமுதாயத்தைச் சேர்ந்த இளைஞன் என்கின்ற காரணத்தினாலே—பொதுவாக, மாண்புமிகு முதலமைச்சரைப் பொறுத்தவரையில், அவர் எந்தச் சாதியாக இருந்தாலும், எந்த மதமாக இருந்தாலும், அதற்கெல்லாம் அப்பாற்பட்டவராக இருந்து (மேசையைத் தட்டும் ஒலி) எல்லாத் தரப்பு மக்களுக்கும் பொதுவான முதலமைச்சராக இருந்து செயல்படக்கூடியவர் என்றாலும், சிலர் சில பகுதிகளில் தங்களுடைய வசதிக்கேற்ப, சில சாதிச் சங்கங்களை நடத்துபவர்களே, அல்லது சாதிச் சங்கங்களைப் பின்னணியாகக் கொண்டு அரசியல் நடத்துபவர்களே, வேண்டுமென்றே ஒரு களங்கத்தை மாண்புமிகு முதலமைச்சருக்கோ அல்லது அரசுக்கோ ஏற்படுத்துவதற்காக, இந்தச்



சாதிக்கு விரோதி, இந்த மதத்திற்கு விரோதி என்பதைப் போன்ற சூழ்நிலைகளை உருவாக்க முயற்சிக்கிறார்கள். இந்த முயற்சிகளை அந்தந்தப் பகுதிகளிலே முற்றிலும் முறியடிக்க வேண்டிய பொறுப்பு, அந்தந்தப் பகுதிகளிலே உள்ள காவல் துறை அதிகாரிகள் உஷாராக இருந்து நடவடிக்கை எடுக்க வேண்டியதும், எல்லாத் தரப்பு மக்களுக்கும் பாதுகாப்பு தர வேண்டியதும், காவல் துறை அதிகாரிகளினுடைய, மாவட்டப் பொறுப்பில் இருக்கிற அதிகாரிகளினுடைய கடமையாகும்.

எனவே, இந்தச் சம்பவத்தில் மாணவன் இறந்தது என்பது வருத்தத்திற்கு உரிய சம்பவம் ஆகும். எனவே, இதிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரிய விசாரணை மேற்கொண்டு, இதிலே சம்பந்தப்பட்டிருக்கின்ற காவலர்கள் அல்லது காவல் துறை அதிகாரிகளை, அவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுத்து, இறந்திருக்கின்ற மாணவன் ஜெகதீசன் குடும்பத்திற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல, குறைந்தது *3* இலட்சம் ரூபாயாவது நஷ்ட ஈடு தருகின்ற விதத்திலேயும், இந்தச் சம்பவத்திற்குப் பின்னாலே, உணர்ச்சிபூர்வமான சம்பவம் என்கின்ற காரணத்தினாலே, அந்தச் சம்பவத்திலே ஒருவன் இறந்ததற்குப் பின்னாலே, ஒரு மாணவன், *10*ஆவது படிக்கின்ற மாணவன், இளைஞன், போலீஸாரால் தாக்கப்பட்டு இறந்தவுடனே, உடனடியாக அதனுடைய ரியாக்ஷன் என்கிற மாதிரி, வன்முறையோ, பஸ் எரிப்போ நடந்திருப்பது என்பதும், தவறுதான் என்றாலும், அதையொட்டி ஏராளமானவர்கள் மீது வழக்கு போடப்பட்டிருப்பதாகப் பலர் தொலைபேசியிலேயும் தொடர்பு கொண்டு சொன்னார்கள். அவற்றையும் விசாரித்து, அந்த வழக்குகளையும் இரத்துச் செய்து, இதுபோன்ற சம்பவங்கள் மேலும் நிகழாவண்ணம், உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும் என்று வற்புறுத்தி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *3-5-1999* ஆம் நாளன்று நடந்த இந்த நிகழ்ச்சி என்பது, பேருந்து வசதியை ஏற்பாடு செய்வதிலே ஏற்பட்ட ஒரு சிக்கல். அந்தச் சிக்கல் சாலை மறியலில் போய் முடிகிற நிகழ்ச்சிகளையெல்லாம் உருவாக்கியுள்ளது. அந்தப் பேருந்துகளை ஏற்பாடு செய்ததிலே ஏற்பட்ட நிலையைக் கருத்திலே கொண்டு, அந்தநேரத்திலே காவல் துறை இந்தச் சாலை மறியலைத் தவிர்த்திருந்தால் பெருமளவுக்கு இப்படி ஒரு நிகழ்ச்சியே நடந்திருக்காது. எனவே, இது காவல் துறைக்கும்,

அவர்களுக்கும் இடையே மோதல் எற்பட்டு, அதனால் 14 வயது மாணவன் இறக்க வேண்டிய ஒரு துர்பாக்கியமான நிலை.

இறப்பது என்பது சாதாரணமாக காவல் நிலையத்திற்குள்ளே போனால் பல்வேறு விவரங்களையெல்லாம் கேட்டால் சொல்வார்கள். வேறுவிதமாகச் சொல்வார்கள். நோய்வாய்ப்பட்டிருந்து என்றெல்லாம் பல கதைகளை அந்த அதிகாரிகள் கூறுவார்கள். ஆனால், காவலர்களால் தாக்கப்பட்டதின் விளைவாக, தகுந்த சிகிச்சை உரிய நேரத்தில் தரப்படாததன் விளைவாகத்தான் இந்த மரணம் நிகழ்ந்துள்ளது. எனவே, காவல் துறையினுடைய, சமீபத்தில் நிகழக்கூடிய நடவடிக்கைகளைப் பார்க்கும்போது, சாலை மறியல் என்று வரும்போது அதைத் தவிர்க்க வேண்டும். அதுசரியென்ற கருத்து நமக்கும் கிடையாது. இருந்தாலும், சமீபத்தில்கூட இப்படி ஒரு நிகழ்ச்சி. சாராயம் விற்பனை செய்யக் கூடாது என்று சொன்ன காரணத்தினால், ஒரு நபரை காவல் துறை அதிகாரிகளே மிருகத்தனமாகத் தாக்கியுள்ளார்கள். இப்படிச் சில நிகழ்வுகள் இருக்கின்றன. எனவே, இந்த நிகழ்ச்சியில்—இதற்குப் பின்னால் நடந்த, நடந்து வருகின்ற சம்பவங்கள் எல்லாம், அவையெல்லாம் துரதிருஷ்டமானவை, கவலை தரக்கூடியவை. ஆகவே, இந்த 14 வயது மாணவன் இறப்பதற்குக் காரணமான—பல விவரங்களை எல்லாம் காவல் துறை அதிகாரிகள் சொல்வார்கள். அந்த விவரங்களைச் சரிவர விசாரணை செய்வதற்கு, ஆர்.டி.ஓ. விசாரணை என்பது மட்டும் போதுமா என்பதைப் பரிசீலனை செய்ய வேண்டும்.

இதிலே முதலில் அதனுடைய எஃப்.ஐ.ஆர். எந்த அளவிற்கு இருக்கிறது என்று பார்க்க வேண்டும். ஏனென்றால் இதில் சாவு நடந்து விட்டது. எனவே, கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு, எஃப்.ஐ.ஆர். இருந்திருக்க வேண்டும். இருந்தால் மட்டும்தான் உரிய தண்டனை அவர்களுக்குக் கிடைக்கும். எனவே இதையெல்லாம் கணக்கிலே எடுத்துக்கொண்டு, மேலும் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறாமல் தடுக்கும் வகையில் இந்த அரசு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே அங்கே ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள், இறந்த மாணவனுக்கு அரசாங்கம் வழங்கியிருக்கிற ஒரு இலட்சம் ரூபாய் என்பது போதுமானதாக இல்லை என்று. எனவே அதிகப்படியான நிதியைத் தருவது, பாதிக்கப்பட்டவர்கள், அந்தத் தாக்குதல் நடைபெற்றதற்குப் பின்னால், ஏற்பட்ட மோதல்களிலெல்லாம் ஒன்றோ, இரண்டோ



வழக்குகள் வரும். அந்த வழக்குகளை இந்த விசாரணையிலேயே தீர்த்துவிடுமேயானால், அந்த வழக்குகளை வாபஸ் பெறுவதன் மூலமாகத்தான் ஒரு அமைதியான சூழ்நிலையை அந்தப் பகுதியிலே ஏற்படுத்திக்கொள்ள முடியும். அந்த வகையிலே, அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்புவனத்தில் நடைபெற்ற சம்பவம் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் ஞானசேகரன் அவர்களும், தங்கமணி அவர்களும், கணேசன் அவர்களும், சந்தானம் அவர்களும், திருநாவுக்கரசு அவர்களும், டி. மணி அவர்களும் சில விளக்கங்களை இங்கே வழங்கியிருக்கின்றார்கள். அதற்கு மாறுபட்ட விளக்கங்கள் எதையும் நான் இங்கே சொல்லப் போவதில்லை. ஏனென்றால், அவர்களே, நடைபெற்ற நிகழ்ச்சிகளைத் தொகுத்து இங்கே கூறியிருக்கின்றார்கள். அதில், தொகுதியினுடைய சட்டப்பேரவை உறுப்பினர் தங்கமணி அவர்கள் இங்கே பேசியபொழுது தேவர் ஜெயந்திக்கு அனுமதி கொடுத்து, அப்பொழுது தரப்பட்ட அதே பாதுகாப்பு இப்பொழுது தரப்படவில்லை என்று கேட்டார்கள்.

திருவண்ணாமலையிலே, கார்த்திகை தீபம் என்பதுதான் ஆண்டுதோறும் நடைபெறுகிற பெரிய திருவிழா. அதைப்போல, ஒவ்வொரு முறையும் திருவண்ணாமலைக்குச் செல்கின்ற பக்தர்கள், 10 பேர் போகிறார்கள் என்றால், அதற்கெல்லாம், கார்த்திகை தீபத்திற்குத் தரப்படுகின்ற பாதுகாப்பு தர இயலாது. ஏனென்றால், இப்படிப்பட்ட சம்பவங்கள் எதையும் அதில் எதிர்பார்க்கவும் முடியாது. அதைப்போலத்தான் ஆண்டுதோறும் நடைபெறுகின்ற தேவர் ஜெயந்தி நடைபெற்று வருகிறது என்றாலும்கூட, இப்பொழுது ஒரு சிறப்பு நேர்வாக, தேவர் அவர்களுடைய நினைவிடத்திற்கு திரு. சண்முகையா பாண்டியன் சில குழுவினரோடு செல்லவேண்டும் என்று அனுமதி கேட்டபொழுது, அதைத் தடுக்கத் தேவையில்லை, அனுமதி அளிக்கலாம் என்று அரசின் சார்பில் அறிவுரை வழங்கப்பட்டு, காவல் துறையினர் அவர்களுக்கு அனுமதியும் வழங்கினார்கள். நம்முடைய உறுப்பினர் சந்தானம் அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப்போல, அந்த

இடத்தில் எந்தவிதமான அசம்பாவிதமும் நடைபெறவில்லை. அந்த நினைவுமண்டபம் இருக்கிற இடத்திலோ அல்லது அதற்குச் செல்கின்ற அருகிலுள்ள வழியிலோ எந்த அசம்பாவிதமும் நடைபெறவில்லை. இந்த நிகழ்ச்சிக்குச் செல்லவேண்டுமென்று விரும்பிய சிலர், திருப்புவனத்திலிருந்து புறப்பட்டபொழுது, வேன் சொந்தக்காரர்கள், அல்லது வேன் ஓட்டுகின்றவர்கள் வர மறுத்துவிட்ட காரணத்தால், அல்லது வேன் தர மறுத்துவிட்ட காரணத்தால், அவர்கள் கோபப்பட்டிருக்கிறார்கள். கோபமுற்று சாலை மறியலிலே ஈடுபடுவோம் என்று சொன்னபொழுது, காவல் துறையினர் அவர்களை அமைதிப்படுத்தி, நாங்கள் உங்களுக்குப் பேருந்துகளை வழங்குகிறோம், அதிலே செல்லலாம் என்று 40, 50 பேர்களுக்காக பேருந்து ஏற்பாட்டையும் செய்தார்கள். ஆனால், உரிய நேரத்திலே பேருந்து வராமல் சற்று தாமதமாகிவிடவே, ஆத்திரமடைந்து கூட்டத்தினர் அந்த வழியாக வந்த எல்லாப் பேருந்துகள்மீதும் கற்களை வீசி, அவைகளைப் பெருமளவுக்கு உடைத்து, சேதப்படுத்தி இருக்கிறார்கள். பத்திரிகையிலேகூட படங்களெல்லாம் வந்திருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் அந்தப் பத்திரிகையை இன்று காலையில் பார்த்திருக்கக்கூடும் என்று கருதுகிறேன்.

இந்தப் பேருந்துகளை உடைத்தவர்கள், 11 பேர் அப்பொழுதே அதே இடத்திலேயே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள், அவர்களிலே ஒருவர்தான் ஜெகதீசன் என்கிற ஒரு இளைஞன், மாணவன் என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அவர் அந்தப் பதினோரு பேரில் ஒருவராகக் கைது செய்யப்படுவதற்கு முன்னால் போலீசாரால் அவர் காயமடைந்தார் என்றும் செய்திகள் வந்துள்ளன. அந்தக் காயத்தின் காரணமாக அவரை மருத்துவ சிகிச்சைக்காக, திருப்புவனம் மருத்துவமனைக்குக் காவலர்கள் எடுத்துச் சென்றிருக்கின்றார்கள். சிகிச்சைக்குப் பின் காவல் நிலையத்திற்கு அவர் கொண்டுவரப்பட்டார். காவல் நிலையத்திலே மீண்டும் அவரது உடல் நிலை மோசம் அடைந்ததால் காவல் துறை வாகனத்திலேயே மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது செல்லும் வழியிலேயே அவர் இறந்துவிட்டார் என்ற செய்தி எனக்குத் தரப்பட்டிருக்கிறது.

*முற்பகல் 11-05*

இந்தத் தகவல் கிடைத்த உடன் சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் சம்பவ இடத்திற்கு விரைந்து, மாவட்ட காவல் கண்காணிப்பாளரோடு ஆலோசனை நடத்தினார். இதற்கிடையிலே



V2'', 21'N47
NG9.78.2

நெடுஞ்சாலையிலே ஒரு பெரிய கூட்டம் கூடி, குற்றம் சாட்டப்பட்டு, போலீஸ் ஸ்டேஷனிலே அடைக்கப்பட்ட 11 பேரையும் உடனடியா விடுதலை செய்ய வேண்டுமென்றும், காவல் நிலையத்திலே உள்ள அனைத்து காவல் துறை அலுவலர்களையும் தற்காலிகப் பணி நீக்கம் செய்ய வேண்டுமென்றும் கேட்டார்கள். இதிலே சாதித் தகராறு எதுவும் இல்லை. ஏனென்றால், அடிபட்டு இறந்துபோன அந்த இளைஞரும், அடித்ததாகச் சொல்லுகின்ற காவலர்களிலே 3 பேரும் ஒரே சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்தான். அந்த எஸ்.ஐ. வேண்டுமானால் வேறு ஒரு சமுதாயத்தைச் சேர்ந்தவர். 3 பேரும் ஒரே சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், அடிபட்டவரும், இறந்தவரும் அதே சமுதாயத்தைச் சேர்ந்தவர்தான். எனவே, சாதித் தகராறுக்கு இதிலே இடமில்லை. காவல் துறைக்கும் அங்குள்ள மக்களுக்கும்—ஆத்திரப்பட்ட மக்களுக்கும்—இடையிலே ஏற்பட்ட தகராறே தவிர இதிலே சாதி மோதலுக்கு எந்தவிதமான இடமும் கிடையாது.

அதன்பிறகு, இறந்தவருடைய உடல் மதுரை, இராஜாஜி மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு போஸ்ட்மார்ட்டம் செய்யப்பட்டு, இதுகுறித்து உடனடியாக எனக்கு மாவட்ட ஆட்சியர் தகவல் கொடுக்க, நான் அவருக்கு வழங்கிய அறிவுரையின் அடிப்படையில் கோட்டாட்சியருடைய விசாரணைக்கும் ஏற்பாடு செய்து, அந்த ஆய்வாளரும்—துணை ஆய்வாளரும்—உடனடியாக இடைக்கால பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றார். எல்லோர்மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஒரு கிளர்ச்சி அங்கே நடந்தபோது, விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்கின்ற உறுதிமொழியும் தரப்பட்டிருக்கின்றது. காவல் துறைக்குச் சொந்தமான 4 வாகனங்கள், வருவாய்த் துறைக்குச் சொந்தமான 2 ஜீப்புகள், போக்குவரத்துத் துறைக்குச் சொந்தமான ஒரு லாரி, இவை எல்லாம் பெருமளவுக்குச் சேதப்படுத்தப்பட்டன.

அஃதன்னியில், கடைகளை அடைக்கச் சொல்லி தகராறு செய்து கடைகளிலே கற்கள் வீசப்பட்டிருக்கின்றன. உயிர், உடைமைக்குச் சேதம் ஏற்படும் சூழ்நிலை உருவானபோது அதைத் தவிர்க்க Buck-shot 4 குண்டுகளும், Plastic குண்டு ஒன்றும் வானத்தை நோக்கிச் சுடப்பட்டு கூட்டம் கலைக்கப்பட்டிருக்கின்றது, கண்ணீர் புகையும் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது.

நேற்று மாலை 5 மணி அளவில் டாக்டர் சேதுராமன் மற்றும் சில தலைவர்கள் இறந்தவருடைய தந்தையாரை வெள்ளைக்கண்ணுவுடனும்

22809

மற்றும் சிலருடனும் வந்து, மாவட்ட ஆட்சித் தலைவருடன் கலந்துகொண்டு விவாதித்து, இறந்தவருடைய குடும்பத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் நிதியும் வழங்கப்பட்டு, தற்போது ஒரு அமைதியான சூழ்நிலை அங்கே உருவாகி இருக்கிறது என்ற தகவலும் கிடைத்திருக்கின்றது.

ஒரு சிறிய விஷயத்தை எவ்வளவு பெரிய கலவரமாக சில பேர் ஆக்கிவிட்டார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் மறந்துவிடக் கூடாது. அந்தக் குடும்பத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் நிதி போதுமானது அல்ல என்று மாண்புமிகு உறுப்பினர்கள் ஞானசேகரன் அவர்கள், தங்கமணி அவர்கள், கணேசன் அவர்கள், திருநாவுக்கரசு அவர்கள், டி. மணி அவர்கள், சந்தானம் அவர்கள் ஆகிய அனைவரும் குறிப்பிட்டிருக்கின்றார்கள். பொதுவாக, இதுபோன்ற சாவுகளுக்கெல்லாம் ஏற்கெனவே 5 ஆயிரம் ரூபாய், 10 ஆயிரம் ரூபாய்தான் கொடுக்கப்பட்டு வந்தது. இந்த ஆட்சியில்தான் அது 50 ஆயிரமாக உயர்ந்து, இப்போது ஒரு இலட்சம் ரூபாய் வரையிலே கொடுக்கப்படுகிறது. கொடுக்க கொடுக்க அதிகம் கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை வைப்பது இயல்பானது. இருந்தாலும் இந்தக் கோரிக்கையை நான் அலட்சியப்படுத்த விரும்பவில்லை. ஒரு மாணவனுடைய உயிர் பறிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு என்ன காரணம்? போலீஸ்தான் காரணமா? அல்லது தேவையில்லாத ஆத்திரம்தான் காரணமா என்பதை எல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அதற்காகத்தான் ஆர்.டி.ஓ. விசாரணை வைக்கப்படுகிறது.

*முற்பகல் 11-10*

ஆர்.டி.ஓ. விசாரணை முடிந்த பிறகு இன்னும் அந்தக் குடும்பத்திற்கு, அந்த மாணவனால், அவருடைய உயிர் பிரிந்ததால் ஏற்பட்ட இழப்பை ஈடுகட்டி, அந்தக் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கு எந்த வகையிலேயெல்லாம் உதவி செய்ய வேண்டுமோ அந்த வகையிலேயெல்லாம் இந்த அரசு உதவி செய்யும் என்பதையும், நிதியை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமானாலும் அதிகப்படுத்திக் கொடுக்கும் என்பதையும் நான் இங்கே உறுதியாகத் தெரிவித்துக்கொள்கின்றேன். வேண்டுமென்றே வேன்களைத் தரக் கூடாது என்று போலீசார் சொல்லிவிட்டதாக இங்கே ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது. அப்படி போலீசார் சொல்லியிருப்பார்களேயானால், வேன் தர அதனுடைய உரிமையாளர்கள் மறுத்துவிட்ட உடன் பேருந்துகளை வழங்குவதற்கு போலீசார் முன்வந்திருப்பார்களா என்ற



அந்தக் கேள்விக்கும், இந்தக் கருத்தை எடுத்துச் சொன்னவர்கள் விடை காண வேண்டும். எனவே, எல்லா வகையிலும் அமைதியாக இருக்க வேண்டும் என்று போலீசார் விரும்பியும்கூட, அவர்களையும் மீறி எந்தப் பக்கம் இருந்தோ உணர்ச்சி வசப்படக்கூடிய ஒரு சூழ்நிலை எழுந்து இந்தச் சம்பவம் நடைபெற்றிருக்கிறது.

இந்தச் சம்பவத்தை மேலும் ஊதிப் பெருக்கக்கூடிய அளவிற்கு யாரும் முன்வர மாட்டார்கள் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கின்றது. அந்தவகையிலே நல்ல கருத்துக்களை இங்கே எடுத்துரைத்த மாண்புமிகு உறுப்பினர்களுடைய இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பின் அடிப்படையில் என்னுடைய விளக்கம் இந்த அளவிற்குப் போதுமானது என்று கருதி அமைகின்றேன், வணக்கம்.

## (ஆ) திருத்துறைப்பூண்டியில் குழந்தை மருத்துவ நிபுணர் டாக்டர் காளிதாஸ் எரித்துக் கொலை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் குழந்தை மருத்துவ நிபுணர் எரித்துக் கொலை செய்யப்பட்டது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜி. பழனிசாமி, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், திரு. ஐ. கணேசன் ஆகியோர் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். டாக்டர் இராமன் அவர்களும், திரு. கணேசன் அவர்களும் ஒரு நிமிடத்திலே தங்களுடைய பேச்சை அமைத்துக் கொள்ள வேண்டும். தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. பழனிசாமி விவரங்களைப் பேசுவார்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் கடந்த 26 ஆம் தேதி குழந்தை மருத்துவ நிபுணர், அரசாங்கத்திலே வேலை பார்க்கிற நிபுணர், டாக்டர் காளிதாஸ் என்பவர், அங்கே உடன் வேலை செய்து கொண்டிருந்த, சொந்த கிளினிக்கிலே வேலை செய்து கொண்டிருந்த செவிலியரால், உதவியாளரால் எரித்துக் கொலை செய்யப்பட்டிருக்கிறார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதிலே உண்மை நிலை என்ன? டாக்டரைப் பற்றியே ஒரு பழிகூட கூறப்பட்டிருக்கிறது. உண்மை நிலை என்ன என்பதை அரசு ஆராய்ந்து, பாதிக்கப்பட்ட டாக்டருடைய குடும்பத்திற்கு, அரசாங்கப் பணியில் இருப்பவர்களுக்கு உரிய பாதுகாப்பையும், உரிய உதவித் தொகையையும் வழங்க வேண்டுமென்று கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டியிலே கடந்த 26.4.1999 இரவு 8.45 மணியளவில், ஐந்தாண்டு காலமாக திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையிலே குழந்தை மருத்துவராகப் பணியாற்றிக் கொண்டிருக்கிற காளிதாஸ் அவர்களை, மாலை நேரத்தில் அவர் நடத்திக் கொண்டிருக்கிற மருத்துவமனையில் நர்சாக வேலை பார்த்த பரிமளாதேவி என்கிற பெண், அவருடைய முகத்திலேயும், உடலிலேயும் ஆசிட்டை ஊற்றி தீவைத்துக் கொளுத்தியதாக தன்னுடைய வாக்குமூலத்திலே அவர் கொடுத்திருக்கிறார். அதோடு மட்டுமல்லாமல், தன்னை அவர் நேசித்ததாகவும், உடல் உறவு கொண்டதாகவும், அதனால் தன்னைத் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று தெரிவித்ததாகவும் அந்தப் பெண் தன்னுடைய வாக்குமூலத்திலே கொடுத்திருக்கிறார். ஆனால், அந்தச் சம்பவம் நடந்திருக்கிற இடம், அவருக்கு எதிரே உட்கார்ந்து அவர் தீயாலே கொளுத்தப்பட்டிருக்கிற இடம், மேசையிலே இருக்கிற பேப்பர், அங்கே இருக்கிற பிளாஸ்டிக் தாள், எதுவுமே எரியவில்லை. நான் இந்தச் சம்பவம் நடந்தவுடன் இங்கே ஒரு கவன ஈர்ப்பாகக் கொடுத்து நான் கேட்டிருப்பேன். சம்பவம் நடந்த இடத்தை நான் நேரில் பார்த்த பிறகுதான் இதுசம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்பதற்காக, நான் கடந்த 1 ஆம் தேதி அங்கே போனபோது, அந்த இடத்தை நேரடியாகப் பார்த்தேன். என்னுடைய கட்சி அலுவலகத்திற்கு எதிரில், அருகிலே இருக்கக்கூடிய இடம், அதற்குப் பக்கத்திலே இரண்டொரு டாக்டர்கள் அந்த இடத்திலே தொழில் செய்து கொண்டிருக்கிறார்கள். ஒரு பக்கத்திலே இரும்புக்கடை இருக்கிறது. அதற்குப் பக்கத்திலே ஒரு மெடிக்கல் ஷாப் இருக்கிறது. ஒரு சந்திலே, மாலை நேரத்திலே அவர் தொழில் நடத்திக் கொண்டிருக்கிறார். ஆகவே, தொழில் நடத்துவதிலேயும், பணம் கொடுப்பது, வாங்குவதிலேயும் ஒரு போட்டி இருந்திருக்கிறது. ஆகவே, இந்த மர்டர் நடந்த பின்னால், அவரை தஞ்சைக்கு மன்னார்குடி வழியாக எடுத்துச் செல்கின்ற வழியிலே விளாங்குடி என்ற இடத்திலே அவர் இறந்துவிட்டார். எனவே, Body-யை திரும்பக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால், அந்த டாக்டர் காளிதாஸுடைய காரை எடுத்துக்கொண்டு திருவாரூர் ரூட்டிலே சிலர் போகிறார்கள். திருவாரூர் வழியாக தஞ்சாவூருக்கு அவருடைய கார் போகிறது. ஆனால் அவர் body இங்கே வந்துவிடுகிறது. அதேபோல, அந்த பரிமளாதேவி என்கிற நர்ஸை, அன்றைக்கு, அந்தச் சம்பவம் நடந்த பின்னால், ஒருவர் டி.வி.எஸ். 50-யிலே அழைத்துக்



கொண்டுபோய், ஆலத்தம்பாடி என்கிற அவருடைய சொந்த ஊரிலே கொண்டுபோய் விட்டுவிட்டு வருகிறார். ஆகவே இதிலே கொடுப்பதிலே வாங்குவதிலே பிரச்சினை இருக்கிறது.

*முற்பகல் 11-15*

இதில் நான் சொல்ல வருவது இது அவர் காதல் விவகாரமாக இருந்தாலும்கூட, கடந்த 29 ஆம் தேதி அங்கே இருக்கக்கூடிய அனைத்து அரசியல் கட்சிகளும் அநேகமாக, ஒட்டுமொத்தமாகக் கூடி, மிகப்பெரிய அளவில் அவருக்கு எதிர்ப்பாகவே நடந்திருக்கிற சம்பவங்கள். அதிலே அவருடைய இடத்திலே யாரை வைத்திருக்கிறார்களோ அதற்குரிய நபர்களே அதில், அந்தக் கொலையில் சம்பந்தப்பட்டிருப்பார்கள் என்று சந்தேகிக்கிறார்கள். இதிலே காவல் துறை உரிய நடவடிக்கை எடுக்காத போக்கு அங்கே இருக்கிறது. சரியான நடவடிக்கை இல்லை. ஆகையால், முழுமையாக நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்வது என்பது உங்களுடைய சி.ஐ.டி. போலீசிலிருந்து யாரையாவது இங்கே, சென்னையிலிருந்து அனுப்பி, அதை முழுமையாக விசாரித்து, அந்தக் கொலைக்கு உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும். திருத்துறைப்பூண்டியில் இருக்கின்ற காவல் நிலையம், ஏற்கெனவே ஒரு துப்பாக்கிச் சூடு நடந்து, அதற்குப் பின்னால் அந்தக் காவல் துறை அதிகாரிகள் எல்லாம் மாற்றப்பட்ட பின்னர் சரியான நடவடிக்கை இல்லாத ஒரு காவல் நிலையமாக செயலிழந்த நிலையில் இருக்கிறது. போதுமான அதிகாரிகள், உரிய நடவடிக்கை எடுக்கக்கூடிய அதிகாரிகள் இல்லாத காரணத்தினால் இதிலே மிகவும் மந்தமாக இருக்கிறது. எனவே, அதற்குரிய ஒரு அதிகாரியை. சி.பி.சி.ஐ.டி போலீசையாவது போட்டு, அதை விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய சபாநாயகர் கட்டளைக்கு இணங்கி, அண்ணன் பழனிசாமி அவர்கள் சொன்ன கருத்தை வழிமொழிந்து; அவருடைய உணர்வுகளோடு என்னுடைய உணர்வையும் பகிர்ந்து, 'குற்றம் செய்தவர்களை கடுமையாக அரசு தண்டிக்க வேண்டும்' என்று சொல்லி விடைபெறுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டியில் குழந்தை மருத்துவ நிபுணர் காளிதாஸ் மரணம் சம்பந்தமாக இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜி. பழனிசாமி அவர்களும், நம்முடைய திரு. ஐ. கணேசன் அவர்களும் - இரண்டு பேர் தானே - (குறுக்கீடு) டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களும், ஏனென்றால் அவர் விளக்கமாகப் பேசவில்லை, அதனால் ஞாபகம் இல்லை - சில கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். இதுபற்றி கடந்த 5, 6 நாட்களாகவே நம்முடைய நண்பர் பழனிசாமி அவர்கள் மிகுந்த உணர்ச்சிப்பொங்க இதில் ஏதாவது ஒரு தகுந்த விசாரணை நடைபெற வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார். இதுவரையிலே எனக்குத் தரப்பட்டிருக்கிற விவர அறிக்கையை இங்கே படிக்கின்றேன். இதற்கு மேலும் புலனாய்வு செய்து உண்மையை வரவழைக்க வேண்டும் என்ற திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய கருத்தை நானும் ஏற்றுக்கொண்டு அதற்கான ஏற்பாடுகள் சட்டரீதியாக செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வந்துள்ள விவரங்கள்:

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் டாக்டர் காளிதாஸ் கிளினிக் நடத்தி வருகிறார். கிளினிக்கினுடைய பக்கத்திலேயே அவருடைய வீடும் உள்ளது. 26.4.1999 அன்று இரவு 8.45 மணிக்கு டாக்டர் காளிதாஸ், கிளினிக்கிலே உள்ள தன் அறையிலே அமர்ந்திருந்தபோது அங்கே நர்ஸாகப் பணிபுரிந்து வந்த பரிமளாதேவி, 25 வயதுடையவர், அந்த அறைக்குள் நுழைந்து டாக்டரின் முகத்திலே நைட்ரிக் ஆசிட்டை வீசியிருக்கிறார். டாக்டர் கண்ணைக் கசக்கி எழுந்திருக்க முயன்ற போது, பரிமளாதேவி ஏற்கெனவே வைத்திருந்த ஸ்பிரிட்டும், மண்ணெண்ணெயும் கலந்த கலவையை டாக்டருடைய தலையிலே ஊற்றி தீக்குச்சியைக் கொளுத்தி அவர்மேல் போட்டுவிட்டு ஓடிவிட்டார்.

டாக்டரின் சப்தத்தைக் கேட்டு அங்கு வந்த டாக்டருடைய மனைவி சிவகலை காளிதாஸ் மற்றும் மூவர், டாக்டர் மீது தண்ணீர் ஊற்றி தீயை அணைத்து பக்கத்திலுள்ள ஹனீபா மருத்துவமனையிலே முதலுதவி செய்துள்ளார்கள். பின்னர் தஞ்சாவூருக்குக் கொண்டு சென்றபோது வழியிலே டாக்டர் இறந்துவிட்டார். டாக்டர் காளிதாஸின் மனைவி சிவகலை காளிதாஸ் இது சம்பந்தமாக திருத்துறைப்பூண்டி காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின்பேரில், திருத்துறைப்பூண்டி





காவல் நிலையத்திலே வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு, காவல் நிலைய ஆய்வாளரால் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விசாரணையில், இறந்துபோன டாக்டர் காளிதாஸ் 14.4.1999 அன்று தஞ்சாவூரிலே உள்ள "டெம்பிள் டவர்" ஓட்டலுக்குப் பரிமளாதேவியை அழைத்துச் சென்று, ஓட்டல் அறையிலே வைத்து அவரைக் கற்பழித்துள்ளார் என்றும், தன்னைத் திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்று பரிமளாதேவி பின்னர் டாக்டரை வற்புறுத்தியுள்ளார் என்றும், அதற்கு டாக்டர் மறுத்திருக்கிறார் என்றும், கிளினிக்கில் வேலை செய்துவந்த மகேஷ் என்பவரிடம் நடந்த விஷயத்தை பரிமளாதேவி சொல்லியிருக்கிறார் என்றும் தகவல்.

முற்பகல் 11-20

டாக்டரைக் கொன்றுவிடுவேன்; அல்லது, நான் செத்துப் போவேன் என்று பரிமளாதேவி மகேஷிடம் சொல்ல, திருமணம் செய்துகொள்ள மறுத்தால் கொல்வது சரிதான் என்று மகேஷ் சொல்லியிருக்கிறாராம். இந்நிலையில் 21-4-1999 அன்று பாலு சேட் என்பவர் கடையிலிருந்து ஒரு அவுன்ஸ் நைட்ரிக் ஆசிட் வாங்கி, மகேஷ், அதைக்கொண்டு வந்து பரிமளாதேவியிடம் கொடுத்திருக்கிறார். பரிமளாதேவி, அதனை, டாக்டர் காளிதாஸ் மீது ஊற்றியதோடு தீ வைத்தும் கொளுத்தியுள்ளார்.

27-ஆம் தேதி அன்று காலை 7.00 மணிக்கு பரிமளாதேவி தான் குடியிருக்கும் ஆலத்தம்பாடியிலுள்ள கிராம நிர்வாக அலுவலர் திரு. செல்லத்துரை முன்பாக ஆஜராகி நடந்த விவரத்தைச் சொல்லி, ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார். அந்தக் கிராம நிர்வாக அலுவலர் பரிமளாதேவியை அழைத்துக் கொண்டு காலை 8.30 மணிக்கு திருத்துறைப்பூண்டி காவல் நிலையத்திற்கு வந்து, அவரை அந்த வாக்குமூலத்தோடு ஒப்படைத்திருக்கிறார். ஆய்வாளர், பரிமளாதேவியைக் கைது செய்து, விசாரித்து, பின்னர் நீதிமன்றக் காவலுக்கு அனுப்பியுள்ளார். மேற்கொண்டு காவல் ஆய்வாளர் விசாரணை செய்து, மகேஷை 28.4.1999 அன்று 5.00 மணிக்கு தலைஞாயிறு என்ற ஊரில் கைது செய்து, காவலுக்கு அனுப்பியுள்ளார். விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

இதில் காவல் துறை நடவடிக்கை எடுக்கவில்லை என்பது எங்கே வருகிறது என்று எனக்குப் புரியவில்லை. வாக்குமூலம் கொடுத்து, நான்தான் கொலை செய்தேன் என்று சொன்ன பரிமளாதேவியும் கைது செய்யப்பட்டிருக்கிறார்; அவருக்கு அந்த நைட்ரிக் ஆசிட்

வாங்கிக் கொண்டு வந்து கொடுத்த மகேஷ்-உம் கைது செய்யப்பட்டிருக்கிறார். தொடர்ந்து விசாரணை நடைபெறுகிறது. இதற்குள்ளே எழுந்துள்ள, திரு. பழனிசாமி அவர்களுடைய சந்தேகத்தைப் போக்க, குற்றப் புலனாய்வுத் துறை இதை விசாரிக்க வேண்டுமென்று விரும்பினால், அதுபற்றி அதிகாரிகளிடத்திலே கலந்து பேசி, ஆவன செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 5. கவன ஈர்ப்பு

### கோவை மாவட்டம், பேரூர் தொகுதி, ஆத்துப்பாலத்தில் கட்டண வசூல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆ. நடராசன், திரு. கே. சுப்பராயன், திரு. வி.கே. லட்சுமணன், திரு. ப. மோகன் கந்தசாமி ஆகியோர் ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறார்கள்.

அறிவிப்பை திரு. ஆ. நடராசன் அவர்கள் படிப்பார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருமே விளக்கம் கேட்க அனுமதிக்கப்படுவார்கள். திரு. ஆ. நடராசன்.

***திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கோவை மாவட்டம், பேரூர் தொகுதியில் உள்ள ஆத்துப்பாலத்தில் கட்டணம் வசூலிப்பது' குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை**

தேசிய நெடுஞ்சாலை எண் 47-ல் 28.4 கி.மீ. நீளத்திற்கு கோயம்புத்தூர் புறவழிச்சாலை அமைக்கும் பணி கட்டி, நிர்வகித்து, ஒப்படைத்தல் முறையில் (BOT) மத்திய அரசால் திருவாளர்கள் லார்சன் & டூப்ரோ நிறுவனத்திடம் வழங்கப்பட்டது. இத்திட்டத்தில் மேலும் ஒரு அம்சமாக கி.மீ 16 1/2-ல் நொய்யல் ஆற்றின் குறுக்கே 'ஆத்துப்பாலம்' பாலம்



அமைக்கும் பணியும் சேர்க்கப்பட்டது. இத்திட்டத்தின் மதிப்பு 90 கோடி. இது தமிழகத்தில் கட்டி, நிர்வகித்து, ஒப்படைத்தல் முறையில் மேற்கொள்ளப்படும் முதல் திட்டமாகும்.

2. மத்திய அரசு, தமிழக அரசு மற்றும் லார்சன் & டூப்ரோ நிறுவனத்தினரால் 3.10.1997 அன்று ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு 3.12.97-ல் வேலை தொடங்கப்பட்டது. ஒப்பந்தத்தின்படி 'ஆத்துப்பாலம்' பாலம் கட்டி முடிப்பதற்கான இலக்கு காலம் (Target Time) 1 வருடமும் (3.12.1998) சுங்கவரி வசூலிக்கும் காலம் 20 வருடமும், (3.10.2018) ஆகும். கோயம்புத்தூர் புறவழிச்சாலைக்கான இலக்கு காலம் 2 வருடமும் சுங்கவரி வசூலிக்கும் காலம் 30 வருடமும் ஆகும். இதற்காக லார்சன் & டூப்ரோ நிறுவனத்திற்கு சாலை மற்றும் பாலத்தை பயன்படுத்துபவரிடமிருந்து சுங்கம் வசூலிக்க அதிகாரம் வழங்கப்பட்டது.

3. 'ஆத்துப்பாலம்' பாலப் பணி முடிவடைந்து மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களால் 12.12.1998 அன்று திறந்து வைக்கப்பட்டது. இப்பாலம் போக்குவரத்திற்கு திறந்து விடப்பட்ட நாளிலிருந்து லாரி உரிமையாளர் சங்கம், தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம், நுகர்வோர் மன்றம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட சிறுதொழில் சங்கம் ஆகியவை சுங்கம் செலுத்துவது குறித்து மறுப்பு தெரிவித்து வருகின்றன.

4. மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் 'ஆத்துப்பாலம்' பாலத்திற்கு சுங்கவரி வசூல் செய்வதில் உள்ள பிரச்சினை சம்மந்தமாக 4.1.99 அன்று ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது. அக்கூட்டத்தில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன:—

(1) அரசு மற்றும் தனியார் பேருந்துகளுக்கு ஒரு நாளுக்கு ரூ.50/- வசூலிக்கலாம். (இது குறித்து செயலர், போக்குவரத்துத் துறை மூலமாக நிர்வாக இயக்குனர், தமிழக அரசு போக்குவரத் துறை, கோவை அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(2) கரும்பலகை பொருந்திய வாகனங்களுக்கு தனியார் சொந்த வாகனங்களுக்கு (கார், ஈப்பு) தேவைப்பட்டால் மாதாந்திர அனுமதிச் சீட்டு ரூ.300/- என அறிமுகப்படுத்தலாம்.

(3) அரசு வாகனங்கள், பிரேத வண்டிகள் மற்றும் அதன் தொடர்புடைய வாகனங்களுக்கு முழு சுங்கவரி விலக்கு அனுமதிக்கலாம்.

(4) இச்சலுகையினால் லார்சன் & டூப்ரோ நிறுவனத்திற்கு ஏற்படும் இழப்பினை ஈடுசெய்ய மத்திய தரைவழிப் போக்குவரத்துத் துறைக்குப் பரிந்துரை செய்யவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

5. ஆத்துப்பாலம் பாலத்தில் சுங்கவரி வசூல் செய்வது சம்பந்தமாக ஏற்படும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு 12.2.1999 அன்று புதுடெல்லியில் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் (Steering Group Committee Meeting) கூட்டப்பட்டது. இக்கூட்டத்தில் கீழ்க்கண்டவாறு முடிவு செய்யப்பட்டது:—

(1) லார்சன் & டூப்ரோ நிறுவனத்திடம் மூல ஒப்பந்தத்தின்படி (Original Agreement) உள்ள பண வரவு (Cash flow) மற்றும் ஜனவரி 1999 முடிய உண்மையாக வசூலிக்கப்பட்ட சுங்கவரித் தொகை ஆகிய விவரங்களை மேற்கண்ட காலத்தில் உண்மையான நஷ்டத் தொகையைக் கணக்கிடுவதற்காகத் தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

(2) மேலும் ஏழு நாட்களுக்கு 24 மணி நேர போக்குவரத்து கணக்கிடு (Traffic survey) தேசிய நெடுஞ்சாலை மூலம் எடுத்து அதன் விவரங்களை மத்திய அரசுக்கு உண்மையான வருவாய் இழப்பை சரிபார்க்க அனுப்பி வைக்க முடிவு செய்யப்பட்டது.

6. இப்பிரச்சினையில் தற்போதைய நிலை குறித்து நெடுஞ்சாலைத் துறை செயலர் அவர்கள், லார்சன் & டூப்ரோ நிறுவன அலுவலர்களுடனும், தலைமைப் பொறியாளர் (தே.நெ) வுடனும் 15.3.1999 அன்று ஆலோசனை நடத்தினார்.

இக்கூட்டத்தில் கண்காணிப்புப் பொறியாளர் (தே.நெ), சேலம், கோட்டப் பொறியாளர் (தே.நெ), கோயம்புத்தூர் மற்றும் லார்சன் & டூப்ரோ நிறுவனத்தினர் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியரோடு 16.3.1999 அன்று கலந்து ஆலோசிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. 22.3.1999 அன்று வருவாய் கோட்ட அலுவலர் மற்றும் கோவை மண்டல போக்குவரத்து அலுவலர்களும் லார்சன் & டூப்ரோ நிறுவனத்தினர் மற்றும் தேசிய நெடுஞ்சாலை அலுவலர்களும் தனியார் பஸ் நிறுவனத்தினருடன் கலந்து ஆலோசித்தனர். இக்கூட்டத்தில்



கோயம்புத்தூர் மண்டல மாநில போக்குவரத்துக் கழகம் நாள் ஒன்றுக்கு ரூபாய் 50/- வீதம் சுங்கத்தொகையாக 7.5 இலட்சம் ரூபாய் (ரூபாய் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மொத்தமாகச் செலுத்தியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் தனியார் பஸ் உரிமையாளர்கள் சார்பில் தினசரி பஸ் ஒன்றுக்கு ரூ.15/- செலுத்த சம்மதிப்பதாகவும் அதற்குமேல் கட்டுவது கட்டுப்படியாகாது எனத் தெரிவித்தனர். இதற்கு லார்சன் & டூப்ரோ நிறுவனத்தினர் ஒத்துக்கொள்ளவில்லை.

மாவட்ட நிர்வாகத்தின் தரப்பில் இருந்து அரசு பஸ்ஸுக்கு செலுத்த அனுமதிக்கப்பட்ட தொகையை தனியார் பஸ் நிறுவனத்தினரும் கட்ட வேண்டும், அதற்கு மாறாக, கட்டணக் குறைப்பைப் பற்றி பேச்சுக்கு இடமில்லை என்பது தெளிவுபடுத்தப்பட்டது. அன்று இரவு 8.00 மணியளவில் கோவை மாவட்ட ஆட்சியர் நடத்திய கூட்டத்தில் தனியார் பஸ் உரிமையாளர்களும், கோவை மண்டல மாநில போக்குவரத்துக் கழக பஸ்கள் நாள் ஒன்றுக்கு ரூபாய் 50/- வீதம் அரசு நிர்ணயித்தப்படி சுங்கவரி செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது. அதற்கு அவர்கள் இரண்டு தினங்களில் தங்கள் முடிவை தெரிவிப்பதாக தெரிவித்துள்ளனர். இதுபோன்று, ஏப்ரல் முதல் வாரத்தில் லாரி உரிமையாளர்கள் சங்கத்துடனும் பேச்சு வார்த்தை நடத்த கோவை மாவட்ட ஆட்சியர் முடிவு செய்துள்ளார்.

7. தற்போது கணிசமான உள்ளூர் லாரி, நான்கு சக்கர வண்டிகள் தவிர இதர வாகனங்கள் உபயோகிப்பவர்கள் சுங்கவரி செலுத்தி வருகின்றனர். அனைத்து வாகனங்களுக்கும் நிர்ணயிக்கப்பட்ட சுங்கவரியை அமல்படுத்த லார்சன் & டூப்ரோ நிறுவனம் பாதுகாப்பு கோரிய போது அவர்களுக்கு காவல் துறையிலிருந்து பாதுகாப்பு கொடுக்கப்பட்டு வருகிறது. தனியார் பஸ் உரிமையாளர்களும், லாரி உரிமையாளர்களும், சுங்கவரி செலுத்துவது குறித்து இன்னும் எந்தவித முடிவும் எடுக்கவில்லை.

***திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் நகரத்திற்கு அருகிலே உள்ள ஆத்துப்பாலத்தில், மிக நீண்டகாலமாக போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருந்து வந்தது. நம்முடைய ஆட்சி, நான்காவது முறையாக, நம்முடைய ஒப்பற்ற தலைவர், கலைஞர் அவர்கள் தலைமையிலே அமைக்கப்பட்டதற்குப் பின், கடந்த ஒன்றரை ஆண்டு காலத்திலே புதிய பாலம் ஒன்று கட்டப்பட்டதற்கு தொகுதி மக்கள் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்தப் பாலத்திலே போகிற ஒவ்வொரு முறையும், வாகனங்கள் கடப்பதற்குக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுவருகிறது. அதன் காரணமாக, லாரி, பேருந்து, அதைப்போல, டெம்போ, வேன், கார் உரிமையாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டு, ஏறத்தாழ, ஒரு பேருந்து, இப்போது பேசிமுடிக்கப்பட்டபடி, நாள் ஒன்றுக்கு 50 ரூபாய் என்று சொன்னால், 20 ஆண்டு காலத்திலே, 3 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் கட்ட வேண்டிய ஒரு நிலைமை வருகிறது. அதைப்போல, காருக்கு மாதம் ஒன்றுக்கு 300 ரூபாய் என்றால், 20 ஆண்டுகளுக்கு 72 ஆயிரம் ரூபாய் கட்ட வேண்டி வருகிறது. எனவே, அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிற காரணத்தினால், 24 மணி நேரத்திற்கு ஒரு முறை கட்டணம் வசூல் செய்ய ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், 50 ஆண்டு காலத்திற்கு முன்னால் கட்டப்பட்ட பழைய பாலத்திற்கும் இந்த ஒப்பந்தத்தின்படி வசூல் செய்யப்பட்டு வருகிறது. அதையும் மாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன், இரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிச்சி தொழிற்பேட்டை, குனியமுத்தூர், கோவை நகரத்தை ஒட்டிய பாலமாக இருக்கிற காரணத்தினால், இத்தகைய நடவடிக்கையை மேற்கொண்டு, அந்தப் பகுதி மக்களைக் காக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Build, Operate and Transfer— கட்டி, நிர்வகித்து, ஒப்படைத்தல் என்ற முறையிலே அங்கே கட்டப்பட்டிருக்கிற அந்தப் பாலம், எல். & டி. நிறுவனத்தால் கட்டப்பட்டிருக்கிறது. அதைப்போல ஒரு புறவழிச் சாலையும் அங்கே அவர்களால் உருவாக்கப்பட்டு வருகிறது. அந்த 90 கோடி ரூபாய் என்பது, இரண்டும் சேர்ந்து, அந்த 90 கோடி ரூபாய் அல்ல. புறவழிச் சாலைக்கு மட்டும்தான் 90 கோடி ரூபாய். பாலத்திற்கு சுமார் 7 கோடி ரூபாயிலே அந்தப் பாலம் கட்டப்பட்டிருக்கிறது.

*(முற்பகல் 11.25*

இந்தப் பாலத்தினுடைய திறப்பு விழா அன்று, நானும் அந்தக் கூட்டத்திலே கலந்துகொண்டேன். நான் அப்போதே அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொண்டேன். ஒரு தடவைக்கு, ஒரு டிரிப்புக்கு இவ்வளவு ரூபாய் என்று இல்லாமல், ஒரு நாளைக்கு இவ்வளவு கட்டணம் என்று வசூல் செய்தால் சிறப்பாக இருக்கும் என்று நான் அன்றைக்கு வலியுறுத்திச் சொன்னேன். இதுவரை அந்தப் பிரச்சினை



தீர்க்கப்படாமல் இருக்கிறது. டெல்லியிலே ஸ்கிரீனிங் கமிட்டியிலே இரண்டு பிரச்சினைகள் எழுப்பப்பட்டிருப்பதாக நான் அறிகிறேன். ஒன்று தமிழக அரசு எல். & டி. நிறுவனத்திற்கு தொடர்ந்து 7 நாளைக்கு, 24 மணி நேரமும் எத்தனை வாகனம் கடந்து செல்கின்றன என்ற கணக்கை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். அடுத்து, எல். & டி. நிறுவனம் ஜனவரி மாதம் 30-ஆம் தேதி வரை மொத்தமாக எவ்வளவு பணம் வசூல் ஆனது என்ற கணக்கையும் கொடுக்க வேண்டும். ஆக, இந்த இரண்டு கணக்குகளும் சரி பார்க்கப்பட்டால்தான் உண்மையாகவே எல். & டி. நிறுவனத்திற்கு இதனால் நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறதா, இல்லையா என்ற விவரம் தெரியவரும். ஆகையினாலே, தமிழக அரசைப் பொறுத்தமட்டில், ஒரு தடவைக்கு என்று கட்டணம் இருப்பதை மாற்றி, ஒரு நாளைக்கு இவ்வளவு கட்டணம் என்று வசூலிப்பதுதான் பொருத்தமாக இருக்கும். இதற்கு முன்னாலே கட்டப்பட்ட எல்லா பாலங்களுக்கும் அதுபோலத்தான் வசூலிக்கப்பட்டு வருகிறது என்பதை உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

ஒரு நாளைக்கு என்று இருந்தால் பலமுறை சிறிய கார்கள்கூட அதைக் கடந்துசெல்ல வேண்டியிருக்கிறது. எனவே, அதற்கு நிறைய செலவாகும். ஆக, ஒட்டுமொத்தமாக இந்த எல். & டி. நிறுவனத்திற்கு நஷ்டம் ஏற்படும் என்று சொல்வதை உடனடியாக அப்படியே எடுத்துக்கொள்ளாமல், இந்தக் கணக்குகளை எல்லாம் சரிபார்த்து, நஷ்டம் ஏற்படுமா, ஏற்படாதா என்பதை முடிவு செய்து, அதற்கு பிறகு இந்தக் கட்டணத்தை நீங்கள் நிர்ணயிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலத்தைப் பொறுத்தவரையிலே, மிக அருமையாக, விரைவிலே கட்டி முடிக்கப்பட்டு, இன்றைக்கு அது சிறப்பாக செயல்பட்டு வருகிறது என்பதிலே மாற்று கருத்து இல்லை. ஆனால் வசூலிக்கின்ற கட்டணம் ஒவ்வொரு முறைக்கும் கட்டணம் கொடுக்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. கோவையிலே இருக்கின்ற பொது மக்களில் பாதிப் பேர் மதுக்கரை போன்ற இடங்களிலே கம்பெனிகளை வைத்திருக்கிறார்கள். அதேபோல மதுக்கரைக்கு பக்கத்திலே இருக்கின்ற அத்தனை பேரும் கோவைக்கு வர வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. வங்கி மற்றும் பர்சேஸ் போன்றவற்றிற்கு கோவை

வர வேண்டியிருக்கிறது. ஆகவே, ஒவ்வொரு நாளும் பலமுறை அங்கே சென்று திரும்ப வேண்டிய கட்டாய சூழ்நிலை இருக்கிறது. எனவே, ஒவ்வொரு முறையும் அங்கே இருப்பவர்கள் பணம் செலுத்தக்கூடிய மிகவும் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலையில் இருக்கிறார்கள்.

பல இடங்களிலே நாம் பணம் செலுத்துவது குறித்து பார்த்திருக்கிறோம். இதுபோன்ற பாலங்களில் 24 மணிநேரத்திற்கு ஒரு முறைதான் கட்டணத்தை வசூலிக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை நாம் கடந்த காலத்திலே பார்த்து இருக்கின்றோம். எனவே, மாண்புமிகு திரு. நடராசன் அவர்களும், திரு வி.கே. லட்சுமணன் அவர்களும் சொன்னதுபோல ஒரு நாளைக்கு ஒரு முறை கட்டணம் வசூலித்தால், அதாவது 24 மணி நேரத்திற்கு ஒரு முறை என்று வைத்தால் அங்கே பிரச்சினை எழாது. ஆகவே, அருள்கூர்ந்து இதனைப் பரிசீலித்து அது போன்ற ஏற்பாடுகளைச் செய்யும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதனை வெறும் கோவை ஆத்துப்பாலத்தில் சுங்க வரியை வசூலிக்கின்ற பிரச்சினையாக மட்டும் நான் பார்க்கவில்லை. இந்தப் பிரச்சினை, அடிப்படையான ஒரு கேள்வியை எழுப்புகிறது. மக்களிடம் வசூலிக்கப்படுகிற வரி, மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்காகத்தான் பல முறைகளில் அது வசூலிக்கப்படுகிறது. ஆனால், இப்படி சுங்கவரி வசூலிக்க அனுமதிப்பதன் மூலம், அரசாங்கம் தன் கடமை, பொறுப்பை தனிப்பட்ட நபர்களின் கைகளிலே விட்டுவிடுவதாகத்தான் நடைமுறையில் அர்த்தப்படுத்தப்படுகிறது.

அரசு செய்ய வேண்டிய ஒரு வேலையை தனியாருக்குக் கொடுப்பதன் மூலம் இத்தகைய பாதிப்புகள் ஏற்படுகின்றன. இன்னொரு மிக முக்கியமான விஷயத்தையும் மாநில அரசு கவனத்திலே கொள்ள வேண்டும். இந்த B.O.T. மூலம் நிறைவேற்றப்படுகின்ற பணிகள், நடைமுறையில், அதாவது அந்தப் பாலத்திலே போகின்ற ஒவ்வொரு வாகனத்திலும் உட்கார்ந்து இருப்பவர்கள் மத்தியிலேயும் தினசரி ஒரு பிரச்சாரம் நடத்தப்படுவதற்கு ஒரு வாய்ப்பை அளிக்கிறது. அது பேருந்தானாலும் சரி, பேருந்து நிறுவனங்களானாலும் சரி, அது தனியார் டாக்சியானாலும் சரி, அவர்களுக்கிடையில் இது ஒரு மனோரீதியான பாதிப்பை ஏற்படுத்துகிறது. இது பல்வேறு அரசியல்



பிரச்சினைகளையும் உருவாக்குகின்றன. எனவே, நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, இந்தமாதிரி பாலங்கள் இதர அடிப்படை தேவைகளை நிறைவேற்றுவதற்கு இந்த B.O.T. ஸ்கீம் பொருத்தமானதாக தெரியவில்லை. B.O.T. மூலம் செய்யப்படுகின்ற காரணத்தினால், அதிகமான வட்டி ஏறி, பொது மக்கள் இதில் அதிகபட்சமாக தங்களுடைய பங்களிப்பைச் செலுத்த வேண்டிய நிர்பந்தம் ஏற்படுவதால்—இப்போது இந்தப் பிரச்சினையில் ஒரு ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது.

முற்பகல் 11-30

சட்ட ரீதியான, நிர்வாக ரீதியான பல்வேறு சிக்கல்கள், பிரச்சினைகள் எழக்கூடும் என்பதால், இதில் பெரிய மாற்றம் செய்வதற்கு வழிவகையில்லை. ஆனால் மாநில அரசு எதிர்காலத்தில் இந்த விஷயத்தை சிந்திக்கவில்லை என்றால், மேலும் பிரச்சினைகளை உருவாக்கும் என்பதைத்தான் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுவும் இந்த B.O.T. என்பது 1991 ஆம் ஆண்டு புதிய பொருளாதாரக் கொள்கை வந்ததற்குப் பின்னர் அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கிறது. மக்கள் எல்லா விஷயங்களிலும்—இதில் மட்டுமல்ல, கழிவு நீர் இந்த மாதிரி பல பிரச்சினைகள் இருக்கின்றன. நான் அந்தப் பிரச்சினைகளுக்குள்ளே போக விரும்பவில்லை. ஒவ்வொரு பிரச்சினையிலேயும் மக்கள் தனிப்பட்ட நபர்களுக்கே செலுத்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. எனவே, தனியாரிடம் விட்டாலே இந்த நெருக்கடிதான். தனியாருக்கு ஒப்படைத்தாலே இந்தப் பிரச்சினைதான். எனவே, தனியாரிடம் ஒப்படைப்பது என்பது சமூகத்திற்கு தீங்கு இழைக்கிறது; சமூகத்திற்கு சுமை ஏற்படுத்துகிறது, சமூகத்தின் சிந்தனைகளைக் கிளறி விடுகிறது. எனவே, இத்தகைய நிலைமைகளை மேற்கொள்ளாமல் இருக்க அரசு தன் பொறுப்பை உணர்ந்து, உணர்ந்த பொறுப்பை நடைமுறையில் நிறைவேற்ற உரிய நடவடிக்கைகளை உருவாக்கி, செயல்படுத்துவதற்கு சிந்திக்க வேண்டும். அப்படி சிந்திக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், பேரூர் தொகுதியில் உள்ள

ஆத்துப்பாலத்தில் சுங்க வரி வசூலிப்பதால் ஏற்பட்ட பிரச்சினை குறித்து கவன ஈர்ப்பு கொண்டு வந்து மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்தத் திட்டம் மாண்புமிகு சுப்பராயன் அவர்கள் சொன்னதைப் போல, தனியாரிடத்திலே கொடுக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்ட ஒரு முதல் திட்டம். ஒரு அரசு, மக்களுக்குத் தேவையான இப்படிப்பட்ட அடிப்படை வசதிகளைச் செய்வதற்கு ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் தேவைப்படுகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. பொதுமக்களிடத்திலே வசூல் செய்யக்கூடிய வரிப் பணத்தை மட்டும் வைத்துக்கொண்டு அடிப்படை வசதிகளை முழுமையாக நிறைவேற்ற முடியவில்லை என்கிற நிலைமை வருகிறபோதுதான் பல்வேறுபட்ட நிதி ஆதாரங்களை அரசு தேடுகிறது. அதற்கு கடன் மூலமாகவும், அரசாங்கம் நிதி ஆதாரத்தைத் தேடுகிறது. புதிய முறையில் இந்த B.O.T. (கட்டுதல், இயக்குதல், ஒப்படைத்தல்) அந்தத் திட்டத்திலேயும், இந்த அடிப்படை வசதிகளை செய்வதற்காக முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

அந்த வகையிலேதான் கோவையில் ஒரு புறவழிச் சாலையும் அமைப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதற்கு எல். & டி. நிறுவனத்தினர் முன் வந்தார்கள். எல். & டி. நிறுவனத்தினர் முன் வந்து அந்தப் புறவழிச் சாலையை அமைப்பதற்கு ஒப்புக்கொள்கிற போது, இந்தப் புறவழிச் சாலையை மட்டும் அல்ல, ஆத்துப்பாலப் பகுதியையும், ஆத்துப்பாலத்தை திரும்பக் கட்டுவதற்கும் எங்களுக்குச் சேர்த்துக் கொடுத்தால்தான் இந்தத் திட்டத்தை நாங்கள் நிறைவேற்ற முடியும் என்று ஒரு கண்டிஷன் அப்போது போட்டிருக்கிறார்கள்.

இது முழுக்க, முழுக்க மத்திய அரசினுடைய திட்டம். மாநில அரசு அதற்கு ஒத்துழைப்பாக இருக்கிறது. எனவே, மத்திய அரசு இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகிறபோது, ஒப்பந்தம் போடுகிறபோது, எல். & டி. நிறுவனத்தினுடைய அந்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்டது மட்டுமல்ல, அந்த ஆத்துப்பாலத்தைப் பிரித்துக் கட்ட வேண்டும், அல்லது அகலப்படுத்திக் கட்ட வேண்டும் என்ற கோரிக்கையும் பொதுமக்களிடத்திலே இருந்தது. ஆகவே, அந்தத் திட்டத்தையும் சேர்த்து ஒப்பந்தத்திலே போட்டிருக்கிறார்கள். அதை ஓராண்டு காலத்திலே அந்த ஆத்துப்பாலம் கட்டி முடிக்க வேண்டும். புறவழிச் சாலை 2 ஆண்டு காலத்திலே கட்டி முடிக்கப்பட வேண்டும். ஓராண்டு





காலத்திற்குள்ளாக அந்த ஆத்துப்பாலத்தை கட்டிமுடித்து விட்டார்கள். 31.12.1998-க்கு முடிக்க வேண்டும். 12-12-1998 அன்றே முடிந்து அதற்கு திறப்பு விழா நடத்தப்பட்டது.

ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஒரு வாகனத்திற்கு 15 ரூபாய் என்று போட்டிருக்கிறார்கள். மத்திய அரசும் கையொப்பமிட்டிருக்கிறது. எல். & டி. நிறுவனமும் கையெழுத்திட்டிருக்கிறது. மாநில அரசும் அதிலே கையெழுத்திட்டிருக்கிறது. ஆகவே அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஒரு வாகனத்திற்கு ஒரு தடவைக்கு 15 ரூபாய் வசூலிக்க வேண்டும் என்று இருக்கிறது. நான் திறப்பு விழாவிற்கு போகும்போது இது அதிகக் கட்டணம் என்று சொன்ன காரணத்தினால், நானும் அதை ஓரளவு ஏற்றுக்கொண்டு எல். & டி. நிறுவனத்தாருக்கு நான் சொன்னேன், நீங்கள் அதிகமாக கட்டணம் விதித்திருப்பதாகக் கருதுகிறார்கள். 'குறைந்த கட்டணம், அதிக வருமானம்' என்ற அடிப்படையில், "Less Tax-More Turnover" என்ற அடிப்படையிலே, நீங்கள் இதைக் கொஞ்சம் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டேன்.

அதற்குப் பிறகு ஒரு பேச்சுவார்த்தைக்கு நான் ஏற்பாடு செய்து எல். & டி. நிறுவனத்தையும் அழைத்தேன். மாவட்ட ஆட்சித் தலைவரையும் அழைத்தேன். நம்முடைய மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களும் அதிலே கலந்து கொண்டார்கள். 4-1-1999 அன்று அந்தப் பேச்சு வார்த்தை நடந்தது. அதிலே நாங்கள் கீழ்க்கண்ட முடிவுகளை மேற்கொண்டோம். அதை நான் தெரிவித்திருக்கிறேன்.

*முற்பகல் 11-35*

அதிலே குறிப்பாக, கோவையைச் சுற்றி தொழிற்சாலைகள் நிரம்ப இருக்கின்றன. அவைகளுக்கு அடிக்கடி கார்கள் போய்வர வேண்டும், லாரிகள் போய்வர வேண்டும். அதற்கு ஒரு தடவைக்கு 15 ரூபாய் என்று சொன்னால் அதிகமாகச் செலுத்த வேண்டிய அவசியம் வருகிறது என்பதுதான் மிக முக்கியமான கோரிக்கை. கட்டுமானத்திற்குத் தேவையான மணல், ஜல்லி இவைகளைக் கொண்டுவருவதற்கும் அடிக்கடி லாரிகள் போய் வரவேண்டும். அதற்கும் அதிக கட்டணம் வருகிறது. ஒரு தடவைக்கு 15 ரூபாய் என்றால் 10 தடவை போனால் 150 ரூபாய் கட்டவேண்டிய அவசியம் வருகிறது என்று சொன்னார்கள் அதை மனதிலே வைத்துக்கொண்டுதான் நாங்கள் பேச்சுவார்த்தை

நடத்தினோம். அதைப்போல அரசு போக்குவரத்துக் கழகங்கள் சார்பிலே பஸ்கள், நகரப் பேருந்து டவுன் பஸ் அடிக்கடி போய் வருகின்றன. 10 தடவை போனால் 150 ரூபாய் கட்டவேண்டிய அவசியம் வருகிறது என்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும் சொன்னார்கள். இவைகளையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு பேச்சுவார்த்தை நடத்துகிறபோது ஒரு 'டிரிப்' என்று சொல்வது, போய் வருவது என்று ஒரு வாதம்; போவது மட்டும்தான் ஒரு 'டிரிப்' என்று எல். & டி. யினுடைய வாதம். ஆனால் ஒப்பந்த ஷரத்தில் போவது ஒரு 'டிரிப்' வருவது ஒரு 'டிரிப்' என்றுதான் இருக்கிறது. ஆகவே, அவர்கள் நீதிமன்றத்திற்குப் போனால் அவர்கள் சொல்வதுதான் வெற்றி பெறும். ஆகையினாலே, ஒப்பந்தம் போட்டிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் நாம் கணக்கில் எடுத்துக்கொண்டு, ஒப்பந்தப்படி நீங்களும் பேசாதீர்கள், நாங்களும் பேச வேண்டாம், அடிக்கடி போய் வருகிற வாகனங்களுக்கு ஒரு தனிக் கட்டணத்தை நாம் முடிவு செய்யலாம் என்று சொல்லி, அடிக்கடி போய்வருகிற லாரியோ அல்லது அடிக்கடி போய் வருகிற கார்களோ அல்லது அடிக்கடி போய்வருகிற வேறு டிரக்குகளோ, அவைகள் 10 தடவை போனாலும் சரி, 20 தடவை போனாலும் சரி, ஒரு நாளைக்கு 50 ரூபாய் என்று முடிவு செய்யலாம் என்று நாங்கள் சொன்னோம். போக்குவரத்துத் துறையின் சார்பில் கலந்து கொண்ட செயலாளர் அவர்களும் அதை ஒத்துக்கொண்டார்கள். நகரப் பேருந்துகளுக்கு ஒரு நாளைக்கு 5 தடவை போனாலும் சரி, 10 தடவை போனாலும் சரி, 20 தடவை போனாலும் சரி, ஒரு பேருந்துக்கு 50 ரூபாய் செலுத்துவதற்கு அவர்கள் ஒப்புக்கொண்டு அந்தப் பணத்தையும் கட்டியிருக்கிறார்கள்.

அதைப்போலவே, தனியார் பேருந்துகளும் அந்த 50 ரூபாயைச் செலுத்தலாம். எத்தனை தடவை வேண்டுமானாலும் போகலாம். தனிப்பட்ட கார்கள் வைத்திருப்பவர்கள் மாதத்திற்கு 300 ரூபாய் கட்டிவிடலாம் என்று இப்படி நாங்கள் ஒரு முடிவு செய்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் இதை ஏற்றுக்கொண்டு, அதை நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக்கொண்டோம். அரசுப் போக்குவரத்துத் துறை அதை ஏற்றுக்கொண்டு பணத்தை செலுத்தியிருக்கிறது. மறுபடியும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஒரு பேச்சுவார்த்தையை லாரி உரிமையாளர்களிடத்தில், தனியார் பேருந்து உரிமையாளர்களிடத்தில் வைத்துப் பேசியிருக்கிறார்கள். அதிலே தனியார் பேருந்து உரிமையாளர்கள் ஓரளவு அதை ஏற்றுக்கொண்டு, இன்னும் இரண்டு நாளிலே எங்களுடைய முடிவைச் சொல்கிறோம் என்று



சொல்லியிருக்கிறார்கள். ஆனால் மறுபடியும் அந்த முடிவை தெரிவிக்கவில்லை. லாரி உரிமையாளர்கள் மட்டும், முடியாது, நாங்கள் இதைச் செலுத்த முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். மறுபடியும் எங்களுடைய துறைச் செயலாளர் அவர்கள் அவர்களையெல்லாம் அழைத்து, ஒரு பேச்சுவார்த்தை நடத்தி இதை ஏற்றுக்கொள்ளலாம் என்று தெரிவித்திருக்கின்றார்கள். ஆனாலும் இன்னும் முடிவு வரவில்லை. போக்குவரத்து நடக்கிறது. பணம் கொடுக்காமலேயே லாரிகள் போகின்றன. பணம் கொடுக்காமலேயே தனியார் பேருந்துகள் போய்க் கொண்டிருக்கின்றன. பணம், கட்டணம் செலுத்தாமலேயே தனிப்பட்ட கார் முதலாளிகள் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு சுப்பராயன் அவர்கள், இந்தத் திட்டமே சரிப்பட்டு வராது என்று தெரிவித்தார்கள். நான் அவர்களுக்கு மிகுந்த பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்படிப்பட்ட திட்டங்களே வேண்டாம் என்று நாம் ஒதுக்கித் தள்ளினால் நம்முடைய மாநிலம் பின் தங்கிப்போகும். மஹாராஷ்டிரா போன்ற மாநிலங்கள், ஆந்திரா போன்ற மாநிலங்கள், கர்நாடகம் போன்ற மாநிலங்கள் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் மிகுந்த அக்கறை எடுத்துக்கொள்கிறார்கள். வெற்றிகரமாக நடைபெறுகிறது.

முதன்முதலாக வந்த இந்தத் திட்டம் சரியாக நடைபெறுவதற்கு நாமே ஒத்துழைக்கவில்லையென்றால், இதையே ஒரு அரசியலாக ஆக்க வேண்டும் என்று சிலபேர் நினைத்து அந்தக் காரியத்தைச் செய்தால் நிச்சயமாக எந்த B.O.T. திட்டமும் நம்முடைய தமிழ்நாட்டிற்கு வருவதற்கு வாய்ப்பு இருக்காது. எந்தத் தனிப்பட்ட முதலாளிகளும் நம்முடைய தமிழ்நாட்டில் முதலீடு போடுவதற்கு முன்வர மாட்டார்கள். அப்படிப்பட்ட ஒரு அச்சத்தை நாம் ஏற்படுத்தக் கூடாது என்று நான் மிகுந்த பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இதிலே சைக்கிளுக்கு வரி இல்லை. ஆட்டோக்களுக்கு வரி இல்லை. நடந்து போகிறவர்களுக்கு வரி கிடையாது (சிரிப்பு) மாட்டு வண்டிக்கு வரி கிடையாது. ஏழைகள் இதிலே பாதிக்கப்படப்போவதே கிடையாது. கார் வைத்திருப்பவர்கள், லாரி வைத்திருப்பவர்கள், பஸ் வைத்திருப்பவர்கள், வசதி படைத்தவர்கள், டிரக் வைத்திருப்பவர்கள், அவர்களுக்கு மட்டும்தான் இந்த வரி போடப்படுகிறது.

*முற்பகல் 11-40*

இந்த வரி அதிகமாக இருக்கிறது, குறைவாக இருக்கிறது என்று நாம் பேசலாம், ஆனால் எல். & டி. நிறுவனத்தார்கள் என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால், இதனாலே எங்களுக்குப் பெருத்த நட்டம் வருகிறது என்று சொன்னார்கள். அவர்களுக்கு மாநில அரசின் சார்பில் ஒரு வாக்குறுதி கொடுத்தோம். நாங்கள் சொல்கிற இந்தக் கட்டணத்தை ஏற்றுக்கொள்ளுங்கள். இதிலே உங்களுக்கு எவ்வளவு நட்டம் வரும் என்று எங்களுக்குக் கணக்குச் சொல்லுங்கள். அந்த நட்டத்தை மத்திய சர்க்காரை நாங்கள் ஏற்றுக்கொள்ளச் சொல்லி பரிந்துரை செய்கிறோம் என்று சொன்னோம். எல். & டி. நிறுவனத்தார்களும் ஒத்துக்கொண்டார்கள். மறுபடியும் மத்திய தரை வழிப் போக்குவரத்துத் துறையிலே ஒரு பேச்சுவார்த்தை நடந்தது. அந்தப் பேச்சுவார்த்தையிலேதான் எங்களுக்கு இவ்வளவு நட்டம் வருகிறது என்று எல். & டி. சொன்னபோது அந்த நட்டத்தைக் கணக்கிடுவதற்காகத்தான், மாண்புமிகு உறுப்பினர் லட்சுமணன் அவர்கள் குறிப்பிட்டார்களே, அந்தக் கணக்கை எடுக்கச் சொல்லி ஒரு ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். இப்போது அந்தக் கணக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த நட்டம் எவ்வளவு என்பதை நிர்ணயிக்கக்கூடிய பொறுப்பு மத்திய தரைவழிப் போக்குவரத்துத் துறையினுடையது. மாநில அரசுக்கு இதிலே ஒன்றுமில்லை. பணம் போடுகிறவர்கள் எல். & டி. நிறுவனம். அதற்கு உரிமையாளர்கள் மத்திய அரசு. நம்முடைய தமிழ்நாட்டிலே இருக்கிறது திட்டம் என்ற காரணத்தாலே நம்முடைய ஒத்துழைப்பு. ஆகவே, இந்தத் திட்டமும் வெற்றி பெற வேண்டும்; பொதுமக்களுக்கும் இடைஞ்சல் இருக்கக்கூடாது என்பதில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிகுந்த கவனத்தோடு இந்தப் பிரச்சினையை அணுகும்படி எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார்கள். அதன்படி நான் இதிலே கவனத்தை எடுத்துக்கொண்டேன்; சிரத்தை செலுத்தினேன்; பேச்சுவார்த்தை நடத்தினேன். அரசுப் போக்குவரத்துக் கழகமும் ஒத்துக்கொண்டிருக்கிறது. தனியார் பஸ் நிறுவனக்காரர்களும் ஏறத்தாழ ஒத்துக்கொண்டார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே ஒத்துக்கொண்டார்கள். அதற்குப் பிறகு லாரி உரிமையாளர்கள், "நீங்கள் ஏன் ஒத்துக்கொள்கிறீர்கள்" என்று அவர்களிடத்திலே தகராறு செய்த காரணத்தாலே அவர்களும் கட்டாமல் இருக்கிறார்கள். ஆகையினாலே எல்லா அரசியல் கட்சித் தலைவர்களையும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களையும் நான் மிகுந்த பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட B.O.T. திட்டத்தை நாம் encourage பண்ண வேண்டும்; ஆதரவு தர வேண்டும். அப்போதுதான் தனியார் முதலீடு தமிழ்நாட்டிற்கு வரும். இது அறவே தேவையில்லை என்று சொல்வது பொருத்தமில்லை.



சில தொழில்களைத் தனியார்கள் நடத்துவதற்கு நாம் அனுமதிக்கிறோம். அதனாலே இலட்சக்கணக்கான ஊழியர்களுக்கு வேலை கிடைக்கிறது. இப்படிப்பட்ட திட்டத்திற்கு முதலீடு போட்டு 10 வருஷம், 20 வருஷம், 30 ஆண்டுகாலம் தனியார் அந்தக் கட்டணத்தை வசூலித்துக் கொண்டு—அவர்கள் பணத்தை முதலீடு செய்கிறார்கள் கோடிக்கணக்கில். ஏறத்தாழ 100 கோடி ரூபாய் இதிலே முதலீடு செய்கிறார்கள். இந்த 100 கோடி ரூபாயையும் 30 ஆண்டுகாலத்திலே எடுக்கப் போகிறார்கள். இப்படி 100 கோடி ரூபாய் நம்முடைய அரசாங்கத்திலே ஒரே நேரத்திலே எப்படி கிடைக்கும்? ஒரு திட்டத்தை எப்படி நிறைவேற்ற முடியும்? எனவேதான் இந்தத் தனிப்பட்ட முதலாளிகள், முதலீடு செய்வதற்கான இப்படிப்பட்ட infrastructure என்று சொல்லக்கூடிய அடிப்படை கட்டமைப்பு வசதிகள், சாலை வசதிகள், மேம்பால வசதிகள், துறைமுக வசதிகள் இவைகளுக்கு நாம் பெரும்பாலும் தனிப்பட்ட மூலதனத்தைத்தான் எதிர்பார்க்க வேண்டிய அவசியம் இருக்கிறது. எனவேதான், இப்படிப்பட்ட திட்டங்கள் தமிழ்நாட்டில் வெற்றி பெறுவதற்கு நாம் எல்லாம் ஒத்துழைப்பு தந்தால்தான் நல்லது என்பதை மிகுந்த பணிவோடு நான் தெரிவித்துக்கொண்டு, லாரி உரிமையாளர்களிடத்திலே நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் எடுத்துச்சொல்லி, எத்தனை தடவை வேண்டுமானாலும் போய்க்கொள்ளலாம், ஒரு நாளைக்கு 50 ரூபாய்; எத்தனை தடவை வேண்டுமானாலும் பஸ் போய் வரலாம் ஒரு நாளைக்கு 50 ரூபாய். ஆனால், ஒரு தடவை போய்விட்டு, ஒரு தடவை வருகிறார்கள் என்று சொன்னால் 15, 15 ரூபாய் செலுத்த வேண்டும். ஆகவே தனிப்பட்டவர்கள் ஒவ்வொரு தடவை போகிறவர்கள் 15 ரூபாய் செலுத்துகிறார்கள், அடிக்கடி போகிறவர்கள்தான் 50 ரூபாய் செலுத்துவதற்கு ஒத்துழைக்க மறுக்கிறார்கள். ஆகவே, அவர்களிடத்திலேயும் நீங்கள் எடுத்துச்சொல்லி, வேண்டுமானால் இன்னொரு பேச்சுவார்த்தைகூட நடத்தலாம். அதற்கு அரசு தயாராக இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரும் தயாராக இருக்கிறார். நானும் தயாராக இருக்கிறேன். இதிலே ஒரு சுமுகமான முடிவை ஏற்படுத்தி, இந்தத் திட்டம் வெற்றி பெறுவதற்கு நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் உதவ வேண்டும் என்று நான் கேட்டு அமைகின்றேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

## 6. அறிக்கைகள் அளித்தல்

### (அ) மதிப்பீட்டுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அடுத்து, குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் திரு. செ. இராமலிங்கம்.*

**திரு. செ. இராமலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பீட்டுக் குழுவின் தொடக்கக் கல்வி குறித்த அறிக்கையின்மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் மீதான குழுவின் பதினேழாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

### (ஆ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அடுத்து, பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை அளித்தல். அதன் தலைவர் திரு. ப. ரங்கநாதன்.*

***திரு. ப. ரங்கநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் சார்பாக நூற்று எண்பத்து நான்காவது முதல் நூற்று எண்பத்து எட்டாவது வரையிலான அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

## 7. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

### (அ) கோரிக்கை எண் 26-கதர்-கிராமத் தொழில்கள்
### (ஆ) கோரிக்கை எண் 21 - மீனளம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அடுத்து, 1999-2000 ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 26-கதர்-கிராமத் தொழில்கள், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.*

***மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"கதர் - கிராமத் தொழில்கள் பற்றிய 26-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 20,93,23,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"*
*எனக் கோருகிறேன்.*



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2747, திரு. சி. ஞானசேகரன்.*

**திரு. சி. ஞானசேகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*'கதர்கிராமத் தொழில் முனைவோர்க்கு வட்டியில்லாக் கடன் தந்து வரிவிலக்கு அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

*"கதர்-கிராமத் தொழில்கள் பற்றிய 26-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,93,23,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானம் எண் 1980, திரு. ஐ. கணேசன்.*

**திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*'எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை கிராமம், காடையாம்பட்டியில் ஒரு பட்டுச் சேலை நெசவு மையம் ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

*"கதர்-கிராமத் தொழில்கள் பற்றிய 26-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 20,93,23,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானம் எண் 3050, திரு. நா. பெரியசாமி.*

**திரு. நா. பெரியசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*'பெருந்துறை வட்டம், குன்னத்தூர் கருப்பட்டி உற்பத்தியாளர் சங்கத்தில் உற்பத்திப் பிரிவை விரிவுபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

*"கதர்-கிராமத் தொழில்கள் பற்றிய 26-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 20,93,23,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*

முற்பகல் 11-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4643, திரு. ப. ரங்கநாதன்.

***திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'தமிழகத்தில் தேனீ வளர்ப்பு, பதநீர் விற்பனை, காலணி போன்றவற்றைத் தயாரிக்கும் நிறுவனங்கள் நலிவடைந்துள்ளதால் அவற்றைப் புனரமைப்பு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர்-கிராமத் தொழில்கள் பற்றிய 26-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,93,23,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2339, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'தேசபிதா அண்ணல் மகாத்மா காந்தியடிகளின் நினைவைப் போற்றும் வகையில், நசிந்து வரும், கதர் நெசவுத் தொழிலை மேம்படுத்த ஆண்டு முழுவதும் கதர்த் துணி ரகங்களுக்குத் தள்ளுபடி அளிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர்-கிராமத் தொழில்கள் பற்றிய 26-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,93,23,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3316, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் கதர்த் துணிகளுக்கு ஆண்டு முழுவதும் தள்ளுபடி அளித்து விற்பனை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"கதர்-கிராமத் தொழில்கள் பற்றிய 26-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,93,23,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3795, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'நாகை தொகுதியில் பனை ஓலை கைவினைத் தொழிற்கூடம் ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர்-கிராமத் தொழில்கள் பற்றிய 26-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,93,23,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2870, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'விசேடக் காலங்களில் கதர்த் துணிகளுக்குத் தள்ளுபடி வழங்குவது போல, ஆண்டு முழுவதும் தள்ளுபடி வழங்க வேண்டியதன் அவசியம் பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர்-கிராமத் தொழில்கள் பற்றிய 26-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,93,23,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 444, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர்-கிராமத் தொழில்கள் பற்றிய 26-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,93,23,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2881, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'புவனகிரி தொகுதியில், கதர் கிராமத் தொழில் துறை மூலம் சோப்பு தயாரிக்கும் பிரிவு ஒன்றினை ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர்-கிராமத் தொழில்கள் பற்றிய 26ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,93,23,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3779, திரு. கே. ரவி அருணன்.

இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4136, திரு. எஸ்.எஸ். மணி நாடார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2790, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'மன்னார்குடியில், கதர் கிராமத் தொழில்கள் துறையின் மூலம் துணிகள் மற்றும் கைவினைப் பொருட்கள் தயாரிக்கும் தொழில்கள் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர்-கிராமத் தொழில்கள் பற்றிய 26ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,93,23,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3555, திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



'மானாமதுரையிலுள்ள மண்பாண்டத் தொழிலாளர்கள் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருள்களைச் சுடுவதற்கு சூளைக்குத் தேவையான மரங்கள் வைப்பதற்கு கதர் கிராமத் துறையின் மூலம் சுமார் 100 ஏக்கர் தரிசு நிலம் அரசு ஒதுக்கித் தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர்- கிராமத் தொழில்கள் பற்றிய 26ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,93,23,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 21—மீனளம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 21 மீனளம், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மீனளம் பற்றிய 21ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.48,63,55,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2757, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'வேலூர் மாவட்ட மீனவர்களுக்கு வீடுகள் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.48,63,55,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1926, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'நலிவடைந்த மீனவர் குடும்பங்கள் வாழ இலவசமாக வலையும், உதவித் தொகையும் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21ஆம் எண். மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.48,63,55,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3080, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.48,63,55,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4642, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'தமிழக மீனவர்களுக்கு மீன்பிடி உபகரணங்களை மானியமாக அல்லது இலவசமாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.48,63,55,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3263, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'சேலம் மாவட்டம், மேட்டூர் அணையில் உள்ள மீனவர்களுக்கு மீன் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் தூண்டில், வலை மற்றும் பரிசல் ஆகியவற்றை மானிய விலையில் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.48,63,55,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2314, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.



**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, அம்மாபேட்டை ஒன்றியம், கேசரிமங்கலம் கிராமம், கூத்தம்பட்டியில் உள்ள மீனவ இளைஞர்களுக்கு மீன் பிடிக்கத் தேவையான உபகரணங்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.48,63,55,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4489, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'நாகூர், பட்டினச்சேரி, நாகப்பட்டினம், செருதூர், காமேஸ்வரம், விழுந்தமாவடி ஆகிய மீனவ கிராமங்களுக்குக் குடியிருப்புகள் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.48,63,55,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2893, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'மீனளத் துறை மூலம் வழங்கும் சலுகைகளை பாபநாசம் தொகுதியில் வாழும் உள்நாட்டு மீனவர்களுக்கும் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.48,63,55,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 538, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.48,63,55,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3865, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'மீனவச் சமுதாய மக்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகளை விரைந்து வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.48,63,55,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2807, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதியைச் சார்ந்த கிராமங்களில் உள்ள ஆயிரக்கணக்கான குளம், குட்டைகளில் சிறப்புத் திட்டத்தின் மூலம் மீன் வளர்க்க விவசாயிகளுக்கு அனைத்து உதவிகளையும் அரசு வழங்கிட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.48,63,55,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3105, திரு. டி. மணி.



**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'குமரி மாவட்டம், நலிவடைந்த மீனவர்களுக்கு மீன்பிடிக்க படகு, வலை ஆகியவை வாங்க வட்டியில்லாக் கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.48,63,55,000-ல். ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4588, திரு. க. மணிவர்மா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2718, திரு. சி. வேலாயுதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4290, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை, ஒன்றியம், ஏரிப்புறக்கரை மீனவர் குடியிருப்பில் சமுதாயக் கூடம் ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.48,63,55,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2730, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'தமிழகத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவ மக்களுக்கு மாதம் ஒன்றுக்கு குறைந்தபட்சம் 100 லிட்டர் மண்ணெண்ணெய் சலுகை விலையில் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.48,63,55,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர் - கிராமத் தொழில்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி அவற்றை சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவர்களுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனளம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @@நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி அவற்றை சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவர்களுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் 10 பேர் பேச இருக்கிறார்கள். ஆகவே, கண்டிப்பாக யாரும் ஐந்து நிமிடத்திற்கு மேல் பேசக் கூடாது.

---

@ 393 முதல் 407 வரை உள்ள பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

@@ 408 முதல் 437 வரையிலான பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளன.



## 8. அறிவிப்பு

### தமிழ்நாடு மாநில பனைப்பொருள் இணையத்தின் சார்பில் உறுப்பினர்களுக்குப் பதநீர் வழங்க ஏற்பாடு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கதர் கிராமத் தொழில் - தமிழ்நாடு மாநில பனைபொருள் இணையத்தின் சார்பில் உறுப்பினர்களுக்குப் பதநீர் வழங்கப்படும் என்பதை அறிவிக்கின்றேன்.

## 7. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 26—கதர்—கிராமத் தொழில்கள்

### (ஆ) கோரிக்கை எண் 21—மீனளம்-தொடர்ச்சி

*முற்பகல் 11-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதத்தை திரு. மு. அப்பாவு அவர்கள் தொடங்கி வைப்பார்கள்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்ததற்கு நன்றி கூறி, என்னுடைய தொகுதியில் உள்ள கூட்டப்புளி, பெருமணல், கூத்தங்குளி, இடிந்தகரை, உவரி, கூட்டப்பனை, கூடுதாழை, பெரியதாழை ஆகிய இடங்களில் ஒவ்வோர் ஆண்டும் கடல் கொந்தளிப்பு ஏற்பட்டு, கடற்கரை பாதிப்பு அடைந்து வந்துகொண்டிருப்பது உங்களுக்குத் தெரியும். உவரிக்கு 197 இலட்சம் ரூபாயில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, தூண்டில் வளைவு அமைப்பதற்கான பணி எப்போது நடைபெறும் என்பது தெரியாத நிலையில், மதிப்பீடு மட்டும் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

அனைத்து கிராமங்களிலும் மதிப்பீடு தயாரித்து, விரைவிலேயே அந்தத் தூண்டில் வளைவுகள் கட்டித் தரவேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். கூத்தங்குளியில் ஃபாதர் செபஸ்டியான் அவர்களால் மீனவ மக்களுக்காக 25 இலட்சம் ரூபாய மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தொழில்நுட்பக் கல்லூரிக்கு 1997 ஆம்

ஆண்டு அனுமதி கேட்டார்கள். இதுவரை கிடைக்கவில்லை. அந்தத் தாழ்த்தப்பட்ட மீனவ மக்களுக்காக அதற்கு இந்த ஆண்டு அனுமதி அளிக்க வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று நீண்ட நெடுங்காலமாக நெல்லை மாவட்டத்தில் மீனவர்கள் குடியிருப்புப் பகுதி இராதாபுரம் தொகுதியில் மட்டும் இருக்கிறது. A.D., Fisheries அலுவலகம் வேண்டும். ஏற்கெனவே இராதாபுரத்தில் மீனளத் துறை உதவி இயக்குநர் அலுவலகம் செயல்பட்டு வந்தது. சமீபகாலத்தில் அது நிறுத்தப்பட்டிருக்கிறது. மீண்டும் இராதாபுரத்திலே மீனளத்துறை உதவி இயக்குநர் அலுவலகம் அமைத்துத் தர வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பலமுறை சொல்லியிருக்கிறேன். இந்த ஆண்டு தருவதாக உறுதியளித்திருக்கிறார்கள். இந்த அவையில் அதற்கான அனுமதியை அளிக்க வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கேரளாவை எடுத்துக்கொண்டோமேயானால் அங்கே மீன் வளத்திற்கு என்று தனியாக வாரியம் அமைக்கப்பட்டிருக்கிறது. மீனவர்கள் குடியிருப்புப் பகுதிகளில் மட்டும் 35 மருத்துவமனைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அதேபோன்று தமிழகத்திலும் மீனவர்கள் வாழ்கின்ற கிராமத்தில் அரசு மருத்துவமனைகள் அமைத்துத் தர வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சேமிபபு மற்றும் நிவாரண நிதித் திட்டத்தின் மூலம் ஏற்கெனவே மீனவர்களுக்கு 4 மாதங்களுக்கு ரூ.1,080 வழங்கப்படுகிறது. இந்தத் திட்டம் ஆண் மீனவத் தொழிலாளர்களுக்கு மட்டும் வழங்கப்படுகிறது. மீன்பிடித் தொழிலிலே ஈடுபடுகிற, மீன் சார்ந்த தொழிலில் ஈடுபடுகிற பெண்களுக்கும் இந்த சேமிப்பு மற்றும் நிவாரண நிதித் திட்டத்தின்படி பணம் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு இந்தத் தொகை மிகவும் குறைந்த தொகையாக இருக்கிறது. ஆகவே, இதை ரூ.2,000 ஆக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மீனவர் குடியிருப்புகளில் கடந்த ஆண்டில் 12,000 மீனவர் குடியிருப்புகள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது, ஆனால், இன்று வரை 7,155 மீனவர் வீடுகள்தான் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. மீதி வீடுகள் எப்போது கட்டி முடிக்கப்படும்? தற்போது மீனவர் குடியிருப்புகளுக்கு 32 ஆயிரத்திலிருந்து 37 ஆயிரம் ரூபாயாக அதனுடைய கட்டுமானத் தொகை உயர்த்தப்பட்டிருக்கிறது.



அங்கே மீதியிருக்கிற வீடுகளை எந்த அடிப்படையில் கட்டுவீர்கள் என்பதையும் தங்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகுகள்..........
*(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூன்றாண்டுகளில் 12,000 வீடுகள் கட்டித் தருவதாகச் சொல்லி, ஒவ்வோர் ஆண்டும் 4,000 வீடுகள் கட்டித் தருவதாக உறுதியளித்து, அதன்படி ஒவ்வோர் ஆண்டும் 4,000 வீடுகள் கட்டுவதற்குத் திட்டமிட்டுள்ளோம். கிராமத்தைப் பொறுத்தவரை, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். அந்த இடத்திற்குச் சென்று வீடுகள் கட்டுவது எவ்வளவு பெரிய கஷ்டம் என்று. ஆகவே, 12,000 வீடுகள் கட்டுவதில் 7,000 வீடுகள்தான் கட்டினோம் என்பது அல்ல. இன்றைய தேதி வரை 7,559 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. 4,441 வீடுகள் பல்வேறு நிலைகளில் இருக்கின்றன. தரைமட்ட அளவில் 2,097 வீடுகளும், தளம் அளவில் 538 வீடுகளும், ஜன்னல் மட்டத்தில் 231 வீடுகளும், கூரை மட்டத்தில் 308 வீடுகளும், கூரை, முடிந்தது என்ற வகையில் 257 வீடுகளும், இதுபோக மொத்தம் 1,010 வீடுகள் பிரச்சினைக்குரிய இடமாக உள்ளது. அதாவது சில இடங்களில் வீடு கட்ட முடியாத சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களில்—சில இடங்களில் 5-6 முறை ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டும், ஒப்பந்தப் புள்ளிகளை யாரும் எடுக்கமுடியாத சூழ்நிலை. இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் வீடு கட்டவில்லையே தவிர, மற்றபடி இந்த வீடுகளைக் கூடிய விரைவிலே நாங்கள் கட்டி முடித்துவிடுவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நன்றி. இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகளுக்கு, கேரளாவில் மாதம் ஒன்றுக்கு 500 லிட்டர் மண்ணெண்ணெய் ரூ. 2.85 காசுகளில் வழங்கப்படுகிறது. அதேபோன்று தமிழகத்திலும் இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகளுக்கு 500 லிட்டர் மண்ணெண்ணெய் மானிய விலையிலும், அல்லது டீசலால் இயங்குகிற படகுகளுக்கு 500 லிட்டர் டீசல் 5 ரூபாய் விலையிலும் வழங்கவேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. மு. அப்பாவு] [1999 மே 5

விசைப்படகு மீனவர்களுக்கு ஒரு லிட்டர் டீசலுக்கு 45 காசு மானியம் வழங்கப்படுகிறது. அது சென்னை மற்றும் நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் உள்ள மீனவர்களுக்கு அரசு பங்குகளில் (Bunk) மட்டுமின்றி தனியார் பங்குகளில் வாங்குகிறவர்களுக்கும் அந்தச் சலுகை வழங்கப்படுகிறது. மற்ற இடங்களில் அந்தச் சலுகை வழங்கப்படவில்லை. குறிப்பாக, இராமநாதபுரத்தில் அந்தச் சலுகை வேண்டுமென்று நீதிமன்றத்திற்குச் சென்று ஆணை பெற்று வந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் தமிழகம் முழுவதும் இருக்கிற விசைப்படகு மீனவர்களுக்கு டீசல் மானியமான 45 காசை, எந்த bunk-ல் வாங்கினாலும் அவர்களுக்கு அந்தச் சலுகை உண்டு என்பதை, தமிழகம் முழுவதும் ஒரே சீரான கொள்கையை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-55

மீனவர்களுக்கு, தனி வாரியமாக அமைத்து—கேரளாவைப் போன்று 58 வயது பூர்த்தியானதும், அவர்கள் அனைவருக்குமே நீங்கள் ஓய்வூதியம் வழங்க வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மீனவர்களுக்கு அடையாள அட்டை வாங்கும்போது மிகப்பெரிய பிரச்சினைகள் இருக்கின்றன. ஆகவே, அதை நீங்கள் மாற்றி, மீன்வளக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும், அதோடு அந்த மீன்பிடித் தொழிலாளர்களுக்கான அட்டையை உதவி இயக்குநர் ஆகிய இருவரும் சேர்ந்து வழங்குகின்ற முறையைக் கொண்டுவர வேண்டும்.

V.A.O., போலீஸ் துறையின் மூலம் வாங்கும்போது மிகப்பெரிய சிரமங்கள் அவர்களுக்கு இருக்கின்றன. ஆகவே, அந்த அடிப்படையில் அவர்களுக்கு இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்ட மீனவர் குடும்பத்திற்கு 50 ரூபாய் நாளொன்றுக்குக் கொடுக்கின்றீர்கள். அதை 100 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டும்.

மீனவர்கள் கடலில் காணாமற் போய்விட்டால் Helicopter மூலம் தேடிச் செல்கின்றீர்கள். அவ்வாறு தேடிச் செல்லும்போது அந்த மீனவர் கிராமத்தில் உள்ள ஒரு மீனவரையும் நீங்கள் அதே Helicopter-இல் ஏற்றிக்கொண்டு, தேடும் பணியில் ஈடுபட வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



1999 மே 5] [திரு. மு. அப்பாவு]

அதோடு, நீண்ட நெடுங்காலமாகப் பனையேறும் தொழிலாளர்கள் மிகப்பெரிய துன்பத்தை அடைந்து வருகின்றார்கள். பனையேறும் தொழிலாளர்களுக்கு இலவச வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், பனை வாரியத்தின்மூலம் 60 வயது முடிந்த அனைத்துத் தொழிலாளர்களுக்கும் நிபந்தனையின்றி....(மணியடிக்கப்பெற்றது.)

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பனையேறும் தொழிலாளர்களுக்கு இலவசமாக சென்ற ஆண்டு வீடு கட்டும் திட்டத்தில், மாநிலம் முழுவதும் உள்ள பனையேறும் தொழிலாளர்களுக்கு 500 வீடுகள் கட்டுகின்ற திட்டத்தை அறிமுகப்படுத்தி, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒதுக்கீடு செய்து தற்போது சுமார் 100 வீடுகள் என்ற அளவிற்குக் கட்டியிருக்கிறார்கள். மீதம் இருக்கின்ற வீடுகளையும் இந்த ஆண்டு கட்டுவதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பனையேறும் தொழிலாளர்கள் கிட்டத்தட்ட 50 ஆயிரத்திற்கும் மேல் இருக்கின்றார்கள். ஆகவே, இந்த 500 வீடுகள் என்பது போதாது. ஆகவே, நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆண்டொன்றுக்கு 5,000 வீடுகள் அவர்களுக்குக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

60 வயது முடிந்த தொழிலாளர்களுக்கு நிபந்தனையின்றி ஓய்வூதியம் வழங்க வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பனையேறும் தொழிலாளர்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கின்றார்கள். ஆகவே, பனையேறும் தொழிலாளர்களை நீங்கள் மிகவும் பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பனையேறும் தொழிலாளர்களுக்கு ஆறு மாத காலம்தான் தொழில் இருக்கிறது. மீதி ஆறு மாத காலம் அவர்கள் எந்தத் தொழிலிலும் ஈடுபட முடியாத நிலையில் இருக்கின்றார்கள். ஆகவே, அந்தத் தொழிலில் ஈடுபடாத ஆறு மாத காலத்திற்கு, மாதம் ஒன்றுக்கு 500 ரூபாய் வீதம் அவர்களுக்கு உதவித் தொகை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பனையேறும் தொழிலாளர்கள் காலையிலும், மாலையிலும், பனைமரத்தில் ஏறி, பாளையைச் சீவ வேண்டும். ஒருமுறை அந்த பாளையைச் சீவவில்லை என்றாலோ அல்லது ஒருமுறை சுண்ணாம்பு போடவில்லை என்றாலோ 'கள்' போன்று சளித்து விடும் என்று சொல்வார்கள். அவ்வாறு அவர்கள் செய்யும்போது, காவல் துறையினர் சென்று, கள்ளைத்தான் நீங்கள் இறக்குகிறீர்கள் என்று சொல்லி, அவர்களைக் காவல் துறையினர் காவல் நிலையத்திற்கு அழைத்துச்சென்று, வழக்கு பதிவு செய்து, இரண்டு, மூன்று நாட்கள் அவர்கள் அந்தத் தொழிலில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டு விடுவதால், பனையேறும் தொழிலாளர்களுடைய தொழில் அதோடு நலிந்து விடுகிறது. காரணம், காலையிலும்...

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை தஞ்சாவூர், குளித்தலை, சின்னதாராபுரம் போன்ற பகுதிகளிலே இருக்கிறது என்று எங்களுக்குத் தகவல் வந்தது, இந்த மாதிரி பனையேறுகின்ற தொழிலாளர் 'கள்' இறக்குவதாக, போலீசாருடைய தொந்தரவு இருக்கிறது என்று. குறிப்பாக பனையேறுகின்ற தொழிலாளர்களுக்கு நாங்கள் licence—உரிமம் வழங்கி இருக்கின்றோம். உண்மையிலேயே அவர்கள் பதநீர் இறக்கினால் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கின்றபோது, சம்பந்தப்பட்ட காவல் துறை அதிகாரிகளை அழைத்து நாங்கள் பேசியிருக்கின்றோம். சில இடங்களில் சில தவறுகள் நடைபெறுகின்றன. அதன்மீது போலீஸ் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துக்கொண்டுதான் இருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*நண்பகல் 12-00*

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நன்றி, பனையேறும் தொழிலாளிகள், பனை ஏறி, பதநீர், கருப்பட்டி போன்றவற்றை இறக்குவதால் சாதாரணமாக Diabetes—சர்க்கரை நோய் உள்ளவர்கள்கூட கருப்பட்டி, வெல்லம் போன்றவற்றை சாப்பிடலாம். ஆகவே, அந்த கருப்பட்டி, வெல்லம் போன்றவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கும், அதோடு இப்போது ஊட்டச் சத்திற்கு மண்டை வெல்லம் கொடுக்கப்படுகிறது. *(மணியடிக்கப்பெற்றது)* உரையை முடித்து விடுகிறேன். அதற்கு நீங்கள் கருப்பட்டி, பனங் கற்கண்டு ஆகியவற்றை கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



பனையேறும் தொழிலாளர்கள் வாங்கியிருக்கின்ற கடன்களில் ஒரு பகுதியை கடந்த ஆண்டு இரத்து செய்தீர்கள், அதற்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுக்கு மீதி இருக்கின்ற கடன்களையும் இரத்து செய்துவிட்டு, *(மணியடிக்கப்பெற்றது)* அவர்களுக்கு மீண்டும் கடன் வழங்க வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கதர் வாரியத்தின் மூலம் கடந்த ஆண்டு *40* சதவீதம் rebate கொடுத்தீர்கள். அதுபோன்று தொடர்ந்து இந்த ஆண்டு *40* சதவீதம் என்பதை *50* சதவீதமாக மாற்றி, சில குறிப்பிட்ட காலங்களில் மட்டும் கொடுப்பதை ஆண்டு முழுவதற்கும் நீங்கள் rebate-ஐ கொடுக்க வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.பி. வெங்கிடு.

**திரு. ஜி.பி. வெங்கிடு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உத்தமர் காந்தியடிகளால் இந்த நாட்டில் நிலைப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தை தமிழகத்திலே ஈரோட்டில் பிறந்து இன்பத் தமிழகத்தில் அறிவு தேரோட்டி வந்த மகான் தந்தை பெரியார் அவர்களும், தமிழன் நாட்டிலே தமிழர் ஆட்சியை தழைத்திடச் செய்யடா என்று பாடல் எழுதிய பெரியவர் ஐயா, கோவை ஐயாமுத்து அவர்களும் தமிழகத்தில் இந்த கதர்த் துறையை நிலை நிறுத்துவதற்காக அரும்பாடுபட்டார்கள். அப்படி அவர்கள் உழைத்த உழைப்பின் காரணமாகத்தான் வருங்காலத்திலே அதன் சிறப்புக்காக போடப்பட்ட அடித்தளம்—இன்றைக்கு கதர்த் துறையில் பேசுவதற்கு நிறைய இருக்கிறது, இருந்தாலும் ஒருசிலவற்றை மட்டும் சொல்கிறேன்—இந்த கதர்த் துறை வளர்ந்து இருப்பதற்கு அதுவும் ஒரு காரணம். இதிலே பலவிதமான தொழில் முறைகள் இருக்கின்றன. அதிலே குறிப்பாக பனைத் தொழில். அதிலே மலைகளிலே விளைகின்ற பொருட்களால் உற்பத்தி செய்யப்படக்கூடிய பொருள்கள், இவைகள் எல்லாம் மலைவாழ் மக்களுக்கும், ஆதிதிராவிட மக்களுக்கும் நாம் மானியங்களாகவும் கடன்களாகவும் கொடுத்து அந்தத் தொழில் வளர்வதற்குரிய ஏற்றத்தை செய்து கொண்டிருக்கிறோம் என்று சொல்கிறோம். கடன் பெறுகிறார்களே தவிர, அதைச் சரிவர பயன்படுத்தி அவர்கள் வாழ்க்கையில் ஏற்றத்தைப் பெறுகிறார்களா என்று நாம் அருள்கூர்ந்து அவர்களைப் பார்க்க வேண்டும். நாம் கொடுப்பதோடு நின்று விடுகிறோம். அவர்களும் பெறுவதோடு நின்று, வேறு வழிகளிலே

செலவழித்துவிட்டு மீண்டும் மீண்டும் ஏதாவது ஒன்றை கேட்டுக் கொண்டிருக்கிற சூழ்நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, நம்முடைய மலைப் பகுதிகளிலே இருக்கிற செல்வங்கள் என்பது குறைந்தது அல்ல. இதிலேகூட நாம் குறிப்பிட்டுக் கொடுத்து இருக்கிறோம். கடுக்காய், அது பதப்படுத்துகின்ற தொழில், புளியைப் பதப்படுத்துகின்ற தொழில், தேன் உற்பத்தியைப் பெருக்குகின்ற தேனீ வளர்ப்புத் தொழில், இதுமாதிரியான திட்டங்கள் முறையாக மலைப் பகுதிகளிலே நம்முடைய கதர் வாரியத்தின் மூலமாகக் கொடுக்கப்பட்ட வேலை வாய்ப்புகளை அவர்கள் சரியாகப் பயன்படுத்துகிறார்களா என்று கண்காணிக்கப் பெற்றால் நிச்சயம் இதனுடைய வளர்ச்சி அபரிமிதமானதாக இருக்குமென்பதை நான் இந்த நேரத்தில் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

அதேபோல சோப்பு தயாரிப்பிலே கதர்த் துறை நல்ல வளர்ச்சி பெற்றிருக்கிறது என்ற விவரத்தை நாம் அறிகிறோம். ஆனால், அதேநேரத்தில் சந்தன சோப்பு, அது நம்முடைய கதர் அங்காடிகளிலே sample soap என்று சொல்கிறார்களே, சின்ன அளவிலே இருக்கிற சோப்பு, அதை நாம் முதலில் பயன்படுத்துகிறபோது ஓரளவுக்கு அதில் மணம் இருக்கிறது; மீண்டும் அது நீடிப்பதில்லை என்ற குறைபாடு இருக்கிறது. ஆகவே, மற்ற தனியார்கள் தயாரித்துக் கொடுக்கிற சோப்பிலே இருக்கிற நீடித்த மணம் இதிலே இருப்பதில்லை என்ற புகார் இருக்கிறது. அதை அருள்கூர்ந்து நிவர்த்தி செய்வதற்கு முயற்சிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல இந்தக் கதர்த் துறையில் நீண்ட காலமாக—இப்போதுகூட நாம் கொடுத்திருக்கிறோம்—நூற்பாளர்கள் 45,000 பேருக்கு வேலை கொடுத்திருக்கிறோம், அதிலே 35,000 பேர் பெண்கள் என்று நாம் சொல்கிறோம். அப்படியிருந்தும்கூட முதுநிலை நூற்பாளர்கள், ஏற்கெனவே 386 பேர் இருந்தார்கள். அதிலே கடந்த காலத்திலே, 65 பேருக்கு, 84 பேருக்கு என்று அவர்களை நிரந்தரப் பணியாளர்களாக ஆக்கினார்கள். அதையடுத்து, கடந்த ஆட்சிக் காலத்திலே திடீரென்று 183 பேர்களுக்கு, ஒரே நாளில் அவர்களை நிரந்தரப் பணியாளர்கள் என்று போட்டு, இப்போது தினக்கூலிகளாக இருந்துகொண்டு இருக்கின்றவர்களுக்குப் பின்னால் வந்தவர்கள்கூட, இன்றைக்கு இரண்டு அடுக்கு முறையிலே மேல் இடங்களுக்குச் சென்று, அவர்கள் சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களைக் காட்டிலும், சீனியாரிட்டி உள்ள பெண்கள் 103 பேர் முதுநிலை நூற்பாளர்களாக



இந்தக் கதர் வாரியத்திலே நீண்டகாலமாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இன்றைக்கு நாம் கொடுக்கின்ற தினக்கூலி 20 ரூபாய், ஒரு மாதத்திற்கு 25 நாட்கள் என்று கணக்கிட்டு, மாதம் ஒன்றுக்கு 500 ரூபாய் என்ற அளவில்தான் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அவர்கள் வாழ்க்கையிலே முன்னேற, இனி வேறு தொழில் செய்யவும் வயதில்லை. ஆகவே, அருள்கூர்ந்து, அவர்களுடைய கடைசி காலத்திலாவது அவர்கள் ஒரு நல்ல சம்பளத்திலே பணியாற்றி ஓய்வு பெறுவதற்குரிய வாய்ப்பை ஏற்படுத்தி உதவ வேண்டும். ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்று சொன்ன அறிஞர் அண்ணாவினுடைய கருத்தை நிலைப்படுத்துகிற முயற்சியிலே தலைவர் கலைஞர் அவர்கள் என்றைக்கும் பின்வாங்கியவர் அல்ல. ஆகவே, அந்த ஏழைப் பெண்களுடைய வாழ்க்கையில்—அவர்களுடைய வாழ்க்கையில் சிரிப்பைத் தந்து அதிலே இறைவனைக் காண்போம் என்ற என்னுடைய வேண்டுகோளை இந்த நேரத்திலே இங்கே வைத்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

அதுபோல, இந்தப் பனைப் பொருள்கள். அதிலே கூடை இருக்கிறது, நார் பொருள் இருக்கிறது, தொப்பிகூட செய்கிறார்கள், பாய் முடைகிறார்கள், இப்படியெல்லாம் இருக்கிறது. இந்தப் பொருள்களை நாம் நம்முடைய கதர் அங்காடியில் மட்டும் வைத்து, அது ஏதோ போகிறவர்கள் காட்சிப் பொருள்களாகப் பார்க்கிற அளவுக்கு மட்டும்தான் இன்றைக்கு செய்து கொண்டிருக்கிறார்கள். அங்குள்ள பொருட்கள் பற்றி மக்களுக்கே தெரிவதில்லை, அதனுடைய பயன்கள் தெரிவதில்லை, அதனுடைய தன்மையும் தெரிவதில்லை. ஆகவே நான் வேண்டிக்கொள்வது—நான் இப்படிதான் கருதுகிறேன். சரியாக இருந்தால் அருள்கூர்ந்து செய்து தருமாறு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்—எத்தனையோ பெண்கள் வேலையில்லாமல் இன்றைக்கு இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் தினக்கூலி என்ற அடிப்படையில் வேலைவாய்ப்புத் தந்து இந்த வெய்யில் காலத்திலே வீடுவீடாகப் போய் பதநீர், பனங்கருப்பட்டி, பனஞ்சீனி, பனங்கற்கண்டு இதுமாதிரியான பொருட்கள், நாம் தயாரிக்கிற சோப்பு போன்ற இந்தப் பொருள்களையெல்லாம் ஒவ்வொரு வீட்டிலும் போய் அங்கு இருக்கிற தாய்மார்களிடம் அதனுடைய தன்மைகளை எடுத்துச் சொல்லி, அவர்களுக்கு வலியவாவது இரண்டு முறை கொடுத்து பழக்கப்படுத்த வேண்டும். அப்படி அவர்கள் தொடர்ந்து 3 மாதம், 4 மாதம் வாங்கிப் பழகினால் நிச்சயமாக நம்முடைய அங்காடிகளைத்

தேடி வருவார்கள் என்ற நம்பிக்கையுண்டு. ஆகவே அருள்கூர்ந்து இதைச் செய்தால், கொஞ்சம் பேருக்கு வேலை கொடுத்தமாதிரி இருக்கும், அதே நேரத்தில் நம்முடைய கதர்த் துறையினுடைய பொருட்கள் விற்பனையான மாதிரியும் இருக்கும், விளம்பரம் ஆன மாதிரியும் இருக்கும். ஆகவே, அருள்கூர்ந்து அதையும் தாங்கள் கவனத்திலே கொண்டு, ஒரு சிலருக்கு வேலை வாய்ப்பளித்து, வெய்யில் காலத்தில், இந்த 3 மாதம் முடிகிற காலத்திற்குள் வீடுவீடாகப் போய் இந்தப் பனைப் பொருட்களையெல்லாம் அவர்களுக்குக் கிடைக்கிற வகையிலே செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த வாரியத்திலே பதவி உயர்வு கேட்கிறவர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு துறையிலும் தேர்ச்சி பெற்றவர்கள் இருக்கிறார்கள். அந்தத் துறையில் மட்டுமல்லாமல், அவர்களுக்குப் பதவி உயர்வு என்று வரும்போது, வாரியப் பணிகளில் எல்லா மட்டத்திலும் அவர்கள் தேர்ச்சி பெற்றவர்களாக இருக்க, அவர்களுக்கு பயிற்சி அளித்து அதையும் அவர்களுக்குச் செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கதர் கிராம வாரியத்தின் கோரிக்கைகள் சம்பந்தமாக சில கருத்துக்களை தெரிவிக்க விரும்புகிறேன். ஏற்கெனவே கையாலே செய்யக்கூடிய பேப்பர் தயாரிப்பதற்காக 22 அலகுகள் செயல்படுகின்றன. அதிலே சுமார் 300-க்கும் அதிகமான தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். 1991-ஆம் ஆண்டு, அரசு அறிவித்த குறைந்தபட்ச ஊதியம் வழங்கப்படவில்லை என்ற காரணத்தால் 31-12-1996-இல் உயர்நீதி மன்றம் ஒரு தீர்ப்பை வழங்கியது. ஆனால் அந்தத் தீர்ப்பு இதுவரையில் அமல்படுத்தப்படவில்லை. இந்தத் துறை அதிலே கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தஞ்சாவூரில் கையால் காகிதம் செய்யும் அலகு ஒன்றை, துறை சம்பந்தப்பட்ட உதவி இயக்குநர் தன்னிச்சையாக மூடிவிட்டார்-

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைமுறை காகித அலகுகளில் பணிபுரிகிற 340 தொழிலாளர்கள் இருக்கின்றார்கள். இவர்களுக்கு சம்பளத்தை உயர்த்தித்தர வேண்டுமென்று உயர்நீதி மன்றத்திலே



வழக்கு தொடுத்தார்கள். அந்த வழக்கின் தீர்ப்பின்படி, தற்பொழுது உயர் நீதிமன்ற ஆணைப்படி, சம்பளம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், முன்தேதியிட்டத் தொகையினை வழங்க வேண்டுமென்று கோரிக்கை வைக்கின்றார்கள். வாரியத்தினுடைய நிதி நிலையைப் பொறுத்து, அவர்களுக்கு அந்தச் சம்பள விகிதாச்சாரங்கள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-10*

***திரு. டி. மணி:** துணைத் தலைவர் அவர்களே, விளக்கத்திற்கு நன்றி. இருந்தாலும்கூட, குறைந்தபட்ச சம்பளம், அதிகச் சம்பளம் கிடைக்காத ஒரு துறை. எனவே, அதிலே கொஞ்சம் அதிக கவனம் செலுத்தி இன்றையதினம் கதர் கிராம வாரியத்திலே நம்முடைய அதிகாரிகள் மட்டத்திலே பெரிய அளவுக்கு பணம் செலவழிக்கப்படுகின்றதே தவிர, அடிமட்டத்திலே, வருகின்றபோது, இந்தப் பணம் சாதாரண தொழிலாளிக்கு அல்லது அதிலே உழைக்கக்கூடியவர்களுக்குப் போய்ச் சேருவதில்லை என்ற குறைபாடு இதற்குள்ளே இருக்கிறது. அந்தவகையிலே இதைச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோன்று, தஞ்சாவூரிலே கையால் காகிதம் செய்யும் அந்த அலகை 1998-லே சம்பந்தப்பட்ட உதவி இயக்குநர் தன்னிச்சையாக மூடிவிட்டார். அதுபோன்று, அதிலே கதவடைப்பு இப்படிப்பட்ட பல்வேறு பிரச்சினைகள். இந்த வாரியத்திலே இருக்கக்கூடிய ஸ்தாபனங்கள் சரியாக இயங்குவதற்கு ஒரு ஆய்வு நடத்தி கண்காணிக்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் இங்கே வைக்க விரும்புகின்றேன்.

அதுபோல, கைராட்டையில் நூல் நூற்கக்கூடிய ஒரு ஏற்பாடு இதற்குள்ளே இருக்கிறது. மிகக் குறைந்த சம்பளம், 25 ரூபாய்தான் சம்பளம் வழங்கக்கூடிய நிலையிருக்கிறது. ஏற்கெனவே, விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச சம்பளமாக நாம் 50 ரூபாய் வழங்கி வருகிறோம். அந்த அடிப்படையிலாவது இந்தக் கையால் நூல் நூற்கக்கூடியவர்களுக்கு சம்பளம் வழங்க வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று, மாநிலத்திலே இரண்டு மூன்று மையங்களில்தான் இந்தத் தேன் உற்பத்தி என்பது நடைபெறுகிறது. அந்தத் தேன் உற்பத்தியிலே குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்திலே மார்த்தாண்டத்திலே இருக்கின்ற தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்

கடந்த ஆண்டு 2 இலட்சத்திற்கு அதிகப்படியான கிலோ எடை தேனை அங்கே கொள்முதல் செய்தார்கள். இரண்டு மாதங்களுக்கு முன்னாலே நடந்த சீசனில் 4 இலட்சம் கிலோ தேனை உற்பத்தி செய்வதற்கு முடியும். இது, மாநிலத்திலே பல்வேறு இடத்திலே செலவிடுவது மட்டுமல்ல, நம்முடைய இந்தியாவினுடைய பல்வேறு பகுதிகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு, அதனாலே ஒரு பெரிய விற்பனையைத் தேடித் தருகின்ற ஒரு ஸ்தாபனம். ஆனால், அரசாங்கம் கடந்தமுறை ஒரு கிலோ தேனுக்கு 47 ரூபாய் என்று தீர்மானித்தார்கள். ஆனால், அங்கே தேனீ வளர்ப்போருக்குக் கிடைப்பது 43 ரூபாய்தான். அதிலே ஏதோ கோளாறு இருக்கின்றது. அந்தக் கோளாறைத் தீர்வு செய்கின்றவகையில் நான் பல கோரிக்கைகளை மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்கு இதற்கு முன்னாலே கொண்டு வந்திருக்கிறேன். அதிலே அதிகாரிகள் மட்டத்திலே கொஞ்சம் கண்காணித்தால் மட்டும்தான் அந்தத் துறை வளர்ச்சி அடையும். அதில் இருக்கக்கூடிய சுமார் 20 ஆயிரம் மக்கள் பயன்பெறுகின்றார்கள். அந்த அடிப்படையிலே அந்தத் தேன் உற்பத்தியிலே இருக்கக்கூடிய குறைபாட்டைத் தீர்த்து வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே, இரண்டு வருடங்களுக்கு முன்னாலே, இந்தத் தேனீக்களுக்கு ஒரு வைரஸ் நோய் ஏற்பட்டதால் மிகப் பெரிய பாதிப்புக்குள்ளானார்கள். ஆனால், மத்திய அரசாங்கம் கேரள மாநிலத்திலே அவர்களுக்கு இதற்காக உதவி செய்தார்கள். ஆனால், நம்முடைய மாநிலத்திலே அந்த உதவி நமக்கு கிடைக்கப்பெறாத சூழ்நிலை உருவாகியுள்ளது. அதையும் கவனத்திலே எடுத்துக்கொள்ள வேண்டும்.

அதுபோன்று, இந்தத் துறையைப் பொறுத்தமட்டிலே சில பலகீனம்—அந்தத் தலைவரைப் பொறுத்தமட்டிலே பல்வேறு புகார்கள் இருக்கின்றன. இந்தத் தலைவரை வைத்துக்கொண்டு அந்தத் துறை முன்னேற்றப் பாதையிலே செல்ல முடியுமா என்பதைப் பரிசீலிக்க வேண்டும். எனவேதான், இதையும் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதுபோன்று ஏற்றுமதி என்று சொல்லக்கூடிய தொழிலில் பனந்தும்பு பெரிய அளவிலே ஏற்றுமதி ஆகிறது. கன்னியாகுமரியில் இருக்கக்கூடிய குளச்சலிலே இதற்குச் சொந்தமான ஒரு ஃபேக்டரி இருக்கிறது. அதற்கு ஒரு சில ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்த நிலங்களைக்கூட



தனியார்கள் ஆக்கிரமித்துக் கொள்கின்ற ஒரு சூழ்நிலையிருக்கிறது. எனவே, அதைக் கண்டறிந்து, அரசாங்கத்தில் எவ்வளவு நிலம் இருக்கிறது என்பதைச் சர்வே பண்ணி அதை முழுவதும் கையகப்படுத்தவும், அதுபோல, அந்தப் பனந்தும்பு அதிகப்படியாக ஏற்றுமதி செய்வதற்கான நல்ல முறையைக் கையாள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று, நம்முடைய பனை மரம் ஏறுகின்ற தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில், பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. ஆனால், கன்னியாகுமரி மாவட்டத்திலே அது குறைந்துபோன சூழ்நிலையில் இருக்கிறது. வருமானம் இல்லாத ஒரு காரணத்தால் பனை ஏறுவதற்கு ஆள் இல்லை. அதனால் அந்தக் குடும்பங்கள் நலிவடைந்த நிலையில் இருக்கின்றன. எனவே, அவர்களுக்கு இருக்கின்ற ஒரு சென்ட்டோ, இரண்டு சென்ட்டோ, அல்லது 5 சென்ட் நிலத்திலோ இலவசமாக வீடு கட்டிக் கொடுப்பதற்கான ஒரு நடவடிக்கை வேண்டுமென்று நான் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பல்வேறு துறையிலே தரமான சோப்பு உற்பத்தி பெரிய அளவிலே செய்யப்படுகிறது. இன்னும் கொஞ்சம்கூட—(மணியடிக்கப்பெற்றது) மற்ற தனியார் முதலாளிகள் சோப்பு உற்பத்தி செய்வதைப்போல—நாம் பார்த்துக் கொள்வோமானால், கொஞ்சம்கூட இதை விற்பனைக்கு இலாயக்கான அடிப்படையிலே செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய மீன்வளத் துறை சம்பந்தப்பட்டவரையில் சில பிரச்சினைகளை நான் இங்கே கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். மீன் வளம் என்று சொல்கிறபோது, நாம் நெல் உற்பத்தி செய்வதுமாதிரி, தமிழ்நாட்டிலே நம்முடைய உணவுக்காக நாம் பயன்படுத்துகிற ஒரு முக்கியமான பங்கு அதிலே இருக்கிற அந்தவகையிலே, மீன் வளத்தை அதிகப்படுத்துவதற்காக, முக்கியமாக கன்னியாகுமரி மாவட்டம், தூத்துக்குடி, அதுபோன்று இன்னும் சில மாவட்டங்களிலே ஆழ்கடலிலே மீன் பிடிப்பதற்குத் தேவையான கப்பல்களை நாம் வாங்கிப் பயன்படுத்த வேண்டும். சில மாநிலங்களிலே அதைச் செய்கின்றார்கள். அந்தவகையிலே இந்த 3 மாவட்டங்களிளாவது ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்கான 3 கப்பல்களை வாங்கி நாம் பயன்படுத்துவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

பிற்கல் 12-15

அடுத்து நம்முடைய கடலோர கிராமங்கள் கடல் கொந்தளிப்பினால் பல்வேறு கடல் அரிப்புகளுக்கு ஏதுவாகின்றன. சென்னையைச் சுற்றி இருக்கக்கூடிய திருவொற்றியூர், எண்ணூர், காசிமேடு, கிருஷ்ணகுப்பம்—இந்தப் பகுதிகளில் பூராவும் கடல் அரிப்புகள் ஏற்படுகின்றது. அதை கல்லை மிகப் பெரிய குவியலாகப் போட்டு தடுக்க முடியுமே தவிர, வேறு வகையில் தடுக்க முடியாது. அதுபோல் கன்னியாகுமரி மாவட்டத்தில் மிகப் பெரிய பாதிப்புக்கு உள்ளான பகுதி, விளவங்கோடு தொகுதியிலே நீரோடியிலிருந்து இரயுமன் துறை வரையிலும், இரயுமன் துறையிலிருந்து குளச்சல் வரையிலும் பல்வேறு பகுதிகள் கடந்த ஆண்டு கடல் அரிப்புகளுக்கு உள்ளாயின. ஏற்கெனவே மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களும், செய்தி விளம்பரத் துறை அமைச்சர் அவர்களும் நேரிலே வந்து அந்த கடல் அரிப்புகளைப் பார்த்தார்கள். ஆனால், அங்கு தொடர்ச்சியாக கல்லைப்போட்டுத் தடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. அது மேற்கொள்ளப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கரை ஓரத்தையும் கடல் ஓரத்தையும் சேர்க்கின்ற இணைப்புச் சாலைகள் இல்லாத காரணத்தால் இன்று அவர்கள் பிடிக்கின்ற மீன்களை அவசரமாக வெளி மார்க்கெட்டுக்கு கொண்டுவருவதற்கு வாய்ப்பு இல்லாத சூழ்நிலை இருக்கின்றது. சில பகுதிகளில் பாலங்களில் குறைபாடு இருக்கின்றது. இரயுமன் துறை பக்கத்தில் பூத்துறையில் ஒரு பாலம் உடைந்து போய்விட்டது. ஏ.வி.எம். கால்வாய்க்கு குறுக்கே இருக்கிற அந்தப்பாலத்தைக் கட்டுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம், நம்முடைய கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக செயல்படுத்தப்படுகின்றது. ஆனால் அவை சரிவர பயன்படாத ஒரு சூழ்நிலை இருக்கின்றது. எனவே, அரசாங்கம் நேரடியாக இந்த மீனவ மக்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கான உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரயுமன் துறையும் தேங்காய்ப்பட்டணமும் சேருகின்ற இடத்தில் மீன் பிடிப்பதற்கு ஒரு தங்குதளம் வேண்டுமென்ற கோரிக்கையை நீண்ட நாட்களுக்கு முன்னாலேயே கொடுத்து இருக்கின்றோம். இதற்கு



சர்வே எல்லாம் செய்திருக்கிறார்கள். அங்கு மீன்பிடித் தங்குதளத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதோடு இணைந்துதான் குளச்சல் துறைமுகம்கூட வருகிறது. ஏற்கெனவே குளச்சலில் ஒரு மீன்பிடித் துறைமுகம் வேண்டுமென்ற கோரிக்கையும் இருக்கிறது. அதையும் அரசு கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் சகாய மாதா தெருவைச் சார்ந்த பிரகாசி என்பவர் ஒரிசா மாநிலம் புவனேஸ்வரம் மாவட்டம் சாமூரில் கே.எம்.டி. என்ற ஒரு மீன் பதனிடும் ஆலையில் 29-5-1998 அன்று மர்மமான முறையில் மரணம் அடைந்துள்ளார். இது சம்பந்தமாக இந்தத் துறைக்கு அவர்கள் புகார்களை எல்லாம் தந்திருக்கிறார்கள். இதை விசாரித்து அந்தக் குடும்பத்திற்குப் போதுமான நஷ்டஈடு வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

பழவேற்காடு பகுதியிலே துறைமுகத்தின் விரிவாக்கம் வருகின்ற காரணத்தினால், 34 கிராமங்கள் பாதிக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது. எனவே, அவர்களுக்கு மாற்று இடத்தைத் தருவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதோடு மட்டுமல்லாமல், அவர்கள் எங்களுடைய தொழிலுக்கு பாதிப்பு வருகின்றது என்று இன்னொரு கோரிக்கையையும் வைத்திருக்கிறார்கள். எனவே, வீட்டுக்கு ஒரு நபருக்கு வேலை தரக்கூடிய ஒரு ஏற்பாட்டை அரசாங்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உள்நாட்டிலே மீன்களை வளர்ப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். ஏனென்று சொன்னால், அரசாங்கம் அணைப் பகுதிகளில் இன்று பல்வேறு வகையான வளர்ப்பு மீன்களை வைத்திருக்கிறார்கள். கட்லா என்ற ஒரு மீன் 5 ஆண்டுகளில் 48 கிலோ வளரக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. கட்லா, மிருகால் போன்ற இப்படிப்பட்ட மீன்களை நம்முடைய குளங்களிலும், குட்டைகளிலும் வளர்ப்பதற்குரிய நடவடிக்கையை மேற்கொண்டால் இதனால் உற்பத்தி பெருகி நம்முடைய உணவுப் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கும், இன்னும் ஏற்றுமதி செய்வதற்குமான நல்ல வாய்ப்பினைப் பெற முடியும். அந்த அடிப்படையில் வற்றாத குளங்களிலே மீன்களை உள்நாட்டிலே வளர்ப்பதற்கான உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. மதிவாணன்.

**திரு. இரா. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோரிக்கை எண் 21, மீன் வளத் துறையில் சில கருத்துக்களை இந்த அவைமுன் வைக்க விரும்புகிறேன். சுமார் 1,000 கிலோ மீட்டர் நீளம் உள்ள தமிழ்நாடு கடற்கரைப் பகுதியில் இந்தியாவின் மொத்த கடல் பொருட்கள், ஏற்றுமதியில் 25 விழுக்காடு அளவான ரூபாய் 1,000 கோடி மதிப்புக்கு தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது. மொத்தம் 442 கடல் மீன்பிடி கிராமங்கள் உள்ளன. தற்போது கடல் மீன்பிடிப்பில் சுமார் 9,896 மீன்பிடி விசைப் படகுகளும், 42,537 பாரம்பரிய மீன்பிடி படகுகளும் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வருகின்றன. சென்னை மாவட்டம், திருவள்ளூர் மாவட்டம், காஞ்சிபுரம் மாவட்டம் ஆகியவற்றைச் சேர்ந்த சுமார் 1,000 விசைப் படகுகள் இராயபுரம் மீன்பிடித் துறைமுகத்திலே மீன்பிடித் தொழில் செய்து வருகின்றன. இந்த விசைப் படகுகளுக்குக் கடந்த ஆட்சியில் 5 ஆண்டுகளில் வழங்கிய டீசல் மானியத்தையும் நம்முடைய கழக ஆட்சியில் கடந்த 3 ஆண்டுகளில் வழங்கிய டீசல் மானியத்தையும் உங்கள் முன்னால் வைக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 12-20

குறிப்பாக 1991-92 ஆம் ஆண்டிலே 49 விசைப் படகுகளுக்கும், 1992-93 ஆம் ஆண்டிலே 37 விசைப் படகுகளுக்கும், 1993-94 ஆம் ஆண்டிலே 53 விசைப் படகுகளுக்கும், 1994-95 ஆம் ஆண்டிலே 18 விசைப் படகுகளுக்கும் 1995-96 ஆம் ஆண்டிலே அந்த அரசு நிதியொதுக்கம் செய்யாத காரணத்திலே, கிட்டத்தட்ட 157 விசைப் படகு உரிமையாளர்கள் மட்டுமே கடந்த ஆட்சியிலே பயன்பெற்றிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய கழக ஆட்சியிலே, இரண்டாண்டுகளிலே கிட்டத்தட்ட 1996-97-லே மட்டும் 168 படகுகளும், 1997-98-லே 189 படகுகளும், மொத்தம் இரண்டாண்டுகளில் 357 விசைப் படகுகளும் பயன்பெற்று, கிட்டத்தட்ட 40,59,601 ரூபாய் அளவிற்கு பயன்பெற்றிருக்கிறார்கள். ஆனால் கடந்த 5 ஆண்டு கால ஆட்சியிலே வெறும் 12,63,000 பெற்றிருக்கிறார்கள் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். காரணம் நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் மீனவர்களுக்கு எந்தக் குறையாக இருந்தாலும், அதற்கு வேண்டிய நிதியை வாரி வழங்குகிற வள்ளலாகத் திகழ்கிறார்.



**[மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. பெ. ஆசையன் தலைமை]**

மீனவர்கள் பயன்படுத்துகின்ற படகு என்ஜின்களுக்கு மானியம். கட்டுமரமாக இருந்தாலும், சிறிய படகுகளாக இருந்தாலும், அதைப் பயன்படுத்தும் மீனவர்களுக்கு உட்பொருத்தும் என்ஜின்களுக்கு 12,000 ரூபாயும், வெளிப்பொருத்தும் என்ஜின்களுக்கு 10,000 ரூபாயும் மானியம் வழங்கப்படுகிறது. மொத்தத்தில் 50 விழுக்காடு மானியமாக வழங்கப்படுகிறது. இதற்காக 1987-88 முதல் 1998-99 முடிய 11,633 உட்பொருத்தும் மற்றும் வெளிப்பொருத்தும் என்ஜின்களுக்கு மானியம் அரசால் வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதனை வழங்கிய நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், துறையினுடைய அமைச்சர் அவர்களுக்கும் மீனவர்கள் சார்பிலே என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

விசைப் படகுகளுக்கு டீசல் மானியம் வழங்கப்படுவதைப் போலவே, கட்டுமர மீனவர்கள், சிறிய படகு மீனவர்கள் ஆகிய இவர்களுக்கும் டீசல் மானியம் வழங்குவதற்காக கடந்த நிதிநிலை அறிக்கையிலே நமது முதலமைச்சர் அவர்கள் 3 கோடி ரூபாய் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். ஆகவே, மீனவர்களின் பாதுகாவலனாக, விசைப் படகாக இருந்தாலும், கட்டுமரமாக இருந்தாலும், சிறிய, சிறிய படகாக இருந்தாலும், எல்லோரையும் ஒன்றாகச் சேர்த்து டீசல் மானியம் வழங்கிய நமது மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மீன் வளத் துறை அமைச்சருக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இணைப்புச் சாலைகள். 390 மீனவ கிராமங்களுக்கு 528 கிலோ மீட்டர் நீள இணைப்புச் சாலைகளை 29.84 கோடி ரூபாயில் செய்வதற்கான திட்டம் பரிசீலனையில் உள்ளது என்று கொள்கை அறிவிப்பிலுள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருகின்ற நிதியாண்டிலே இந்தத் திட்டத்தினை நிறைவேற்றித்தர வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன.

அதேபோன்று 12 கடலோர மாவட்டங்களில் மீன்இறங்கு தளங்களுக்கு சோடியம் விளக்கு அமைக்கும் திட்டமும் உள்ளது. கிட்டத்தட்ட 13.20 இலட்சம் ரூபாயில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படவிருக்கிறது. 7 மாவட்டங்களிலே இந்த இணைப்பு வசதிகளைத் தந்திருக்கிறார்கள். மீண்டும் வருகின்ற நிதியாண்டிலே மீதி இருக்கின்ற தளங்களுக்கு அந்த விளக்கு வசதிகளைச் செய்துதர வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மீனவர்கள் நலத் திட்டங்களை, நம்முடைய அரசு சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக, சிங்காரவேலர் நினைவு மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டம், மீனவர் குழு காப்புறுதித் திட்டம், மீனவர் விபத்துக் காப்புறுதித் திட்டம், இந்தத் திட்டங்களும் சிறப்பாகச் செயல்படுத்தப்படுகின்றன. பாதிக்கப்பட்ட மீனவர்கள் இந்தத் தொகையைப் பெறுகின்றபோது பெரிதும் மகிழ்ச்சியடைவதோடு, அவர்களுக்கு இது உதவியாகவும் இருக்கிறது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம். இந்தத் திட்டத்தில் மீனவர்கள் பங்கு 360 ரூபாயுடன், மத்திய அரசின் பங்காக 360 ரூபாயும், மாநில அரசின் பங்காக 360 ரூபாயும் சேர்த்து மொத்தமாக ஆண்டுதோறும் 1,080 ரூபாய் வழங்கப்படுகிறது. கடந்த ஆண்டிலே கிட்டத்தட்ட 8 கோடி ரூபாய் ஒதுக்கித் தந்தார்கள். ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் கிட்டத்தட்ட 12 கோடி ரூபாய் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். கடந்த ஆண்டில் 1,19,000 மீனவர்கள் பயன்பெறுகின்ற அளவிலே 8.57 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. 1999-2000 ஆம் ஆண்டில் 1.69 இலட்சம் கடல் மீனவர்கள் பயன்பெறுகின்ற வகையிலே 12.17 கோடி ரூபாய் வழங்க அனுமதி அளித்துள்ளதற்காக மாண்புமிகு துறையினுடைய அமைச்சருக்கு மீனவர்கள் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 12-25

மேலும் கடல் ரோந்துக்காக 5 விசைப் படகுகளைக் கட்டுகின்ற திட்டம் நம்முடைய அரசில் இருக்கிறது. அந்தத் திட்டத்தை உடனடியாகத் தொடங்கி, சென்னை, மல்லிப்பட்டினம், இராமேசுவரம், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய தளங்களில் அந்தப் படகுகளை விரைவிலே பயன்படுத்த அனுப்புமாறு பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு உதவித் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தத் திட்டத்தின்கீழ் கடந்த ஆட்சியிலே அமைச்சர்களாக இருந்து, 5 ஆண்டுகளாக செய்ய முடியாத பணிகளையெல்லாம், இந்தத் திட்டத்தின்கீழ் நாங்கள் செய்து வருகின்றோம். குறிப்பாக, சென்னை, இராயபுரம் மீன்பிடித் துறைமுகத்திலே தெற்குப் பகுதியிலிருந்து கடற்கரைக்குச் செல்லும் பகுதியிலே கிட்டத்தட்ட



15 ஆண்டு காலமாக நல்ல சாலை வசதி இல்லாத சூழ்நிலை இருந்தது. அந்தப் பகுதியில் மழைக்காலம் ஏற்பட்டால், பொதுமக்களாக இருந்தாலும், வியாபாரிகளாக இருந்தாலும், அரசைத் திட்டிப் பேசுவார்கள். ஆனால் அந்த நிலையை மாற்றி, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு வந்த சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சாலைகளைப் போடுகின்ற பணிகளை நாங்கள் தொடங்கியிருக்கின்றோம். ஆகவே, அந்தச் சாலைகளைப் போடுகின்ற பணியால் நமது மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்களுடைய மீனவ மக்கள் பெரிதும் நன்றிக் கடன்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

நம்முடைய பால்வளத் துறை அமைச்சரின் தொகுதியான பழவேற்காட்டில் நீண்ட நாள் கோரிக்கையான போக்குவரத்துக்கான மேம்பாலம் கட்டுகின்ற பணி, அந்தப் பணியையும் நம்முடைய அரசு விரைவில் செய்ய, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் பரிந்துரைத்து, வரும் நிதியாண்டிலே அந்த மேம்பாலம் கட்டுகின்ற பணியைத் தொடங்க ஆவன செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

அதுபோன்று, பழவேற்காட்டில் இருந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேரமும் இயங்குகின்ற ஒரு பொது மருத்துவமனையாக ஆக்கித் தந்த நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு மீனவ மக்கள் சார்பில் நன்றி தெரிவித்து, ஏழை எளிய மக்கள், பாட்டாளி மக்கள், நடுத்தர மக்கள் அனைவரும் பாராட்டுகின்ற வகையில் நல்ல பல திட்டங்களை அறிவித்து, மீனவர்களின் காவலராக இருக்கின்ற டாக்டர் கலைஞர் அவர்களுக்கு மீனவ மக்களின் சார்பில் பணிவோடு நன்றியைத் தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. ஆசையன்):** திரு. வி. அய்யலுசாமி.

**திரு. வி. அய்யலுசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மீன்வளத் துறையிலே பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றி கூறிக்கொள்கின்றேன். தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் கதர் வாரியம், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்டு, 4, 5 ஐ.ஏ.எஸ். அதிகாரிகளின் நிருவாகத்தில் தற்பொழுது

இயங்கி வருகிறது. இவ்வாரியம் ஒரு சுய அதிகாரமுள்ள வாரியம். இவ்வாரியத்திற்கு அலுவல் சாரா உறுப்பினர்கள் 9 பேரை நியமிக்க அரசுக்கு வழி இருப்பினும் அவர்களை நியமிக்காமல் தாமதப்படுத்துவதால், அலுவலகப் பணிகளை முறைப்படுத்த, கண்காணிக்க இயலாமல் உள்ளது. எனவே, வாரிய உறுப்பினர்களை நியமிக்கும் எண்ணம் இந்த அரசுக்கு உள்ளதா? அப்படியிருந்தால் அனைத்துக் கட்சிகளுக்கும் வாய்ப்பு கொடுக்கப்படுமா அல்லது அத்துறையில் நீண்ட அனுபவம் உள்ள, பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்களை நியமிக்க ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், நேரடி நிருவாக உற்பத்தி விற்பனைப் பிரிவில் இயங்கி வந்த இலக்கு முடக்கப்பட்டு, பிற கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதாக அறிகிறேன். வாரியத்தினால் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்களில் எல்லாம் பெயரளவுக்குக் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொண்டு குறிப்பிட்ட சிலர் சுய நோக்கத்தோடு பயனடையும் நிலை கடந்த காலத்தில் இருந்து, அது இன்றும் தொடருகிறது. இது தொழிற்சங்க அமைப்புக்கும், பணியாளர் அமைப்புக்கும் மிகவும் பாதிப்பான நிலையாகும். எனவே, முறைப்படி, உண்மையான பணியாளர்களைக் கொண்டு வாரியம் செயல்பட ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-30*

கிராமப் பகுதிகளில் பணிபுரியும் முதுநிலை நூற்பாளர்கள் சுமார் 106 பேர்கள் பணி நிரந்தரம் செய்யப்படாமல் இன்னும் தினக்கூலிகளாக நாள் ஒன்றுக்கு 20 ரூபாய் என்ற அடிப்படையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, முதுநிலை நூற்பாளர்கள் 106 பேர்களையும் பணி நிரந்தரம் செய்ய வேண்டுமாய் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய சிவகங்கை மாவட்டம், மானாமதுரை மண்பாண்டத் தொழிலுக்குப் பிரசித்தி பெற்ற நகரமாகும். மண்ணால் செய்யப்பட்ட கடம், சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. மண்பாண்டக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக மண்ணினால் செய்யப்பட்ட பொருட்களைக் கொள்முதல் செய்து பின்பு விற்பனை செய்கின்றார்கள். மண்பாண்டத் தொழிலை மேலும் விரிவுபடுத்த கதர் கிராமத் துறையின் மூலம் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.



மேலும், மண்பாண்டத் தொழிலாளர்கள் செய்யும் மண்ணினால் செய்யப்பட்ட பொருட்களைச் சுடுவதற்கு கதர் கிராமத் துறையின் மூலம் சூளைக் கட்டித்தர வேண்டும். மண்ணினால் செய்யப்படும் பொருட்களைச் சுடுவதற்குத் தேவையான மரங்களை வளர்ப்பதற்கு சுமார் 100 ஏக்கர் தரிசு நிலங்களை ஒதுக்கீடு செய்து மானாமதுரை மண்பாண்டக் கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அடுத்து, தமிழ்நாட்டில் பனைத் தொழிலில் 6 இலட்சம் கிராமத் தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். கிராமப் பகுதிகளிலுள்ள பனைத் தொழிலாளர்கள் முன்னேற்றமடைய பகுதி-2 திட்டத்தின் கீழ் சிறப்புத் திட்டங்கள் செய்யப்பட்டு வருகின்றன. மேலும், பனைத் தொழிலில் நவீன தொழில்நுட்பங்களைப் புகுத்தி பொருட்களை உற்பத்தி செய்ய பனைத் தொழிலாளர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்படுகின்றது. இது நல்ல அம்சமாகும்.

மேலும் தூத்துக்குடியிலுள்ள பனந்தும்பு ஏற்றுமதி அலகின் மூலம் பெல்ஜியம், அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து போன்ற அயல்நாடுகளுக்குப் பனந்தும்பு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. பனைத் தொழில் மூலமாக பல பொருட்களைத் தயாரித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலமாக அரசுக்கு அந்நியச் செலாவணி ஈட்டப்படுகிறது. 1997-98 ஆம் ஆண்டில் 39.37 இலட்சம் ரூபாய்க்கு பனந்தும்பு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. 1998-99ஆம் ஆண்டில் 81.59 இலட்சம் ரூபாய்க்கு பனந்தும்பு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. மேலும் இத்தொழில் வளர்ச்சி அடைவதற்கு பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, மற்றும் ஊரக வளர்ச்சித் துறை மூலமாக பனைக் கன்றுகளை உருவாக்குவதற்காக பனை விதைகள் வழங்கப்படுகின்றன. அதை நான் வரவேற்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

அதேநேரத்தில், தமிழகத்தில் இருக்கின்ற பனை மரங்கள் பட்டுப்போய் மொட்டையாக நிற்கின்றன. அதற்குக் காரணம் வேலிக் கருவேல மரங்கள் அதைச் சுற்றி இருந்து, பனை வேரின் வழியாக ஊடுருவிச் சென்று, வேருக்கடியில் சாரை உறிஞ்சி விடுவதால் அந்த மரங்கள் பட்டுவிடுகின்றன. ஆகவே அதைத் தடுப்பதற்கு வேலிக் கருவேல மரங்களை வெட்டுவதற்கு நம்முடைய அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். அல்லது அந்தப் பட்டா நிலச் சொந்தக்காரர்களுக்கு

விளம்பரம் செய்து வேலிக் கருவேல மரங்களை வெட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. ஆசையன்):** போதும், உரையை முடித்துக்கொள்ளுங்கள், எட்டு நிமிடங்கள் ஆகிவிட்டன.

*பிற்பகல் 12-35*

**திரு. லி. அய்யலுசாமி:** கடல் மீனவர்களுக்கு (மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு விஷயம். கடல் மீனவர்களுக்கு வழங்கப்படும் சேமிப்பு மற்றும் நிவாரணம் ஆகிய திட்டங்களை அதே தொழிலில் ஈடுபடும் பெண்களுக்கும் வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, தொழிலாளர்கள் சாலையோரத்தில்—

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. ஆசையன்):** போதும், உங்களுடைய பேச்சை முடித்துக்கொள்ளுங்கள். அடுத்து, திரு. தி.ப. ஆறுமுகம்.

**திரு. தி.ப. ஆறுமுகம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மற்றும் தமிழ்நாடு பனைபொருள் உற்பத்தி ஆகிய இந்த மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் 1960 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, அதன் உயரிய நோக்கங்களான நலிவுற்ற மக்களுக்கு வேலைவாய்ப்பு அளித்தலும், வேலைவாய்ப்புகளை அதிகரித்தலும், உள்ளூரிலேயே கிடைக்கின்ற மூலப்பொருட்கள் மற்றும் இதர வசதிகளைப் பயன்படுத்தி எளிதில் விற்பனையாகக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்ய வழிவகுத்தல், கிராமப்புற ஏழை மக்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்தி, தன்னம்பிக்கை நிலையினை அடைந்திட உதவுதல் போன்றவற்றில் கடந்த மூன்று ஆண்டுகளில் நமது அரசு நல்ல முயற்சிகளை மேற்கொண்டுள்ளதை வரவேற்கிறேன்.

வாரியம் தன் சொந்த ஆலைகளின் மூலமாக எண்ணெய், பருப்பு மற்றும் தானிய வகைகள், நார், சுண்ணாம்பு, பிரம்பு மற்றும் மூங்கில் ஆகிய இதரத் தொழில்களைக் கூட்டுறவு அமைப்புகளின் மூலம் கிராமப்புற மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது வரவேற்கத்தக்கது.



வாரிய அலகுகள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கதர் உற்பத்தி செய்யப்படுகிறது. தொடர்ந்து வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க கிராமிய நூற்பு நிலையங்களின் செயல்பாடுகள் ஆய்வு செய்யப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது நல்ல முயற்சியாகும். கதர் நூல் தரமாகவும், நயமாகவும் இருக்க உலோகத்தினாலான இராட்டைகளைக் கொண்டு பெண்களால் உற்பத்தி செய்யப்பட்டு, 86 உற்பத்திக் கேந்திரங்கள் வழியாக நெசவாளர்களுக்கு நெசவு செய்வதற்காக வழங்கப்பட்டு, துணி நெய்து விற்கப்படுவது மிகவும் பயனுடைய திட்டமாகும். வாரியத்தின் தொழிற்பிரிவுகளின் மூலம் சுமார் 40,145 கைவினைஞர்கள் வேலைவாய்ப்பு அளிக்கப் பெறுகிறது. குறிப்பாக அவர்களுள் சுமார் 35,760 பெண்கள் வேலைவாய்ப்பு பெறுகிறார்கள் என்பது மிகவும் பாராட்டப்படக்கூடிய ஒன்று. இந்த ஆண்டு மேலும் 11 அலகுகள் விரிவாக்கப்படுவது புதிய கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க உதவும் என்று கருதுகிறேன்.

வாரியத்தின் கைவினைஞர்களுக்கு கதர் நூல் நூற்போர், நெய்வோர் மற்றும் கைவினைஞர்கள் ஆகியோருக்கு நலத் திட்டம் என்ற வகையில், அவர்கள் ஊதியத்திலிருந்து 10 விழுக்காடு தொகையினைப் பிடித்தம் செய்து, அதற்கு ஈடாக 10 விழுக்காடு வாரியமும் தொகையினை நல நிதியாக வழங்குவது தொழிலாளர்களுக்கு ஊக்கம் அளிக்கும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாரியத்தின் அலகுகள் மூலம் உண்ணா எண்ணெய் மற்றும் சோப்பு தயார் செய்து விற்கப்படுவது, வரவேற்கத்தக்கது.

மலைவாழ் பழங்குடியினருக்குத் தேனீ வளர்ப்பு நல்ல தொழில். தேனைப் பதப்படுத்தி வருடம் முழுவதும் வாரியத்தின் மூலம் விற்பது, பொதுமக்களுக்கு வருடம் முழுவதும் தரமான சுத்தமானத் தேன் கிடைக்கச் செய்வது மிகவும் நல்லது.

அதேபோல, தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியம், நலிவுற்ற ஏழை பனைப்பொருள் உற்பத்தித் தொழிலாளர்களுக்கு, அவர்கள் பொருளாதார நிலையை உயர்த்தப் பெரிதும் பயன்படுகிறது. பதநீர், பனங்கற்கண்டு, பனஞ்சீனி ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன. எங்கள் ஊருக்கு அருகில், மூதறிஞர் இராஜாஜி அவர்களால் தொடங்கப்பட்ட புதுப்பாளையம் காந்தி ஆசிரமத்தில் கூடை முடைதல், அவர்களே உற்பத்தி செய்யும் நறுமணத்துடன்கூடிய ஊதுவத்திக்கு பெட்டி செய்தல் போன்றவற்றிற்கு, பனைப்

பொருட்களைப் பயன்படுத்தி, அந்த காந்தி ஆசிரமம் மிக நல்ல முறையிலே இயங்கி வருகிறது. அந்த ஆசிரமத்திற்கு மூலதனம், மானியம் ஆகியவை, மும்பைக் கதர் கிராமத் தொழில் ஆணையத்திடமிருந்து நேரடியாகப் பெறப்படுகிறது.

இந்த நேரத்திலே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுப. தங்கவேலன் அவர்கள், மீன் பிடிக்கச் செல்பவர்கள் திசை மாறி இலங்கை பகுதியிலே சென்றுவிட்டால், அந்தக் குடும்பத்திற்கு நாளொன்றுக்கு ஐம்பது ரூபாய் என்று வழங்குவதை நூறு ரூபாயாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

*பிற்பகல் 12-40*

இந்தநேரத்திலே என்னுடைய தொகுதிக்குத் தேவையான சில தேவைகளை தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். என்னுடைய திருச்செங்கோடு தொகுதியிலே, திருச்செங்கோடு நகராட்சிப் பகுதிக்கு வழங்கப்பட்டு வரும் குடிநீர் 6 நாட்களுக்கு ஒரு முறை, 7 நாட்களுக்கு ஒரு முறை என்றுதான் வழங்கப்படுகிறது. ஆகையால் இது என்னால் அரசின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தற்போது சுமார் 21 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய பொன்விழா அபிவிருத்தித் திட்டம், நகராட்சி மக்களுக்கு மட்டும் பயன்படுகிற வகையிலே அனுமதி அளித்துள்ளதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

வருடத்திற்கு ஒருமுறை தான் நான் பேசுகிறேன். குமாரபாளையம் நகராட்சி அபிவிருத்தித் திட்டம், குமாரபாளையம், பள்ளிப்பாளையம் போன்ற நகரங்களில் செயல்படுத்த உள்ள தேசிய நதிநீர் சுத்திகரிப்புத் திட்டங்களை விரைந்து செயல்படுத்த அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிப்பாளையம் சிறப்பு நிலைப் பேரூராட்சியில் மூன்றில் ஒரு பங்கு சுமார் 20,000 மக்களுக்கு கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக காவிரி நதி சில மீட்டர் தொலைவில் இருந்தும்கூட பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுவதில்லை.

என்னுடைய திருச்செங்கோடு நகரிலே இயங்கி வந்த மோட்டார் வாகனப் போக்குவரத்துப் பகுதி அலுவலகம் நிலையுயர்த்தப்பட்டு வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாக மாற்றப்பட்டதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை



அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)* நான் வருடத்திற்கு ஒருமுறைதான் பேசுகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. ஆசையன்):** நீங்கள் உரையை முடித்துக்கொண்டு, நன்றி சொல்லுங்கள்.

**திரு. தி.ப. ஆறுமுகம்:** இந்த அளவுக்கு பேச அனுமதி அளித்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. ஆசையன்):** திரு. வெ. சின்னய்யா.

**திரு. வெ. சின்னய்யா:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையிலே பேசுகின்ற வாய்ப்பை அளித்தமைக்கு நன்றி கூறி, எனது உரையைத் தொடங்குகின்றேன். இந்தியாவின் மிகத் தொன்மையான துறைகளில் மீன்வளத் துறையும் ஒன்று. அந்த மீன்வளத் துறை பன்னாட்டு நிறுவனங்களோடு போட்டிபோடுகிற அளவில் மீன் உற்பத்தி செய்து அந்நியச் செலாவணியும் பெறுவதற்கு தமிழக அரசு பெருமுயற்சி எடுக்க வேண்டுகிறேன். பன்னாட்டு நிறுவனங்கள் அதிக அளவிலே பதப்படுத்திய மீன்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் இந்தத் துறையை நாம் முன்னேற்றம் அடையச் செய்ய முடியும். இந்தத் துறையிலே வேலைவாய்ப்பு அளிக்கும்போது பெண்களுக்கு முன்னுரிமை அளித்து பதப்படுத்தும் தொழிலில் ஈடுபடுத்தி அவர்களுடைய நிலைமையை உயர்த்த வேண்டும். இந்தியாவின் மொத்த கடல் பொருள் ஏற்றுமதியில் 1,000 கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி தமிழ்நாட்டிலிருந்து செய்யப்படுகிறது என்றாலும், வருகிற ஆண்டுகளில் அதிகமான பல ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்க்கு மீன் ஏற்றுமதி செய்து தமிழகத்தின் நிதிநிலையை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்கிற நேரத்திலே அவர்களுடைய வீடுகளில் தொலைத் தொடர்பு வசதி இல்லாமல் இருப்பார்கள். ஆகவே அவர்களுக்குத் தொலைத் தொடர்பு வசதி செய்து கொடுக்க வேண்டுகிறேன்.

பாக்ஜலசந்தியில் மீன்பிடிக்கச் செல்கிறபோது தமிழக மீனவர்கள்மீது இலங்கை கடற்படை மற்றும் விடுதலைப் புலிகளும் சேர்ந்து தாக்குதல் நடத்துகின்ற நேரத்திலே தமிழக அரசு உடன் அதைத் தடுத்து நிறுத்தி அவர்களைப் பாதுகாப்பதற்குத் தொடர்ந்து பாடுபட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த கால ஆட்சியிலே, மத்தியிலே இருந்த ஆட்சியிலே இலங்கைக்கு மீனவர்கள் கடத்திச் செல்லப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக தமிழகத்திலே இருந்து 170 மீனவர்களும், 8 படகுகளும் கடத்திச் செல்லப்பட்ட நேரத்திலே, தமிழகத்தினுடைய அமைச்சர் அவர்களும், தமிழக முதல்வர் அவர்களும், விரைவிலே அவர்களை அழைத்து வர வேண்டுமென்று சொன்னதைக் கருத்திலே கொண்டு செயல்பட வேண்டுகிறேன்.

*பிற்பகல் 12-45*

மீனவர்களுக்காகக் கட்டப்பட்டுள்ள வீடுகள் உள்ள பகுதியில், தெரு விளக்குகளை சோடியம் விளக்குகளாக அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மீனவர்களுக்கும் மீன் இறங்கு தளங்களைப் பயன்படுத்துபவர்களுக்கும் இன்ஷூரன்ஸ் திட்டத்தை அமல்படுத்த வேண்டும்.

இராமேஸ்வரத்தில், மீன்பிடி துறைமுகத்தைக் கட்ட, உடனடியாக மத்திய அரசு நிதி ஒதுக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் மீன் வளர்ப்புத் துறையின் மூலமாக, இப்போது கிராமங்களிலே மீன் உற்பத்தி செய்யப்படுகிறது என்றாலும்கூட, அது பல நேரங்களில், கிராமங்களுக்கும், ஊராட்சிகளுக்கும் பயன்படாமல், தனியார்கள் ஆக்கிரமிப்பு செய்துகொள்கிறார்கள். அதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய புதுக்கோட்டை மாவட்டத்தில், மணல்மேல்குடி, கோட்டைப்பட்டினம், மீமிசல் போன்ற இடங்களில் மீன் வளர்ச்சிக் கழகத்தின் அலுவலகம் ஏற்படுத்தி, அதன்மூலம் அங்காடிகளை அமைத்துக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவது, கதர்த் துறையைப் பொறுத்தவரையில், இப்போது மானியம் மிகக் குறைவாக அளிக்கப்பட்டு வருகிறது. அதிக மானியம் வழங்கப்படவில்லை. ஆகவே, மத்திய அரசோடு தொடர்பு கொண்டு, மானியத்தை அதிகம் பெற்று, 6 மாத காலம் கதருக்குத் தள்ளுபடி தர வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், கிராமத்தில் இருக்கிற இளைஞர்கள், பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கிற வகையில், 'டிரைசெம்' பயிற்சி ஒன்றியத்தால் நடத்தப்பட்டது. அதை இப்போது நிறுத்தியிருக்கிறார்கள். அதை மீண்டும்



நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் இரண்டு கோரிக்கைகளைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

ஒன்று, இப்போது, கன்னியாகுமரி மாவட்டத்தில் பெருந்தலைவர் காமராஜருக்கு மணிமண்டபம் கட்டுவதைப்போல, அவருடைய குரு பிறந்த திருமயத்தில் தீரர் சத்தியமூர்த்தி நினைவாக மணிமண்டபம் ஒன்றைத் தமிழக அரசு கட்டித்தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதற்கு நமது முன்னாள் மத்திய நிதி அமைச்சர் அவர்கள் இரண்டு இலட்சம் ரூபாய் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அதைச் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

இரண்டாவதாக, பிரேமானந்தசாமி என்பவர், புதுக்கோட்டை மாவட்டத்தில் பிரசித்தி பெற்று விளங்கியவர். அவர் வருமான வரி கட்டவில்லை. *(மணியடிக்கப்பெற்றது)* அவரிடத்திலே பலபேர் பினாமியாக பணம் பெற்று, தொழில் நடத்தி வருகிறார்கள். அவர்களை விசாரணை செய்து, நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக என்னுடைய பகுதியிலே சலவைத் தொழிலாளர்களை அரிசன வகுப்பிலே சேர்க்க வேண்டுமென்று கோரிக்கை கொடுத்திருக்கிறார்கள். அதையும் ஏற்று ஆவன செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுமார் 10 வருடங்களாக, பொன்னமராவதி, பாப்பாயி அரசு மருத்துவமனையில் பெண் மருத்துவர்கள் இல்லை என்ற குறை இருந்தது குறித்து இரண்டு சட்டமன்றத் தொடரிலும் நான் தெரிவித்திருக்கிறேன். ஆகவே மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. ஆசையன்):** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. வெ. சின்னய்யா:** மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், அங்கே பெண் மருத்துவர்களை நியமனம் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காவிரித் தண்ணீரை, அரிமளம், திருமயம், பொன்னமராவதி ஆகிய ஊர்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டு, நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

[1999 மே 5

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. ஆசையன்):** திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1999-2000ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை எண் 26, 21—கதர் கிராமத் தொழில்கள் மற்றும் மீனளம் குறித்த மானியக் கோரிக்கைகள்மீது, இந்திய தேசிய லீக் கட்சியின் சார்பாக, இம்மாமன்றத்தில் எனது கருத்துக்களை எடுத்துரைக்க முன்வருகின்றேன்.

நாடு சுதந்திரம் பெற உழைத்த உத்தமர், அண்ணல் மகாத்மா காந்தியடிகள் இராட்டை சுற்றி, பஞ்சை நூலாக்கிய பெருமைமிகு தொழில் சம்பந்தமாக உருவாக்கப்பட்ட துறைதான் இந்தக் கதர்த் துறை என்பதை நான் எடுத்து வைக்க முன்வருகிறேன். நாடு முன்னேற கிராமங்கள் முன்னேற்றம் காண வேண்டும். கிராம மக்கள் செழிப்படைய வேண்டும். அதன் அடிப்படையில் கிராமங்கள் வளர வேண்டும் என்பது அண்ணல் மகாத்மாவின் வேட்கை. அந்த அடிப்படையில்தான் இன்று நமது மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சோதனையிலும் சாதனைகளைப் படைத்து, சமத்துவபுரம் கண்ட சரித்திர நாயகனாக, பார்போற்றும் தலைவனாக, தமிழகத்திலே, நல்லாட்சி நடத்தி, ஏழையெளிய, பிற்படுத்தப்பட்ட மக்களின் அன்பையும் பாராட்டையும் பெற்று வருகிறார். 'செய்வதைச் சொல்வோம், சொல்வதைச் செய்வோம்' என்ற சொல்லுக்குச் சொந்தக்காரரான கலைஞர் நடத்திவரும் அமைச்சரவையிலே, கதர்த் துறையிலே அமைச்சராகப் பொறுப்பேற்று செயலாற்றி வரும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கடந்தகால ஆட்சியிலே ஏற்பட்ட தொய்வுகளையெல்லாம் கண்டறிந்து, இத்துறையை 3 ஆண்டு காலத்திலே சிறப்பாக செயலாற்றி, இலாபத்தில் முன்னேற்றத்தைக் கண்டு, அதிலே மாண்புமிகு முதல்வரின் அன்பையும் பாராட்டையும் பெற்றுள்ளார்கள். கதர்த் துறையின் மூலம் தயாரிக்கப்படும் பட்டு சேலை முதல், வேட்டி சர்ட் துணிகள் வரை இன்று ஏற்றுமதி செய்யும் அளவிற்குத் தரமுள்ளதாக நல்ல டிசைன்களில் கண்கவர் வண்ணங்களில் எண்ணத்தைக் கொள்ளைகொள்ளும் வனப்புமிகு டிசைன்களில் உருவாக்கப்பட்டு விற்பனையில் முன்னணியில் உள்ளன.

கிராமங்களில், இராட்டை நூற்பவர்களுக்குத் தினக்கூலி ரூ. 28 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாக அறிகின்றேன். Minimum Wages Act-படி, ஒரு தொழிலாளிக்கு நாள் ஒன்றுக்கு கூலியாக 40 ரூபாய் கொடுக்க வேண்டும் என நிர்ணயம் செய்துள்ளதாக அறிகின்றேன்.



1999 மே 5] [திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்]

சாதாரணமாக தொழில் செய்யும் கூலித் தொழிலாளி, கட்டடம் கட்டுவோர், ஆசாரி வேலை, கை வேலை, சித்தாள் என்று சொல்லக்கூடிய ஒரு கூலித் தொழிலாளிக்கு நாள் ஒன்றுக்கு 40 ரூபாய் சம்பளம் கொடுக்க வேண்டும் என்று கோலப்பன் கமிட்டி அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதாகத் தெரிகிறது. இதனை அரசு கவனத்தில் கொண்டு, இராட்டை சுற்றும் தொழிலாளிக்குக் கூலி உயர்வு செய்து, 40 ரூபாய் வழங்க முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*பிற்பகல் 12-50*

மலைப் பகுதியில் தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. சேலம் மாவட்டம், ஏற்காடு தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட வேண்டுமென 1997இல் கோரிக்கை வைத்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முதல்வர் அவர்களிடத்திலே கேட்டு ரூபாய் ஏழரை இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து கொடுக்கப்பட்டு, இன்றையதினம் அங்கே கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அந்தக் கட்டடத் திறப்பு விழா விரைவிலே நடைபெற வேண்டும். மலைவாழ் மக்களுக்கு மேலும் நல்ல பல திட்டங்களை உருவாக்குவதற்கு அரசு ஆவன செய்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சமீபகாலத்தில் தேனீக்கள் வைரஸ் கிருமிகளால் நோய்வாய்ப்பட்டுள்ளன. இதனால் தேனீக்கள் அழிந்து விவசாயிகளுக்குப் பெரும் நஷ்டம் ஏற்பட்டு வருகின்றது. இதனை மேம்படுத்த அரசு பூச்சி எதிர்ப்புத் திறன் பெற்ற தேனீக்களைக் கண்டறிவதற்குரிய நடவடிக்கைகளை துறையின் மூலம் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆடுகளுக்கு நீல் நாக்கு நோய் ஏற்படுவது போல் தேனீக்களுக்கும் பாதிக்கும் நிலை உருவாகியுள்ளது. சேலம் மாவட்டம், ஏற்காடு, கொல்லிமலை, அருநூத்து மலை, பச்சைமலை, கல்வராயன் மலை போன்ற பகுதிகளில் அரசு உடனடியாக கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊட்டி பகுதியில் மசினக்குடி மலைவாழ் மக்கள் வாழும் பகுதிக்கு மதிப்பீட்டுக் குழுவின் சார்பில் சென்றபோது, அங்கு நாங்கள் சென்று பார்த்தோம். மலைவாழ் மக்கள் தேனீக்களைப் பிடிக்கச் செல்லுகின்றனர். அதையே தங்களது தொழிலாகச் செய்து வருகின்றனர். அங்கு அவர்களுக்கு சில சிரமங்கள் இருப்பதை எங்களால்

தெரிந்துகொள்ள முடிந்தது. காட்டினுள் மரத்திலும், கிளைகளிலும், பாறைகளிலும் கட்டியுள்ள தேன்கூடுகளை எடுக்கச் செல்லும்போது வனத் துறையினர் தடுக்கின்றனர் என்றும், இதனால் எங்கள் தொழில் பாதிக்கப்படுகிறது என்றும், தனியாருக்குச் சொந்தமான எஸ்டேட் காடுகளில் நுழைய முடியாது, இருந்தாலும் தேன் எடுத்துக் கொடுக்க எங்களை கூலிக்கு அழைக்கிறார்கள், கூலி வாங்கிக் கொண்டு நாங்கள் அதை எடுத்துக்கொடுத்துவிட்டு வருகின்றோம் என்றும் தெரிவித்தார்கள். ஆனால், இயற்கையாக உள்ள இடங்களில் எடுப்பதற்கு வனத் துறையினர் கட்டுப்பாடு வைக்கிறார்கள். இதற்கு அரசு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பனைப் பொருள்களுக்கு ஒரு வாரியமே உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கும் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. தமிழகத்தில் இச்சங்கங்களுக்குத் தேர்தல்கள் நடைபெற்றுள்ளன. சிலவற்றிற்கு நடைபெறவில்லை. எனது தொகுதியிலும் கரூர் மாவட்டத்தில் 50 சங்கங்கள் உள்ளன. எனது தொகுதியில் மட்டும் 37 பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இச்சங்கங்கள் மூலம் பனைப் பொருட்கள், கருப்பட்டி, பனைவெல்லம், பனஞ்சர்க்கரை, பனங்கற்கண்டு ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன. அவை மிகவும் குளிர்ச்சியான பொருட்கள் ஆகும். நாட்டு மருந்தாகக்கூட உபயோகப்படுத்தப்படுகின்றன. பனைமரத்திலிருந்து பனை நார், ஓலை நார், கூடை, தொப்பி மற்றும் விசிறி போன்ற அழகு சதானப் பொருட்களும், பிரஷ், கயிறு முதலியனவும் தயார் செய்யப்படுகின்றன. கிராமப்புறங்களில் இதனைத் தொழிலாக செய்கிறார்கள். நாளுக்கு நாள், இந்தத் தொழில் நலிவடையும் நிலையில் உள்ளது. இதனை நிர்வகிக்கும் அலுவலர்கள் கிராமங்களில் இது மேலும் சிறப்பாகச் செயல்பட ஊக்குவிக்க வேண்டும்.

கலைஞர் அரசு பனை ஏறும் தொழிலாளர்களுக்கு நல்ல திட்டங்களையெல்லாம் வகுத்துக் கொடுத்துள்ளது. அவர்களுக்குக் கூலி உயர்வு, குடியிருக்க வீட்டு வசதி, மற்றும் கடன் வசதி போன்றவற்றையெல்லாம் மேலும் சிறப்பாகச் செய்து கொடுக்க வேண்டும். படித்த இளைஞர்கள் பனைமரம் ஏற முடியாத சூழ்நிலையில் இத்தொழில் நசுக்கப்பட்டு, தொழில் ஒடுக்கப்பட்ட நிலையில் இருக்கிறது. மத்திய மாநில அரசின் உதவியோடு ஆங்காங்கு உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பண உதவியும், பொருள் உதவியும் வழங்கி கிராமத் தொழில்கள் முன்னேற்றம் அடைய ஆவன செய்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*



தற்போது சிறப்பு அலுவலர்களால் இவ்வாரியம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மக்கள் பிரதிநிதிகள் இதில் இடம் பெற்று அரசின் திட்டங்களை முனைப்போடு செயல்படுத்த முன்வந்தால், இத்தொழில் தமிழகமெங்கும் சிறந்து விளங்கும். பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் பயன்பெற வாய்ப்பு நிறைய இருக்கிறது. கடந்த மானியக் கோரிக்கையின் போதும் எனது கருத்துக்களைத் தெரிவித்தேன். கடந்த கால ஆட்சியில் இத்துறை பனைப் பொருள் வாரியம் என்று அமைச்சர் தலைமையில் செயல்பட்டு, அதற்கு உதவித் தலைவர் ஒருவரை நியமித்து அதனால் அரசுக்கு ஏராளமான இழப்பு ஏற்பட்டது என்பதை அரசு அறியும். தற்போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பின் அதனை ஈடுசெய்து திறம்பட நடத்தி இலாபம் ஈட்டிக் கொடுத்திருக்கின்றார்கள். இத்தொழில் ஒரு வியாபார கண்ணோட்டம் உடையது. நல்ல ஒரு வியாபாரியாக இருப்பவரை இத்துறையில் பொறுப்பு வகித்து செயல்பட ஏற்பாடு செய்தால் இதனை அபிவிருத்தி செய்திட. கிராமிய தொழில் முன்னேற்றம் அடைய வாய்ப்புகள் ஏராளம் உள்ளன. *(மணியடிக்கப்பெற்றது)* ஒரே ஒரு நிமிடத்தில் பேசி முடித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று கிராமத் தொழில்கள், சிறு தொழில்கள், கைவினைப் பொருட்கள், நார் மூலம், ஓலைகள் மூலம் செய்யும் தொழில்கள் ஏராளம் உள்ளன. இதைக் குடிசைத் தொழிலாக—காட்டேஜ் இண்டஸ்ட்ரீஸ் என்ற அளவில், மாவட்ட தொழில் மையம் மூலம் கேண்டில்கள் செய்யும் தொழிலையும் அறிவித்து தொழில் முனைவோரை ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மெழுகினால் மெழுகுவர்த்தி-கேண்டில்ஸ், அழகு பொம்மைகள் செய்கிறார்கள். இதனை சிறு தொழில்கள் என்று அறிவித்ததனால் அத்தொழில் செய்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதற்கு மூலப் பொருள் பாரஃபின் வேக்ஸ். இது கோட்டா மூலம் முன்பு வழங்கப்பட்டு வந்தது. கிராமத் தொழில்கள் செய்வதற்கு பிரதி மாதமும் அரசு கோட்டா முறையில் ஒதுக்கீடு செய்து கொடுத்து வந்தது. தற்போது, அதனை ஓப்பன் மார்கெட்டில் விலைக்கு விற்றபடியால் கிலோ 20 ரூபாய்க்கு கிடைத்த வாக்ஸ் 50 ரூபாயாக விற்கப்பட்டு வருகின்றது. *(மணியடிக்கப்பெற்றது)* எனவே அதை ஒரு குடிசைத் தொழிலாக மாற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

[திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்] [1999 மே 5

இதோடு, பவளவிழா நாயகன் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்பணம் இன்றி, தமிழக அரசின் அனைத்துத் துறை அலுவலகங்களுக்கும் தேவையான பொருட்களை விநியோகம் செய்ய கூட்டுறவுச் சங்கங்களுக்கு நேரடி கொள்முதல் செய்ய முன்னுரிமை வழங்க வேண்டும். அதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முன்னுரிமை வழங்கி தகுந்த ஆணை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

*பிற்பகல் 12-55*

அடுத்து மீனளம். அமைச்சருடைய தொகுதியில் இருக்கின்ற மீனவர்களுடைய கோரிக்கை. விசைப் படகுகளுக்கு வழங்கப்படும் டீசல் போதவில்லை, அளவு போதவில்லை என்று வெகுகாலமாக போராடிக் கொண்டுவருகின்றார்கள். இதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வதாகக் கூறியுள்ளார்கள். அதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) ஒரு நிமிடத்திலே பேசி முடித்துக்கொள்கிறேன்.

நாகைத் தொகுதியிலே உள்ள மீனவ கிராமப் பகுதிகளுக்கு காலனி வீடுகள் கட்டுவதற்கு பட்டா கிடைப்பது அரிதாக இருக்கிறது. அதையும் நீங்கள் செய்து கொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். நாகூர் பட்டினச்சேரி என்ற கிராமம் கடல் அரிப்பால் பாதிக்கப்பட்டு இருக்கிறது. 25 வீடுகளுக்கு முழுவதும் சேதம் ஏற்பட்டுவிட்டது. அதற்கு மேலும் அரிப்பு ஏற்படாமல் பாதுகாப்பு ஏற்பாடு செய்து தரவும், நாகை செந்தூர் மீனவர் கிராமம் அரிக்கப்பட்டு அழிந்து, இருக்கிறது. அதையும் பாதுகாத்துத் தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. ஆசையன்):** நன்றி சொல்லி உரையை முடித்துக்கொள்ளுங்கள், நேரம் இல்லை. திரு. மு. பன்னீர் செல்வம்

**திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று நடைபெறும் மீன் வளத் துறை மற்றும் கதர் மானியக் கோரிக்கையில் கலந்துகொண்டு கருத்துக்களை வழங்குவதற்கு வாய்ப்புத் தந்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சீர்காழி தொகுதி, சீர்காழி நகரிலே தமிழ் இசையை வளர்த்த தமிழ் இசை மூவேந்தர்கள், முத்துத் தாண்டவ தீட்சிதர், அருணாசல



1999 மே 5] [திரு. மு. பன்னீர்செல்வம்]

கவிராயர், மாரிமுத்தா பிள்ளை ஆகிய தமிழ் இசை மூவேந்தர்களுக்கு சிலை அமைத்து, மணி மண்டபம் அமைத்துக் கொடுக்க நிதிநிலை அறிக்கையிலே நிதியை ஒதுக்கித் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும் அதற்கு உறுதுணையாக இருந்த தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் சீர்காழி தொகுதி மக்களின் சார்பாக என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய சீர்காழி தொகுதியில் கடலோரமாக இருக்கக்கூடிய சுமார் 12-க்கும் மேற்பட்ட மீனவ கிராமங்கள் உள்ளன. அனைத்து மீனவ கிராமங்களிலும் மீன்பிடி தொழிலை நம்பி மீனவர்கள் இருக்கிறார்கள். இன்றைக்கு வழங்கப்பட்டு இருக்கக்கூடிய, மீன்வளத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பிலே பயனுள்ள திட்டங்கள் நிறைய அறிவித்திருக்கிறார்கள். குறிப்பாகச் சொன்னால், மீனவர்கள் கடலுக்குச் செல்கிறபோது ஆபத்து காலங்களிலே அல்லது வெள்ளக் காலங்களிலே கடலிலே மாட்டிக் கொண்டால் அவர்களுக்கு உதவுகின்ற வகையிலே வி.எச்.எப். என்ற ஒரு கருவியை 1,500 மீன்பிடி விசைப் படகுகளுக்கு 25 சதவிகித மானியத்திலே வழங்கியிருப்பது மிகவும் பாராட்டிற்குரியது.

அதேபோன்று, மீனவர்களுக்கு உதவுகிற வகையிலே மீன்களை அறிகிற அளவிலே, கடலுக்குச் செல்கிறபோது மீன்களை கண்டு அறிவதற்காக வழங்கப்படுகிற எதிரொலிப்பான் என்று சொல்லக்கூடிய Echo Sounder என்ற கருவியையும் இன்றைக்கு 25 சதவிகித மானியத்தில் வழங்குவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. கொள்கை விளக்கக் குறிப்பேட்டிலே இருக்கிறது. அதுவும் பாராட்டிற்குரியது.

அதேபோல கண்ணாடி நாரிழை கட்டுமரங்கள் 50 சதவிகித மானியத்திலே 100 நபர்களுக்கு வழங்கப்பட இருப்பதும் மிகவும் சிறப்பான திட்டம்

அதேபோன்று மீனவ கிராமங்களிலே இருக்கக்கூடிய சாலைகளை இணைப்பதற்காக வேண்டி 1996-97 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அன்றைக்கு அறிவித்தார்கள். ஆனால், அந்தத் திட்டம் இடையிலே நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. என்ன காரணம் என்று எங்களுக்குத் தெரியவில்லை. இந்த ஆண்டிலும் கொள்கை விளக்கக் குறிப்பேட்டிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். கண்டிப்பாக மீனவ கிராமங்களுக்கு சாலை அமைத்துக் கொடுத்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்ற காரணத்தினால் சிறப்பாக இந்த ஆண்டிலே எடுத்துக் கொடுத்து, செய்து கொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல சோடியம் விளக்குகள் அமைத்தல், மீன்இறங்கு தளங்கள் அமைத்தல் போன்ற திட்டங்கள் எல்லாம் தலைவர் கலைஞர் ஆட்சியில் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன. எல்லாவற்றையும்விட மிகச் சிறப்பான திட்டம் சிங்காரவேலர் நினைவு மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டம். ஆண்டுக்காண்டு பல்லாயிரக்கணக்கான வீடுகள் கட்டப்படுகின்றன. ஒரு வீட்டுக்கு ஆகக்கூடிய செலவுகூட ரூபாய் 37,000 ஆகும். என்னுடைய தொகுதியிலே கடந்த 2 ஆண்டுகளாக என்ன காரணத்தினாலோ வீடுகள் வழங்கப்படவில்லை. எனவே, இந்த ஆண்டு ஒதுக்கீட்டில் குறைந்தபட்சம் 500 வீடுகளாவது என்னுடைய தொகுதிக்குக் கட்டித்தர வேண்டுகிறேன்.

பழையாறு மீன்பிடி துறைமுகத்தில் சுமார் 300 மீன்பிடி படகுகள் உள்ளன. ஆனால், அதன் முகத்துவாரத்தில் மணமேடு குவிந்து, படகுகள் மீன்பிடி தொழிலுக்குச் செல்ல முடியாமல் மீனவர்கள் சிரமப்படுகிறார்கள். ஆகவே, நிரந்தரமாக மணமேடுகள் குவியாத வண்ணம் ஒரு திட்டத்தைத் தயாரித்து, அந்தப் படகுகள் செல்வதற்கு வழி செய்ய வேண்டுகிறேன். அந்த இடத்தை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், நாகை மாவட்டத்தினுடைய மாவட்ட ஆட்சியர் அவர்களும், மீன்வளத் துறை அதிகாரிகளும் வந்து பார்வையிட்டார்கள். எனவே, நிரந்தரமாக மணமேடுகள் குவியாத வண்ணம் சிறப்பான திட்டத்தை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-00*

அதேபோன்று, பழையாறு மீன்பிடித் துறைமுகத்தில் இன்றைக்கு மீன் உலர்த்தும் மேடை இல்லாததால் அவசியம் மீன் உலர்த்தும் மேடை ஒன்றைக் கட்டித்தர வேண்டுகிறேன்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மூலமாக 1,000 மீனவர்களுக்குக் குடியிருப்பதற்காகப் பட்டா வேண்டி மனு செய்து இன்றைக்கும் நிலுவையிலே இருக்கிறது. அந்த இடம் வனத் துறைக்குச் சொந்தமான இடம் என்ற காரணத்தினாலே அது வழங்கப்படாமல் இருப்பதாக அறிகிறேன். எனவே, அதையும் உடனடியாகச் செய்து கொடுக்க வேண்டுகிறேன்.

அதுமட்டுமல்லாமல்,.....



**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. ஆசையன்):** சீக்கிரம் உங்கள் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. மு. பன்னீர்செல்வம்:** சீக்கிரம் பேச்சை முடித்துக்கொள்கிறேன். எங்கள் பகுதி மக்களெல்லாம் விவசாயக் கூலி வேலையை நம்பி வாழ்கிறார்கள். கதர்த் துறையின் மூலமாக கிராமங்களிலே தொழில்களை அபிவிருத்தி செய்கிற நோக்கத்திலே மகளிருக்கு பாய் நெசவு அங்கே ஆரம்பிக்கலாம். பாய் நெசவுத் தொழில், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக ஆரம்பித்தால் நன்றாக இருக்கும். அதேபோன்று அங்கே ஒரு மையம் இருக்கிறது. சீர்காழித் தொகுதியில் குறைந்தபட்சம் 4 மையங்களிலாவது கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் பாய் நெசவுத் தொழிலை ஆரம்பித்து செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டு என் உரையை முடித்துகொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. ஆசையன்):** அடுத்து, திரு. எஸ்.எஸ். மணி நாடார்.

**திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மீன்வளத் துறையில் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்ததற்கு நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன்.

தமிழகத்திலே கடலோரத்திலே வாழுகின்ற மக்கள் அங்கே மழைக் காலங்களிலே, சுழல், கடல் கொந்தளிப்பு வருகின்ற நேரத்திலே பல வீடுகளெல்லாம் ஆபத்தில் மாட்டிக்கொண்டு மக்கள் தவிக்கின்ற நேரத்திலே பரிதாப நிலைக்குள்ளாகின்றார்கள். அவர்களுக்கு எல்லாம், கரையோரத்திலே வாழ்கின்றவர்களுக்கு தடுப்புச் சுவர் கட்டித் தருவதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடலோரப் பகுதியில் மணல் பாறை என்று பாறைகள் வளர்ந்து கொண்டிருக்கின்றன. மீனவர்கள் இரவு இரண்டு மணிக்குக் கடலுக்குச் செல்கின்றார்கள். மறுநாள் காலை 11-00 மணிக்குத் திரும்பி வருகின்றார்கள்; வருகின்றவர்கள் நல்ல முறையிலே அவர்கள் போகின்ற படகுகளைக் கரைக்குக் கொண்டுவர முடியவில்லை. காரணம், மணல் பாறைகள் வளர்ந்திருக்கின்ற காரணத்தால் ரொம்ப சிரமப்படுகின்றார்கள்; அவஸ்தைப்படுகின்றார்கள். அந்த மணல் பாறைகளெல்லாம் அங்கிருந்து அப்புறப்படுத்துவதற்கு அரசும் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் முன்வர வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

மீனவர்கள் வாழுகின்ற பகுதியிலே குறிப்பாக என்னுடைய பெரியதாழை என்கின்ற ஊரிலே மழைக் காலங்களிலே சுழல் காற்று வீசினால் அவர்கள் வெளியே போக முடியாத, கடலுக்கும் போக முடியாத சூழ்நிலைகள் உருவாகின்றன. ஆகவே, தூண்டில் பாலங்கள் கட்டுவதற்கு, அமைத்துத் தருவதற்கு அரசு முன்வர வேண்டும். ஏற்கெனவே அங்கு ஆய்வுகளெல்லாம் செய்தார்கள். இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன. ஆய்வு செய்து. இதுவரைக்கும் எந்தப் பதிலும் தரவில்லை. நிச்சயமாக இந்தத் தூண்டில் பாலங்களை, கடலோரப் பகுதிகளிலே மீனவர்களுக்குக் கட்டித்தர வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

மீனவர்கள், ஒரு வழிச் சாலைபோல, ஆண்கள்தான் பணிகள் செய்கின்றார்கள். அவர்களுடைய வருமானத்தில்தான் குடும்பங்களை நடத்தி வருகின்றனர். ஆகவே, பெண்களெல்லாம் வீட்டிலே, வயதுக்கு வந்த பிள்ளைகளும், பெரிய பெண்களும் நிறையபேர் எந்த வேலையும் இல்லாமல் வீட்டிலேயே இருக்கின்றார்கள். அவர்களையெல்லாம் இந்த அரசு ஒரு வேலையிலே அமர்த்தி, அவர்களுக்கும் ஏதாவது வருமானம் வருவதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அவர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு நல்ல திட்டங்களை இந்த அரசு தந்திருக்கின்றது. ஆனால், ஏழை எளிய மக்களுக்கெல்லாம் அந்த வீடுகள் எல்லோருக்கும் சமமாகப் போய் கிடைக்கின்றதா என்றால் இல்லை. காரணம், அங்கே இருக்கின்ற அரசியல் நண்பர்களும், மற்றவர்களும், சிலபேர்களுக்கு வீடுகள் கிடைக்காத அளவுக்கு ஈடுபட்டு, ஏழைகள் வீடில்லாதவர்களெல்லாம் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். சமமாக வீடு கிடைக்கவில்லை. ஆகவே, நல்ல நோக்கத்தோடு அவர்களை அரசு பார்க்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன் எப்படி இருந்ததோ அதைப்போலவே தெருக்களெல்லாம், ரோடு இல்லாமல் அந்த மணலிலேதான் மக்கள் இன்னும் நடந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கெல்லாம் சாலைகளை அமைத்துத் தர வேண்டும். சாலைகளை அமைத்துத் தந்து செம்மைப்படுத்தித் தந்தால் அவர்களுக்கு வசதியாக இருக்கும் என்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)



இரவு இரண்டு மணிக்கு கடலுக்குப் போகின்றவர்கள் இருட்டிலே அவஸ்தைப்படுகின்றார்கள். அவர்களுக்கெல்லாம் (மணியடிக்கப்பெற்றது) நல்ல சோடியம் லைட்டுகளைப் போட்டு அவர்களுக்குப் பாதுகாப்பு தர வேண்டும் என்று சொல்லி,...

பிற்பகல் 1-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதான் உங்களுக்கு. ஒப்பந்தப்படி ஓர் உறுப்பினருக்கு 3 நிமிடங்கள்தான், உட்காருங்கள். அடுத்து திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆம் ஆண்டிற்கான மீன்வளம் மற்றும் கதர்க் கிராமத் தொழில்கள் மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பு தந்தமைக்காக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மிகவும் தொன்மை வாய்ந்த துறைகளிலே ஒன்று மீன்வளத் துறை ஆகும். இந்தியாவின் மொத்த கடல்பொருள் ஏற்றுமதியில் ஏறக்குறைய 25 சதவீதம் தமிழகம் ஏற்றுமதி செய்கிறது. தமிழகத்தைப் பொறுத்தமட்டிலே ஏறக்குறைய 442 கடலோர மீனவக் கிராமங்கள் இருக்கின்றன. இந்த 442 மீனவ கிராமங்கள் ஏறக்குறைய ஆண்டிற்கு ஆயிரம் கோடி ரூபாயை வருவாயாக ஈட்டித் தருகிறது. அந்த ஆயிரம் கோடி ரூபாயை ஈட்டித் தருகின்ற மீனவ மக்களுக்கும், மீனவ கிராமங்களுக்கும் ஓரளவிற்குப் பணிகளைச் செய்திருந்தாலும் இன்னும் முழுமையான அளவிலே இந்தப் பணிகளை நிறைவேற்றித் தர வேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன்.

அதோடு, ஒவ்வொரு ஆண்டும் 4, 5 மாத காலங்களிலே, மழை, இயற்கை வெள்ளச் சீற்றங்கள், கடல் கொந்தளிப்பு போன்ற காலங்களிலே மீனவர்கள் கடலுக்குள் மீன் பிடிக்கச் செல்ல இயலாத நிலை இருக்கின்றது. அந்த மீனவர்களும் அந்த மீனவர்களைச் சார்ந்தவர்களும் அந்தக் காலங்களிலே எந்தவிதத் தொழிலையும் செய்ய முடியாத நிலையிலே சாப்பாட்டிற்குக் கஷ்டப்படுகின்ற சூழ்நிலை எல்லாம் இருக்கின்ற காரணத்தாலே அந்த இடைப்பட்ட காலங்களிலே அவர்களுக்கு உபதொழில் செய்வதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

அதோடு, அடுத்தடுத்ததாக, தமிழகத்திலே இராமேசுவரம் பகுதியிலே இலங்கைக் கடற்படையினரால் மீனவர்கள் துப்பாக்கிச் சூட்டிற்கு

அடிக்கடி பலியாகிக்கொண்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டு 6 மீனவர்கள் பலியாகி இருக்கின்றார்கள். இதுபோல உயிரைப் பணயம் வைத்து பிழைப்பை நடத்திக்கொண்டிருக்கின்ற இந்த மீனவ மக்கள் இந்தத் தொழிலைச் செய்வதற்குப் பல்வேறு கஷ்டங்கள் இருக்கின்ற காரணத்தாலே மாண்புமிகு முதல்வர் அவர்களும், அரசும் இதிலே சிறப்புக் கவனம் செலுத்தி சென்ற 1976 ஆம் ஆண்டு bid term ஒப்பந்தப்படி இலங்கை மீனவர்கள் எப்படி அப்போது தமிழகத்திலே 3 ஆண்டுகாலம் மீன் பிடித்தார்களோ அதுபோல ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்தி, இலங்கையில் நமது தமிழக மீனவர்கள் மீன் பிடிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

அதுபோல, நாட்டுப் படகு மற்றும் கட்டுமரங்களில் மீன் பிடித்து தொழில் செய்யும் மீனவர் குடும்பங்களுக்கு மாதம் ஒன்றுக்கு 3 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. ஆனால், ஒரு கட்டுமர மீனவர் மாதம் ஒன்றுக்கு சராசரியாக 20 நாட்களுக்குக் கடலுக்குள் செல்ல வேண்டிய நிலையிலே, அதற்கு வேண்டிய காண்டா விளக்குகளுக்கெல்லாம் எண்ணெய் இல்லாத பற்றாக்குறையிலே இருக்கிறார்கள். அவர்களுடைய வீட்டுக்கு மட்டும்தான் அந்த எண்ணெய் போதும் என்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தாலே அவர்களுக்கு வழங்கப்படுகின்ற எண்ணெயினுடைய அளவை 3 லிட்டரிலிருந்து 5 லிட்டராக உயர்த்தித்தர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

கடற்கரைப் பகுதியிலே இருக்கின்ற கட்டுமர மீனவர்களுக்கும், நாட்டுப் படகு மீனவர்களுக்கும் திசை காட்டும் கருவியை அரசு இலவசமாகவோ, மானியமாகவோ வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

பாரம்பரியம் மிக்க மீன்பிடிக் கலன்களுக்கு உள் மற்றும் வெளிப் பொருத்தும் இயந்திரங்களை வழங்க, மத்திய அரசாலும் மாநில அரசாலும் சரிபாதியாக மானியம் வழங்கப்படுகிறது. இதன்படி ஒரு மீனவருக்கு உட் பொருத்தும் இயந்திரம் வழங்குவதற்கு 12 ஆயிரம் ரூபாயும் வெளிப் பொருத்தும் இயந்திரங்களுக்கு 10 ஆயிரம் ரூபாயும் வழங்கப்பட்டிருந்தாலும், சரிபாதித் தொகையினை மீனவர்கள் செலுத்த வேண்டிய நிலை இருக்கின்ற காரணத்தாலே, மீனவர்களுக்கு வழங்கப்படுகின்ற மானியத் தொகையை உயர்த்துவதோடு, நாட்டுப் படகுக்கு இயந்திரங்களுக்கு வேண்டிய எஞ்சின்களை வாங்குவதற்கு முழுமையான அளவிலே கடன் வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.



அதோடு என்னுடைய தொகுதியிலே ஏறத்தாழ 42 மீனவ கிராமங்கள் இருக்கின்றன. அங்கே சோடியம் மின் விளக்குகள் எல்லாம் சென்ற ஆண்டு அமைக்கப்பட்டிருந்தாலும் இன்னும் அந்த விளக்குகளுக்கு மின் இணைப்பு வழங்கப்படாமல் இருக்கிறது. அவற்றை விரைவில் வழங்குவதோடு அனைத்து கிராமங்களிலும் சோடியம் மின் விளக்குகள் அமைத்துத் தரவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, கடற்கரைப் பகுதியிலே இருக்கின்ற மீனவர் குடும்பங்களிலே உள்ள குழந்தைகளினுடைய கல்வித் தரம் எல்லாம் மிக மோசமான நிலையிலே இருக்கிறது. அந்தக் குழந்தைகளினுடைய கல்வித் தரத்தை உயர்த்துகின்றவண்ணம் மீனவர் கிராமப் பகுதிகளிலே மீனவர்களுக்குத் தேவையான பள்ளிகளைத் தொடங்கவேண்டும். சுதந்திரம் பெற்று 50 ஆண்டுகாலம் ஆகியும் அந்த மீனவ மக்கள் கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் எந்தவிதமான வசதியும் பெறாமல் இருக்கின்றதை அரசு கருத்திலே கொண்டு மீனவர் மக்களுக்குக் கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் முன்னுரிமை வழங்க வேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன்.

மீனவர் கிராமங்களிலே தற்போது இணைப்புச் சாலை வசதியை மேம்படுத்துவதற்காக ரூபாய் 29.84 கோடி ஒதுக்கீடு செய்ததாக அறிகின்றேன். இந்த அரசு பொறுப்பினை ஏற்ற காலத்திலே முதன்முதலாகச் சாலைகள் எல்லாம் போடப்பட்டன. கடந்த இரண்டு ஆண்டுகளாக அந்த மீனவர் கிராமங்களிலே சாலைகள் போடப்படவில்லை. எனவே, இந்த அரசு அதனைக் கருத்திலே கொண்டு அனைத்து கிராமங்களிலேயும் இணைப்புச் சாலை ஏற்படுத்துகின்ற வகையிலே, எனது தொகுதியிலே இருக்கின்ற புதுப்பட்டினம், ஏரிப்புறக்கரை, மந்திரிப்பட்டினம், அடைக்கத்தேவன், கணேசபுரம் போன்ற கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு (மணியடிக்கப்பெற்றது) வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர், உங்களுக்கே கால் மணிநேரம்தான்.

*பிற்பகல் 1-10*

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன்வளத் துறை மானியக் கோரிக்கையின்மீது நடந்த விவாதத்திற்குப் பதில் அளிக்கின்ற வாய்ப்பை எனக்குத் தந்த

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், தங்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, மீனவர்கள் நலனில் அதிக அக்கறை கொண்ட டாக்டர் கலைஞர் அவர்கள், ஒவ்வொரு முறையும் பொறுப்பேற்கும்போது, மீனவர்களின் மேம்பாட்டுக்காகவும், அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்வதற்காகவும் பல நல்ல திட்டங்களை அறிவித்து, அவை மீனவர்களை அடையும்படி செயல்படுத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இதைப் பற்றிப் பாராட்டியும் பேசியிருக்கின்றார்கள்.

மீனவர்களுக்கு வீடுகள் கட்டும் திட்டத்தைப் பொறுத்தவரை, இது இந்தியாவுக்கே எடுத்துக்காட்டாக, முதன்முதலாக மீனவர்களுக்கு இலவசமாக இந்த வீடுகள் எல்லாம் கட்டிக்கொடுக்கப்பட்டது தமிழ்நாட்டில்தான். 1996 ஆம் ஆண்டு மீனவர் சமுதாயத்தைச் சேர்ந்த மா. சிங்காரவேலர் அவர்களின் நினைவாக இந்த வீடுகள் எல்லாம் கட்டிக்கொடுக்கப்படுகின்றன. இதைப் பற்றி எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் மதிவாணன் அவர்கள் பேசினார்கள். திரு. அப்பாவு அவர்களுக்கு இடையில் பதில் சொல்லும்போதுகூட, மீதி வீடுகள் எப்போது கட்டிமுடிக்கப்படும் ஏன்பதைச் சொன்னேன். இந்த ஆண்டு மீனவ கிராமங்களுக்குச் சாலைகள் போட்டுத் தரப்படும். வெளிப்பொருத்தும் உட்பொருத்தும் இயந்திரங்களுக்கு மானியம் வழங்கப்படுகிறது.

அதைப்போல், மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்திற்கு இந்த ஆண்டு 12.17 கோடி ரூபாயை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அதன் வாயிலாக 1.69 இலட்சம் மீனவர்கள் பயன் அடைவார்கள்.

அடுத்தது, தொலைத் தொடர்பு சாதனம். கடலுக்குள் செல்கிற மீனவர்களுக்கு, விபத்துக் காலங்களில் அவர்களை மீட்பதற்காக பக்கத்தில் உள்ள படகுகளைத் தொடர்பு கொள்வதற்காக இந்தத் தொலைத் தொடர்பு சாதனம் 25 சதவிகித மானியத்தில் GMDSS வசதியுடன் வழங்கப்பட இருக்கிறது.

மீனவர் மற்றும் மீனவ மகளிர் காப்புறுதித் திட்டம். இந்தத் திட்டம் 1995 ஆம் ஆண்டு மீனவர்கள் 60 ரூபாய் பிரீமியம் செலுத்தி, அவர்கள் விபத்துக்காலத்தில் இறந்துவிட்டால் ஒரு இலட்சம் ரூபாய், அவர்கள் பகுதி ஊனம் அடைந்தால் 50,000 ரூபாய் வழங்கப்பட்டு வந்தது. ஆனால், டாக்டர் கலைஞர் அரசு எடுத்துக்கொண்ட



பெருமுயற்சி காரணமாக தற்போது மீனவர்கள் அந்தத் தொகையை ஆண்டு ஒன்றுக்கு 24 ரூபாய் செலுத்தினால் போதும். அதுபோல இப்போது புதிதாக மீனவர் மகளிரையும் அதில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது. அவர்களும் வியாபாரம் செய்கிறார்கள். அவர்களுக்கும் விபத்து ஏற்படும் என்ற எண்ணத்தில் அவர்களையும் இந்தத் திட்டத்தில் சேர்த்துக்கொண்டிருக்கிறோம். இதில் மீனவ ஆண்கள் மட்டும் 59,000 பேர்களும், மீனவ மகளிர் 5,000 பேர்களும் சேர்ந்து இருக்கிறார்கள்.

விபத்துக் குழு காப்பீடுத் திட்டம். இந்தத் திட்டம் மத்திய அரசும், மாநில அரசும் சேர்ந்து மீனவர்களுக்காக பிரீமியம் செலுத்தி, அவர்களுக்காக மத்திய அரசு 17,500 ரூபாயும், மாநில அரசு 17,500 ரூபாயும் ஆக 35,000 ரூபாய் வழங்கப்படுகிறது. இந்த 35,000 ரூபாய் போதாது என்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இதற்கு அதிகமாக தமிழக அரசின் தனித் திட்டமாக 15,000 ரூபாயை அவர்களுக்கு வழங்குகிறார்கள். ஆக மொத்தம் இதற்காக 50,000 ரூபாய் வழங்கப்படுகிறது. இதற்காக மத்திய அரசு 6 ரூபாயும், மாநில அரசு ரூ.4.05 காசும் பிரீமியமாக செலுத்துகின்றன.

மேலும் நமது தமிழகத்தைப் பொறுத்தவரை 13 மீன்பிடி துறைமுகங்கள் இருக்கின்றன. இந்தத் துறைமுகங்களிலிருந்து இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யும் மீன்களின் அளவில் தமிழகத்திலிருந்து ஏற்றுமதியாகும் மீன்கள் மட்டும் 25 சதவீதம். இதன்மூலமாக நமக்குக் கிடைக்கும் அன்னியச் செலாவணி 1,000 கோடி ரூபாய். மீன் ஏற்றுமதியில் இந்தியாவுக்கு ரூ. 4,000 கோடி அன்னியச் செலாவணி கிடைக்கிறது என்றால் அதில் தமிழ்நாட்டிலிருந்து மட்டும் 25 சதவீதம் மீன்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஐரோப்பிய நாடுகளில் இதற்கு ஒரு தடை விதித்தார்கள். இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் மீன்கள் எல்லாம் சுத்தமான முறையில் இல்லையென்று சொல்லி 23-12-1997 அன்று இந்தத் தடை விதிக்கப்பட்டது. இந்தத் தடை விதிக்கப்பட்டதன் காரணமாக இந்திய அரசு, அந்த அரசை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கிணங்க, 11-3-1999 அன்று ஐரோப்பிய ஒன்றியக் குழு ஒன்று இந்தியாவுக்கு வந்தது. அப்போது இந்தியாவில் அந்தக் குழு 6 துறைமுகங்களைப் பார்வையிட்டு பரிசீலிப்பதாக இருந்தது. இங்கே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். டாக்டர் கலைஞர் அவர்கள் இந்தியாவுக்கே எடுத்துக்காட்டாக நல்ல திட்டங்களைத் தந்திருக்கிறார்கள். இன்று

இந்தியாவின் மானத்தைக் காக்கக்கூடிய அளவுக்கு, நமக்குத் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தைத் தந்திருக்கிறார்கள். இந்தியாவில் 6 துறைமுகங்களைப் பார்வையிட வந்திருந்தக் குழுவினர் முதன்முதலாக தூத்துக்குடி மாவட்டத்திற்கு வருகை தந்தார்கள். அப்போது, தனது தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து மாண்புமிகு தூத்துக்குடி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் 22 இலட்சம் ரூபாயை அந்தத் துறைமுகத்திற்காகத் தந்து, அதைத் தரம் உயர்த்துவதற்கு 22 இலட்சம் ரூபாயை தந்தார்கள். அதன் வாயிலாக அங்கேயுள்ள துறைமுகமானது சுத்தமான முறையில் பராமரிக்கப்பட்டு, சர்வதேச தரத்தின் அளவுக்கு அங்கீகரிக்கக்கூடிய அளவுக்கு உருவாக்கப்பட்டது. அதை வந்து பார்வையிட்டுச் சென்ற அந்தக் குழுவினர், இதை நாங்கள் அங்கே சென்று தெரிவித்து, உங்களுக்கு அங்கீகாரத்தை மீண்டும் வழங்குவோம் என்று தெரிவித்துச் சென்றார்கள். இங்கே சிலர்கூடச் சொன்னார்கள், இந்தத் துறைமுகம் நன்றாக இருக்கிறது என்று. சட்டமன்ற உறுப்பினர் நிதியில் இருந்து இதுபோன்ற நல்ல செயல்களைச் செய்யலாம் என்ற எனது கருத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-15

இயற்கைச் சீற்றத்தாலும், இயந்திரக் கோளாறுகளினாலும் இலங்கைக்கு வழி தவறிச் செல்லுகின்ற மீனவர்களை மீட்டு வருவதில் இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து வருகிறது. அதுமட்டுமல்லாமல், அவர்களுடைய குடும்பத்திற்கு 50 ரூபாய் தினமொன்றுக்கு வழங்கி வருகிறது. இதன் வாயிலாக, 29 குடும்பங்கள் இந்த 50 ரூபாய் நிவாரணத்தைப் பெற்றிருக்கின்றன. 21-4-1999-ல் சென்ற நான்கு மீனவர்கள் அங்கே இருக்கின்றார்கள். அவர்களை மீட்டு வருவதற்காக இந்த அரசு துரித நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது. மேலும், அவர்களுடைய குடும்பங்களுக்கு தினமொன்றுக்கு 50 ரூபாய் வழங்கிக்கொண்டிருக்கிறது.

பாரம்பரிய மீனவர்களுக்கு, கட்டுமர மீனவர்களுக்கு, இன்ஜின் பொருத்தியவர்களுக்கு, டீசல் மற்றும் மண்ணெண்ணெய் வழங்குவதற்காக 3 கோடி ரூபாயை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள்.

அதேபோல், ஒருங்கிணைந்த கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 25 சதவீதம் மானியத்தில் படகுகளும், வலைகளும், இன்ஜின்களும் வழங்கப்பட்டு வருகின்றன.



உள்நாட்டு மீன்வளத்தைப் பொறுத்தவரை, நமது நாட்டில் 15 மீன்குஞ்சுகள் உற்பத்திப் பண்ணைகளும், 17 மீன் குஞ்சுகள் வளர்ப்புப் பண்ணைகளும் உள்ளன. இப்பண்ணைகளின் பரப்பளவு 10.5 எக்டேர் ஆகும். இதில் 1.7 எக்டேர் பழுதடைந்துள்ளது. இவற்றில் பவானிசாகர், பூங்காரில் பழுதடைந்துள்ள குளங்களுக்கு 6.64 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

சிற்றார் பற்றி நமது மாண்புமிகு விளவங்கோடு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஒருமுறை கேள்வியிலேயே கேட்டார்கள். தீவிர பரிசீலனையில் இருக்கிறது என்று அறிவித்தேன். அந்த சிற்றாருக்கும் 3.36 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இதன் வாயிலாக மீதியுள்ள பழுதடைந்த குளங்களையெல்லாம் படிப்படியாக நாங்கள் மேம்பாடு செய்வோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் இன்று வண்ண மீன்களை அதிகமாக மக்கள் விரும்புகின்றார்கள். ஆகவே, இந்த வண்ண மீன்களை திருமூர்த்தி, ஆழியார் போன்ற நீர்த்தேக்கங்களில் வளர்ப்பதற்கு மீன் வளர்ச்சிக் கழகத்திற்கு பங்கு மூலதனமாக 10 இலட்சம் ரூபாயை இந்த அரசு வழங்கி இருக்கிறது.

தமிழகத்தில் முதன்முதலாக, அதாவது மாநகராட்சியைப் பொறுத்தவரை, அங்கே இருக்கும் கழிவு நீரில் மீன் வளர்ப்பதற்கான திட்டத்தை, அதை ஒரு முன்னோடித் திட்டமாக, இங்கே கொண்டு வந்திருக்கிறோம். மதுரை மாநகராட்சியில் இந்தத் திட்டம் உருவாக்கப்பட இருக்கிறது. இந்த நீர் சுத்திகரிக்கப்பட்டு, அதில் உயர்தர கெண்டை மீன்களை வளர்த்து, அந்த நீரைக்கூட துணி துவைப்பதற்கோ, மற்றவற்றிற்கோ உபயோகித்துக்கொள்ளக்கூடிய அளவுக்கு நாங்கள் சுத்திகரித்து, இந்த மீன்களை வளர்க்க இருக்கிறோம். இதற்கு அந்த மதுரை மாநகராட்சியும் ஒப்புக்கொண்டு ரூ.2.5 இலட்சத்தை வழங்க இருக்கிறது.

கலவா மீன் வளர்த்தல். உணவுக்கு ஏற்றவகையில் இது ஒரு பெரிய மீனாகவும், மேலும் தற்சமயம் அண்டை நாடுகளில் கிராக்கி உள்ள மீனாகவும் இருக்கிறது. இதை உயிரோடு ஏற்றுமதி செய்கிறோம். ஆகவே, இந்த மீன்களை வளர்ப்பதற்கு ஒரு முன்னோடித் திட்டமாக தூத்துக்குடியில் உள்ள புன்னக்காயலில் ரூ.1.90 இலட்சத்திற்கு இந்தத் திட்டத்தை நாங்கள் உருவாக்க இருக்கிறோம்.

[திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்] [1999 மே 5

மேலும், மீன்பிடி துறைமுகங்கள், சில துறைமுகங்களில் தூர் வார வேண்டுமென்று கேட்டார்கள். மத்திய அரசு 40 கோடி ரூபாய் ஜப்பான் நாட்டிலிருந்து தூர் வாரும் இயந்திரத்தை பிப்ரவரி மாதம் வாங்கி, ஆந்திர மாநிலத்தில் உள்ள விசாகப்பட்டினத்தில் Dredging Corporation of India என்ற நிறுவனத்திடம் ஒப்படைத்திருக்கிறது. இங்கே ஒரு கன மீட்டர் அளவுக்குத் தூர் வாருவதற்கு 70 ரூபாய் வசூலிக்கப்பட இருக்கிறது. வரும் காலங்களில் நிதிநிலைக்கேற்றவாறு படிப்படியாகத் தூர் வாரித் தருவோம்.

மேலும், மீனவர்கள், மீன்பிடி சர்வதேச கடல் எல்லையைக் கடந்து செல்லும்போது, அங்கே ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக டாக்டர் கலைஞர் அவர்கள் 1976 ஆம் ஆண்டு, இலங்கை கடற்பகுதியில் உள்ள, இலங்கைப் பகுதியில் உள்ள மீனவர்கள் டெல்ப்ட் தீவிற்குத் தெற்குப் பகுதியில் மீன் பிடித்தார்கள். இதற்கு ஏதுவாக Wadge Bank என்ற ஒரு ஒப்பந்தத்தைத் தீட்டி, மூன்று ஆண்டுகள் அவர்கள் மீன் பிடித்து வந்தார்கள். அதன்படி, தற்போது தமிழக மீனவர்களும் அங்கே சென்று மீன் பிடிக்கும் வகையில், இலங்கை அரசிடமிருந்து தமிழகத்திற்கு இந்த உரிமையை வாங்கித் தர வேண்டுமென்று மத்திய அரசை மாண்புமிகு முதல்வர் அவர்கள் .கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். நாளையதினம் எங்களது இயக்குநர் அவர்கள் டெல்லிக்குச் செல்ல இருக்கின்றார்கள். இது மத்திய அரசின் தீவிரப் பரிசீலனையில் இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடல் மீன்பிடி மேம்பாட்டுத் திட்டம். இந்தத் திட்டத்தின்படி—நமது மாண்புமிகு உறுப்பினர் விளவங்கோடு மணி அவர்கள் சொன்னார்கள்—ஆழ்கடலில் மீன் பிடிப்பைப் பழக்குவது, அதாவது, அந்நிய நாட்டிலிருந்து வருகின்ற மீனவர்கள் நமது ஆழ்கடல் பகுதியிலிருந்து மீன்களைப் பிடித்துக்கொண்டு செல்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் விசைப் படகு மீனவர்களுக்கும், கட்டுமர மீனவர்களுக்கும் அடிக்கடி மீன் பிடிப்பதில் தகராறு ஏற்படுகிறது. இதையெல்லாம் தீர்ப்பதற்காக 43½ அடி அளவில் 25 இலட்சம் ரூபாய்க்கு ஒரு படகை வாங்க இருக்கிறோம். அந்த விசைப் படகு மீனவர்களை ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்குப் பழக்குவதற்கு இந்தப் படகு வாங்கப்பட உள்ளது.

*பிற்பகல் 1-20*

நாகப்பட்டினம் மாவட்டம், திருமுல்லைவாசலில் ஆற்றுமுகத் துவாரத்தை சீர் செய்ய ஆய்வுப் பணிகளுக்காக ரூ.2.40 இலட்சம் ஒதுக்கப்படுகிறது.



1999 மே 5] [திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்]

தூத்துக்குடி மாவட்டம் புன்னக்காயலில் 2.60 இலட்சம் ரூபாய் அங்கே உள்ள ஆற்று முகத்துவாரத்தை சீர் செய்ய ஆய்வுப் பணிகளுக்காக வேண்டி, இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கரை ஏற்றும் படகு, இது மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து சம பங்காக அளித்து 22 இலட்சம் ரூபாய் வழங்கியுள்ளது. ஒரு மீனவர் இந்தப் படகை வாங்குவாரேயானால் 22,000 ரூபாய் மானியமாக வழங்கயிருக்கிறது. பயனாளிகளின் பங்கு 5 சதவிகிதமும், கடனாக 70 சதவிகிதமும் வழங்கயிருக்கிறது. இந்தத் திட்டமும் இந்த ஆண்டு செயல்பட இருக்கிறது.

மேலும் 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்பிடி ஒழுங்குபடுத்தும் சட்டத்தை இங்கே தமிழ்நாட்டில் நன்கு அமல்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் 449.95 இலட்சத்தில் 5 அதிவேக ரோந்து படகுகளை இங்கே நாங்கள் கட்டியிருக்கிறோம். அந்தப் படகுகளுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நீலம், முத்து, பவளம், கயல், வலம்புரி என்றும் பெயரிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இவை சென்னை, மல்லிப்பட்டினம், இராமேசுவரம், தூத்துக்குடி, கன்னியாகுமரி போன்ற தளங்களிலிருந்து மீனவர்களுக்குப் பாதுகாப்புக்காகவும் மற்றும் ரோந்து பணிக்காகவும் செயல்படும். கரை தட்டிச் செல்கின்ற மீனவர்களுக்கு புயல் காலத்தில் அவர்களுக்குப் பாதுகாப்பாகவும் இருப்பதற்காகவும் இந்தப் படகுகளை கூடியவிரைவில் இயக்கவிருக்கிறோம்.

தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டம் தாலுகாவில் உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்கு ரூ.5.5 இலட்சத்தில் குளிர்பதன வசதியுடன்கூடிய ஒரு கனரக வாகனம் ஒன்றை முழு மானியத்துடன் வழங்கவிருக்கிறோம்.

உள்நாட்டு மீனவர்களின் நீண்ட நாள் கோரிக்கையைப் பரிசீலித்த டாக்டர் கலைஞர் அவர்கள் உள்நாட்டு மீனவர்களுக்கு வலைக்கு மானியமாக ஒரு நபருக்கு 2,500 ரூபாய்க்கு மிகாமல் 500 மீனவர்களுக்கு வழங்க, 12.5 இலட்சம் ரூபாயை அனுமதித்து இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும் உள்நாட்டு மீனவர்களுக்கு, மீனவ மகளிருக்கு, மீன்களை சுமந்து செல்கின்ற மகளிருக்கு அலுமினியப் பாத்திரத்தை பாதி விலையில், 300 ரூபாய் பாத்திரத்திற்கு, 150 ரூபாயை மீனவ மகளிர் செலுத்த வேண்டும். 150 ரூபாயை நமது அரசு மானியமாக வழங்கும். இந்தப் பாத்திரத்தை ஆயிரம் மீனவ மகளிருக்கு வழங்குவதற்கு ரூ.1.5 இலட்சம் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, மிதி வண்டிகள், உள்நாட்டில் மீன்பிடித்து செல்கின்ற மீனவர்கள் தங்களது மீன்களை உரிய நேரத்தில் கொண்டு செல்வதற்கு, அவர்களுக்கு மிதி வண்டி வழங்குவதற்கு என்று, 500 மீனவர்களுக்கு—ஒரு மீனவருக்கு 450 ரூபாய் மானியம், ஒரு சைக்கிள் வாங்குவதற்கு; இதற்கு ரூ. 2.5 இலட்சம் ஒதுக்கீடு செய்து தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னும், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் தாங்கள் பேசும்போது பல கோரிக்கைகளை வைத்தார்கள். 11 பேர் பேசினார்கள், அதில் 10 பேர் எனது துறையின் சார்பாகப் பேசினார்கள். நமது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அப்பாவு அவர்கள் கேட்டார்கள், எங்களுக்கு உதவி இயக்குநர் அலுவலகம் வேண்டும் என்று. இப்போது உதவி இயக்குநர் அவர்கள், அவர் ஓர் அரசு விழாவில் கேட்டுக்கொண்டதற்கிணங்க, ஒவ்வொரு வாரமும் அங்கே சென்று அந்தப் பணிகளைச் செய்து வருகிறார்கள். அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ஒரு கட்டடம் தருவதாகச் சொல்கிறார்கள், கூடியவிரைவில் அதற்கு ஆவன செய்வோம்.

டீசல் மானியத்தை பொறுத்தவரையில், எல்லா தனியார் Bunk-களிலும் எங்களுக்கு மானியம் வழங்கப்பட வேண்டுமென்று, ஒருவர் மட்டும் நீதிமன்றத்திற்குச் சென்று இருந்தார். மீதி 20 பேர் எங்களுக்கு மனுக்களை அனுப்பியிருந்தார்கள். இப்போது அந்த இடத்திற்கு இயக்குநர் அவர்களை அனுப்பி, உரிய இடத்தில் தர முடியுமா என்று பார்த்து, அந்த இடத்திலும் நிச்சயமாக தனியார் டீசல் Bunk-களுக்கு நாங்கள் டீசல் வழங்குவோம், மானியம் வழங்குவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடையாள அட்டையைப் பொறுத்தவரையில், உதவி இயக்குநர் அவர்கள் தருவார்கள். இருந்தாலும் மீனவர்தானா என்பதை அறிவதற்கு V.A.O. Certificate நிச்சயமாக வேண்டும்.

இன்னும், விளவங்கோடு மணி அவர்கள் சொன்னதற்கு எல்லாம் இங்கே பதில் சொல்லிவிட்டேன். இங்கே 90 வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றைப் படித்துப் பார்த்தேன். சிலவற்றிற்கு நான் கேள்வியிலேயே பதில் சொல்லி இருக்கிறேன், சிலவற்றிற்கு இங்கே பதில் சொல்லியிருக்கிறேன். மீதியுள்ள தங்கள் கருத்துக்களையும் இப்போது தாங்கள் இந்தச் சட்டமன்றத்தில் எடுத்துரைத்த கருத்துக்களையும் எங்கள் மனதில் நினைவில்



வைத்துக்கொண்டு வருங்காலத்தில் நல்ல திட்டங்களை உங்களது கருத்துப்படி நாங்கள் உருவாக்குவோம், நிதிநிலைமைகேற்றவாறு என்று கூறி, இந்த மானியக் கோரிக்கையில் நாங்கள் கோரிய தொகையை, நீங்கள் இந்த அரசுக்கு வழங்கி, உங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர் கிராமத் தொழில் மானியத்தின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் அப்பாவு அவர்கள், வெங்கிடு அவர்கள், மணி அவர்கள், மதிவாணன் அவர்கள், அய்யலுசாமி அவர்கள், ஆறுமுகம் அவர்கள், சின்னய்யா அவர்கள், முகம்மது இஸ்மாயில் அவர்கள், பன்னீர்செல்வம் அவர்கள், மணி நாடார் அவர்கள், திருஞானசம்பந்தம் அவர்கள் ஆகியோர் தங்களுடைய அரிய கருத்துக்களைக் கூறியிருக்கின்றார்கள். இந்தத் துறையினுடைய நிதிநிலையை கருத்திற்கொண்டு அவர்களுடைய கோரிக்கைகள் ஏற்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-25

இந்தத் துறையைப் பொறுத்தவரையில், கடந்த காலத்தில் பின்னடைவில் இருந்த துறை. இன்றைக்கு இந்தியாவிலேயே குஜராத் மாநிலத்திற்கு அடுத்தபடியாக கதர் உற்பத்தியில் இரண்டாவது இடத்தில் தமிழ்நாடு இருக்கிறது என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேமாதிரி, கிராமத் தொழிலைப் பொறுத்தவரையில், இந்தியாவிலேயே குஜராத் மாநிலம் முதல் இடத்திலும், இரண்டாவது இடத்தில் உத்தரபிரதேச மாநிலமும், மூன்றாவது இடத்திலே இன்றைக்கு தமிழ்நாடும் சிறந்து விளங்குகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் துறையில் 1997-98 ஆம் ஆண்டு 1.98 கோடி ரூபாய் கதர் விற்பனையில் இலாபம் கிடைத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேமாதிரி, அரசினுடைய பொது நிறுவனங்களுக்கு உபகரணங்கள் செய்ததன்மூலம் இன்றைக்கு இந்தத் துறைக்கு 96.8 இலட்சம் ரூபாய் இலாபம் கிடைத்திருக்கிறது. அதிலே, 1,000 பேர் நேரடியாகவும், 3,000 பேர் மறைமுகமாகவும் பயன்பெறுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் துறையில், சிறப்பான முறையில் இலவங்காய்களை வாங்கி பஞ்சு உடைக்கப்பட்டு மெத்தைகள் செய்யப்பட்டதன் விளைவாக இந்தத் துறைக்கு 6 இலட்சம் ரூபாய் இலாபம் கிடைத்திருக்கிறது என்பதை மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு கதர் உற்பத்தியைப் பொறுத்தவரையில், நன்றாக சிறந்து விளங்குகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ரவி அருணன், திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்கள், அதுமாதிரி விளவங்கோடு மணி, திருப்பூர் சுப்பராயன் போன்றவர்கள் எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்கள் கதர் ஆடைகள் அணிய வேண்டுமென்று தங்களுடைய வெட்டுப் பிரேரணைகளில் தெரிவித்திருக்கிறார்கள். அதை நான் மகிழ்வோடு வரவேற்கிறேன். காரணம் கடந்த காலத்தில் 8-ஆம் நம்பர், 9-ஆம் நம்பர், 10-ஆம் நம்பர் போன்று நூற்கும் நூல்களின் மூலமாக மோட்டா இரகங்களை உற்பத்தி செய்தார்கள். ஆனால், கழக அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, 16 கால், 18 கால், 22 கால் போன்ற இரகங்களை, சன்ன இரகங்களை, மெல்லிய இரகங்களை உற்பத்தி செய்து அவை கவர்ச்சிகரமாக, அதேநேரத்திலே கோடை காலத்திற்கு இதமாக அணிவதற்கு ஏற்ற .வகையில் சிறந்து விளங்குகின்றன என்பதை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடுமட்டுமல்ல, இன்றைக்கு பனைத் தொழிலைப் பொறுத்த வரையில், விளவங்கோடு மணி அவர்கள் தும்பு ஏற்றுமதி பற்றி விளக்கமாகப் பேசினார்கள். 1998 ஆம் ஆண்டு ரூபாய் 30 இலட்சத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. 1999 ஆம் ஆண்டு சுமார் 1 கோடி ரூபாய் அளவுக்கு எற்றுமதி செய்யப்பட இருக்கிறது என்பதை மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு இந்தத் துறையில் பூமிதான வாரியம் என்ற ஒரு வாரியம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்தப் பூமிதான வாரியத்தைப் பொறுத்தவரையில், இன்றைக்கு சிறப்பான முறையில் இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு பல நல்ல காரியங்களைச் செய்திருக்கிறது. இந்த பூமிதான வாரியத்தில் மொத்தம் 24,525 நிலம் ஏக்கர் உள்ளது. இதில் 21,529 ஏக்கர் தானமாக, விவசாய நிலமாக வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், கழக அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு இந்த 3 ஆண்டுகளில் 223 ஏழைகளுக்கு, ஏழை விவசாயிகளுக்கு 309 ஏக்கர் தானமாக வழங்கப்பட்டிருக்கிறது. கடந்த 10 ஆண்டுகாலமாக 1 சென்ட் நிலம்கூட வழங்கப்படவில்லை. இந்தக் கழக அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகுதான்



இந்த விவசாய நிலம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்ற 16-4-1999 அன்று இந்தத் துறையினுடைய ஊரக வளர்ச்சி இயக்குநர் அவர்களும், நானும், போரூர் பக்கத்திலே காட்டுப்பாக்கம் என்ற இடத்திலே இந்தப் பூமிதான வாரியத்திற்குச் சொந்தமான 9.15 ஏக்கர் நிலம் தனியார்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு, மனை நிலங்களாக விற்கப்படுகிறது என்ற ஒரு செய்தி வந்ததன்பேரில், அங்கு சென்று நாங்கள் ஆய்வு செய்தபோது சுமார் 4 கோடி ரூபாய் மதிப்புள்ள அந்த நிலங்களை மீட்டு பூமிதான வாரியத்திற்கு ஒப்படைத்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி.)

அதேமாதிரி, பூமிதான வாரியத்திற்குச் சொந்தமான நிலங்களை, பொது நிறுவனங்களுக்கு, அரசு நிறுவனங்களுக்கு, பயன்படுத்துகிறவர்களுக்கு, கேட்கின்ற நேரத்தில், நம்முடைய பவானி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க . 5 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டிருக்கிறது. அதேமாதிரி வனத் துறை அமைச்சர் அவர்களும், பேரூர் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு நடராசன் அவர்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க மயிலேரிபாளையம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு 5 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டிருக்கிறது. ஈரோடு மாவட்டம், அந்தியூர் தொகுதி, அம்மாபேட்டையில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுவதற்கு 1 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டிருக்கிறது. இதுமாதிரி அரசு பொது நிறுவனங்களுக்குத் தேவைப்படும் என்று கருதினால் இந்தப் பூமிதான வாரியத்தின் நிலம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேமாதிரி இந்தத் துறையின் மூலமாக சில அறிவிப்புகளைச் செய்ய இருக்கிறேன். நீண்டகாலமாக சூலூரில் பஞ்சுடைக்கும் இயந்திரங்கள் பழுதுபட்டிருந்தன. நான் அந்தப் பகுதிக்குச் சென்றபோது மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்முடி அவர்களும் என்னுடன் வருகை தந்தார்கள். தன்னுடைய அப்பா அவர்களும், கதர் அய்யாமுத்து அவர்களும் உறுப்பினர்களாக இருந்த காலத்தில் இந்த இயந்திரங்கள் எல்லாம் வாங்கப்பட்டன, இப்போது பழுதுதடைந்திருக்கின்றன என்று கூறினார்கள். அவர்களுடைய கருத்தின் அடிப்படையில் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே எடுத்துச் சொன்னபோது, அந்த நிறுவனத்திற்கு புதிய இயந்திரங்கள் வாங்க 35 இலட்சம் ரூபாய் இன்றைக்கு அனுமதி அளித்திருக்கிறார்கள் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேமாதிரி இந்தத் துறையில் 30 கதர் அங்காடிகளை நவீனப்படுத்துவதற்கு, வாடிக்கையாளர்களைக் கவர்வதற்கு, ஓர் அங்காடிக்கு 75,000 ரூபாய் வீதம் 22.50 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

குளியல் சோப்பு அலகுகளை நவீனப்படுத்துதல். இங்கே பேசிய உறுப்பினர்கள் அத்தனைபேரும் சோப்புகள் கதர் வாரியத்தின் சோப்பு அலகுகள் மூலம் மிக நவீன முறையில், நல்ல முறையில் தயாரிக்கப்படுகின்ற,. இன்னும் மேன்மேலும் அந்தத் துறையை மேன்மைப்படுத்த வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். அதனுடைய அடிப்படையில் தஞ்சை மாவட்டம், நாஞ்சிக்கோட்டையில் சோப்பு அலகு உற்பத்தியை நவீனப்படுத்துவதற்கு 5 இலட்சம் ரூபாயும், திருச்சி மாவட்டம், சமயபுரத்தில் இருக்கிற சோப்பு அலகை நவீனப்படுத்துவதற்கு 5 இலட்சம் ரூபாயும் அளிக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-30*

தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியத்தைப் பொறுத்தவரையில், இந்த அரசாங்கம் வந்ததற்குப் பிறகுதான் அந்தப் பனைப் பொருள் வளர்ச்சி வாரியம் மிகச் சிறப்புடன் நடைபெறுகிறது என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். அதனுடைய அடிப்படையில் இன்றைக்கு எழும்பூரில் பதநீர் பதப்படுத்துகின்ற பிரிவு ஏற்படுத்த அந்த நிறுவனத்திற்கு 5 இலட்சம் ரூபாய் அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** ஈரோடு மாவட்டம், மாத்தூரில் தூரிகை உற்பத்தி செய்கின்ற புதிய அலகு ரூ.2.75 இலட்சம் மதிப்பில் நிறுவப்படுகிறது. 200 பேர்களுக்கு அந்த அலகு மூலம் வேலைவாய்ப்பு அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூரில் பதநீர் பதப்படுத்தும் ஓர் அலகு 9 இலட்சம் ரூபாய் அளவில் நிறுவ இருக்கிறோம். அதில் சுமார் 300 பனைத் தொழிலாளர்கள் நேரிடையாகவும், 200 பனைத்



தொழிலாளர்கள் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு பெற இருக்கிறார்கள் என்பதை மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேமாதிரி, இந்தக் கதர்த் துறையைப் பொறுத்தவரையில், கடந்த காலத்தில் கதர் நூற்பாளர்கள், நெசவாளர்களுக்கு அவர்கள் மரணம் எய்தினால் 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்திருந்தோம். இந்த ஆண்டில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தாய் உள்ளத்தோடு கருணை கொண்டு, அந்தக் கதர் நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்கள் இறந்தால் கூடுதலாக 10 ஆயிரம் ரூபாய் அளித்து, 20 ஆயிரம் ரூபாய் அளிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தக் கதர்த் துறையில் தேங்கிக் கிடக்கின்ற துணிகளை விற்பனை செய்ய வேண்டும், தள்ளுபடி மானியம் அதிகமாகத் தர வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனைபேரும் கேட்டுக்கொண்டதற்கிணங்க 90 நாட்களுக்கு வாரியத்தின் 234 கதர் அங்காடிகளில் விற்கப்படும் பருத்தி, கதர் பட்டு இரகங்களுக்கு இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூடுதலாக 10 சதவீதம் தள்ளுபடி அளித்திருக்கிறார்கள். இதன்மூலம் கதர் வாரியத்திற்கு 10 கோடி ரூபாய் மதிப்புள்ள துணிகள் விற்பனையாகும். ஆகவே, நீங்கள் எல்லாம், இன்றைக்கு இந்தக் கதர் ஆடையை விரும்பி அணிகின்றவர்களுக்கு இது ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மாமன்றத்தில் பேசிய உறுப்பினர்கள் அத்தனைபேரும்—மாண்புமிகு உறுப்பினர்கள் கோபு, வெங்கிடு போன்றவர்கள், அய்யலுசாமி போன்றவர்கள் மற்றும் மணி போன்றவர்கள் எல்லாம்—இந்தக் கதர் வாரியத்திலே முதன்மை நூற்பாளர்கள் எவ்வளவு சிரமத்திற்கு ஆளாகிறார்கள் என்பதை எடுத்துக் கூறினார்கள். அவர்கள் தினக்கூலியாக 25 ரூபாய் பெறுகின்றார்கள். நிதிநிலைமைகளைப் பொறுத்து மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்து ஆலோசிக்கப்பட்டது. இந்த 103 நபர்களுக்கு தற்போது தொகுப்பு ஊதியமாக ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வாரியத்தில் 20 மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் இந்த ஆண்டு ஆரம்பிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம்

உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்களை வாரியமே கொள்முதல் செய்யும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆயிரம் ரூபாய் தொகுப்பு ஊதியம் என்று அறிவித்தார்கள். மத்திய அரசு சமீபத்திலேதான் ஒரு அறிவிப்பு வெளியிட்டிருக்கிறது. எந்த ஒரு தொழில் துறையிலும் குறைந்தபட்சம் தினசரி, 40 ரூபாய்க்குக்கீழ் சம்பளம் இருக்கக் கூடாது; குறைந்தபட்சம் சம்பள அளவு இருக்கக் கூடாது என்று அறிவித்திருக்கிறார்கள். எனவே, அதைக் கவனத்தில்கொண்டு சம்பள அளவு தீர்மானிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலையைக் கருத்தில்கொண்டு தொகுப்பு ஊதியமாகத்தான் இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆயிரம் ரூபாயாக அறிவித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடுமட்டுமல்லாமல், இன்றைக்கு இந்த வாரியத்தைப் பொறுத்தவரையில், கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் வேலைவாய்ப்பு தர வேண்டுமென்று பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் என்னிடத்தில் நேரடியாகவும், அதேநேரத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலும் மனு கொடுத்திருக்கின்றார்கள். இந்தக் கூட்டுறவுத் தொழில் சங்கங்களிலே எவ்வளவு முறைகேடுகள் கடந்த ஆட்சிக் காலத்தில் நடைபெற்றன என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். அரசாணை எண் 708-ஐப் பயன்படுத்திக்கொண்டு, அதை முறைகேடாகப் பயன்படுத்தியதன் விளைவாக அந்த வாரியத்திற்கு சுமார் 11 கோடி ரூபாய் அளவிற்கு இன்றைக்கு இழப்பீடு செய்யப்பட்டது. அதனுடைய கருத்தின் அடிப்படையில்தான் இந்தமாதிரி, இந்தத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பது தற்சமயம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் பேசி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், மத்திய கதர் ஆணைக் குழுவின் மூலம் விளிம்புக் கடன் வழங்குகின்ற திட்டம் நல்ல முறையிலே செயல்பட்டுக்கொண்டிருந்தது. ஆனால், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் அதற்கு முன்வந்து கடனுதவி அளிப்பதில் காலதாமதம் செய்த காரணத்தினால் இன்றைக்கு தர்மபுரி மாவட்டத்தில் இருக்கின்ற



மாண்புமிகு அமைச்சர் முல்லைவேந்தன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் மனோகரன் அவர்களும், திருவண்ணாமலை மாவட்டத்தைச் சார்ந்த மாண்புமிகு அமைச்சர் பிச்சாண்டி அவர்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மும்பை கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவை நாங்கள் அணுகி கேட்டபோது, வருகின்ற காலங்களில் கூட்டுறவுச் சங்கங்கள், வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள், மத்திய கூட்டுறவுச் சங்கங்களில் இந்தக் கடன் வழங்குவதற்கு இதைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று கதர் கிராமத் தொழில் ஆணைக் குழு தற்சமயம் அனுமதி அளித்து இருக்கிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், நம்முடைய கடலூர் மாவட்டத்தைச் சார்ந்த மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களும், கடலூர் சட்டமன்றத் தொகுதி மாண்புமிகு உறுப்பினர் புகழேந்தி அவர்களும் நீண்டகாலமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள், கடலூரிலே இருக்கின்ற பனந்தும்பு பயிற்சி நிறுவனத்திற்கும், சங்கிலிகுப்பத்தில் இருக்கின்ற கூடை முடைவோர் கூட்டுறவுச் சங்கத்திற்கும் நிதியாதாரங்கள் ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதனுடைய அடிப்படையிலே இன்றைக்கு மும்பை கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவிடமிருந்து நிதி உதவி பெற்று அந்தப் பணிகள் செய்யப்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு காலையிலே ஒரு பத்திரிகையிலே பார்த்திருப்பீர்கள் ஒரு விளம்பரம். நம்முடைய ஏழைகளின் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களும், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களும் பதநீர் அருந்துவதைப் பார்த்து இருப்பீர்கள். பதநீர் எந்த அளவுக்கு உடலுக்கு ஆரோக்கியத்தை ஏற்படுத்தி வருகிறது என்பதை அதன்மூலம் தெரிந்து இருப்பீர்கள். எனவே, நீங்கள் தினந்தோறும் பதநீர் அருந்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தலைமைச் செயலகத்திலே எங்களுடைய அங்காடி இருக்கிறது. நீங்கள் 65 வெட்டுப் பிரேரணைகளை கொடுத்திருக்கிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் அந்த வெட்டுப் பிரேரணைகளைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. பாலகிருஷ்ணன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கொள்கைக் குறிப்பில் மத்திய அரசு 10 விழுக்காடு கதர்த் துணிக்கு கொடுத்த ரிபேட் 20-3-1999-வுடன் முடிந்துவிட்டதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நம்முடைய அரசு மத்திய அரசுக்கு எழுதி அந்த ரிபேட் மறுபடியும் கிடைப்பதற்கு ஆவன செய்யுமா என்பதைத் தெரிந்துகொள்வதோடு, இந்தக் கதர்த் துறையில் பணியாற்றுகின்ற ஏழை எளிய பெண்களுக்கு, நூல் நூற்கின்ற பெண்களுக்கெல்லாம் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தை நம்முடைய அரசு அறிவிக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தள்ளுபடி மானியத்தைப் பற்றி மாண்புமிகு முதல்வர் அவர்கள், 7-4-1999 அன்று புது டில்லியில் நடைபெற்ற தேசிய கதர் கருத்தரங்கில் என்னைக் கலந்துகொள்ளச் செய்தார்கள், என்னுடன் தும்பு இணையத்தின் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. டேவிட் செல்வின் அவர்களும் வருகை தந்து இருந்தார்கள். அன்று கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவின் தலைவர், நிதி அமைச்சர், தொழில் துறை அமைச்சர், அனைவரையும் சந்தித்து மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கோரிக்கையை, தள்ளுபடி மானியம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டதை, நாங்கள் வலியுறுத்திச் சொன்னோம். கண்டிப்பாக இந்த ஆண்டு மும்பையில் இருக்கின்ற கதர் கிராமத் தொழில் ஆணைக் குழு தள்ளுபடி மானியம் அளிக்கும் என்று உறுதி அளித்து இருக்கிறது. அதன் அடிப்படையில் மானியம் கிடைப்பதற்குண்டான வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது, இப்போது வாக்கெடுப்பு.

## கோரிக்கை எண் 21—மீனளம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 21—மீனளம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை. திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை. திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாக கருதப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை. திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"மீன்வளம் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 48,63,55,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

### கோரிக்கை எண் 26 - கதர் கிராமத் தொழில்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 26 - கதர்-கிராமத் தொழில்கள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை. திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை. திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை. திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.



**"கதர்-கிராமத் தொழில்கள் பற்றிய 26ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 20,93,23,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.**

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(6-5-1999)* காலை *9-30* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் *1-38* மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

-ஏதுமில்லை-

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*186.* மானியக் கோரிக்கை எண் *26* - தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மற்றும் தமிழ்நாடு பனைப் பொருட்கள் வளர்ச்சி வாரியம் பற்றிய கொள்கையும் திட்டங்களும், *1999-2000.* (தமிழ், ஆங்கிலம்)

*187.* தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், தமிழ்நாடு பனைப் பொருட்கள் வளர்ச்சி வாரியம் ஆகியவற்றின் 'மக்கள் சாசனம்' என்ற புத்தகம், *1999.* (தமிழ், ஆங்கிலம்)

*188.* மானியக் கோரிக்கை எண் *21* - மீன்வளத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *1999-2000.* (தமிழ், ஆங்கிலம்)

*189.* மீன்வளத் துறை பற்றிய செயலாக்க வரவு-செலவுத் திட்டம், *1999-2000.* (தமிழ், ஆங்கிலம்)

*190.* மதிப்பீட்டுக் குழுவின் பதினேழாவது அறிக்கை, *1998-99.*

*191.* பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எண்பத்து நான்காவது அறிக்கை, *1998-99.*

*192.* பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எண்பத்து ஐந்தாவது அறிக்கை, *1998-99.*

*193.* பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எண்பத்து ஆறாவது அறிக்கை, *1998-99.*

*194.* பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எண்பத்து ஏழாவது அறிக்கை, *1998-99.*

*195.* பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எண்பத்து எட்டாவது அறிக்கை, *1998-99.*

—0—



## இணைப்பு - I

*(332 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

### கோரிக்கை எண் 28 கதர்-கிராமத் தொழில்கள்

### கொள்கை விளக்கக் குறிப்பு 1999 - 2000

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் *1960* ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள், *1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியச் சட்டப்படி நிறுவப்பட்டது. ஊரக வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள மற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் கிராமப் பகுதிகளில் கதர் மற்றும் கிராமத் தொழில்களை மேம்படுத்துவதற்கு திட்டங்கள் வகுத்து செயல்படுத்துவதுதான் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் தொடங்கப்பட்டதன் நோக்கமாகும்.

*2.* தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் முக்கிய குறிக்கோள்கள்:

(அ) நலிவுற்ற மக்களுக்கு வேலைவாய்ப்பு அளித்தலும் வேலை வாய்ப்புகளை அதிகரித்தலும்,

(ஆ) உள்ளூரிலேயே கிடைக்கும் மூலப்பொருட்கள் மற்றும் இதர வசதிகளைப் பயன்படுத்தி விற்பனையாகக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்ய வழிவகுத்தல்,

(இ) கிராமப்புற ஏழை மக்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்தி, தன்னம்பிக்கை நிலையினை அடைந்திட உதவுதல்.

*3.* மும்பையிலுள்ள கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட *115* கிராமத் தொழில்களில் *59* கிராமத் தொழில்களையும் மற்றும் கதர் தொழில்களையும் வாரியம் மூன்று வகைகளில் பின்வருமாறு செயல்படுத்துகிறது :

[1999 மே 5

| | எண்ணிக்கை |
|---|---|
| (1) வாரியத்தின் சொந்த தொழில் பிரிவுகள் | 968 |
| (2) வாரியம் பதிவு செய்த தொழில் கூட்டுறவு அமைப்புகள் | 1,707 |
| (3) கதர் கிராமத் தொழில் ஆணைக் குழு அளிக்கும் வழிகாட்டு நெறிமுறைகளின்படி நிதியுதவி அளிக்கப்பட்ட கைவினைஞர்கள் | 88,116 |

அதுமட்டுமின்றி, தமிழ்நாடு அரசின் திட்டங்களான ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் போன்ற சிறப்புத் திட்டங்களை ஆங்காங்கே மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையுடன் இணைந்து கிராமப்புற மக்களின் வேலைவாய்ப்பினை அதிகரித்து, சமூகத்தில் அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திடவும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

4. எண்ணெய், பருப்பு மற்றும் தானிய வகைகள், நார், சுண்ணாம்பு, பிரம்பு மற்றும் மூங்கில் ஆகிய இதர தொழில்கள் கூட்டுறவு அமைப்புகள் மற்றும் தனி நபர்கள் மூலமாகவும், கதர் தொழில்கள், உண்ணா எண்ணெய் மற்றும் சோப்புத் தொழில்கள், வாரியத்தின் சொந்த அலகுகள் மூலமாகவும் செயல்படுத்தப்படுகின்றன. ஏனைய அனைத்து கிராமப்புற தொழில்களும் வாரியத்தின் சொந்த அலகுகள் மூலமாகவும் செயல்படுத்தப்படுகின்றன. ஏனைய அனைத்து கிராமப்புற தொழில்களும் வாரியத்தின் சொந்த தொழில் பிரிவுகள், தொழிற் கூட்டுறவு அமைப்புகள் மற்றும் தனி நபர்கள் மூலமாக செயல்படுத்தப்படுகின்றன.

**கதர்**

5. வாரிய அலகுகள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கதர் உற்பத்தி செய்யப்படுகிறது. கிராமிய நூற்பு நிலையங்களின் செயல்பாடுகள் ஆய்வு செய்யப்பட்டு, தொடர்ந்து வேலைவாய்ப்பினை வழங்கிட ஒருங்கிணைக்கப்பட்டது. அவை சிறப்புறச் செயல்பட வாரியம் தற்போது 358 கிராமிய நூற்பு நிலையங்களை நடத்தி வருகிறது. பெரும்பாலும் உலோகத்தினாலான இராட்டைகள் பெண்களால் இயக்கப்படுகின்றன. அவ்வாறு உற்பத்திசெய்து பெறப்பட்ட நூல்,



1999 மே 5]

இவ்வாரியத்தின்கீழ் இயங்கும் 86 உற்பத்திக் கேந்திரங்களின் வழியாக நெசவாளர்களுக்கு நெசவு செய்வதற்காக விநியோகம் செய்யப்படுகிறது. இத்தொழிற் பிரிவுகள் மூலம் 40,145 கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது. அவர்களுள் 35,760 பேர் மகளிர் ஆவர். முன்னோடித் திட்டமாக ஐந்து அலகுகளில் புதிய 8 கதிர் இராட்டைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றின் முன்னேற்றத்திற்கேற்ப அரசு நிதியுதவியுடன் பகுதி 2 திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றின்கீழ் வாரியம் மேலும் 11 அலகுகளுக்கு விரிவாக்க முனைந்துள்ளது. இதனால், கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பினை அதிகப்படுத்தவும் குறிப்பாக, பெண்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கவும் வகை செய்யப்படுகிறது. வாரியம் 1999-2000 ஆம் ஆண்டில் நல்ல தரமுள்ள விற்பனையாகக்கூடிய கதர் ரகங்களை ரூ.10.00 கோடி அளவிற்கு உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயம் செய்துள்ளது.

**கதர் பட்டு**

6. பட்டுத் துணிகள், புடவைகள், கறை தவிர்க்கும் பட்டுப் புடவைகள், வேட்டிகள் மற்றும் இதர துணி இரகங்களை வாரியம் தனது 34 பட்டு உறபத்தி நிலையங்க்ள் மூலம் உற்பத்தி செய்து வருகிறது. தமிழ்நாடு மற்றும் வட மாநிலங்களில் அதிகரித்து வரும் பட்டுத் தேவையை நிறைவேற்றும் பொருட்டு ரூ.27.00 கோடி மதிப்புள்ள கதர் பட்டு இரகங்கள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

7. வாரியத்திலுள்ள கணினிகளைப் பயன்படுத்தி அதன்மூலம் புதிய வடிவமைப்புகளில் தயாரிக்கப்பட்ட பட்டுச் சேலைகள் இவ்வாண்டில் பெருமளவில் வாடிக்கையாளர்களைக் கவர்ந்தன. கணினிமூலம் வடிவமைப்பு செய்து வாரியத்தினால் தயாரிக்கப்பட்ட பட்டுச் சேலைகளை 'இணையம்' (இன்டர்நெட்) மூலம் விளம்பரப்படுத்த வாரியம் முனைந்துள்ளது. அதன் விளைவாக உலகளவில் விழிப்புணர்ச்சியை ஓரளவிற்கு வருங்காலங்களில் தோற்றுவிக்க இயலும்.

**கதர் பாலியஸ்டர்**

8. தற்போது, கதர் பாலியஸ்டர் துணிகளின் தேவை மிகவும் அதிகரித்துள்ளது. இதனால், 1999-2000 ஆம் ஆண்டில் ரூ.8.00 கோடி அளவில் கதர் பாலியஸ்டர் இரகங்களை உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

[1999 மே 5

**பஞ்சுடைக்கும் அலகு நவீனப்படுத்துதல்**

9. சூலூரிலுள்ள பஞ்சுடைக்கும் அலகினை நவீனப்படுத்தும் முகத்தான் கடந்த ஆண்டில் ரூ.25.00 இலட்சம் மதிப்பில் சிம்ப்ளக்ஸ் இயந்திரம் அரசு மானிய உதவியுடன் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்த இயந்திரத்தின் மூலம் வாரியம் நல்ல தரம் வாய்ந்த பஞ்சுப் பட்டைகளை உற்பத்தி செய்து வருகிறது. சிம்ப்ளக்ஸ் இயந்திரம் முழுத் திறனுடன் இயங்கவும் ஒரே மாதிரியான பட்டைகளைத் தயாரிக்கவும் பழைய புளோ ரூமினை மாற்றி முழுத்திறன் கொண்ட புதிய புளோ ரூம் ஒன்றினை ரூ.35.00 இலட்சம் மதிப்பில் 1999-2000 ஆம் ஆண்டில் பகுதி-2 திட்டத்தின்கீழ் அரசு உதவியுடன் வாங்கி நிறுவுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

**நெசவாளர்கள் மற்றும் கைவினைஞர்கள் நலத் திட்டம்**

10. வாரியம் கைவினைஞர்களுக்கான நலநிதித் திட்டத்தினை வகுத்துள்ளது. கைவினைஞர்களின் ஊதியத்திலிருந்து 10 விழுக்காடு தொகையினைப் பிடித்தம் செய்து அதற்கு ஈடாக வாரியமும் 10 விழுக்காடு தொகையினை நலநிதியாக வழங்கி வருகிறது. மேற்படி நிதி கைவினைஞர்களின் சொந்த செலவுகளுக்காகக் கேட்கப்படுகின்ற சமயங்களில் சில விதிகளுக்குட்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. நூற்போர் மற்றும் நெய்வோர்களுக்கு ஊதியத்துடன் 10 விழுக்காடு தொகையினை ஊக்குவிப்புத் தொகையாக வாரியம் வழங்கி வருகிறது.

11. வாரியம் நெசவாளர்களுக்கு அச்சு மற்றும் விழுதுகளை நியாயமான விலையில் அரசின் நிதியுதவியுடன் அவ்வப்போது பகுதி 2 திட்டத்தின்கீழ் கிடைக்கத்தக்க வகையில் செயல்படுத்தி வருகிறது.

12. வாரிய நூற்பாளர்கள்/நெய்வோர் மரணமுற்றால் அவர்களது வாரிசுதாரர்களுக்கு வாரியத்திலிருந்து ரூ.10,000/- கருணைத் தொகை வழங்கிடும் திட்டத்தினையும் நடைமுறைப்படுத்தி வருகிறது.

**கதர் மற்றும் பட்டுரக விற்பனைக்கான தள்ளுபடி**

13. விழாக் காலங்களில் ஆண்டுதோறும் 10 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடி கதர் மற்றும் பட்டு இரகங்களின் விற்பனைக்கு 90 நாட்களுக்கும், கதர் பாலியஸ்டர் துணி விற்பனைக்கு 60 நாட்களுக்கும் அரசு வழங்குகிறது. கதர் கிராமத் தொழில் ஆணைக் குழு, பருத்தி, கதர், கம்பளி மற்றும் பாப்டா இரகங்களின் விற்பனைக்கு ஆண்டு முழுவதும் 10 விழுக்காடு விற்பனைத் தள்ளுபடியும், விழாக் காலங்களில்



1999 மே 5]

கதர் பட்டு மற்றும் பாலியஸ்டர் இரகங்களுக்கு 90 நாட்களுக்கு 10 விழுக்காடு சிறப்பு விற்பனைத் தள்ளுபடியும் வழங்குகிறது.

14. அத்துடன், கதர் மற்றும் கிராமத் தொழில் ஆணைக் குழு சிறப்புத் தள்ளுபடியாக 10 விழுக்காட்டினை 15-2-1999 முதல் 20-3-1999 வரை மேலும் 30 நாட்களுக்கு ஞாயிற்றுக்கிழமையினைத் தவிர நீட்டித்து வழங்கியுள்ளது. இதற்கு இணையாக தமிழ்நாடு அரசு மேற்படி காலத்திற்கு சிறப்புத் தள்ளுபடியினை வழங்கியுள்ளது.

**கிராமத் தொழில்கள்**

15. கிராமத் தொழில்கள், நுகர்வோர் தேவைக்கேற்ப கிராமங்களில் ஆங்காங்கே கிடைக்கின்ற மூலப்பொருட்களைக் கொண்டும், மனித சக்தியினைக் கொண்டும் பொருட்களை உற்பத்தி செய்வதன் மூலம் கிராமப்புறங்களில் உள்ள ஏழ்மை நிலையை நீக்கிட ஏதுவாக அமைக்கப் பெற்றுள்ளன. அதிக அளவில் வேலைவாய்ப்பினைக் குறைந்த மூலதனத்துடன் ஏற்படுத்தித் தரக்கூடிய முக்கியத்துவத்தை கிராமத் தொழில்கள் பெற்றுள்ளன. இதனாலேயே அரசு தனது பண்டகப் பொருட்கள் வாங்கும் கொள்கையை மாற்றி அமைத்துள்ளது. தமிழ்நாடு அரசு சிறைத் துறைக்கு அடுத்தபடியாக அனைத்து அரசுத் துறைகளிலும், அரசு நிறுவனங்களிலும் பண்டகப் பொருட்கள் வாங்குதல், இயந்திரப் பொறி சீராக்கம் மற்றும் பழுது பார்த்தல் ஆகியவற்றிற்குக் கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின் சொந்த அலகுகள் மூலம் தயாரிக்கப்படும் இனங்களிலேயே நிறைவேற்றிட முன்னுரிமைப்படுத்தி ஆணை வழங்கியுள்ளது.

16. இவ்வாரியத்தின்கீழ் 214 துறை அலகுகள் செயல்படுகின்றன. 1,684 கிராமத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு செயல்படுகின்றன. இதுவரை 88,116 தனிப்பட்ட கைவினைஞர்களுக்குச் சொந்தமாகத் தொழில் தொடங்கிட நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. 1999-2000 ஆம் ஆண்டில் கிராமத் தொழில் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை, முறையே ரூ.275 கோடி மற்றும் ரூ.295 கோடிக்கு திட்டமிடப்பட்டுள்ளது.

**உண்ணா எண்ணெய் மற்றும் சோப்பு**

17. தமிழகத்தில் கிராமப்புறங்களில் மிகவும் ஏழ்மை நிலையிலுள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பினை அளித்திட கதர் கிராமத் தொழில் வாரியத்தினால் நடத்தப்படும் கிராமத் தொழில்களில் உண்ணா

எண்ணெய் மற்றும் சோப்புத் தொழில் முக்கியமானதாகும். வாரியத்தின் கீழ் 37 அலகுகள் செயல்பட்டு வருகின்றன.

18. வாரியத்தினால் உற்பத்தி செய்யப்படும் குளியல் சோப்புகள், வேம்பு, சந்தனம், வெள்ளை மற்றும் கார்பாலிக் சோப்பு மற்றும் நீலநிற சலவைத் தூள் உட்பட, மக்களால் பெருமளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டு சந்தையில் ஒரு நல்ல இடத்தினைப் பெற்றுள்ளன. தொடர்ந்து நடைபெறும் ஆராய்ச்சியின் விளைவாக நிலையான தரத்தினைப் பெற்றதினாலும், வெளிச் சந்தை விலையை விடக் குறைவாக உள்ளதாலும் வாரிய தயாரிப்புகளுக்கு மக்களுடைய ஆதரவு தொடர்ந்து கிடைத்து வருகிறது.

19. இத்தொழிலுக்குத் தேவையான எண்ணெய் எளிதில் கிடைக்காத நிலையிலும், விலை அதிகமாக இருந்த போதிலும், தரம் குறையாத வகையில் தொடர்ந்து உற்பத்தி செய்ய புதிய தயாரிப்பு முறைகள் கண்டுபிடிக்கப்பட்டு வாரியத்தினால் சோப்புகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

20. சலவை சோப்புகளை, மேலும் கவரத்தக்க வகையில் வடிவமைக்கவும், சிறிய அளவிலும் மக்கள் எளிதில் வாங்கத்தக்க அளவிலும் முன்னேற்றங்களைச் செய்ய வாரியம் முயன்று வருகிறது. சலவைத் தூளில் (டிடர்ஜெண்ட் பவுடர்) நறுமணத்தைச் சேர்க்கவும் மிகத் தூய்மையாக வெளுக்கத்தக்க வகையில் கோபுரம் சலவை சோப்பில் முன்னேற்றத்தினை ஏற்படுத்தவும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

21. புதிய தயாரிப்பு முறைகள் மூலம் தரமான சலவை சோப்புகள் விரைவில் சந்தையில் அறிமுகப்படுத்திட முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**தோல் தொழில்**

22. வாரியம், 25 காலணிகள் தயாரிக்கும் அலகுகளை நடத்தி வருகிறது. இந்த அலகுகள் மூலம் காவலர், ஊர்காவலர் ஆகியோருக்கு அம்யூனிஷன் பூட்ஸ், ஷூக்கள் மற்றும் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு நடத்துனர் தோல் பைகள், மற்றும் காலணிகள், துறைமுக பொறுப்பாட்சிக் குழுமத்திற்கு பிற தோல் பொருட்கள் தயாரிப்பதோடு கதரங்காடிகள் மூலம் பொது மக்களின் தேவை மற்றும் ரசனைக்கேற்ப பொருட்கள் தயாரிக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.



**தச்சு மற்றும் கருமாரத் தொழில்**

23. வாரியத்தினால் வேலைவாய்ப்பு அளிக்கும் பெரும் தொழில்களில் தச்சு மற்றும் கருமாரத் தொழிலும் ஒன்றாகும். இதன்மூலம் கிராமப்புறங்களில் பரம்பரை கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை வாரியம் உருவாக்கித் தருகிறது. வாரியம் மூன்று பெரும் தச்சு மற்றும் கருமாரத் தொழில் அலகுகளை, சென்னையில் கிண்டி தொழிற்பேட்டையிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் பேட்டையிலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் திருப்பூரிலும் நிர்வகித்து வருகிறது. அத்துடன் சிறு அலகுகளையும் நடத்தி வருகிறது. இவற்றால் அரசுத் துறைகளின் பெரும்பான்மை தேவைகளை நிறைவேற்றி வருகிறது.

**கைமுறை காகிதத் தொழில்**

24. தற்போது வாரியத்தின்கீழ் 20 கைமுறை காகித அலகுகள் இயங்கி வருகின்றன. இவற்றில் காகிதம் மற்றும் அட்டைக் காகிதங்கள் தயாரிக்கப்படுகின்றன. இவை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, நீதித் துறை மற்றும் அரசுத் துறைகளின் தேவையைப் பூர்த்தி செய்கின்றன. சில குறிப்பிட்ட இனங்களின் தேவைக்கேற்ப வாரியம் தனது நடவடிக்கைகளை அதற்கேற்ப மாற்றியமைத்து கைமுறை காகித மற்றும் அதனைச் சார்ந்த பொருட்களை உள்ளூர் சந்தையைக் கவரும்வண்ணம் தேர்ந்தெடுக்கப்பட்ட சில அலகுகள் மூலம் உற்பத்தி செய்ய முனைந்துள்ளது. பிடாகம் கைமுறை காகித அலகில் உருளை வார்ப்பட இயந்திரம்; முறைப்படி நவீனப்படுத்தி நல்ல தரமான கைமுறை காகிதம் உற்பத்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**தேனீ வளர்ப்புத் தொழில்**

25. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் கன்னியாகுமரி மாவட்டத்தில் மார்த்தாண்டத்திலும் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் ஜவ்வாது மலையிலும் பெருமளவில் தேன் கொள்முதல் செய்கிறது. அவ்வாறு கொள்முதல் செய்யப்படும் தேன், மார்த்தாண்டம், திண்டுக்கல், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி மற்றும் ஜவ்வாது மலையில் உள்ள தேன் பதப்படுத்தும் மையங்களில் பதப்படுத்தப்பட்டு கதர் அங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன. கதர் அங்காடிகளில் விற்பனை செய்யப்படும் தேன் பொது மக்களிடம் நல்ல தரமான சுத்தமான தேன் என்ற நற்பெயரினைப் பெற்றுள்ளது.

வாரியம், வருடம் முழுவதும் தங்கு தடையின்றி தேன் கொள்முதல் செய்து, விற்பனை அங்காடிகள் மூலம் விநியோகம் செய்ய அனைத்து நடவடிக்கைகளையும் முழு மூச்சுடன் மேற்கொண்டுள்ளது.

**மட்பாண்டத் தொழில்**

*26.* வாரியத்திலுள்ள 4 மட்பாண்ட அலகுகளில், மெருகு மட்பாண்டங்கள், டெரகோட்டா மற்றும் அழகு வண்ண ரக மட்பாண்டப் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. இங்கு தயாரிக்கப்படும் பொருட்கள் யாவும் சந்தையில் நல்ல இடத்தினைப் பெற்றுள்ளன. மேற்கூறிய மையங்களில் தயாரிக்கப்படும் அழகு வண்ண மட்பாண்டப் பொருட்கள் மாநிலம் முழுவதும் உள்ள கதர் அங்காடிகள் மூலம் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

**விற்பனை வாய்ப்பு**

*27.* மரம் மற்றும் இரும்பினால் செய்யப்பட்ட பொருட்களை பிரபலப்படுத்தும் நோக்கத்தான், 1998-99 ஆம் ஆண்டு சென்னை பிரதான கதர் அங்காடியில் பொருட்காட்சி நடத்தப்பட்டது. சென்னையில் அண்ணா நகர் மற்றும் தியாகராய நகர், கோயம்புத்தூர், சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி, ஆகிய இடங்களில் உள்ள கதர் அங்காடிகளில் பட்டுத் துணி இரகங்கள் பொருட்காட்சி நடத்தப்பட்டது. அண்மையில் நடைபெற்ற 'அகில இந்திய கைத்தறி ஏற்றுமதி வர்த்தகக் கண்காட்சி 1999'-ல் கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இந்தியாவின் அனைத்து இடங்களிலிருந்தும் வந்திருந்த பார்வையாளர்களின் கவனத்தை இக்கண்காட்சி பெரிதும் ஈர்த்தது.

*28.* தமிழக அரசின் நிதியுதவியுடன் கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்களின் சிறப்பியல்புகளைப் பற்றி கவரும் வகையில் தரமான விளம்பரப் படங்கள் தயாரிக்கப்பட்டு தொலைக் காட்சி மற்றும் விண்வெளிக்கோள் வழி ஒளிபரப்பப்பட்டன.

*29.* பட்டுச் சேலைகளுடன் கிராமத் தொழில் பொருட்களான தோல், கைமுறை காகிதம், தேன் மற்றும் சோப்பு ஆகிய பொருட்களுக்கும் இணையம் (இன்டர்நெட்) மூலம் விளம்பரப்படுத்தப்படுகிறது. வாரியத்தால் மேற்கொள்ளப்படுகின்ற இத்தகைய முயற்சிகள் வியாபார மார்க்கங்களை வரும் ஆண்டுகளில் பெருமளவில் உயர்த்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.



**கதர் அங்காடிகள் மற்றும் கிராமிய விற்பனை நிலையங்கள்**

*30.* வாரியத்தின்கீழ் இயங்கும் 234 அங்காடிகள் மற்றும் 16 கிராமிய விற்பனை நிலையங்கள் மூலம் கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இவைகளுடன் தோல் பொருட்களை மட்டும் விற்பனை செய்வதற்காக 14 தோல் பொருட்கள் விற்பனை நிலையங்கள் செயல்படுகின்றன. கதர் இரகங்களை ரூ.55.00 கோடிக்கும் மற்றும் கிராமத் தொழிற் பொருட்களை ரூ.295.00 கோடிக்கும் 1999-2000 ஆம் ஆண்டில் விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

**தமிழ் மென்பொருள் மற்றும் கணினிமயமாக்குதல்**

*31.* வாரிய மைய அலுவலகத்தில் "எழுத்து உருவாக்கம்" மற்றும் கணக்குகளை கணினிமயமாக்கும் பொருட்டு 1998-99 ஆம் ஆண்டில் பகுதி-2 திட்டத்தில் அரசின் நிதியுதவியுடன் கணினிமயமாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. கடிதப் போக்குவரத்து பெரிதும் தமிழில் மட்டுமே மேற்கொள்ளும் வகையில் தமிழ் மென்பொருள் அறிமுகப்படுத்தப்பட்டு தற்போது பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**பகுதி-2 திட்டங்கள் (புதிய திட்டம்)**

*32.* தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் 1999-2000 ஆம் ஆண்டில் அரசின் நிதியுதவியுடன் கீழ்க்கண்ட புதிய திட்டங்களை பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ.68.50 இலட்சம் மதிப்பில் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது:

*(அ) சூலூரில் அமைந்துள்ள பஞ்சுடைக்கும் அலகினை நவீனமயமாக்குதல்:*

கோயம்புத்தூர் மாவட்டத்தில் சூலூரிலுள்ள பஞ்சுடைக்கும் அலகினை ரூ.35.00 இலட்சம் மதிப்பில் நவீனப்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

*(ஆ) கதர் அங்காடிகளை நவீனமாக்குதல்:*

ஒரு கதர் அங்காடிக்கு ரூ.0.75 இலட்சம் வீதம் 30 கதர் அங்காடிகளை ரூ.22.50 இலட்சம் மதிப்பில் நவீனப்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

[1999 மே 5

**(இ) குளியல் சோப்பு அலகுகளை நவீனமாக்குதல்:**

தஞ்சாவூர் மாவட்டம், நாஞ்சிக்கோட்டை மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரத்தில் அமைந்துள்ள குளியல் சோப்பு அலகுகளை நவீனப்படுத்தி தற்போதுள்ள குளியல் சோப்பின் தரத்தை மேலும் உயர்த்தி நிலைப்படுத்தி தேவையான நீராவி கொதிகலன்களை தலா ரூ.5.00 இலட்சம் செலவில் நிறுவிட திட்டமிட்டுள்ளது.

**(ஈ) எண்ணெய், சோப்பு மற்றும் தேன் பரிசோதனை ஆராய்ச்சிக் கூடத்தினை நவீனமாக்குதல்:**

எண்ணெய், சோப்பு மற்றும் தேன் பரிசோதனை ஆராய்ச்சிக் கூடத்தில் பல்வகையான மிக நுட்பமான இரசாயனப் பொருட்களைப் பாதுகாக்க குளிர்சாதனப் பெட்டி மற்றும் உறையச் செய்யும் கருவி (ப்ரீசர்) ரூ.1.00 இலட்சம் மதிப்பில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்**

33. பழங்குடியினர் பருவ விவசாய வேலையை மட்டுமே சார்ந்திராமல் அவர்களது பொருளாதார மேம்பாட்டுக்கு உகந்த கிராமத் தொழில் திட்டங்கள் சிலவற்றை தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் செயல்படுத்தி வருகிறது. பழங்குடியினர் குடும்பங்களுக்கு தேனீ வளர்ப்புத் தொழில் ஒரு நல்ல வருவாய் ஈட்டித் தரும் தொழிலாக நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும், கடுக்காய் பதப்படுத்துதல், புளி பதப்படுத்துதல், பாய் நெய்தல், பிரம்பு மற்றும் மூங்கில் கூடைகள் முடைதல், புங்கம் எண்ணெய் பிழிந்தெடுத்தல் போன்ற பிற கிராமத் தொழில்கள் பழங்குடியினரின் நலத் துணைத் திட்டமாக அவர்களின் முன்னேற்றத்திற்காகச் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து இதுவரையில் வாரியம் ரூ. 511.13 இலட்சம் அளவுக்கு 8,231 பழங்குடியினருக்கு உதவி செய்துள்ளது.

**கிராமப்புற வேலை வாய்ப்பு செயல்பாட்டுத் திட்டம் விளிம்புத் தொகை திட்டம்**

34. மும்பை கதர் கிராமத் தொழில் ஆணைக் குழு ஆகஸ்ட் 1996-ல் கிராமப்புறங்களில் வாழுகின்ற கைவினைஞர்களுக்குச் சிறப்பு வேலைவாய்ப்புகளை அளிப்பதற்காக விளிம்புத் தொகைத் திட்டம் என்ற புதிய திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டம் அனைத்து கிராமப்புற தொழில்களுக்கும் பொருந்துமாறு அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் வங்கிகளிடமிருந்து நிதி



1999 மே 5]

உதவி பெறலாம். திட்ட மதிப்பீட்டில் 25 விழுக்காடு விளிம்புத் தொகையாக பின்புல மானியமாக மும்பை கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவால் அளிக்கப்படும். பயனாளிகளின் பங்கு 10 விழுக்காடு ஆகும். ஆதி திராவிடர்/பழங்குடியினர் மற்றும் மகளிர் முனைவர்களுக்கு 30 விழுக்காடு விளிம்புத் தொகை ஒதுக்கப்படும். 5 விழுக்காடு மட்டுமே அவர்களின் பங்காக அமையும்.

**மைய அரசு ஏற்கும் திட்டங்கள்**

**மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்**

35. இத்திட்டத்தின்கீழ் தேனீ வளர்ப்பு, எலுமிச்சை புல் தைலம் எடுத்தல் மற்றும் நீலகிரித் தலைமை வடிகட்டுதல், பாய், பிரம்பு மற்றும் மூங்கில் தொழில்களுக்கு நிதி உதவி செய்தல் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டத்தில் ரூ.69.34 இலட்சம் நிதி உதவி மூலம் 3,717 நபர்கள் பயன் அடையும் வகையில் வடிகலன்கள், தேனீப்பெட்டிகள், கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

36. 1975-76 ஆம் ஆண்டு முதல் நீலகிரி மாவட்டத்தில் இயற்கையையே நம்பியிருக்கும் மலைவாழ் மக்களுக்கு வேலைகளுக்கான வாய்ப்புகளை வாரியம் உருவாக்கித் தந்திருக்கிறது. வாரியம் 5,886 நபர்கள் பயனடையும் வகையில் ரூ.178.75 இலட்சம் செலவில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளது.

**சிறப்பு மைய நிதியுதவி**

37. ஆதி திராவிட கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு தோல், தேனீ வளர்ப்பு, பிரம்பு மற்றும் மூங்கில், தச்சு மற்றும் கருமார் போன்ற பல்வேறு திட்டங்கள் தீட்டப்பெற்று சிறப்பு உள்ளடக்க திட்டத்தின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதுவரை 37,317 ஆதி திராவிட கைவினைஞர்கள் ரூ.27.07 கோடி பெற்று சிறப்பு மைய நிதி உதவியின்கீழ் பயனடைந்துள்ளனர்.

**வாரியத்தின் நிதிநிலை**

38. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் கதர் நிதி மற்றும் கிராமத் தொழில் நிதி என்ற இருவகைத் தலைப்பின்கீழ் வரவு செலவு திட்டங்களைத் தயாரிக்கிறது. பல்வேறு கதர் மற்றும் கிராமத் தொழில் திட்டங்களை செயல்படுத்த நிதியுதவினை மும்பை கதர் கிராமத்

[1999 மே 5

தொழில் ஆணைக்குழு இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி உதவி கொள்கையின்படி அனுமதித்து வருகிறது.

39. ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டம் 1998-99-ன்படி மும்பை கதர் கிராமத்தொழில் ஆணைக்குழு வாரியத்திற்கு கீழ்க்கண்ட நிதியுதவிகளை ஒதுக்கியுள்ளது:

| திட்டம் | கதர் ஆணைக் குழுவின் நிதி | | வங்கிநிதி | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | மானியம் | மூலதனக் கடன் | நடைமுறை கடன் | மூலதனக் கடன் | |
| | | | (ரூ. இலட்சத்தில்) | | |
| கதர் | 38.36 | .. | 155.33 | 1,708.83 | 1,902.52 |
| கிராமத் தொழில்கள் (தொடர்ச்சி திட்டம்) | 9.77 | .. | .. | .. | 9.77 |
| **மொத்தம்** | **48.13** | .. | **155.33** | **1,708.83** | **1,912.29** |

40. மேலும் மாநில அரசால் ஒப்படைக்கப்படும் பல்வேறு சிறப்புத் திட்டங்களை செயல்படுத்தி நிறைவேற்ற மாநில அரசிடமிருந்து வாரியம் நிதியுதவி பெற்று வருகிறது. மாநில அரசால் வழங்கப்பட்ட நிதியுதவி பற்றிய விவரங்கள் பின்வருமாறு:

| | திருத்திய மதிப்பீடு 1998-99 | திட்ட மதிப்பீடு 1999-2000 |
|---|---|---|
| | (ரூ. இலட்சத்தில்) | |
| 1. நிகர செலவு மானியம் | 606.38 | 900.00 |
| 2. தணிக்கைக் கட்டணம் | 120.00 | 212.90 |
| 3. கதர் விற்பனை தள்ளுபடி | 874.04 | 875.00 |
| 4. சிறப்புத் திட்டங்களை செயல்படுத்துவதற்காக (பனைபொருள் உட்பட) | 163.95 | 105.33 |
| மொத்தம் | **1,764.37** | **2,093.23** |



1999 மே 5]

## தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியம்

### 1999-2000ஆம் ஆண்டிற்கான கொள்கைகளும் திட்டங்களும்

41. தமிழ்நாடு பனைப்பொருள் வளர்ச்சி வாரியம், 6-1-1995 முதல் செயல்பட்டு வருகிறது. நலிவுற்ற ஏழை பனைத் தொழிலாளர்களுக்கு சுயவேலை வாய்ப்பு அளித்து, அவர்களது பொருளாதார நிலையை உயரச் செய்வதே இவ்வாரியத்தின் முக்கிய நோக்கமாகும். மாநில மற்றும் மாவட்ட சம்மேளனங்கள், பனை வெல்ல கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பனைத் தொழிலாளர்களுக்கு சுயதொழில் தொடங்க நிதி உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் பனைத் தொழிலில் ஆறு இலட்சம் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். கிராமப் பகுதியில் உள்ள பனைத் தொழிலாளர்கள் முன்னேற்றம் அடைய, பகுதி-2 திட்டத்தின் கீழ் சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், பனைத் தொழிலில் நவீன தொழில் நுணுக்கங்களைப் புகுத்தி, பொருட்கள் உற்பத்தி செய்ய பனைத் தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

42. இவ்வாரியத்தின் கீழ் ஒரு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையமும், 7 மாவட்ட பனைவெல்ல கூட்டுறவுச் சம்மேளனங்களும், 1,008 ஆரம்ப பனைவெல்ல கூட்டுறவுச் சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன. ஆரம்ப பனைவெல்ல கூட்டுறவுச் சங்கங்கள், கைவினைஞர்களைக் கொண்டு பனைப்பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்கின்றன. மாவட்ட சம்மேளனங்கள் மற்றும் மாநில சம்மேளனம் நேரிடையாக தனது அலகுகள் மூலம் பனைப் பொருட்களை உற்பத்தி செய்கின்றன. இந்த அமைப்புகள் மூலமாகவும், மாநிலமெங்கும் உள்ள கதர் அங்காடிகள் மூலமாகவும், பனைப்பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

43. மாநில இணையத்திற்கும், 7 மாவட்ட சம்மேளனங்களுக்கும் பொறுப்பாளர்களுக்கான தேர்தல் நடத்தப் பெற்று, அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் மற்றும் பொறுப்பாளர்களால் இந்த அமைப்புகள் நிர்வகிக்கப்படுகின்றன.

44. தமிழ் நாட்டில், பனைத்தொழிலில் தற்போது பனை வகை பொருட்களான பதநீர், பனைவெல்லம், பனஞ்சீனி, பனங்கற்கண்டு மற்றும் பனஞ் சர்க்கரை கொண்டு தயாரிக்கப்படும் பான வகைகள், இனிப்பு சாக்லெட் வகைகள், பனை ஓலைப் பொருட்கள், பனைநார்

பொருட்கள், பனந்தும்பு, பனந்தும்பினால் செய்யப்பட்ட தூரிகைகள், பல்வேறு வகையான ஈச்சங் கூடைகள் மற்றும் இதர வகையான கைவினைப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அரசின் பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறைகளுக்கு விதைப்பதற்காக பனை விதைகள் விநியோகம் செய்யப்படுகின்றன.

**உற்பத்தி**

45. 1999-2000ஆம் ஆண்டில் ரூ. 170.00 இலட்சம் மதிப்புள்ள பனைப்பொருட்கள் உற்பத்தி செய்திட குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**விற்பனை**

46. பனைப் பொருட்களை உரிய காலத்தில் விற்பனை செய்ய பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1999-2000ஆம் ஆண்டிற்கு ரூ. 200.00 இலட்சம் மதிப்புள்ள பனைப் பொருட்களை விற்பனை செய்திட குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**வேலைவாய்ப்பு**

47. பனைத் தொழிலில் தமிழகம் முதன்மை வகித்து வருகிறது. இத்தொழிலில் ஆறு இலட்சம் கைவினைஞர்கள் ஈடுபட்டுள்ளனர். 1999-2000ஆம் ஆண்டில் 700 பனைத் தொழில் பயனாளிகளுக்கு வேலை வாய்ப்பு அளித்திட திட்டமிடப்பட்டுள்ளது.

**பனந்தும்பு ஏற்றுமதி**

48. தூத்துக்குடியிலுள்ள பனந்தும்பு ஏற்றுமதி அலகின் மூலம் பெல்ஜியம், அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற அயல்நாடுகளுக்கு பனந்தும்பு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 39.37 இலட்சம் மதிப்புள்ள பனந்தும்பு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. 1998-1999ஆம் ஆண்டில் தும்பு ஏற்றுமதி செய்வதற்கான குறியீடாக ரூ. 200.00 இலட்சம் நிர்ணயிக்கப்பட்டு, அதில் இதுவரை ரூ.81.59 இலட்சம் மதிப்புள்ள தும்பு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. 1999-2000ஆம் ஆண்டில் ரூ.200.00 இலட்சம் மதிப்புள்ள பனந்தும்பினை ஏற்றுமதி செய்திட திட்டமிடப்பட்டுள்ளது.



**வளர்ச்சிப் பணிகள்**

49. 1999-2000ஆம் ஆண்டில் பகுதி 2 திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படவுள்ள திட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு:

| வ.எண் | திட்டத்தின் பெயர் | செலவுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | சென்னை எழும்பூரிலுள்ள தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையத்தின் பதநீர் பிரிவுக்கு குளிர்சாதன இயந்திரம் மற்றும் பாலித்தீன் பேக்கிங் இயந்திரம் கொள்முதல் செய்தல். | 5.00 |
| 2 | ஈரோடு மாவட்டம் மாத்தூரில் தூரிகை அலகு நிறுவுதல். | 2.75 |
| 3 | மதுரை-விருதுநகர் திண்டுக்கல் மாவட்ட பனைவெல்லக் கூட்டுறவு சம்மேளனத்தின்கீழ் ஸ்ரீவில்லிப்புத்தூரில் பதநீர் பதப்படுத்தும் அலகு தொடங்குதல். | 9.00 |
| | மொத்தம் .. .. | **16.75** |

**பனைத் தொழிலில் பயிற்சிகள்**

50. அரசின் ஊரக வளர்ச்சித் துறையில் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்மூலம் கிராமப்புற கைவினைஞர்களுக்கு பனைத் தொழில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. கடலூரில் தென்மண்டல பனைத் தொழில் பயிற்சி மையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்தப் பயிற்சி மையத்தில் இம்மாநிலத்திலுள்ள பல்வேறு மாவட்டங்களிலிருந்து வருகின்ற கிராமப்புற பனைத் தொழிலாளர்களுக்கும், அண்டை மாநிலங்களிலிருந்து வரும் தொழிலாளர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இந்த மையத்தில் ஆண்டுதோறும் 110 நபர்களுக்கு நபர் ஒன்றுக்கு மாதம் ரூ. 350.00 உதவித் தொகையுடன் கூடிய பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

51. கிராமப்புறங்களில் உள்ள பனைத் தொழில் கைவினைஞர்களுக்கு அதிக அளவில் வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பதுதான் தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் திட்டமாகும். சிறிய அளவு மூலதனத்துடன், உள்ளூரில் கிடைக்கும் மூலப் பொருட்களை பயன்படுத்தி, நாள்தோறும் மக்கள் வாங்கி பயன்படுத்தும் மற்றும் இலகுவாக விற்பனையாகும் பொருட்களை உற்பத்தி செய்து அதன்மூலம் கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த இத்திட்டங்கள் வகை செய்கின்றன.

[1999 மே 5

# இணைப்பு-II

*(332 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## கோரிக்கை எண் 21 மீனளம்

### கொள்கை விளக்கக் குறிப்பு 1999-2000

**முன்னுரை**

இந்தியாவின் மிகத் தொன்மை வாய்ந்த துறைகளில் ஒன்றான தமிழ்நாட்டின் மீன்வளத் துறையானது கடல் மற்றும் உள்நாட்டு நீர்வள ஆதாரங்களிலிருந்து மீன் உற்பத்தியை மேம்படுத்துவதில் நாட்டம் செலுத்தி வருகிறது. கடல் பொருட்களுக்கு அதிக மதிப்பினை பெற்றுத்தர வேண்டும் என்ற நோக்கத்தில் துறையானது பன்னாட்டு சந்தையினையும் மீன் தொழிலினையும் ஒருங்கிணைக்க முயற்சி செய்யும். மேலும் மீன் உற்பத்தியின் அனைத்து நிலைகளிலும் சுகாதாரம் மற்றும் தர அளவுகள் பன்னாட்டு தரக்கட்டுப்பாட்டிற்கு நிகராக இருக்கவும் மீன்வளத் துறையானது முயற்சி செய்யும். எல்லா உள் கட்டமைப்பு வசதிகளும் மேம்படுத்தப்பட்டு பன்னாட்டு தர அளவில் அவற்றை பராமரிக்க துறை அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும். இதில் மீன் தொழிலைச் சார்ந்த அனைத்துப் பிரிவினரின் மனமாற்றம் அடங்கும். இதன் மூலம் மீன்பொருட்களின் தர பராமரிப்பு என்பது மீனவர்களின் ஒரு வாழ்க்கை நெறியாகவே மாறிவிடும்.

**மீன்வளத் துறையின் கொள்கை - நோக்கங்கள்**

(அ) சுற்றுச் சூழலுக்கு உகந்த, வளங்குன்றாத் தொழில் நுட்பங்களின் மூலம் மீன் உற்பத்தியை அதிகரித்தல்.

(ஆ) பன்னாட்டு சந்தைகளின், தரத்திற்கேற்ப மீன் தொழிலை ஒருங்கிணைத்தல்.

(இ) மீன்களின் தரம் பேணுவதை மீனவ மக்கள் தங்கள் வாழ்க்கை நெறியாக மேற்கொள்ளச் செய்தல்.

(ஈ) அந்நிய செலாவணி வருவாயை அதிகரித்தல்.

(உ) பெண்களுக்கு முன்னுரிமையளித்து மீனவ சமுதாயத்தின் சமூக, பொருளாதார நிலையை மேம்படுத்த பொறுப்பேற்றல்.



1999 மே 5]

(ஊ) இயங்கவல்ல மீனவர் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவி கூட்டுறவு இயக்கத்தை வலுப்படுத்துதல்.

1999-2000 ஆம் ஆண்டில் செயல்படுத்துவதற்காக முன்மொழியப்படும் திட்டங்களின் விவரங்கள் கீழே சுருக்கமாக குறிப்பிடப்படுகிறது:

**I. கடல் மீன்வளம்**

தமிழ்நாடு 1,000 கி.மீ. நீள கடற்கரை, 1.9 இலட்சம் ச.கி.மீ. பரப்பு பொருளாதார தனியுரிமை மண்டலம் மற்றும் 41,412 ச.கி.மீ. பரப்பு கடல்படுகை நீளத் தொடர் ஆகிய கடல் வள ஆதாரங்களைக் கொண்டது. மீன் வளர்ப்பு மற்றும் மீன்பிடிப்பில் முன்னணியில் திகழும் ஒரு மாநிலம் தமிழ்நாடு ஆகும். மேலும் அது கடல் பொருள் ஏற்றுமதியில் பெரும்பங்கு வகிக்கிறது. இந்தியாவின் மொத்த கடல் பொருள் ஏற்றுமதியில் 25 விழுக்காடு அளவான ரூ. 1,000 கோடி மதிப்புக்கு தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதியாகிறது. இங்கே மொத்தம் 442 கடல் மீன்பிடி கிராமங்கள் உள்ளன. சுமார் 8.53 இலட்சம் கடல் மீனவர்கள் உள்ளனர். இவற்றுள் சுமார் 2.62 இலட்சம் மீனவர்கள், நேரடியாக மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளனர். தற்பொழுது கடல் மீன்பிடிப்பில் சுமார் 9,896 மீன்பிடி விசைப்படகுகளும், 42,537 பாரம்பரிய மீன்பிடி படகுகளும் மீன்பிடி தொழிலில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. ஆகவே, தற்பொழுதுள்ள மீன்வளம் மிகுந்த மீன்பிடிப்பு இடங்களை நன்கு பாதுகாத்து வளங்குன்றா மீன்பிடிப்பை மேம்படுத்தி கடல் மீன்பிடிப்பு மேற்கொள்ள வேண்டும் என்பது நமது எதிர்கால கடல் மீன்வள கொள்கையின் நோக்கமாகத் திகழும். இதுவரையிலும், மீன்பிடிப்பு மேற்கொள்ளப்படாத தூரக் கடல் பகுதிகளில் பல்வகையான மீன்பிடி சாதனங்களைக் கொண்டு பல நாட்கள் தங்கி விசைப்படகுகளின் மூலம் மீன்பிடிப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

**1. பாரம்பரிய மீன்பிடி கலன்கள் இயந்திரமாக்குதல்**

இத்திட்டம் பாரம்பரிய மீன்பிடி கலன்களை வள்ளம் மற்றும் கட்டுமரங்களில் உட்பொருத்தும் மற்றும் வெளிப் பொருத்தும் இயந்திரங்களைப் பொருத்தி, மீன்பிடி கலன்களை இயந்திரமயமாக்கிட மீனவர்களுக்கு உதவி புரிகின்றது. மத்திய அரசும், மாநில அரசும் இதற்காக வழங்கப்படும் மானியத் தொகையை சம்மாகப் பகிர்ந்து கொள்கின்றன. இத்திட்டத்தின்கீழ் இயந்திரத்தின் விலையில்

[1999 மே 5

50 விழுக்காடு தொகை மானியமாக வழங்கப்படுகிறது. உட்பொருத்தும் இயந்திரங்களை பொறுத்தவரை ஒரு மீனவருக்கு அதிகபட்சமாக ரூ.12,000/-மும், வெளிப்பொருத்தும் இயந்திரத்திற்கு ரூ.10,000/-க்கு மிகாமலும் மானியமாக வழங்கப்படுகின்றது. இயந்திரத்தின் விலையில் மீதமுள்ள 50 விழுக்காடு தொகையை பயனாளி மீனவரே ஏற்றுக் கொள்ள வேண்டும். 1987-88 முதல் 1998-99 முடிய 11,633 உட்பொருத்தும் / வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் பாரம்பரிய மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் பாரம்பரிய மீனவர்கள் ஒவ்வொருவருக்கும் நைலான் மீன்பிடி வலைகள் வாங்குவதற்கு ரூ.6,000 வீதம் மானியம் வழங்கப்படுகின்றது. இத்திட்டம் கடலில் தொலை தூரப் பகுதிகளில் நீண்ட நேரம் தங்கி மீன்பிடிப்பு மேற்கொள்ளவும், கரைக்கு விரைவாக திரும்பி வரவும் மீனவர்களுக்கு பெரிதும் உதவுகின்றது. இத்திட்டம் 1999-2000 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**2. மீனவர்களுக்கு தொலை தொடர்பு குறிப்பிட்ட என் மூலம் அழைக்கும் வசதியுடன் கூடிய உலக கடல் அபாய மற்றும் பாதுகாப்பு அறிவிப்பு சாதனங்கள் வழங்குதல்**

மீன்பிடி விசைப்படகுகளுக்கு 25 விழுக்காடு அரசு மானியத்தில் 1,500 வி.எச்.எப் தொலை தொடர்பு சாதனங்களை வாங்கி வழங்குவதற்கு 1997-98 ஆம் ஆண்டில் அரசு ஒரு முன்னோடி திட்டமாக ரூ. 75 இலட்சத்திற்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. 1-2-1999 முதல் GMDSS உலக அளவில் உபயோகத்திறகு வந்துள்ளது. கடல் மீன்பிடிப்புக்குச் செல்லும் மீனவர்களின் உபயோகத்திற்கான GMDSS/DSC வசதிகளுடன் கூடிய இந்த வி.எச்.எப். தொலை தொடர்பு சாதனங்கள் மீனவர்களின் உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பினை அதிகரிக்கும். கடலில் தத்தளிக்கும் மீன்பிடி கலனை இக்கருவியின் மூலம் கண்டறிந்து காப்பாற்ற முடியும். தற்போது கடல் பரிசோதனையில் உள்ள இக்கருவிகள் விரைவில் மீனவர்களுக்கு வழங்கப்படும்.

**3. ஒருங்கிணைந்த மீன் கண்டறியும் மற்றும் கடல் வழி காட்டும் கருவிகள்**

தூரக் கடல் மீன் பிடிப்புக்குச் செல்லும் 50 மீன்பிடி விசைப்படகுகளுக்கு 25 விழுக்காடு அரசு மானியத்தில் மீன்களை கண்டறியும் ஐம்பது கருவிகளை வாங்கி வழங்குவதற்கு 1998-99 ஆம் ஆண்டில் அரசு ரூ.8.13 இலட்சத்திற்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.



1999 மே 5]

கடலில் மீன்களை கண்டறியும் மற்றும் வழிகாட்டும் கருவிகளை வாங்கி வழங்குவதைவிட மீன்களைக் கண்டறியும் எதிரொலிப்பான் (Echo Sounder) கருவிகள் விலை குறைவாகவும், பயன்படுத்த எளிதாகவும் உள்ளதாக மீனவர்கள் உணர்வதால் அவற்றை மீனவர்களுக்கு வாங்கி வழங்கப்படும்.

**4. கண்ணாடி நாரிழை கட்டுமரங்கள்**

1998-99 ஆம் ஆண்டில் 100 கண்ணாடி நாரிழை கட்டுமரங்களை வாங்கி மீனவர்களுக்கு 50 விழுக்காடு மானியத்தில் வழங்குவதற்கு அரசு ரூ.25 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. 56 பாரம்பரிய மீனவர்களுக்கு ரூ.14.00 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**5. பாக் ஜலசந்தி பகுதியில் மீனவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள்**

பாக் ஜலசந்தி பகுதியில் இலங்கை கடற்படை மற்றும் தமிழ் ஈழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே ஏற்படும் துப்பாக்கிச் சூட்டில் இந்திய மீனவர்கள் அடிக்கடி பாதிக்கப்படுவது தமிழ்நாட்டிலுள்ள மீனவ சமுதாயத்தினரிடையே மிகுந்த கொந்தளிப்பையும், எதிர்ப்புகளையும் உருவாக்கியுள்ளது. 1997 ஆம் ஆண்டில் மட்டும் இவ்வாறான 16 நிகழ்வுகளில் 18 மீன்பிடி படகுகள் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன. இவற்றில் 2 படகுகள் மூழ்கடிக்கப்பட்டன. 16 மீனவர்கள் காயமடைந்துள்ளனர். 9 மீனவர்கள் உயிரிழந்துள்ளார்கள். மேலும், 1998 ஆம் ஆண்டில் (31-3-1999 வரை) மீனவர்கள் மீது தாக்கப்பட்ட 5 நிகழ்வுகளில் 6 மீனவர்கள் உயிரிழந்துள்ளனர். ஒரு படகு மூழ்கடிக்கப்பட்டது. மூன்று மீனவர்கள் காயமடைந்தனர். இவ்வாறான அனைத்து நிகழ்வுகளும் மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டுச் செல்லப்பட்டு இலங்கை அரசின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ள ஒவ்வொரு மீனவர் குடும்பத்திற்கும் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூபாய் ஒரு இலட்சம் உடனடி நிவாரணமாக வழங்கப்படுகின்றது. 31-03-1999 வரை 8 படகுகள் மற்றும் 170 மீனவர்கள் இலங்கையிலிருந்து திரும்ப அழைத்து வரப்பட்டனர். இதற்காக துறை எடுத்துக்கொண்ட காலம் மிகவும் குறைவு. மேலும் இதுபோன்ற விபத்துக்களும் கணிசமாக குறைக்கப்பட்டுள்ளன. இதனால் மீன்வளத் துறைக்கு மீனவரிடையே நன்மதிப்பு அதிகரித்துள்ளது.

[1999 மே 5

**6. இலங்கையில் காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களின் குடும்பத்திற்கு நிதியுதவி**

மோசமான வானிலை காரணமாக மீன்பிடி படகுகள் மற்றும் படகிலுள்ள பணியாளர்கள் இந்திய கடல் பகுதியிலிருந்து வழி தவறி இலங்கை கடல் பகுதிக்குள் இழுத்துச் செல்லப்படுகின்றனர். இலங்கை அரசால் மீனவர்கள், படகுகளுடன் கைது செய்யப்பட்டு இலங்கையில் காவலில் வைக்கப்படுகின்றனர். அவ்வாறான சூழ்நிலைகளில் காவலில் வைக்கப்பட்டுள்ள மீனவர்களின் குடும்பங்கள் உண்ண உணவின்றி தவிக்கும் சூழ்நிலையினைத் தவிர்க்கும் நோக்கத்துடன் மீனவர் குடும்பம் ஒவ்வொன்றிற்கும், அவர்கள் இலங்கையில் காவலில் வைக்கப்பட்ட நாள் முதல் தாயகம் திரும்பும் நாள் வரை நாளொன்றுக்கு ரூ.50 வீதம் வழங்குவதற்கு ரூ. 2 இலட்சத்திற்கு அரசு ஆணை வழங்கியுள்ளது. 1998 ஆம் ஆண்டில் 29 குடும்பங்கள் இந்தத் திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளனர். இத்திட்டம் 1999-2000 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**7. அன்னிய நாட்டு மீனவர்களை தாயகம் அனுப்புதல்**

இந்திய கடல்பகுதிக்குள் கைப்பற்றப்படும் அயல்நாட்டு சரக்குக் கப்பல், பணியாளர் மற்றும் மீனவர்களைத் திரும்ப அனுப்பும் முறையினை ஒழுங்குபடுத்த கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை செயலர் தலைமையில் ஒரு நிலைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. 1998-ஆம் ஆண்டில் இந்திய கடற்பகுதியில் தமிழக கடல் பகுதிக்குள் பிடிபட்ட 23 இலங்கை மீனவர்களும் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டனர். இதேபோல் 23 மியான்மர் மீனவர்களும் மியான்மருக்கு திருப்பி அனுப்பப்பட்டனர். இதுபோன்ற துரித நடவடிக்கைகளினால் வெளிநாட்டைச் சேர்ந்த மீனவர்களை நாம் விரைவாக திருப்பி அனுப்புதல் மூலம் அண்டை நாட்டினரின் நன் மதிப்பைப் பெறுவதுடன், அவர்கள் கடல் பகுதிக்குள் அடித்துச் செல்லப்பட்டு அங்கே காவலில் வைக்கப்படும் நமது மீனவர்களை எளிதில் மற்றும் விரைவாக திரும்ப அழைத்துவர ஏதுவாக இருக்கும்.

**8. கடல் மீன்பிடிப்பு ஒழுங்குபடுத்தும் சட்டம்**

மீன்வளத் துறைக்காக கட்டப்பட்டு வரும் நீலம், முத்து, பவளம், கயல், மற்றும் வலம்புரி ஆகிய ஐந்து அதிவேக ரோந்து படகுகளும்



1999 மே 5]

பணியில் ஈடுபடுத்தப்பட்ட உடன் தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குபடுத்தும் சட்டம் நடைமுறைக்கு வர உதவும். இந்த ஐந்து ரோந்து படகுகளும் சென்னை, மல்லிப்பட்டினம், இராமேசுவரம், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய தளங்களிலிருந்து செயல்படும்.

**9. சென்னை மெரினா மீன்காட்சியகத்தினை நவீனப்படுத்துதல்**

சென்னை மெரினாவிலுள்ள மீன்காட்சியகத்தினை நவீனப்படுத்துவதற்கு 1998-99-ஆம் ஆண்டு ரூ.10 இலட்சத்திற்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இப்பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பார்வைக்கு தற்போது திறந்து வைக்கப்பட்டுள்ளது.

**10. கடலில் மீன் வளர்ப்பு**

ஒருங்கிணைந்த கடல் மீன் வளர்ப்புடன் இணைந்து கடல் மீன்பிடிப்பு அறிமுகப்படுத்தப்படவுள்ளது. சுற்றுப்புறச் சூழலுக்கு இசைவாக இக்கடல் மீன்வளர்ப்பு கடற்கரை ஓரத்தில் மேற்கொள்ளப்படும். குறைந்த செலவில் தூண்டில் மற்றும் சக்தியினை சேமிக்கும் பொறிகள் உபயோகப்படுத்தப்படும். செயற்கை உணவிடுதலோ, உரமிடுதலோ இக்கடல் மீன் வளர்ப்பில் கிடையாது. இவ்வளர்ப்பில் கடலின் அடியில் செயற்கை பாறைகள் இருக்கும். இதன் மேற்பகுதியில் நீள வாக்கில் மற்றும் குறுக்குக் கம்பிகள் அமைக்கப்பட்டு அவற்றில் ஆளிகள், முத்துச் சிப்பிகள் மற்றும் கடற்பாசிகள் வளர்க்கப்படும்.

**11. சமுதாய அடிப்படையில் முத்து வளர்ப்பு**

சமுதாய அடிப்படையில் முத்து வளர்ப்புத் திட்டம் மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திட மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிலையத்துடன் இணைந்து செயல்படுத்தப்படவுள்ளது.

**12. தெரு விளக்குகள் அமைத்தல்**

200 மீனவ கிராமங்களில் 2,578 தெரு விளக்குகள் அமைக்க (ஒரு விளக்கிற்கு ரூ.4,200 வீதம்) மொத்தத் தொகையான ரூ.108.57 இலட்சத்திற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**13. இணைப்புச் சாலைகள் அமைத்தல்**

390 மீனவ கிராமங்களில் 528 கி.மீ. நீள இணைப்புச் சாலைகள் ரூ.29.84 கோடியில் அமைப்பதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

### 14. கரையேற்றும் படகுகள்

25 விழுக்காடு மானியத்தில் 100 பிளைவுட் கரையேற்றும் படகுகளை வாங்க, மத்திய அரசின் பங்குத் தொகையான ரூ. 11 இலட்சத்தைச் சேர்த்து மாநில அரசு ரூ.22 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. மீதமுள்ள 70 விழுக்காட்டுத் தொகை வங்கிக் கடனாகவும் மற்றும் 5 விழுக்காட்டுத் தொகை பயனீட்டாளர்களின் பங்காகவும் பெறப்படும். தூத்துக்குடி மண்டலத்தில் விரைவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

### 15. செயற்கை உறைவிடப் பாறைகள் அமைத்தல்

மத்திய அரசின் 100 விழுக்காடு நிதியுதவியுடன் தமிழகத்தில் சோழ மண்டல கடற்கரை மற்றும் மன்னார் வளைகுடா பகுதிகளில் இரண்டு மீன் செயற்கை உறைவிடங்கள் ரூ. 8 இலட்சம் செலவில் அமைப்பதற்கு தமிழக அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்காக காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள பழையநடுக்குப்பம் மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள தருவைக்குளத்திற்கும் சிப்பிக்குளத்திற்கும் இடைப்பட்ட பகுதி தெரிவு செய்யப்பட்டுள்ளது. மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிலையத்தின் ஆலோசனையுடன் இப்பணி நடைபெற்று வருகிறது.

### 16. பாரம்பரிய மீனவர்களின் மீன்பிடி கலன்கள் மற்றும் மீன்பிடி சாதனங்களுக்குக் காப்புறுதி

மீனவ சமுதாயத்தில் நலிவுற்ற பிரிவினரின் மீன்பிடி கலன்கள், இயந்திரங்கள் மற்றும் மீன்பிடி சாதனங்களை காப்புறுதி திட்டத்தின் கீழ் பாதுகாப்பிற்குக் கொண்டு வருவது இத்துறையின் கொள்கை அளவில் உள்ளது.

### 17. சோடியம் விளக்குகள் அமைத்தல்

12 கடலோர மாவட்டங்களில் மாவட்டத்திற்கு 5 மீன் இறங்கு தளங்களில், தளம் ஒன்றுக்கு இரண்டு சோடியம் விளக்குகள் வீதம் மொத்தம் 120 சோடியம் விளக்குகளை அமைத்திட 1998-99 ஆம் ஆண்டு அரசு ரூ.13.20 இலட்சத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. 7 மாவட்டங்களில் இப்பணி முடிவுற்றது.



## II. அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்

### 1. மீன்பிடித் துறைமுகம் மற்றும் மீன் இறங்கு தளங்கள்

தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளில் உள்ள 362 மீன்பிடி தளங்களில் பெரும்பாலான இடங்களிலிருந்து இயந்திரப் படகுகள் மீன்பிடிப்பில் ஈடுபட்டு வருகின்றன. மோசமான வானிலை காலங்களில் படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்தி வைக்கவும், பிடித்த மீன்களை கரை சேர்ப்பதற்கும், டீசல் பிடித்துக் கொண்டு வருவதற்கும் மட்டுமின்றி, பிடிக்கப்பட்ட மீன்களை கெடாமல் பாதுகாப்பான முறையில் நுகர்வோர் வாழும் ஊர்களுக்கு எடுத்துச் செல்ல ஏதுவாகவும், தேவையான அடிப்படை வசதிகளுடன் கூடிய தங்குதளங்கள் மற்றும் மீன் இறங்கு தளங்களை அமைப்பது அவசியமாகிறது. இந்நோக்கத்தின் அடிப்படையில் இவ்வசதிகள் எதிர்காலத்தில் சுயதேவைகளைப் பூர்த்தி செய்யும் அமைப்புகளாக ஏற்படுத்தப்படவுள்ளன.

### 2. இராமேசுவரம் மீன்பிடித் துறைமுகம்

இராமேசுவரத்தில் மீன்பிடி துறைமுகம் கட்டுவது தொடர்பான கருத்துரு மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது. இதற்கிடையே, மத்திய அரசின் அறிவுரைப்படி இராமேசுவரம் மீன்பிடி துறைமுக மாதிரி ஆய்வுத் திட்டம் தொடர்பான நடவடிக்கைகளை ரூ.12.05 இலட்சத்திற்கு இந்திய தொழில் நுட்ப நிறுவனம், சென்னை (ஐ.ஐ.டி) மற்றும் நீரியல் மற்றும் நீரோட்ட நிறுவனம் (ஐ.எச்.எச்) பூண்டி ஆகிய நிறுவனங்கள் ஏற்று நடத்தி வருகின்றன.

### 3. மீன் இறங்கு தளம் கட்டுதல்

புதிய கொள்கையினை அறிமுகப்படுத்தும் நோக்கில் பெரிய மீன் இறங்கு தளத்திற்கு பதிலாக சிறிய மதிப்பீட்டில் நவீன மீன் இறங்கு தளங்கள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளன. இதனால் அதிக மீனவர் பயன்பெறுவர். இதற்கிணங்க நவீன உலக தர நிர்ணயங்களின்படி 10 மீன் இறங்கும் தளங்களின் மேம்பாடு தொடர்பாக ரூ.15 கோடி தொகைக்கான கருத்துரு மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

## III. உள்நாட்டு மீன்வளம்

அறிவியல் ரீதியில் வடிவமைக்கப்பட்ட பயிற்சி மற்றும் விரிவாக்கத் திட்டத்தின் மூலம் பெரும் நீர்த்தேக்கங்கள், பெரிய மற்றும் சிறு பாசன குளங்கள், கிராம குளம், குட்டைகள் ஆகிய உள்நாட்டு நீர்

நிலைகளைப் பயன்படுத்தி அறிவியல் முறை நீர்த்தேக்க மீன்வள பராமரிப்பு மற்றும் தரமான மீன்குஞ்சு உற்பத்தி செய்வது, உள்நாட்டு மீன்வள கொள்கையின் முக்கிய நோக்கமாகும். பெரும் நீர்த் தேக்கங்களில் மீன் உற்பத்தியினை தமிழ்நாடு மீன் துறை (45 நீர்த்தேக்கங்கள்) மற்றும் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் (9 நீர்த்தேக்கங்கள்) மேற்கொண்டு வருகின்றன. மீன் துறை, மேலும் 32,000 ஹெக்டேர் நீர்ப்பரப்புள்ள பெரிய மற்றும் சிறிய பாசனக் குளங்களில் பெருங்கெண்டை மீன் குஞ்சுகள் இருப்பு செய்து உள்ளூர் மீனவர்களைக் கொண்டு மீன்பிடிப்பு நடத்தி வருகிறது. ஏனைய பாசன குளங்கள் உள்ளாட்சி அமைப்புகளால் குத்தகைக்கு விடப்படுகின்றன. மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள்மூலம் கூட்டு இன மீன் வளர்ப்பு தொழில் நுட்பத்தைக் கொண்டு ஊரக குளம், குட்டைகளில் சுமார் 5,000 ஹெக்டேரில் மீன் வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**1. மீன்குஞ்சு உற்பத்தி**

உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரிக்க தரமான உயர் இன மீன் குஞ்சுகள் மிகவும் இன்றியமையாதவைகளாகும். மீன்வளத் துறை, தமிழ்நாடு மீன் வள்ர்ச்சிக் கழகம் மற்றும் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளின் கட்டுப்பாட்டிலுள்ள மீன்குஞ்சு உற்பத்தி மையங்களின் மூலம் 500 இலட்சம் விரலளவு மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதனைத் தவிர மாநிலத்தில் 84 மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணைகள் தனியார் துறையில் அமைக்கப்பட்டு ஏறக்குறைய ஆண்டு ஒன்றுக்கு 600 இலட்சம் விரலளவு மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. தனியார் துறையில் தரமான மீன்குஞ்சு உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு மீன்வளத் துறை தனியாருக்கு ரூ.25,000 மானிய உதவியாக அரசு வழங்கி வருகிறது. தற்போதைய மீன் குஞ்சு உற்பத்தியினை நிலை நிறுத்த அரசு பழைய பண்ணைகளை பழுது பார்க்கும்/புதுப்பிக்கும் திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கி வருகின்றது. மீன்குஞ்சு உற்பத்தியாகும் நேரம் (தென்மேற்குப் பருவமழை) மற்றும் நீர் கிடைக்கும் காலம் (வடகிழக்குப் பருவமழை) ஆகியவற்றை ஒருங்கிணைப்பது மிகப் பெரிய பிரச்சனை. இதனை மத்திய ஆராய்ச்சி நிறுவனங்கள் மூலமாக தீர்க்கப்படும்.

**2. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 1998-99-ம் ஆண்டில் உதகமண்டலம் மாவட்டம் வெலிங்டன் ஏரியில் மீன் பொரிப்பக



மேம்பாடு மற்றும் அவலாஞ்சியில் டிரௌட் மீன்குஞ்சு உற்பத்தி மேம்பாடு மேற்கொள்ள அரசு ரூ.20.15 இலட்சம் ஒப்பளித்துள்ளது. இப்பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. உதகமண்டலம் மாவட்டத்தில் வண்ண மீன்காட்சியகம் அமைப்பதற்காக ரூ.25 இலட்சம் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கருத்துரு தயாரிக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**3. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்**

மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 1998-99 ஆம் ஆண்டில் கோவை மாவட்டம் சோலையாரில் ரூ.33 இலட்சம் செலவில் பொம்மீன் குஞ்சு உற்பத்தி நிலையம், ஆய்வுக் கூடம் மற்றும் நிர்வாகக் கட்டடம் அமைப்பதற்கு அரசு ஒப்பளித்துள்ளது. இப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 1999-2000 ஆம் ஆண்டில் ரூ. 35 இலட்சம் செலவில் மணிமுத்தாறில் தேசிய மீன் குஞ்சு பண்ணைக்கு நீர் விநியோக அமைப்பு மற்றும் சீன முறை மீன்குஞ்சு பொரிப்பகம் அமைப்பதற்கான திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

## IV. ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் விரிவாக்கம்

**(அ) ஆராய்ச்சி**

ஆறு ஆராய்ச்சி நிலையங்கள் ஒவ்வொன்றும் ஒரு மீன்வளத் துறை உதவி இயக்குநரின் கட்டுப்பாட்டில் உள்ளன. மாநில மீன்வள ஆராய்ச்சி குழுமத்தால் ஜூன் 1998-ல் அனுமதிக்கப்பட்ட 16 வகை ஆய்வுத் திட்டங்களில் மொத்தம் 36 ஆராய்ச்சி உதவியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். ஆராய்ச்சியின் முக்கிய நோக்கம் செயல்முறை சார்ந்த ஆய்வுமூலம் மீன்வளத் துறை வளர்ச்சியடைய உதவுவதாகும். மீன்வளத் துறையானது மத்திய நன்னீர் மீன் வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம், மத்திய உவர்நீர் மீன் வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம், மத்திய கடல்மீன் ஆராய்ச்சி நிலையம் ஆகிய மைய அரசின் ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் போன்ற அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து செயல்படும்.

**2. பழவேற்காடு ஏரியில் இறால் குஞ்சுகளை இருப்பு செய்தல்**

1998-99 ஆம் ஆண்டில் உவர்நீர் இறால் குஞ்சுகளை அடைப்புகளில் விட்டு வளர்த்து, பின்னர் அவற்றை பழவேற்காடு ஏரியில் இருப்

[1999 மே 5

செய்ய அரசு ரூ.14.11 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இதுவரை 9 இலட்சம் இறால் குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் பழவேற்காடு ஏரியில் கூடுதலான இறால் உற்பத்தியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**(ஆ) பயிற்சி**

ஆறு மீனவ பயிற்சி நிலையங்கள் நவீன மீன்பிடிப்பு நுட்பங்களில் மீனவ மாணவர்களுக்குப் பயிற்சி அளித்து வருகின்றன. இப்பயிற்சிக் காலம் 10 மாதங்களாகும். ஒவ்வொரு மீனவர் பயிற்சி நிலையத்திலும் 50 முதல் 60 மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகின்றது. இது தவிர 4 மீனவர் பயிற்சி நிலையங்களில் இளநிலை கம்மியர் பயிற்சியும் அளிக்கப்படுகின்றது.

மீனவர் பயிற்சி நிலையங்களில் படிக்கும் மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை ரூ.150/-லிருந்து ரூ.200/- ஆகவும், கடல் பயணப்படித் தொகையை ஒவ்வொரு பயணத்திற்கும் ரூ.1.25 லிருந்து ரூ.2.50 ஆகவும் அரசு உயர்த்தியுள்ளது.

**(இ) விரிவாக்கம்**

விரிவாக்க திட்டத்தின்கீழ் கருத்தரங்குகள், பொருட்காட்சிகள் ஆகியவை மாநில மற்றும் மாவட்ட அளவில் நடத்தப்படுகிறது. மீனவர் சமுதாயம் பயனுற அவர்களுக்கான தகவல்களை மக்கள் தொடர்பு சாதனமான அகில இந்திய வானொலி நிலையம் மற்றும் தொலைக்காட்சி வாயிலாக அறிவிக்கப்படுகிறது. கைப்பிரதிகள், துண்டு பிரசுரங்கள், திட்ட விளக்கக் கூட்டங்கள் ஆகியவற்றின் மூலமாக பலவகையான அறிவியல் ரீதியிலான தொழில் நுட்ப முன்னேற்றங்கள் பற்றியும் அரசு மற்றும் இதர நிறுவனங்கள் வழங்கும் உதவிகள் குறித்தும் மீனவர்களுக்கு தகவல்கள் அளிக்கப்படுகின்றன. மீன்வள தொழில் நுட்பத்தின் அண்மைகால முன்னேற்றங்கள் பற்றி மீனவர்களுக்கும், பொதுமக்களுக்கும் பிரச்சாரம் செய்ய மீன்வளத் துறையில் நான்கு விரிவாக்கம் மற்றும் பிரச்சார பிரிவுகள் செயல்படுகின்றன. சென்ற ஆண்டில் 25 வானொலி பேச்சுகளும், 12 தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் நிகழ்த்தப்பட்டன. மேலும் இத்துறை பல்வேறு பொருட்காட்சிகளில் பங்கேற்று பொதுமக்களுக்கும், மீனவர்களுக்கும் மீன்வளத் துறையின் திட்டங்கள் பற்றி பிரபலமாக்கி வருகின்றது.



1999 மே 5]

## V. உவர்நீர் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள்

தற்போது தமிழ்நாட்டில் 5 உவர்நீர் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் செயல்பட்டு வருகின்றன. உவர்நீர் மீன்வளர்ப்பு, கடல் நீர் மீன்வளர்ப்பு ஆகியவற்றை மேற்கொள்ள விரும்பும் மீன்வளர்ப்போருக்கு அவற்றை கற்பித்தல் மற்றும் பயிற்சி அளிக்கும் பொறுப்புக்கள் இம்முகமைகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

நீர் வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தின் உத்தரவின்படி அரசு ஒரு மாநிலக் குழு மற்றும் மாவட்டக் குழுக்களை அமைத்துள்ளது. மாவட்ட ஆட்சியாளர் மாவட்டக் குழுவிற்குத் தலைவராகவும், உவர்நீர் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமையின் தலைமை நிர்வாக அலுவலர் அதன் உறுப்பினர் செயலாளராகவும் இருக்கிறார்கள். தலைமை நிர்வாக அலுவலர்கள் வசம் உவர்நீர் இறால் வளர்ப்போரின் விண்ணப்பங்களை சரிபார்த்தல், மாவட்டக் குழுக் கூட்டங்களை நடத்துதல், தமது பரிந்துரைகளுடன் விண்ணப்பங்களை மாநில குழுவிற்கு அனுப்புதல் ஆகிய பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதுவரை 800 விண்ணப்பங்கள் உவர்நீர் இறால் வளர்ப்போரிடமிருந்து பெறப்பட்டு அவை பரிசீலனையில் உள்ளன. மாநிலக் குழுவானது 27 இறால் பண்ணைகளுக்கு அனுமதியளிக்க பரிந்துரை செய்துள்ளது.

## VI. வேளாண்மை மனிதவள மேம்பாட்டுத் திட்டம்

இத்துறை 1999-2000 ஆம் ஆண்டில் உலக வங்கி நிதியுதவியுடன் இத்திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்தும்: (1) ஆசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு நிலையங்களின் இணைப்பு (NACA) (2) தென்கிழக்கு ஆசிய மீன் வளர்ச்சி மையம், பிலிப்பைன்ஸ் (SEAFDEC), (3) தாய்லாந்திலுள்ள ஆசிய தொழில்நுட்ப நிலையம் ஆகியவற்றின் வாயிலாக தேர்ந்தெடுத்த தொழில்நுட்ப பிரிவுகளில் பயிற்சியாளர்களுக்குப் பயிற்சியளிப்பவர்களைப் பயிற்றுவிக்க முக்கியத்துவம் அளிக்கப்படும். இத்திட்டத்தில் மேலும் 30 பேர்களுக்குப் பயிற்சியளிக்கப்படும்.

[1999 மே 5

## VII. 1999-2000 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்

பின்வரும் புதிய திட்டங்கள் 1999-2000 ஆம் ஆண்டில் செயலாக்கப்படும்.

| வரிசை எண் (1) | திட்டத்தின் பெயர் (2) | மொத்தச் செலவு (ரூபாய் இலட்சத்தில்) (3) |
|---|---|---|
| 1. | மீனவர் மக்கட்தொகை கணக்கெடுப்பு | 5.00 |
| 2. | கடல்மீன் வளர்ப்பு செயல்விளக்கம் (கலவாமீன்) | 1.90 |
| 3. | மீன்வளத் துறையின் தொலைதூர கடல் மீன்பிடி செயல் விளக்கத்திற்காக ஒரு மீன்பிடி படகு. வாங்குதல் | 25.00 |
| 4. | மீன்வளத் துறையின் மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணைகளை மேம்படுத்துதல் | 10.00 |
| 5. | கழிவு நீரில் மீன்வளர்ப்பு | 2.50 |
| 6. | திருமூர்த்தி மற்றும் ஆழியாறில் உள்ள மீன்உற்பத்தி நிலையங்களில் நன்னீர் வண்ண மீன் உற்பத்தி | 10.00 |
| 7. | தனியார் தொழில் முனைவோருக்கு நன்னீர் இறால் குஞ்சு பொறிப்பகம் அமைக்க நிதியுதவி | 1.00 |
| | மொத்தம் | 55.40 |



1999 மே 5]

### 1. மீனவர் மக்கட்தொகை கணக்கெடுப்பு

கடல் மீனவர் மக்கட்தொகை கணக்கெடுப்பு 1986-ல் கடைசியாக நடத்தப்பட்டது. இந்த புள்ளிவிவர அமைப்பு பழையதாக ஆகிவிட்டது. மீன்பிடித் தொழிலின் இடுபொருள்களான வெளிப்பொருத்தும் மோட்டார், உட்பொருத்தும் இயந்திரம், புதியவகை மீன்பிடி கலன்கள், கருவிகள் ஆகியவற்றில் அதிக அளவில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. கடல் மீனவர் மக்கட்தொகையும் மிகப் பெரிய அளவில் வளர்ந்துள்ளது. தொலைநோக்கு திட்டத்திற்கான புள்ளி விவர அமைப்பு அவசரமாக புதுப்பிக்க வேண்டியுள்ளது. மீன்வளத் துறையின் பணியாளர்களைக் கொண்டு மீனவர் மக்கட்தொகை கணக்கெடுப்பு நடத்த ரூ. 5 இலட்சம் 1999-2000 ஆம் ஆண்டிற்கு செலவிடப்படவுள்ளது.

### 2. கடல் மீன்வளர்ப்பு செயல் திட்டம் (கலவா மீன்)

கலவா மீன் (**Epinephelus** Spp.) பெரிய அளவில் வளரக்கூடிய உயிரியல் மற்றும் வர்த்தகம் ஆகிய இரு அடிப்படைகளில் வளர்ப்பதற்கு ஏற்ற கடல் உணவு மீன். மேலும் அவை பன்னாட்டுச் சந்தையில் வேகமாக வளர்ந்து வரும் தேவையைக் கொண்ட மிகச் சிறந்த உணவு மீனாகும். எனவே தூத்துக்குடிக்கு அருகில் . புன்னக்காயல் என்ற இடத்திலுள்ள ஓர் உவர்நீர் குளத்தில் கலவா மீன் வளர்ப்பு செயல் விளக்கப் பண்ணை ஒரு முன்னோடித் திட்டமாக செயல்படுத்தப்படும். இதன் முக்கிய நோக்கம், தமிழகத்தில் கலவா மீன் வளர்ப்பதற்கு ஏதுவாக செயல் விளக்கம் செய்து பிரபலமாவதுடன் அவற்றை உயிருடன் ஏற்றுமதி செய்வதற்கான தொழில் நுட்பத்தை உருவாக்குவதுமாகும். இத்திட்டத்தை செயலாக்க ரூ.1.90 இலட்சம் செலவிடப்படவுள்ளது.

### 3. கடல் மீன்பிடிப்பை மேம்படுத்துவதற்கு ஒரு மீன்பிடி படகு வாங்குதல்

சமீபகாலங்களில் கடல் மீன்பிடித் தொழில் நடவடிக்கைகள் மிகவும் அதிகமாக பெருகியுள்ளதால் பாரம்பரிய மீனவர்களின் மீன்பிடிப்பு உரிமைகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே அண்மைக்கடல் பகுதியில் மீன்பிடிப்பதிலுள்ள நெரிசலைத் தவிர்க்கவும், மீன்பிடி விசைப்படகுகள், மாற்று மீன்பிடி உபகரணங்களை உபயோகித்தும் தூரக்கடல் பகுதியில் பலநாட்கள் தங்கியும் மீன்பிடிப்பை மேற்கொள்ள உதவும் நோக்குடன் ரூ.25 இலட்சம் செலவில் அனைத்து மீன்பிடி

உபகரணங்களுடன் மற்றும் கடற்பயண உபகரணங்களுடன் கூடிய 43-1/2 அடி மீன்பிடி படகு ஒன்றை கன்னியாகுமரி அண்மைக்கடல் நிலையத்திற்கு வாங்கி வழங்குவதற்கு அரசு உத்தேசித்துள்ளது.

**4. மீன்குஞ்சு பண்ணைகளில் வசதிகளை மேம்படுத்துதல்**

தற்பொழுதுள்ள மீன் பண்ணைகளை முழு அளவில் பயன்படுத்தி மீன்குஞ்சு உற்பத்தியை அதிகரிக்க மீன் துறை, அதன் கட்டுப்பாட்டிலுள்ள மீன்பண்ணைகளை பழுதுபார்க்கும் பணிகளை மேற்கொள்ள இருக்கிறது. இம்மேம்பாட்டுப் பணி பவானிசாகர், பூங்கார் மீன்பண்ணை மற்றும் சிற்றார் அணை-2-ல் 1999-2000 ஆம் ஆண்டில் ரூ.10 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படவுள்ளது.

**5. கழிவுநீரில் மீன்வளர்ப்பதற்கான முன்னோடித் திட்டம்**

சம்பந்தப்பட்ட மாநகராட்சிகள் மற்றும் மீன்வளத் துறையின் கூட்டு முயற்சியால் கழிவு நீரை கால்வாய் மூலம் எடுத்துச் சென்று குட்டைகளில் தேக்கி நன்முறையில் மீன் வளர்ப்பிற்கு பயன்படுத்திக் கொள்ள முடியும்.

இம்முயற்சியை தொடங்கும் முகமாக மதுரை மாநகராட்சி எல்லையில் கழிவு நீரில் மீன்வளர்க்கும் ஓர் ஒருங்கிணைந்த முன்னோடி வர்த்தகத் திட்டத்தை அறிமுகம் செய்ய முன்மொழியப்படுகிறது. இத்திட்டத்தைச் செயலாக்க மொத்தம் ரூ. 5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. மதுரை மாநகராட்சியின் ஆணையர் இத்திட்டத்தில் 50 விழுக்காடு செலவை (ரூ.2.50 இலட்சம்) ஏற்க இசைந்துள்ளார். இதன்மூலம் பெறப்படும் இலாபத்தை சம அளவில் மீன்வளத் துறை மற்றும் மதுரை மாநகராட்சி பகிர்ந்து கொள்ளும்.

**6. திருமூர்த்தி, ஆழியார் ஆகிய இடங்களில் வண்ண மீன் உற்பத்தி நிலையங்கள் அமைத்தல்**

இந்தியாவில் வண்ண மீன் உற்பத்தி முக்கியத்துவம் பெற்று வருகிறது. தற்போது, உள்ளூரில் நன்னீர் வண்ண மீன்கள் ஒரு குடிசைத் தொழில் போல ஏராளமான சிறு மீன்வளர்ப்போரால் உற்பத்தி செய்யப்படுகிறது. வர்த்தக அடிப்படையில் அறிவியல் பூர்வமாக வண்ண மீன்களை உற்பத்தி செய்தால், இத்தொழிலுக்கு உயர்வானதொரு



மதிப்பு கிடைத்து அதன்மூலம் மாநிலம் கணிசமான அன்னிய செலவாணியை ஈட்ட வழிவகுக்கும். வணிக நோக்கு அடிப்படையில் 1974-இல் அமைக்கப்பட்ட தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் இப்புதிய தொழிலில் ஈடுபடவுள்ளது. திருமூர்த்தி, ஆழியார் ஆகிய இரு நீர்த்தேக்கங்களும் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ளன. அங்கே நன்னீர் காட்சியக மீன் வகைகள் உற்பத்தி செய்வதற்கு ஏற்ற நீரியல்புகள் அமைந்துள்ளன. இந்நிலையங்கள் தேவையான அடிப்படை வசதிகளைக் கொண்டுள்ளன. எனவே, மாநில அரசு மொத்தம் ரூ. 10 இலட்சம் பங்கு மூலதனமாக தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்திற்கு நிதியுதவி அளிக்கப்பட உள்ளது. திருமூர்த்தி, ஆழியார் ஆகிய இடங்களில் வண்ண மீன் உற்பத்தி நிலையங்களை அமைப்பதற்கான செயலாக்கச் செலவினை தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் ஏற்கும்.

**7. தனியார் தொழில் முனைவோருக்கு நன்னீர் இறால் குஞ்சு பொரிப்பகம் அமைக்க நிதியுதவி**

இத்திட்டத்தின் நோக்கம் நன்னீர் இறால் வளர்ப்போருக்கு தேவையான் தரமான இறால் குஞ்சுகளை உற்பத்தி செய்வதற்காக தனியார் நன்னீர் இறால் குஞ்சு பொரிப்பகங்களை ஊக்குவிப்பதும், அதன்மூலம் நன்னீர் இறால் உற்பத்தியை அதிகரிப்பதுமாகும். 10 மில்லியன் இறால் குஞ்சுகளை உற்பத்தி செய்யும் திறன் வாய்ந்த ஒரு பொரிப்பகத்தை ஏற்படுத்த மொத்தம் ரூ.10 இலட்சம் (முதலீடு மற்றும் செயலாக்கச் செலவு) தேவைப்படும் என மதிப்பிடப்படுகிறது. இப்பொரிப்பகங்களை தனியார் தொழில் முனைவோரால் அமைத்துக் கொள்ள முடியும். தமிழ்நாட்டில் 1999-2000-ல் நன்னீர் இறால் குஞ்சு பொரிப்பகம் அமைப்பதற்காக 10 விழுக்காடு (அதிக அளவு ரூ. 1 இலட்சத்திற்கு உட்படுத்தி) மானியம் வழங்குமுகமாக மொத்தம் ரூ.1 இலட்சம் ஒப்பளிக்கப்படவுள்ளது.

**VIII. மீனவர் நலம்**

தமிழ்நாட்டில் மீனவர் நல மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்துவதற்கு முன்னுரிமையும், முக்கியத்துவமும் வழங்கப்பட்டு நடப்பாண்டிலும் கீழ்க்காணும் மீனவர் நல மேம்பாட்டுத் திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்துவதற்கு அரசு ஊக்கமும், ஆக்கமும் அளித்து வருகின்றது;

[1999 மே 5

(1) ம. சிங்காரவேலர் நினைவு மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டம்.

(2) குழு காப்புறுதித் திட்டம்.

(3) மீனவர் விபத்து காப்புறுதித் திட்டம்.

(4) மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்.

(5) உயர்வேக டீசல் எரியெண்ணெய் மீதான ஆயத்தீர்வையை மீனவர்களுக்கு திருப்பி வழங்குதல்.

(6) பாரம்பரிய மீனவர்கள் உபயோகிக்கும் உட் பொருத்தும் / வெளிப் பொருத்தும் இயந்திரங்கள் பொருத்தப்பட்ட மீன்பிடி கலன்களுக்கு மண்ணெண்ணெய்/டீசல் மானியம் வழங்குதல்.

**1. ம. சிங்காரவேலர் நினைவு மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டம்.**

*1996-97* ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ம. சிங்காரவேலர் நினைவு மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டம் என்ற சிறப்புத் திட்டத்தை தமிழக சட்டமன்றத்தில் அறிவித்ததைத் தொடர்ந்து இதுவரை *12,000* வீடுகளைக் கட்டுவதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. ஒவ்வொரு வீட்டிற்கான கட்டுமானச் செலவுத் தொகையை தற்பொழுதுள்ள கட்டுமானப் பொருட்களின் விலை உயர்வை கருத்தில் கொண்டு *1997-98*-ல் வழங்கப்பட்ட ரூ.*32,000* லிருந்து *1998-1999* ஆம் ஆண்டு முதல் ரூ.*37,000*-மாக அரசு உயர்த்தியுள்ளது. இத்திட்டம் *1999-2000* ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு மீனவர்களுக்கு *4,000* இலவச வீடுகள் கட்டித் தரப்படும்.

**2. மீனவர் குழு காப்புறுதித் திட்டம்.**

இந்தத் திட்டம் மாநில அரசால் மீனவர்களுக்கு தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் ஒரு மீனவருக்கு ஆண்டு சந்தாவாக ரூ.*12* வீதம் புதுதில்லியில் உள்ள தேசிய மீனவர் கூட்டுறவுச் சம்மேளனத்திற்கு செலுத்தப்பட்டு வருகிறது. இந்த சந்தாத் தொகையை மத்திய அரசும் மாநில அரசும் சமமாக ஏற்றுக்கொள்கின்றன. மீனவர்களிடமிருந்து எந்த ஒரு சந்தாத் தொகையும் வசூலிக்கப்படுவதில்லை. மீனவர் இறந்தாலோ அல்லது முழு ஊனமடைந்தாலோ ரூ.*35,000* அவர்களது குடும்பங்களுக்கு காப்புறுதி



1999 மே 5]

நிவாரணமாக வழங்கப்படுகிறது. பகுதி/நிரந்தர ஊனமடையும் மீனவர்களுக்கு ரூ.*17,500* காப்புறுதி நிவாரணமாக வழங்கப்படுகிறது.

மேலும், மத்திய அரசு நிதியுதவியுடன் அமல்படுத்தப்படும் விபத்துக் குழு காப்புறுதித் திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள வழிகாட்டும் முறைகளின் அடிப்படையில் மீனவர் ஒருவருக்கு மாநில அரசின் சார்பாகக் கூடுதலாக ரூ.*15,000* காப்புறுதி நிவாரணமாக வழங்கும் திட்டமும் சென்னையிலுள்ள யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத் திட்டத்திற்கான காப்பீட்டு சந்தாத் தொகை ஒவ்வொரு மீனவருக்கும் ரூ.*4.05* வீதம் மாநில அரசே முழுவதுமாக ஏற்றுக்கொள்கின்றது.

*1998-99* ஆம் ஆண்டிற்கு ஒரு மீனவருக்கு ரூ.*12* வீதம் *3,12,504* மீனவர்களுக்கு காப்புறுதி சந்தாவாக மாநில அரசு தனது *50* விழுக்காடு சந்தா பங்காக ரூ.*18.75* இலட்சத்தை புதுதில்லியிலுள்ள தேசிய மீனவர் கூட்டுறவுச் சம்மேளனத்திற்கு செலுத்தியுள்ளது. இனி வருங்காலத்தில் மீதமுள்ள *50* விழுக்காடு காப்புறுதி சந்தாத் தொகையினை புதுடில்லியிலுள்ள தேசிய மீனவர் கூட்டுறவுச் சம்மேளனத்திற்கு மத்திய அரசு நேரிடையாக செலுத்திவிடும்.

**3. மீனவர் விபத்து காப்புறுதித் திட்டம்.**

இத்திட்டம் *1995* ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு இணையத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிவித்தபடி இத்திட்டம் செப்டம்பர் *1998* முதல் மீன்வளத் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு மீனவருக்கும் ஆண்டு காப்புறுதி சந்தாவாக ரூ.*24*-ம், ஒவ்வொரு மீனவ மகளிருக்கும் ஆண்டு காப்புறுதி சந்தாவாக ரூ.*20*-ம், அவர்களோ அல்லது அவர்கள் பணிபுரியும் படகு, வள்ளம் மற்றும் கட்டுமர உரிமையாளர்களோ திருநெல்வேலியிலுள்ள நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனிக்கு செலுத்த வேண்டும். உள்நாட்டு மீனவரும் மற்றும் மீனவ மகளிரும் இத்திட்டத்தின்கீழ் காப்பீடு செய்யப்படுவார்கள். இத்திட்டத்தின்கீழ் மீனவரோ அல்லது மீனவ மகளிரோ இறந்தால் அவர்கள் குடும்பத்திற்கு காப்புறுதி நிவாரணமாக ரூ.*1.00* இலட்சம் வழங்கப்படும். அதேபோன்று அவர்கள் பகுதி ஊனமடைந்தால் நிவாரணமாக ரூ.*50,000* வழங்கப்படும். இதுவரை *59,000* மீனவரும், *5,000* மீனவ மகளிரும் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

[1999 மே 5

**4. மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்.**

மீனவர்கள் மீன்பிடிப்பிற்குச் செல்ல இயலாத காலங்களில் அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் முழுநேர தொழில் புரியும் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக உள்ள ஒவ்வொரு கடல் மீனவரிடமிருந்தும் மாதம் ஒன்றுக்கு ரூ.45 வீதம் எட்டு மாதங்களுக்கு வசூலிக்கப்படுகின்றது. மத்திய அரசு ரூ.360-ம், மாநில அரசு ரூ.360-ம் தங்களது பங்குத் தொகையாக செலுத்துகின்றன. மொத்தத் தொகை ரூ.1,080-ம் மீன்பிடிப்பு இல்லாத நான்கு மாத காலங்களில் மாதம் ஒன்றுக்கு ரூ.270 வீதம் சமமாக மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டம் தமிழ்நாட்டின் கடலோர மீனவ மக்களிடையே மிகவும் பிரபலமடைந்துள்ளது. 1998-99 ஆம் ஆண்டில் 1.69 இலட்சம் கடல் மீனவர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்க அரசு ரூ.12.17 கோடிக்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத்திட்டம் 1999-2000 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**5. உயர்வேக டீசல் எண்ணெய் மீதான ஆயத் தீர்வையை திரும்ப அளித்தல்.**

மீன்பிடி விசைப் படகுகள் உபயோகிக்கும் டீசல் எரியெண்ணெய் மீது செலுத்தும் மத்திய/மாநில ஆயத் தீர்வையை அவர்களுக்குத் திருப்பி அளிக்கும் மத்திய நிதியுதவித் திட்டத்தினை மாநில அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் மத்திய அரசு 80 விழுக்காடு நிதியுதவியும், மாநில அரசு 20 விழுக்காடு நிதியுதவியும் அளிக்கின்றன. 1997-1998 ஆம் ஆண்டில் மாநில அரசு பங்கான 20 விழுக்காடு நிதியுதவி ரூ.36.55 இலட்சம் அளித்துள்ளது. 1998-99 ஆம் ஆண்டில் மத்திய அரசின் 80 விழுக்காடு நிதியுதவியாக 21,500 கிலோ லிட்டர் உயர்வேக டீசல் எரியெண்ணெய்க்கு ரூ.60.00 இலட்சத்திற்கு இத்திட்ட செலவினத் தேவையை நிறைவேற்றுவதற்காக ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத்திட்டம் 1999-2000 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**6. பாரம்பரிய மீன்பிடி கலன்களை உபயோகிக்கும் மீனவர்களுக்கு மண்ணெண்ணெய்/டீசல் மானியம் வழங்குதல்.**

பாரம்பரிய மீன்பிடி கலன்களில் உட் பொருத்தும்/வெளிப் பொருத்தும் இயந்திரங்களைப் பொருத்தி மீன்பிடித் தொழில் செய்யும் சுமார் 20,000 பாரம்பரிய மீனவர்களுக்கு அவர்கள் எரியெண்ணெய் விலை உயர்வினால் பாதிக்கப்படுவதை தவிர்க்கும் நோக்குடன் அவர்கள்



1999 மே 5]

உபயோகிக்கும் ஒவ்வொரு லிட்டர் எரியெண்ணெய்க்கும் 50 காசுகள் வீதம் ஆண்டொன்றுக்கு ஒவ்வொரு பாரம்பரிய கலன்/மீனவருக்கும் ரூ.1,500 என்ற அளவில் மானியம் வழங்குவதற்கு 1998-1999 ஆம் ஆண்டுக்கு அரசு ரூ.3 கோடிக்கு முதல்முறையாக ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத்திட்டம் 1999-2000 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## IX. (அ) கூட்டுறவுச் சங்கங்கள்

தற்போது 3,38,497 உறுப்பினர்களுடன் 588 கடல் மீனவர்/மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள், 58,389 உறுப்பினர்களுடன் 249 உள்நாட்டு மீனவர்/மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள், 603 உறுப்பினர்களுடன் 10 மாவட்ட மீனவர் கூட்டுறவு இணையங்கள், 508 உறுப்பினர்களுடன் ஒரு தலைமை மீனவர் கூட்டுறவு இணையம் மற்றும் 2,590 உறுப்பினர்களுடன் 17 இதர வகை மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. இந்தச் சங்கங்கள் மீனவ சமுதாயத்தினரின் மேம்பாட்டிற்கு பெரிதும் உதவி வருகின்றன.

**(ஆ) மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தானியங்கி இழுவை ஊர்திகள் (ஆட்டோ டிரெயிலர்கள்) வழங்குதல்**

1997-98 ஆம் ஆண்டில் மீன் இறங்கு தளங்களிலிருந்து மீன் விற்பனை செய்யும் இடத்திற்கு மீன்களைக் கொண்டு செல்ல ரூ.31.80 இலட்சம் அளவில் 25 மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 25 ஆட்டோ டிரெயிலர்கள் வழங்க அரசு அனுமதியளித்துள்ளது. 25 ஆட்டோ டிரெயிலர்களும் 25 மீனவர் மகளிர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

## X. தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் லிமிடெட்

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் (த.மா.த.மீ.கூ.இ), தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் 1983-ன்படி பதிவு செய்யப்பட்டு, 19-10-1992 முதல் ஆரம்ப மீன்வள கூட்டுறவுச் சங்கங்களுடைய முதன்மை கூட்டுறவு இணையமாக இயங்கி வருகின்றது. இவ்விணையத்தின் முக்கிய நோக்கம் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மீன்வளம் மேம்படச் செய்வதும், தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிதியுதவி பெற்று கடலோர மீனவ கிராமங்களில் ஒருங்கிணைந்த கடல் மீன்வள

அபிவிருத்தித் திட்டத்தினை செயல்படுத்துவதும் ஆகும். இதுவரை 500 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களும், 6 மாவட்ட மீனவர் கூட்டுறவு இணையங்களும், 2 மாவட்ட மீனவர் கூட்டுறவு ஒன்றியங்களும் இணையத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. 31-03-1999-ல் இந்த இணையத்தில் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூலதனம் ரூ.70.76 இலட்சம் ஆகும்.

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையத்திற்கான தேர்தல்கள் நடத்தப்பட்டன. இவ்விணையம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறு இயக்குநர்கள் மற்றும் தமிழ்நாடு அரசால் நியமனம் செய்யப்பட்ட ஒரு நிபுணர் உட்பட எட்டு நியமன இயக்குநர்கள் கொண்ட நிர்வாக சபையின்கீழ் இயங்கி வருகிறது.

**ஒருங்கிணைந்த கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டம்—முதல் கட்டம்**

இத்திட்டம் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நிதியுதவியுடன் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முதலீடு ரூ. 15.88 கோடியாகும். 1993-94 ஆம் ஆண்டு முதல் ஐந்து ஆண்டு காலத்திற்கு இத்திட்டம் காஞ்சிபுரம், திருவள்ளூர், நாகப்பட்டினம், இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய கடலோர மாவட்டங்களில் 80 மீனவ கிராமங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதுவரையிலும் தமிழ்நாடு அரசு இத்திட்டத்திற்கு ரூ. 15.77 கோடி விடுவித்துள்ளது.

31-03-1999 முடிய ரூ. 13.54 கோடி மதிப்புள்ள 1,903 மீன்பிடி சாதனங்களான கட்டுமரம், வள்ளம், இயந்திரம், பிளைவுட் படகுகள், மீன்பிடி வலைகள் 3,796 மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் கூட்டுறவு சம்பந்தப்பட்ட அனைத்து அம்சங்கள், மீன்பிடி ஒழுங்குமுறைகள் மற்றும் வெளிப்பொருத்தும் இயந்திர பராமரிப்பில் பயிற்சி ஆகியவை இத்திட்டம் அமலபடுத்தப்படும் கிராமங்களில் 6,895 மீனவர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணைய நடவடிக்கைகளில் கடல் மீனவர்கள் மத்தியில் தீவிர ஈடுபாட்டை உருவாக்குவதற்காக கடலோர மீனவ கிராமங்களில் 409 மக்கள் தொடர்பு முகாம்களும், 61 கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டுள்ளன.



**ஒருங்கிணைந்த கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டம்—இரண்டாவது கட்டம்**

ஒருங்கிணைந்த கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தில் இரண்டாவது கட்டப் பணிகளை ரூ. 45 கோடி செலவில் 13 கடலோர மாவட்டங்களில் 100 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களில் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின் மூலம் ரூ.35 கோடி செலவில் சுமார் 3,600 அலகு மீன்பிடி சாதனங்கள் 10,900 மீனவ பயனாளிகளுக்கு மீன்பிடி படகுகள், வலைகள் வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. 31-03-1999 முடிய ரூ. 124.21 இலட்சம் மதிப்புள்ள 113 இடுபொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

1999-2000 ஆம் ஆண்டில் எல்லா கடலோர மாவட்டங்களின் மீனவர்களுக்கு ரூ. 8.04 கோடி மதிப்புள்ள 826 மீன்பிடி சாதனங்கள் வழங்கப்பட உள்ளது.

ஏலக் கூடம் மற்றும் மீன் உலர்த்தும் மேடை, மீன் ஏற்றிச் செல்லும் தானியங்கி ஊர்தி, குளிர்ப்பதன பெட்டி, பழுதுபார்க்கும் பணி நிலையங்கள் ஆகிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## XI. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம்

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் 1974 ஆம் ஆண்டில் அரசுக்குச் சொந்தமான நிறுவனமாக நிறுவப்பட்டது. இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 500 இலட்சம். செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 435.52 இலட்சமாகும். இக்கழகம் கீழே குறிப்பிட்டுள்ள நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது.

(1) ஆழ்கடல் மீன்பிடிப்பில் மீன்பிடி நாவாய்களை இயக்குதல்.

(2) நீர்த்தேக்க மீன்வளத்தை மேலாண்மை செய்தல்.

(3) தரமான மீன்குஞ்சுகளை உற்பத்தி செய்தல்.

(4) பனிக்கட்டி நிலையங்கள், குளிர்சாதன அறைகள் மற்றும் பதப்படுத்தும் நிலையங்களை நிர்வகித்தல்.

(5) மீனவர்களுக்கு டீசல் விற்பனை செய்தல்.

(6) தரமான மீன்களை விற்பனை செய்தல்.

[1999 மே 5

(7) மீன்பிடி வலைகள் தயாரித்தல்.

(8) இறால் குஞ்சுகள் பொரிப்பகம் மற்றும் மாதிரி இறால் பண்ணையை நிர்வகித்தல்.

(9) உலர்மீன் கிடங்கு.

(10) முத்து வளர்ப்புத் திட்டத்தை செயல்படுத்துதல் மற்றும்

(11) முத்துச்சிப்பி பொரிப்பகத்தை நிர்வகித்தல்.

**1. மீன்பிடி நாவாய்களை இயக்குதல்**

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் ஆந்திர மாநிலத்திலுள்ள விசாகப்பட்டினத்தை தளமாகக் கொண்டு நான்கு ஆழ்கடல் மீன்பிடி நாவாய்களை இயக்கி வருகிறது. இந்த மீன்பிடி நாவாய்கள் மூலம் 1998-99 ஆம் ஆண்டில் 31-03-1999 முடிய 46.95 டன் இறால்களும், 191.31 டன் மீன்களும் பிடிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ஈட்டப்பட்ட வருவாய் ரூ. 144.92 இலட்சம் ஆகும். இதுநாள்வரை இந்தியாவில் இந்த மீன்வளர்ச்சிக் கழகம் மட்டும்தான் மீன்பிடி நாவாய்களை வெற்றிகரமாக இயக்கி வருகிறது.

**2. நீர்த்தேக்கங்கள்**

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகப் பராமரிப்பில் உள்ள கீழ்க்கண்ட நீர்த்தேக்கங்களில் முறைப்படியாக மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டு 1/3 (மூன்றில் ஒரு பங்கு) என்ற முறையில் உள்ளூர் மீனவர்களை பணியமர்த்தி மீன்பிடிப்பு நடத்தப்படுகிறது:

(1) சாத்தனூர் அணை, (2) பவானிசாகர், (3) அமராவதி, (4) ஆழியார், (5) திருமூர்த்தி, (6) உப்பாறு, (7) மஞ்சளாார், (8) பாலாறு—பொறந்தலார், (9) பெரும்பள்ளம்.

மேற்கண்ட நீர்த்தேக்கங்களிலிருந்து 1998-99 ஆம் ஆண்டில் 31-03-1999 முடிய 384.44 டன் மீன்கள் பிடிக்கப்பட்டு ரூ. 107.19 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. இந்த ஒன்பது நீர்த்தேக்கங்களில், உப்பாறு மற்றும் பாலாறு-பொறந்தலார் அணைகளில் மீன்பிடிக்கும் உரிமை தனி நபர்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.



1999 மே 5]

**3. மீன்குஞ்சு உற்பத்தி**

இக்கழகம் சாத்தனூர் அணையில் ஒரு மீன் குஞ்சு உற்பத்தி நிலையத்தையும், அமராவதி, ஆழியார், திருமூர்த்தி, மஞ்சளார், உப்பாறு மற்றும் பாலாறு-பொறந்தலார் ஆகிய ஆறு இடங்களில் மீன்குஞ்சு வளர்ப்புப் பணிகளையும் செயல்படுத்தி வருகிறது. இப்பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் மீன்குஞ்சுகள் இக்கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நீர்த்தேக்கங்களில் இருப்பு செய்யப்படுகிறது. தவிர பிற நிறுவனங்களுக்கும் விற்பனை செய்யப்படுகிறது. 1998-99 ஆம் ஆண்டில் 31-03-1999 முடிய 313 இலட்சம் மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

**4. மீன் பதப்படுத்துதல்**

இக்கழகம் ஆறு பனிக்கட்டி நிலையங்களையும், நான்கு மீன் பதப்படுத்தும் நிலையங்களையும் நடத்தி வருகின்றது. 1998-99 ஆம் ஆண்டு 31-03-1999 முடிய ரூ.12.14 இலட்சம் குத்தகையாக வசூலிக்கப்பட்டுள்ளது.

**5. டீசல் விற்பனை நிலையங்கள்**

இக்கழகம் 17 இடங்களில் சில்லறை மற்றும் நுகர்வோர் டீசல் விற்பனை நிலையங்களை கடலோரப் பகுதிகளில் இயக்கி வருகிறது. 1998-99 ஆம் ஆண்டு 31-03-1999 முடிய 35,627.47 கிலோ லிட்டர் டீசல் மற்றும் எண்ணெய் விற்பனை செய்யப்பட்டு ரூ. 68.51 இலட்சம் தரகுத் தொகையாக ஈட்டப்பட்டுள்ளது.

**6. மீன் விற்பனை**

இக்கழகம் சென்னை, மதுரை, கோவை மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் சில்லறை விற்பனை அங்காடிகள் மூலமாக புதிய மற்றும் வறுத்த மீன்களை விற்பனை செய்து வருகிறது. 1998-99 ஆம் ஆண்டு 31-03-1999 முடிய 508.90 டன் மீன்கள் ரூ. 220.95 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**7. மீன் வலை பின்னும் நிலையம்**

இராயபுரத்தில் செயல்பட்டு வரும் மீன் வலைபின்னும் நிலையம் ஆண்டொன்றுக்கு 75 டன்கள் வலை தயாரிக்கும் திறன் கொண்டதாகும். 1998-99 ஆம் ஆண்டு, 31-03-1999 முடிய 39.35 டன் நைலான் வலைகளும், எச்.டி.பி.இ. வலைகளும் உற்பத்தி செய்யப்பட்டு ரூ. 101.26 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

[1999 மே 5

### 8. இறால் பொரிப்பகம்

நீலாங்கரையில் கடல் இறால் குஞ்சு பொரிப்பகம் ஒன்றை இக்கழகம் இயக்கி வருகிறது. இந்தப் பொரிப்பகம் ஆண்டு ஒன்றுக்கு 16 மில்லியன் இறால் குஞ்சுகள் உற்பத்தி செய்யும் திறன் கொண்டது. 1998-99 ஆம் ஆண்டு 31-03-1999 முடிய 19.71 இலட்சம் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ. 7.97 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

### 9. உலர் மீன் கிடங்கு

உலர் மீன் ஏற்றுமதியாளர்களுக்கு உதவிடும் வகையில் தூத்துக்குடியில் கடல் பொருள் ஏற்றுமதி அபிவிருத்தி ஆணையத்தால் கட்டப்பட்ட உலர் மீன் கிடங்கு தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தால் எடுத்துக்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1998-99 ஆம் ஆண்டு 31-03-1999 முடிய ரூ. 1.19 இலட்சம் வாடகையாக வசூல் செய்யப்பட்டுள்ளது.

### 10. முத்து வளர்ப்புத் திட்டம்

வருடத்திற்குக் குத்தகை ரூ. 1.50 இலட்சம் என்ற விகிதத்தில் முத்து வளர்ப்புத் திட்டம் தனியாருக்குக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

### 11. முத்து சிப்பிப் பொரிப்பகம்

இப்பொரிப்பகத்தில் ஆண்டு ஒன்றுக்கு 5 இலட்சம் முத்துச் சிப்பி குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

## XII. புதிய முயற்சிகள்

### வண்ண மீன் உற்பத்தி

உலகம் முழுவதும் ரூ. 2,000 கோடி மதிப்புக்கு வண்ண மீன் வர்த்தகம் நடைபெறுகிறது. இத்தொழிலில் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் ஈடுபட்டு வெற்றிபெற வாய்ப்புள்ளது. குறைந்த அமிலத்தன்மை கொண்ட மென்னீர், மேற்குமலைத் தொடரிலுள்ள ஆழியார், திருமூர்த்தி ஆகிய நீர்த்தேக்கங்களில் உள்ளது. அது மேலும் வண்ண மீன் தொழில்நுட்பம் மற்றும் விற்பனைக்கான நிபுணத்துவத்தை கூட்டுத் துறை தொழில் மூலம் பெற ஏற்பாடுகளை செய்து வருகிறது. 1999-2000 ஆம் ஆண்டில் பகுதி - 2 திட்டத்தில் இதற்காக ரூ. 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.



1999 மே 5]

## XIII. செயல் திட்டம்

### 1. மீன்வளத் துறையை திருத்தி அமைத்தல்

மாநிலத்தில் மீன்வள ஆதாரங்களின் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு ஆகிய நோக்கங்களிற்கென மீன்வளத் துறை 1907 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மாநிலத்தில் திட்ட காலம் தொடங்கிய நாளிலிருந்து மீன்வளர்ச்சி மீது போதிய கவனம் ஈட்டப்பட்டு, விரைவான பல முன்னேற்றங்கள் காணப்பட்டுள்ளன. குறிப்பிட்ட நோக்கங்கள், வழிகாட்டுதல் ஆகியவற்றை கவனத்தில் கொண்டு, வெவ்வேறு புது விதமான திட்டங்களை உருவாக்கி, மாநிலத்தில் வெவ்வேறு இடங்களில் பல்வேறு சார்நிலை அலுவலகங்கள் தொடங்கப்பட்டன. இத்திட்டங்கள் மற்றும் அலுவலர்களுக்கிடையே எந்தவித ஒருங்கிணைப்பும் இல்லை. எனவே குறிப்பிட்ட கடமைகளுக்காக, தானாகவே அர்ப்பணித்துக் கொள்ளும் நிகழ்கால, எதிர்கால வளர்முக மீன்வளத் துறை உத்திகளுக்கு ஏற்ப ஒரு நவீன நிர்வாக கட்டமைப்பு தேவைப்படுகிறது. தற்போதுள்ள அமைப்பில் அதிகார எல்லை, செய்கடமை ஆகியவற்றை வரையறுத்து, புனரமைக்க வேண்டியிருப்பதால், மீன்வளத் துறையின் செயல்பாட்டை திருத்தியமைக்க முன்மொழியப்பட்டுள்ளது. திருத்தி அமைக்கப்படவுள்ள அமைப்பு, வருவாய் அதிகரித்தல், வள ஆதாரங்களை பயன்படுத்துதல் மற்றும் மீனவர்களுக்கு நல்ல முறையில் சேவை செய்தல் போன்றவற்றில் உபயோகமான மாற்றங்களைக் கொண்டு வரும்.

### 2. நடத்தை விதித் தொகுப்பு

நிலை நிறுத்தக்கூடிய மீன்வளம், சரியான கடல் மீன்வள மேலாண்மை ஆகியவற்றை பராமரிக்க, ரோமில் உள்ள உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு, உறுப்பு நாடுகளின் ஒப்புதலுடன் "பொறுப்பார்ந்த மீன்வளத்துக்கான நடத்தை விதித் தொகுப்பு" எனப்படும் ஒரு சட்ட கட்டமைப்பை உருவாக்கியுள்ளது. இச்சட்ட கட்டமைப்பில் மீனவர்கள், உறுப்பு நாடுகளின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் என்ன என்பது பற்றி சொல்லப்பட்டுள்ளது. முதன் முதலில் இந்தியாவில், தமிழ்நாடு மீன்வளத் துறை மட்டுமே இத்தொகுப்பு விதிகளை தமிழில் மொழிபெயர்ப்பு செய்துள்ளது. இது விரைவில் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் உதவிபெற்ற வங்காள விரிகுடா திட்டத்தினர் உதவியுடன் வெளியிடப்படும். நடத்தை விதித் தொகுப்பின் விவரங்கள், சாலையோர காட்சி மற்றும் தெருக்கூத்து போன்ற விரிவாக்க நடவடிக்கைகள் மூலமாக கிராமங்களுக்குக் கொண்டுச் செல்லப்படும்.

[1999 மே 5

**3. தமிழ்நாட்டின் உள்நாட்டு மீன்வள அபிவிருத்திக்கென ஒருங்கிணைந்த திட்டம்**

உள்நாட்டு மீன்வள அபிவிருத்திக்கென ஓர் ஒருங்கிணைந்த திட்டம் உருவாக்கப்படவுள்ளது.

**4. தமிழ்நாடு மீன்பிடி ஒழுங்குபடுத்தும் சட்டத்தை செயல்படுத்துவதற்கு மீன்வளத் துறையில் ஒரு கடல் பாதுகாப்பு அமலாக்கப் பிரிவு ஏற்படுத்துதல்**

1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்பிடி ஒழுங்குபடுத்தும் சட்டத்தை செவ்வனே செயல்படுத்த 1998-99 ஆம் ஆண்டில் அரசு ரூ. 449.95 இலட்சத்திற்கு 5 அதிவேக ரோந்து படகுகளை கட்டுவதற்கு ஆணை வழங்கியுள்ளது.

இந்த 5 ரோந்து படகுகளும் சென்னை, மல்லிப்பட்டினம், இராமேசுவரம், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி தளங்களிலிருந்து விரைவில் செயல்படும்.

தமிழ்நாட்டின் கடற்பகுதி, அண்டை நாடான இலங்கையின் கடற்பகுதியை ஒட்டியுள்ளது. தமிழ்நாட்டு மீனவர்கள் பல்வேறு நிகழ்வுகளில் சர்வதேச கடல் எல்லையை தாண்டிச் சென்று இலங்கை கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகியுள்ளனர். மேலும் இயற்கை இடர்பாடுகள் மற்றும் இதர காரணங்களினால் தமிழ்நாட்டு மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கும்பொழுது அடிக்கடி காணாமல் போய்விடுகின்றனர். எனவே, இதர நிறுவனங்களான கடலோர காவற்படை மற்றும் கடற்படை ஆகியவற்றின் உதவியுடன், காணாமல் போகும் மீனவர்களைத் தேடி கண்டுபிடிக்கும் பணியினை மீன்வளத் துறை மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே தமிழ்நாட்டில், 1983 ஆம் ஆண்டு கடல் மீன்பிடி ஒழுங்குபடுத்தும் சட்டத்தை செவ்வனே செயல்படுத்துவதற்கு கடல் பாதுகாப்பு அமலாக்கப் பிரிவு ஒன்றிற்கென பணியாளர் பதவிகளை மீன்வளத் துறை இயக்குநர் அலுவலகத்தில் ஏற்படுத்துவதற்கான கருத்துரு, அரசின் பரிசீலனையில் உள்ளது.

**5. சர்வதேச கடல் எல்லையை கடந்து மீன்பிடிப்பதில் உள்ள பிரச்சினைகள்**

இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு இரு வகையான கொள்கைகளை மீன்வளத் துறை மேற்கொண்டுள்ளது. அவையாவன:



1999 மே 5]

(1) சர்வதேச கடல் எல்லையை கடந்து செல்லும் மீனவர்களுக்குத் தண்டனையினை அதிகரித்தல்.

(2) இலங்கை அரசின் அனுமதியுடன் சர்வதேச கடல் எல்லையைக் கடந்து மீன்பிடிக்க அனுமதி வழங்குதல்.

1983 ஆம் ஆண்டு முதல் சர்வதேச கடல் எல்லையை கடந்து மீன்பிடிப்புக்குச் செல்லும் படகுகளுக்கு ஆறு கட்ட தண்டனை வழங்கும் முறை நடைமுறையில் இருந்து வருகிறது. இதுபோன்று வழங்கப்படும் தண்டனை முறையை திருத்தி மேம்படுத்துவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் இருந்து வருகின்றது.

1976 ஆம் ஆண்டில் வேட்ஜ் பேங்க் (Wadge Bank) ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கை மீனவர்களை இந்தியக் கடற்பகுதியில் மூன்று ஆண்டுகள் மீன்பிடிப்பதற்கு அனுமதித்தது போன்று தமிழ்நாட்டு மீனவர்களையும், இலங்கைக் கடற்பகுதியில் டெல்ப்ட் தீவிற்குத் தெற்கே மீன்பிடிப்பதற்கு அனுமதிப்பதற்கு இலங்கை அரசின் ஒப்புதல் பெற்று வழங்குவதற்கு மத்திய அரசுடன் தமிழ்நாடு அரசு முயற்சி மேற்கொண்டுள்ளது.

**6. உள்நாட்டு மீன்பிடிப்பு குத்தகை மீதான கொள்கை மாற்றம்**

தற்போது பாசன குளங்கள், ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய குளங்கள், நகராட்சி குளங்கள் மற்றும் அறங்காவல் துறை குளங்களின் மீன்பிடிப்பு குத்தகையானது அந்தந்த துறைகளால் ஆண்டுதோறும் பொது ஏலத்தில் விடப்படுகின்றன. தற்போது நீண்டகால குத்தகையாக மீன்பிடிப்பு குத்தகை முன்னுரிமையை மாற்றியமைக்க மீனவ கூட்டுறவுச் சங்கங்கள் கோரி வருகின்றன. அண்மைக்காலங்களில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் தொழில்நுட்பங்களைக் கொண்டு மீன் உற்பத்தியை அதிகரிக்க மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் அதிகமான முதலீட்டுச் செலவினை மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேலும் உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் அருகிலுள்ள நீர்நிலைகளின் மீன்வளத்தை நம்பியே மீன்பிடி தொழில் செய்து வருகின்றனர். அநேகமாக மீன்பிடி தொழில் புரியும் எல்லா மீனவர்களும் உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகம் போன்ற வெளி நிதி நிறுவனங்கள் தாங்கள் அளிக்கும் நிதி உதவியை மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட கூட்டுறவு இணையம்

மற்றும் மாநில முதன்மை மீன்வள கூட்டுறவு இணையம் மூலமாக மட்டுமே உள்நாட்டு மீன்வள மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நிதியுதவி செய்து வருகின்றது. தற்போது தமிழ்நாடு ஊராட்சிச் சட்டம் (கிராம பஞ்சாயத்து அல்லது யூனியன் கவுன்சில் கட்டுப்பாட்டில் உள்ள குளங்களில் குத்தகை மற்றும் மீன்பிடிப்பு உரிமையை ஒழுங்குபடுத்துதல்) 1998-ன் கீழ் உள்ள சட்டங்களை மாற்றி அமைப்பது அரசின் பரிசீலனையில் உள்ளது. குத்தகைக் காலத்தை 5 வருடமாக நிர்ணயிக்கவும், முதல் வருடத்தில் அல்லது முந்தைய வருடத்தினை விட 10 விழுக்காடு அதிகமாக குத்தகைத் தொகையை உயர்த்துதல் போன்றவை முன்மொழியப்பட்டுள்ளன. கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் மீன்பிடி உரிமைகளின் அடிப்படை விலையினை சம்பந்தப்பட்ட மீன்வளத் துறை ஆய்வாளர் ஆலோசனையின் பேரில் நிர்ணயிக்கவும் முன்மொழியப்பட்டுள்ளது. பொது ஏலத்தில் அதிகபட்ச குத்தகைத் தொகைக்கு ஏலம் எடுக்க முன்வருபவர்களுக்கு ஈடாக ஏதாவது ஒரு மீனவர் கூட்டுறவுச் சங்கம் குத்தகைக்கு எடுக்க முன்வருமேயானால் அந்தச் சங்கத்திற்கு முன்னுரிமை அடிப்படையில் குத்தகை வழங்கப்படும்.

**7. குளிர் நீர் மீன்வள மேம்பாட்டிற்கான அளவைப் பணிகள்**

தமிழ்நாடு உள்நாட்டு நீர் நிலைகளான பெரும் நீர்த்தேக்கங்கள், பெரிய மற்றும் சிறிய பாசனக் குளங்கள், ஊராட்சி குளம், குட்டைகள் மற்றும் குளிர் நீர்நிலைகளைக் கொண்டுள்ளது. குளிர் நீர்நிலைகளில் குளிர் நீர் மீன் வகைகளான ட்ரவுட், பொம்மீன் மற்றும் கண்ணாடிக் கெண்டை போன்றவைகளை இருப்பு செய்வதன் மூலம் குளிர் நீர் மீன் உற்பத்தி செய்ய முடியும். மாநிலத்தில் உள்ள குளிர் நீர் நிலைகளில் மீன் உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கத்தில் குளிர் நீர் நிலைகளின் அளவைப் பணி, தேசிய குளிர் நீர் மீன்வள நிலையத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ளன. மாநிலத்தில் குளிர் நீர் மீன் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு, இருப்பு செய்வதற்குரிய புதிய நீர் நிலைகளை கண்டறிவதற்கும், பொழுதுபோக்கும் தூண்டில் மீன்பிடித்தலுக்கும், குளிர் மீன் குஞ்சு பொரிப்பகம் மற்றும் மீன் குஞ்சு பண்ணைகள் அமைக்கத் தகுந்த இடங்கள் தேர்வு செய்வதற்கும் இ[illegible] அளவைப் பணி உதவியாக இருக்கும்.



**8. வண்ண மீன்வளத்தை அபிவிருத்தி செய்தல்**

உள்நாடு மற்றும் பன்னாட்டுச் சந்தையில் வண்ண மீன்களுக்கான தேவை விரைவாக வளர்ந்து வருகிறது. தமிழ்நாட்டில் வண்ண மீன் காட்சியகம் அமைத்து பாதுகாத்தல், அதேபோன்று அவற்றை வளர்த்தல் போன்றவற்றின் முக்கியத்துவம் அதிகரித்து வருகிறது. இந்த வர்த்தகத்தின் உள்ளார்ந்த சக்தியை ஆய்வு செய்யும்முகமாக, மாநில அரசு வண்ண மீன் வளர்ப்பு மற்றும் வணிகத்தை பிரபலமாக்கும் ஒரு திட்டம் உருவாக்கப்படவுள்ளது.

இந்த உத்தேச திட்டத்தில் 544 பயனீட்டாளர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள். மூலதனக் கடனில் 25 விழுக்காடு மானியமாக தனியொரு மீன் உற்பத்தியாளர்/மீன் வளர்ப்போர்/ வேலையில்லாத பட்டதாரிகள்/மகளிர் தொழில் முனைவோர் மற்றும் வண்ண மீன் வர்த்தகர் ஆகிய பிரிவினர்களுக்கு வழங்கப்படும். 1999-2000 ஆம் ஆண்டில் தொடங்கும் இத்திட்டத்தின்கீழ் நான்கு ஆண்டு காலத்தில் இலக்கிடப்பட்ட பயனீட்டாளர்களுக்கு மானியமாக ரூ. 100 இலட்சம் பிரித்து வழங்கப்படும்.

ஃஃஃ

D
V21',31N99
N99.78.2

221809

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.